# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 08 ஞாயிற்றுக்கிழமை (25.09.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 303





11

4000 வீடுகளுக்கு ஆஸி.உதவி





17

விழுங்கப்பட்ட மண்ணும் பறிக்கப்படும் மண்ணும்





29

விழ்ந்தது ஆஸியின் வேல்ஸ்


# சவேந்திர சில்வாவுக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றில் வழக்கு

## போரில் இறந்தோரின் உறவினர்கள் தாக்கல்

கொழும்பு, செப்ரெம்பர் 25

போர்க் குற்றச்சாட்டுக்களில் சிக்கிக் கொண்டுள்ள இலங்கையின் மூத்த இராணுவ அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் செல்லவோ அங்கு பணியாற்றவோ முடியாதவாறு நிலைமைகள் இறுகி வருகின்றன. ஜேர்மன் மற்றும் சுவிஸ் நாடுகளுக்கான துணைத் தூதர் ஜகத் டயஸ் சுவிஸ் நாட்டுக்குள் வந்தால் சட்ட நடவடிக்கையை எதிர்கொள்ள நேரிடும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக ஈழத் தமிழர்களால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றம் அவருக்கு அழைப்பாணை அனுப்பி உள்ளது. "மருத்துவமனைகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட இடங்கள் மீது தாக்குதல் நடத்தியமை, சரணடைந்த போராளிகளைச் சித்திரவதை செய்தமை, நீதிக்குப் புறம்பான படுகொலைகளில் ஈடுபட்டமை போன்ற குற்றச்சாட்டுகள் மேஜர் ஜெனரல் சவேந்திரசில்வா மீது சுமத்தப்பட்டுள்ளன" என்று ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.



அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள தெற்கு மாவட்ட நீதிமன்றம் ஒன்றில் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிரான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்கப் பல்கலைக்கழக வோஷிங்ரன் சட்டக் கல்லூரியினால் நேற்றுமுன்தினம் - இலங்கை ஜனாதிபதி ஐ.நா. பொதுச் சபையில் உரையாற்றிய சமயத்தில் - இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டது என்று ஏ.எவ்.பி. செய்தி கூறுகின்றது.

இலங்கைப் படைகளிடம் சரணடைந்த பின்னர் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார் எனக் கூறப்படும் கேணல் ரமேஸின் துணைவியார் வத்சலாதேவியும், புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீதான தாக்குதலில் காயமடைந்து மரணமான ஒருவரின் மகனான சீதாராம்சிவம் என்பவரும் சவேந்திர சில்வாவுக்கு எதிரான வழக்கில் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இது ஒரு குற்றவியல் வழக்கு அல்ல என்றும் சவேந்திர சில்வாவினால் மேற்கொள்ளப்பட்ட சித்திரவதைகள் மற்றும் கொடுஞ்செயல்களுக்காக அவரிடம் இருந்து நட்டஈடு கோரும் வழக்கு என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ள நீதிமன்றம் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்குஅழைப்பாணை அனுப்பியுள்ளது.

இந்த வழக்கு, மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கும், இலங்கை அரசுக்கும் நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ)



## மஹிந்த-மன்மோகன் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, செப். 25

நியூயோர்க்கில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்கச் சென்றுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நியூயோர்க் பலஸ் விடுதியில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பில் போருக்குப் பிந்திய அபிவிருத்தி, மீள்குடியமர்வுத் திட்டங்கள் குறித்து இந்தியப் பிரதமருக்கு மஹிந்த ராஜபக்ஷ விளக்கினார்.

இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தப்படும் பேச்சுத் தொடர்பாகவும் அவர், இந்தியப் பிரதமரிடம் விவரித்துக் கூறினார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ)

## சித்தன்கேணியில் நகைகள் கொள்ளை

யாழ்ப்பாணம், செப்.25

சித்தன்கேணி, கீரிமலை வீதியில் உள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை 12.30 மணிக்கு சமையலறையின் ஜன்னலை உடைத்து உட்புகுந்தவர்கள் உறக்கத்தில் இருந்த தாயையும் மகனையும் வெட்டிக் காயப்படுத்திவிட்டு தங்க நகைகளைக் கொள்ளையிட்டுச் சென் றுள்ளனர்.

சம்பவத்தில் வாள்வெட்டுக்கு இலக்கான இ.வள்ளியம்மை பக் 3


இளமையின் இரகசியம்

9

பக்கம் III.ஐ பாருங்கள்


# வடக்கில் அனைத்து மாவட்டங்களிலும் தற்போது காணி உரித்துப் பதிவுகள்

## காணி ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம் செப்.25

அரசினால் மேற்கொள்ளப்பட்டுவரும் காணி உரித்து பதிவுக்கான மண்ணின் மகிமை (பிம்சவிய) வேலைத் திட்டம் வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக வடமாகாணக் காணி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு.-

நில அளவைத் திணைக்களம், காணி நிர்ணய திணைக்களம், காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம், பதிவாளர் நாயகத் திணைக்களம் என்பன இணைந்து மண்ணின் மகிமை வேலைத்திட்டத்தை மேற்கொண்டு வருகின்றன.

நில அளவைத் திணைக்களத்தினால் இலவசமாக நில அளவை செய்யப்பட்டு காணியின் உரித்து நிர்ணயம் செய்யப்பட்டு காணிக்கான உரித்துச் சான்றிதழ் பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்படும். இதற்காக ஒவ்வொருவரும் தத்தமது காணிக்கான உரிமை கோரும் விண்ணப்பத்தை கிராம சேவையாளர்களிடமிருந்து இலவசமாக எந்தவிதமான ஆவணங்களையும் சமர்ப்பிக்காது பெற்றுக் கொள்ள முடியும்.

வெளி நாடுகளில் உள்ளவர்கள் www.bimsaviya. gov.lk என்ற இணையத்தில் தமது விண்ணப்பங்களைப் பெற்றுத் தமது பிரதேச செயலருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்க முடியும். அத்துடன் வெளிநாட்டிலுள்ளவர்கள் தமது உறவினர் மூலமாகவும் கிராம சேவையாளர்களிடம் சமர்ப்பிக்கலாம். இதற்கு உரித்துத் தத்துவம் (Attorney power) தேவையில்லை.

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் முன்னோடியாக ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டன. யாழ் மாவட்டத்தில் நல்லூர் பிரதேச செயலகம், கிளிநொச்சியில் கரைச்சி உதவி அரச அதிபர் பணிமனை, முல்லைத் தீவில் கரைத்துறைப்பற்று உதவி அரச அதிபர் பணிமனை, மன்னாரில் முசலி பிரதேச செயலகம், வவுனியாவில் வவுனியா வடக்கு உதவி அரச அதிபர் பணிமனை ஆகியவற்றிலேயே இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்குறிப்பிட்ட ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் மக்கள் தமது விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். இவை தவிர்ந்த வடமாகாணத்தின் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் நவம்பர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் - என்றார். (ஒ-15)


AiR MARK
Travels & Tours
IATA
கொழும்பு/ லண்டன் - 39600/=
கொழும்பு/ கனடா - 81000/=
கொழும்பு/ சூரிஜ் - 42500/=
SUBJECT TO CHANGE
Call 0777380557/ 0777727617
No. 05, Stanley Rd, Jaffna.
379 1/2, GALLE ROAD, COLOMBO - 06
94, CHATHAM STREET, COLOMBO - 01

கொழும்பு மாநகரில் அதி நவீன சொகுசு மாடிமனைகளை நிர்மாணித்த நாம்... இன்று யாழ். மண்ணில்...
Call 0773629799
★யாழ். நகரில் எந்தப் பகுதியிலும்
★உங்கள் காணியில் உங்கள் கனவு மனையை
★நவீன வடிவமைப்பில்
★அதி திறமை வாய்ந்த பொறியியலாளர்கள்
★அனுபவம் மிக்க தொழிலாளர்களைக் கொண்டு
★குறைந்த செலவில்...
எமது நிறைவான சேவையை வழங்க நாம் தயாராக உள்ளோம்...
Metro Engineering (Pvt) Ltd
www.metrohomes.lk


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com



அனைத்து மாவட்டங்களிலும் வானம் தெளிவாக காணப்படும்.

# நிகழ்வுகள்

## நூல் வெளியீட்டு விழா

வல்வெட்டித்துறை கலை, கலாசார மன்றத்தின் ஏற்பாட்டில் நெய்தல் நூல் வெயியீடும் விருது வழங்கல் நிகழ்வும் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்-வல்வை மகளிர் மகாவித்தியலயத்தில்இடம் பெறவுள்ளது.யாழ்.பல்கலைக்கழக நாடகமும் அரங்கியலும் விரிவுரையாளர் கலாநிதி க.சிதம்பர நாதன் பிரதம விருந்தினராகவும் பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் கலாசார பேரவையைச் சேர்ந்த திருமதி,செல்வசுகுணா யாழ்.வல்வை மகளிர் மகாவித்தியாலயத்தின் அதிபர் திருமதி சேதுலிங்கம் மங்களேஸ்வரி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். நூல் மதிப்பீட்டு உரையினை கே.சிவனேஸ்வரன் நிகழ்த்துவார்.தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (உ-311)

தென்றல் வானொலியின் அறிவிப்பாளர் கலையரசி வரதராணி எழுதிய கல்லூரிக்கு உயிர் வந்தால் என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு வெள்ளவத்தை தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-313)

## இறுவட்டு வெளியீடு

அம்பிகை அருளாலே-பாகம் 2 இசை இறுவெட்டு வெளியீட்டு விழா இன்று மாலை 5 மணிக்கு சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய முன்றிலில் இடம்பெறும். யாழ். பல்கலைக்கழக தமிழ்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா மற்றும் எஸ்.எஸ். குகநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். இந்த நிகழ்வில் தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள இசையமைப்பாளர் அக்னி பாடகர்களான ராகுல்- ஹோம்பிகா மற்றும் யாழ்ப்பாண இசைக்கலைஞர்கள் இணைந்து வழங்கும் சிறப்பு நிகழ்வும் இடம்பெறும். (உ-302)

## கருத்தரங்கு

பருத்தித்துறை மக்கள் வங்கிக்கிளையில் 'விழிகளைக் காப்போம்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து கொழும்பிலிருந்து விசேடமாக அதிநவீன தொழில் நுட்ப சாதனங்களின் உதவியுடன் விசேட வைத்தியர்களால் மக்கள் வங்கியின் அனுசரணையுடன் இலவச கண்பரிசோதனை முகாம் நடத்தப்படும். (உ-23)

மண்ணின் மகிமை வேலைத்திட்டம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.இதில் வடமாகாண காணி ஆணையாளர் பொ.தயானந்தன், வடமாகாண பிரதிக் காணி ஆணையாளர் கை.மகேஸ்வரன், யாழ்ப்பாண சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் ஐ.ஈஸ்வரமூர்த்தி, நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன், கரைச்சிப் பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (உ-15)

## மருத்துவ முகாம்

மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்துடன் லயன்ஸ் கழகமும் இணைந்து இலவச கண் மற்றும் பொது மருத்துவ முகாம் ஒன்றினை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை பண்டத்தரிப்பு பட்டின சபையில் (சந்தை மேல் மாடி) நடத்தவுள்ளனர். முன்னாள் லியோ ஆலோசகர் அமரர் லயன் சி.பாலகிருஸ்ணணின் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் இலவச மருத்துவ முகாமில் கண்பரிசோதனை மட்டு மன்றி மூக்குக்கண்ணாடிகளும் வழங்கப்படும். அத்தோடு அனைத்து நோய்களுக்கும் நவீன மற்றும் ஆயுள் வேத முறையிலானசிகிச்சைகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும். பொது வைத்திய நிபுணர்கள், டாக்டர் ரி.பேரானந்தராஜா மற்றும் பல வைத்தியர்களும் கலந்து கொண்டு சிகிச்சை வழங்கவுள்ளனர். (உ-311)

## கௌரவிப்பு

காரைநகர் அபிவிருத்திச் சபை நடத்தும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய மண்டபத்தில் நடைபெற உள்ளது. பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக காரைநகர் உதவி அரச அதிபர் த.ஜெயசீலன், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.இராதாகிருஸ்ணன், நல்லூர் உதவிப் பிரதேச செயலர் அ.சோதிநாதன், இலங்கை வங்கி யாழ். மாவட்ட முகாமையாளர் என்.மாணிக்கசிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீ. விக்னேஸ்வரன், ஊர்காவற்றுறைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் கி.சோமசேகரம், தீவக வலய ஆசிரிய ஆலோசகர் எஸ்.கேசவன் ஆகியோரும் கலந்து கொள்ள உள்ளனர். 17 மாணவர்கள் கௌரவிக்கப்பட உள்ளனர். (உ-250)

## இரத்ததான முகாம்

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் இரத்தத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு பொது அமைப்புகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு நடமாடும் இரத்ததான முகாம் யாழ். கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இப்பிரதேசத்தில் உள்ள குருதிக் கொடையாளர்கள் சமுகம் கொடுத்து இரத்ததானம் செய்து உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஒழுங்கமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கற்கை நிலையத்தின் தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணிப் பட்டக் கற்கை நெறியைத் தொடரும் முதலாம் வருட மாணவர்களுக்கான வகுப்புக்களும் இரண்டாம் வருட மாணவர்களுக்கான கற்பித்தல் பயிற்சி பற்றிய கலந்துரையாடலும் இன்று காலை 9 மணிக்கு இடம்பெற உள்ளது என பாடநெறி இணைப்பாளர் எஸ்.தயாபரன் அறிவித்துள்ளார்.

## கூட்டம்

ஏழாலை பொது நூலக ஆலோசனைக் குழுவின் நூலக வாசகர் வட்டத்தின் மாதாந்தக் குழுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஏழாலை பொது நூலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. நூலகத்தின் அனைத்து வாசகர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நூலக வாசகர் வட்டத்தின் நூலக ஆலோசனைக் குழுவின் செயலாளர் ம.ஆனந்தராசா தெரிவித்துள்ளார். (உ-311)

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு பாடசலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் திருமதி எல்.முகுந்தன் தலைமையில் இந்த கூட்டம் நடைபெறும். பழைய மாணவர்களை இதில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

மண்டைதீவு பூம்புகார் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தின் விசேட பொதுக் கூட்டம் இன்று மு.ப 11 மணிக்கு ஆலயத் தலைவர் வீ. சோமசுந்தரம் தலைமையில் மண்டைதீவு வேப்பந்திடல் முத்துமாரி அம்மன் மண்டபத்தில் நடைபெறும் என்று செயலாளர் அறிவித்துள்ளார். (உ)

பண்ணாகம் மக்கள் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க 27 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் ம.சற்குணசிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளது. நிகழ்வில் புதிய நிர்வாக தெரி இடம் பெறவுள்ளதால் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ323-28)

## இன்னிசை நிகழ்வு

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோயில் சுற்றாடலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெற்று வரும் ஆன்மிக நிகழ்வு வரிசையில் இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு புலோலி புற்றளை மகா வித்தியாலய மாணவர்களின் இன்னிசை நிகழ்வு நடைபெறும். (ஒ-236)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 25

யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை நடத்தும் " யாழ்ப்பாண வாழ்வியல் கண்காட்சி" நிகழ்வின் இரண்டாவது நாளான இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிமுதல் மதியம் 12 மணிவரை கருத்தரங்கு நிகழ்வும் பிற்பகல் 3 மணிக்கு காத்தவராயன் கூத்தும் இடம்பெறும்.

முற்பகல் 9 மணிக்கு குழந்தை வளர்ப்பில் பாரம்பரியமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் பழக்க வழக்கங்கள் ஓர் ஆய்வு எனும் தலைப்பில் கே.சிவசண்முகராஜாவும் 9.30 மணிக்கு 'யாழ்ப்பாணத்தில் சித்த மருத்துவத்தின் பரம்பலும் வளர்ச்சியும்' எனும் தலைப்பில் அன்புச் செல்வி ஸ்ரீ தரனும், மு.ப. 10 மணிக்கு 'யாழ்ப்பாணத் தமிழர்களின் வரலாற்றில் ஈழகேசரி' எனும் தலைப்பில் கந்தையா அருந்தவராஜாவும், மு.ப. 10.30 மணிக்கு பிரித்தானியர் கால சமூக மாற்றத்தில் கல்வியின் பங்கு' எனும் தலைப்பில் ஜெயலக்சுமி இராசநாயகமும் மு.ப. 11 மணிக்கு 'யாழ்ப்பாணப் பண்பாட்டில் திருவிழாக்கள்' எனும் தலைப்பில் ஆறு. திருமுருகனும் மு.ப. 11.30 மணிக்கு யாழ்ப்பாணப் பண்பாட்டில் சின்னமேளம்' எனும் தலைப்பில் வ.மகேஸ்வரன் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். (ஒ-323)

# வல்லிபுர ஆழ்வார் ஆலய கொடியேற்றம் நாளை

வடமராட்சி, செப்.25

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்த பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

17 தினங்கள் இடம்பெறும் பெருந் திருவிழாவில் கொடியேற்றம் தொடக்கம் ஆறாம் திருவிழா வரை சுவாமி உள் வீதி உலாவருவார். ஏழாம் திருவிழா தொடக்கம் 17ஆம் திருவிழா வரை சுவாமி வெளிவீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சி வழங்குவார்.

3 ஆம் திகதி திங்கட்கிழமை குருக்கட்டு விநாயகர் தரிசனம், 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வெண்ணெய்த் திருவிழா, 5 ஆம் திகதி புதன்கிழமை துகில் திருவிழா, 6 ஆம் திகதி வியாழக் கிழமை பாம்புத் திருவிழா, 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஹம்சன் போர்த்திருவிழா, 8ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத்திருவிழா, 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பரத்திருவிழா, 10 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழா, 11 ஆம் திகதி செவ்வாய்கிழமை சமுத்திரத் தீர்த்தத்திருவிழா, 12 ஆம் திகதி புதன்கிழமை கேணித் தீர்த்தத் திருவிழா ஆகிய திருவிழாக்கள் இடம் பெறும்.

தினமும் பகல் திருவிழா காலை 8 மணிக்கும் இரவுத் திருவிழா மாலை 4.30 மணிக்கும் ஆரம்பமாகும். வடக்கு வீதியில் சுவாமி வீதி உலா வரும் போது கற்கோவளம் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் நிகழ்வு அந்நாள் [illegible] திணைச் சித்திரிக்கும் முறையில் நடைபெறும். திருவிழாக் காலங்களில் பெரியாழ்வார் ஆச்சிரமமடம், லக்சுமி நாராயணாமடம், பரந்தாமன் மடம் ஆகியவற்றில் அன்னதானத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திருவிழாவை முன்னிட்டு விசேட பஸ்சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

எமது சமயக் கோட்பாடுகளுக்கும் கலாசாரத்துக்கும் அமைவாக உடைகளை அணிந்து பெறுமதியான தங்க ஆபரணங்கள் அணிவதைத் தவிர்த்து பெருந்திருவிழாவில் கலந்து கொண்டு வல்லிபுர மாயவனின் அருளைப் பெற்றுக் கொள்ளுமாறு அறங்காவலர் சபை கோரிக்கை விடுத்துள்ளது. (ஒ-236)

# ஆவரங்கால் நடராஜா பரிசளிப்பு விழா இன்று

யாழ்.ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் அ.அருணந்திசிவம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் வவுனியாப் பிரதேச செயலகத்தின் கணக்காளர் அ.கலைச்செல்வன் முதன்மை விருந்தினராகவும் கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை, அச்சுவேலி தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் சி. நந்தகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயத்தின் ஆசிரியை திருமதி பிரேமிளா கலைச்செல்வன் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கிக்கௌரவிப்பார். (உ-311)

## உடனடி வேலையாள்கள் தேவை

★ கணக்காளர் ★ விற்பனை பிரதிநிதி

Intex mobile, Sony Erricsion கைத்தொலைபேசிகளுக்கான யாழ். மாவட்ட விநியோகஸ்தர்களான அறிவொளி நிறுவனத்துக்கு மேற்குறிப்பிட்ட பதவிகளுக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. 18 - 35 வயதுக்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும். முன் அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பன்மொழிப் புலமை உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பங்களை rubantp@yahoo.com எனும் முகவரிக்கு மின் அஞ்சல் அனுப்பவும்.

தொடர்புகளுக்கு: அறிவொளி

இல.27, திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி. 021 222 0066




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**திருமதி சங்கரப்பிள்ளை சின்னம்மா**

**தோற்றம் 15.06.1932 — மறைவு 26.08.2011**

அம்மா என்று உறவாட யாரும்
இல்லையே
அன்புமொழி பேசிவிட நீயும்
இல்லையே
ஆயிரம் சொந்தங்கள் வந்து நின்றாலும்
அன்பான எம் அம்மாவுக்கு நிகராகுமோ!

கடந்த (26.08.2011) அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.09.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் எம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகைதந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி தெற்கு,
கைதடி. — குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### விஸ்வலிங்கம் சிவஞானம்



(ஓய்வுபெற்ற முகாமையாளர், இலங்கை வங்கி)

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் வடக்கை பிறப்பிடமாகவும், திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட முருக பக்தருமான விஸ்வலிங்கம் சிவஞானம் 23.09. 2011 வெள்ளிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தைரியம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சத்தியதேவியின் அன்புக் கணவரும் சுதாதேவி, பிறேமாதேவி, அருணாதேவி, சிவக்குமார், மீராதேவி, நிருபாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் செகராஜசேகரன், செல்வஜோதி, சிவதாசன், பிறேமவதனி, அசோக்குமார், சாந்தகுமார் ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை, நாகரெத்தினம் மற்றும் விசாகப்பெருமாள், காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் மூத்த சகோதரரும், பிரணவஜோதி, பிரசாந்தஜோதி, நிர்மல்ஜோதி, நிஷாந், நிஷாஹரி, நிஷாளினி, ராகவி, அம்றித்தா, நிதர்ஷினி, ஆரவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 26.09.2011 திங்கட்கிழமை பி.ப.4 மணிக்கு 266, நீதிமன்ற வீதியிலிருந்து நல்லடக்கத்துக்காக திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.266, நீதிமன்ற வீதி,
திருகோணமலை. — தகவல்: குடும்பத்தினர்.

### சண்.கந்தையா



தொல்புரம், ஆனைப்பந்தி வளவைப் பிறப்பிடமாகவும், மூளாய், கந்தரோடையை வசிப்பிடமாகக் கொண்டவரும், யாழ். மாநகர சபை பொது நூலகத்தின் ஓய்வுபெற்ற நூலகரும், பொன்னாலை வரதராஜப் பெருமாள், தொல்புரம், வழக்கம்பரை அம்மன் ஆலய தோற்றுநர்களின் வழித்தோன்றலும், மூளாய், வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலய தேர்த் திருப்பணிச் சபை செயலாளரும், சிதம்பரம் அம்பலவாணேஸ்வர சுவாமிகள் மானாமுதலி மட தர்மகர்த்தா சபைப் பொதுச் செயலாளருமான சண்.கந்தையா 22.09.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் தொல்புரம் காலஞ்சென்ற சண்முகம்- சிதம்பரம் நாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகனும், கந்தரோடை காலஞ்சென்ற அப்புத்துரை -சேதுநாயகி தம்பதியரின் மூத்த மருமகனும், குலகுணேஸ்வரியின் அன்புக் கணவரும், குமுதினி, ஜபாலினி, துவாரகன், மைதினி, மாதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் விசுவநாதன், பிரணவன் (பிரபு) ஆகியோரின் மாமனும், தெய்வநாயகியின் அருமைத் தம்பியும், காலஞ்சென்ற வைத்தியநாதன், மற்றும்தற்பரானந்தன், நித்தியானந்தன், சர்வானந்தன், குலகுணராணி, குலகுணசக்தி, காலஞ்சென்ற தேவானந்தன், ஆகியோரின் மைத்துனனும், செல்வகுமாரன் அவர்களின் சகலனும், கஜானன், சாம்பவி, சர்வகா ஆகியோரின் பெரியப்பாவும், கவிவாணன், அருணா, சிவகரன், சிவஜீவன், சிந்துஜா, அர்ச்சுதன் ஆகியோரின் மாமனும், அட்சயா, அகரன், தாமரா ஆகியோரின் பேரனும், திரு.திருமதி வைத்தியநாதன் திரு.திருமதி நந்தீஸ்வரன் ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தொடர்ந்து கந்தரோடை - சங்கம் புலவு இந்து மயானத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் இடம்பெற்ற பின்னர் பிற்பகல் 3.30 மணியளவில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனந்தகம்,
கந்தரோடை, சுன்னாகம். — தகவல்: குடும்பத்தினர்.

## வீடு வாடகைக்குத் தேவை

மூவர் கொண்ட குடும்பத்துக்கு திருநெல்வேலி, பிறவுண் வீதி, நல்லூர், யாழ். பட்டினத்தை அண்டிய பகுதிகளில் வீடு தேவை.
**T.P. 0774301054**

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, சம்பியன் லேன், 83 ஆம் இலக்கத்தில் உள்ள காணியில் 1½ பரப்பு விற்பனைக்குண்டு.
**தொடர்பு: 0770630988**

## வர்ண அட்டைகள்

புதிய வடிவங்களில் பல வர்ண நினைவு மலர் அட்டைகள், திருமண, பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள் என்பவற்றையும் பெற்றுக் கொள்ளலாம்.
**சிவரஞ்சனம் ஒவ் செற் பிறிண்டேர்ஸ்**
பலாலிவீதி, கோண்டாவில். 0773068982

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அத்தியடி, அம்பலவாணர் வீதியில் 2 பரப்புக் காணி (கிணற்றுடன்) விற்பனைக்குண்டு.
**தொடர்புகளுக்கு: 0779239334**

## காணி விற்பனைக்கு

இணுவில் கிழக்கு, மூன்று கோயிலடி பின்புறம் நிலப்பரப்பு 3 குளி11 கொண்ட தோட்டக்காணி விற்பனைக்குண்டு.
**தொடர்பு: 0718843830,0771362476**

## காணி விற்பனைக்குத் தேவை

வீடு கட்டக் கூடிய வெறும் காணி யாழில் இருந்து 8 KM உள்ளே தேவை.
**தொடர்பு: 0750422381**

## தேவை

நீங்கள் பேசும் திறமை உடையவரா? மாதந் தம் 45,000 - 55,000/= வரை உழைக்க வேண்டுமா? நாடு பூராகவும் ஸ்தாபிக்கப்படும் எம் நிறுவனத்துக்கு Marketing Executive தேவை.
தொடர்பு: WEC 0112361951/0771953366/0778526178

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி, பலாலி றோட்டில் 1¾ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
**தொடர்பு: 0718746047**

## வாகன விற்பனைக்கு

**MAZDA Bongo**

நியாயமான விலையில் விற்பனைக்குண்டு



T.P : 077 3550082

## காணி விற்பனைக்கு

சங்கானை, மல்லாகம் சந்தியில் இருந்து (மல்லாகம் வீதியில்) 100 மீற்றர் தூரத்தில் 3 பரப்புக் குடியிருப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0727750023, 0778696462

## காணி விற்பனை

சண்டிலிப்பாய் ஐயனார் வீதியில் அமைந்துள்ள 32 பரப்பு காணி சுத்தவர மதில் கட்டி கேற் போடப்பட்டுள்ளது. தண்ணீர் மலசல கூட மின்சார வசதியுடன் உள்ளது.

தகவல்: இராஜகுலம் 0776529306


## காணி விற்பனைக்கு

நீர்வேலி இராசவீதியிலிருந்து ஊரெழுச் சந்தியை இணைக்கும் கரந்தன் வீதியில் சுமார் 50 வருடங்களாக ஒரே குடும்பத்திற்குரிய 77 பரப்பு கொண்ட விவசாய, செம்மண் காணி விற்பனைக்குண்டு. பொது நிறுவனங்கள் அல்லது முதலீடு செய்பவர்கட்கு ஏற்றது.

தொடர்பு : 071 5349150

## MILK CHILLING PLANT IBT TYPE WITH PHE

Brand new complete milk chilling plant for sale. 3 phase, two danfoss condensing unit, IBT system, 5000 litter per day with all accessories.



*Contact 077-3295913*



## JEYAAHH BEAUTY ACADEMY


கொழும்பில் பிரபல்யம் பெற்ற அழகுக் கலை ஆசிரியரினால் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற இருக்கும்
**பட்டமளிப்பு விழாவுக்கு**
பெண்களுக்கான முக ஒப்பனை
மேக்கப்
தலையலங்காரம் போன்ற அனைத்து ஓடர்களும் யாழ்ப்பாணத்தில் உங்களுக்காக உங்கள் பதிவுகளுக்கு இன்றே முந்திக் கொள்ளுங்கள்.

யாழ். முகவரி:
இராஜேஸ்பவனம்
பிறவுண் றோட், கொக்குவில் கிழக்கு.
T.P. 0115238726, 0779486437

கொழும்பு முகவரி:
379, 1/4 கோல் றோட்,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06

## துயர் பகிர்கின்றோம்

### அமரர் அருட்பணி அ.பிரான்சிஸ் குலாஸ்



எமது ஆலய ஸ்தாபகர்களில் ஒருவரும் பாடகர் குழாம் போன்ற பக்திச் சபைகளின் உருவாக்குநரும் எமது பங்கின் புகழ் பூத்த பங்குத் தந்தையர்களில் ஒருவருமாகிய அருட்பணி பிரான்சிஸ் குலாஸ் அடிகளாரின் மறைவினையிட்டு எமது பங்கு ஆழ்ந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளது. அடிகளாரின் ஆன்மா இறைவன் பாதத்தில் சாந்தி பெற எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

புனித யாகப்பர் ஆலயம்,
சில்லாலை. — பங்குத் தந்தையும் பங்கு மக்களும்

## 1.UK London Student Visa

- 2011 இல் A/L எழுதிய மாணவர்களா நீங்கள்?
- உங்கள் பரீட்சை முடிவுகள் வருவதற்கு முன் London இல் கல்வி கற்க விசேட சந்தர்ப்பம்!
- O/L இல்லாத மாணவர்களும் Visa பெறமுடியும்!

2011 இல் Visa பெற்ற மாணவர்களில் சிலர்



| Sharmila | Jeevitha | Thanushya | Kesavan | Thaskumar | Suthagaran |
|---|---|---|---|---|---|
| Jaffna | (Colombo - 12) | Jaffna | Jaffna | Jaffna | Thellippalai |

## 2. UK Visit Visa

- London இல் உங்கள் உறவுகள் இருக்கின்றனரா?
- நீங்கள் தனிநபர் or கூட்டு வியாபாரச் சான்றிதழ் வைத்திருக்கின்றீரா? நீங்கள் புதுமணத்தம்பதியினரா?
- அரச உத்தியோகத்தரா?

கவலையை விடுங்கள் ஒருமுறை நேரில் சந்தியுங்கள்!!!
விஷேட கருத்தரங்கு 26, 27, 28 ஆம் திகதிகளில்.
மு.ப. 11 மணிக்கு [எதிர்வரும் திங்கள், செவ்வாய், புதன்]

Branch: SEC Visa Tech,
620, K.K.S. Road, Jaffna.
(நாச்சிமார் கோயிலுக்கு முன்பாக)

Hot Line: 0771022984, 0777887181

"நம்பிக்கையும் விடா முயற்சியும் வெற்றிக்கு உரம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை

கனடா, இத்தாலி போன்ற நாடுகளுக்கு Work Permit மிக விரைவில் நம்பிக்கையுடனும் உத்தரவாதத்துடனும் செய்வதுடன் ரீயூசல், பெண்டிங் Visa க்களும் செய்து தரப்படும்.

**0112363880/ 0772484403**

## வீடு வாடகைக்கு

விதானையார் வீதி, கண்டுக்குளியில் அமைந்த 6 அறைகள், 2 Sitting Room, சாப்பாட்டறை, Store Room, சமையலறை, இரண்டு குளியலறை, Servant குளியலறை யுடன் கூடிய இருமாடி விசாலமான வீடு வாடகைக்குண்டு. வாகனத் தரிப்பிடம் உண்டு.

தொடர்புகளுக்கு: **0772991176 , 0755753559**

## நெடுந்தீவு பிரதேச சபை அமர்வு

**யாழ்ப்பாணம்,செப்.25**

நெடுந்தீவுப் பிரதேச சபையின் புதிய நிர்வாகத்தின் முதலாவது அமர்வு நாளை மறுதினம் 27 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தலைவர் றெக்ஸியன் தலைமையில் நெடுந்தீவு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(உ-7)

## UK VISAS

எமது சேவையில் எல்லா விமானவிசாக்களும் ஒழுங்கு செய்துதரப்படும்.

flex Institute
4, IBC Road, Colombo 6.
Contact: 0777-761346
(A Subsidiary of Flex Graphic)

## வீடு வாடகைக்கு

உரும்பிராய் சந்தி, பழைய தபாற் கந்தோர் ஒழுங்கையில் 3¾ பரப்பில் 5 அறை, 2 பெரிய ஹோல், 2 பாத்றூம் ஆகிய சகல வசதிகளுடன் கூடிய பெரிய வீடு விற்பனைக்குண்டு/ ஒரு வருட வாடகைக்கும் விடப்படும்.

தொடர்புகளுக்கு: **0777901367**


## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, கலட்டி வீதியில் (சங்கரத்தைச் சந்திக்கு அருகில்) 8 பரப்பு வீட்டுக் காணி கிணற்றுடன் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: **0773795291**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 01 06 1945 — மறைவு 24 08 2011



**அமரர் தம்பிராசா மயில்வாகனம்**

கோணாவளை வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

திரு.திருமதி மகாதேவன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கமலேஸ்வரி (கமலா) சிவமணி



காரைநகர் மத்தியைப் பிறப்பிடமாகவும் தொல்புரம் மேற்கையும் இல.315, ஒஸ்மானியாக் கல்லூரி வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கமலேஸ்வரி சிவமணி கடந்த 20.09.2011 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நவாலி தெற்கு, சிந்தாமணிப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு சிரேஷ்ட புத்திரியும் காரைநகர் மத்தியைச் சேர்ந்த கிருட்டிணர் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கிருட்டிணர் சிவமணி (சைவப் புலவர், ஓய்வு பெற்ற அதிபர், யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம், யா/காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம், சமாதான நீதவான், பிரபல சோதிடர்) யின் அன்பு மனைவியும் திருமதி சிவகலா ரஞ்சன் (பின்லாந்து - முன்னாள் பணியாளர் உதயன் பத்திரிகை), ஜெயகுமார் (ரகு மாஸ்டர் - மெடிகுயிக் மென் கொழும்பு), விஜயகுமார் (ராகவன் - CMS (Pvt)Ltd, கொழும்பு) திருமதி சசிகலா கேதீஸ்வரன் (ஆசிரியை- சென்ஜேம்ஸ் மகளிர் கல்லூரி யாழ்.), திருமதி சித்திரா விஜிகாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயும் கமலேஸ்வரன் (கனடா), திருமதி சுகன்யா வின்சன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

315, ஒஸ்மானியாக் கல்லூரி வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (8555)

தகவல்:
குடும்பத்தினர்.

### அருமைநாதன் தவநாதன்



நாரந்தனையைச் சேர்ந்த அருமைநாதன் தவநாதன் 21.09.2011 புதன்கிழமை அகால மரணமானார். அன்னாரின் பூதவுடல் இன்று (25.09.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு இல.115, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி இல்லத்திலிருந்து நாரந்தனைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்பட்டு காலை 8.45 மணியளவில் St.Peter's Church இல் நடைபெறும் ஆசீர்வாத நிகழ்வின் பின் நாரந்தனை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.115, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
சர்வநாதன் (சகோதரன்)
சியாமினி (மகள்)

## அலுவலகத்துக்கான இடத்தை வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளல்

25 வருட காலமாக தனது சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கும் அரச வங்கிக்கு வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தனது கிளைகளை அமைப்பதற்காக பின்வரும் நகரங்களில் கட்டடங்கள் தேவை

* யாழ்ப்பாணம்
* சுன்னாகம்
* ஆரையம்பதி
* வாழைச்சேனை
* மாங்குளம்
* காத்தான்குடி
* ஓட்டமாவடி

### குறித்த கட்டடம்

* சகலவசதிகளும் உள்ளடங்கியதாகவும்
* 1500 சதுர அடி முதல் 2000 சதுர அடி வரை பரப்பளவை உடையதான கீழ் மாடியாகவும் இருக்க வேண்டும்.
* 2 முதல் 4 வாகனங்களையேனும் நிறுத்தி வைக்கக் கூடியதாகவும் தேவை.

சகல விவரங்களையும் 06.10.2011 ஆம் திகதிக்கு முன்பதாக கீழ்க் காணப்படும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். (உரிமையாளர்கள் மட்டும் விண்ணப்பித்தல் வேண்டும்)

மே/பா.உதயன்
வி.இல-4178, 361,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## கார் விற்பனைக்கு

வைத்தியர் ஒருவரின் சொந்தப் பாவனையில் உள்ள Microtrend, Second Generation மிட்சுபிசி எஞ்சின், 1075CC, P/S, P/W, A/C, CD Player, KI-XXXX தொடரிலக்கம், Automatic கார் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
**0776689057, 0718584906**

## வீடு வாடகைக்கு

யாழ். நகர் மத்தியில் மாட்டின் றோட் லேனில் அரச, தனியார் நிறுவனங்களுக்கு ஏற்ற அலுவலகமாக உபயோகிக்கக் கூடிய 3 பரப்புக் காணியில் வரவேற்பறை. 4 அறைகள் [1 அறை A/C ], 2 குளியலறை, சமையலறை, 10 வாகனத் தரிப்பிட வசதி, நீர்த் தாங்கி மற்றும் ஜெனரேட்டர் வசதிகள் கொண்ட வீடு ஐப்பசி முதலாம் திகதி தொடக்கம் வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு: 0775003780

## கடை விற்பனைக்கு

யாழ். மணிக்கூட்டுக் கோபுர வீதியில், ஞானம்ஸ் ஹோட்டலுக்கு அருகில் 900 சதுர அடி உள்ள புதிதாகக் கட்டப்பட்ட கடை [illegible] யுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:0777749174

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




மணிவண்ணன்-கிருபாலினி
தம்பதியரின் புதல்வி
**துவாரகை**

யாழ்.வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் 2011 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த இவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் கல்வியிலும் பல துறைகளிலும் சிறந்து விளங்க எமது கொண்டலடி விநாயகரின் அருளாசியுடன் வாழ்த்துகின்றோம். மேலும் இவருக்குக் கல்வி புகட்டிய வகுப்பாசிரியர் கமலாசனதேவி தனக்குமார் மற்றும் அதிபர் ஏனைய ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்: **மணிவண்ணன்-கிருபாலினி** (பெற்றோர்)
மண்கும்பான். (8565)

## Study in UK / Australia / Malaysia / Swiss / USA / Germany / Singapore / Canada / Poland




KDU University College
SEGi University College
Kolej Universiti LINTON
James Cook University Australia
INTI

Our Partner Universities / Colleges

Multimedia University, AEC, JCU, West George College, UNB, LBBA, West London College, Stansfield College, South London College, London SAM

Apply Now for January 2012 Intake

**UK Office:**
75 Cranford Lane
Heston
Middlesex
TW5 9HA
UK

**Malaysia Office:**
Scholastic Education Services
Block 05-06,Koi Kinrara Suite
Jalan Pipit,Bukit Tandang,
47190 Puchong
Selangor - MALAYSIA

ICS Integrated Corporate Solutions Pvt Ltd.
107 B-1/1, Galle Road, Colombo 06.
(Opposite to Colombo plaza NOLIMIT)
www.icslanka.com

**077 3013060 / 2553520**

## Exclusive Location - Colombo 15 Residence Premises at Rent or Lease



Spacious upstair house, 5 bedrooms, 5 bathrooms, living, dinning, pantry, garden area, garage for 3 vehicle, additional vehicles car park

K.Cyril C.Perera Mw, Colombo 15.

**Contact : 077-3088881**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும்

**செல்வன் குணராஜா சிவானுஜன்**



2011 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு பெருமகிழ்வடைவதுடன் அவர் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

கைதடி தெற்கு,
கைதடி.

வாழ்த்துவோர்:
குடும்பத்தினர்.

## STUDY IN UK, CANADA, USA, New Zealand CYPRUS, POLAND & GERMANY

| | |
|---|---|
| UK | → பல்கலைக்கழகத்தில் குறைந்த கட்டணம் + 20 Hrs. PT + Paid Internship |
| USA | → கட்டணம் ஆகக்கூடியது 2 லட்சம் மட்டுமே. IELTS -5.0 |
| CANADA | → IELTS / Sponsor தேவையில்லை.No Age limit |
| POLAND | → IELTS தேவையில்லை. Work Permit Available,பகுதி நேர தொழில் வாய்ப்பு, விசா கிடைத்த பின்னர் கட்டணம் செலுத்தவேண்டும் |
| GERMANY | → பகுதி நேர தொழில் வாய்ப்பு + PR +With / Without IELTS |
| CYPRUS | → IELTS தேவையில்லை. பகுதி நேர தொழில் வாய்ப்பு விசா கிடைத்த பின்னர் கட்டணம் செலுத்தவேண்டும் |
| AUSTRALIA | → IELTS தேவையில்லை. Visa Guaranteed Transfer Program, G.C.E.(O/L) |

Next Intake: Oct.2011

UKRAINE - Aerospace ,Aeronautical Eng, MBBS, Nursing, Tele communication, Bio Medical Science at lower cost ஒரு வருட தங்குமிடம் இலவசம். Sponsor & IELTS தேவையில்லை.

யாழ்ப்பாணத்தில்: இல:31, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் | பஸ்னா - 0778 438403

READ International
E-mail: read.int@gmail.com
No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# வன்னியின் வளர்ச்சிக்குத் தேவை ஓர் அதிதீவிர விசேட திட்டம்

விளையும் பயிரை முளையில் தெரியும் என்பது முதுமொழி. அர்த்தம் நிறைந்த அந்தமொழி கல்விக்கான விவேகத்துக்கும் பொருந்தும். அதனாலேயே பாடசாலைகளில் போட்டிப் பரீட்சைகள் மாணவர்களின் புத்திக்கூர்மையைக் கண்டறிவதற்கான வழிமுறையாகக் கைக்கொள்ளப்படுவது வழக்கத்துக்கு வந்தது.

மாணவர்களின் கல்வித்திறமையை, விவேகத்தை மிக இளவயதில் கண்டறியும் விசேட போட்டிப் பரீட்சையாக, ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரீட்சை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

அது தொடக்கத்தில், வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த திறமைமிக்க மாணவர்கள் அரசாங்கப் பாடசாலைகளில் தங்கியிருந்து பயில்வதற்கு வகை செய்தது. ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்த பலரும் இடைக்கல்வி பயின்று தொழில் வாய்ப்புக்களை இலகுவில் பெறவும், உயர்நிலைக் கல்வியைத் தொடர்வதற்கும் அது அத்திபாரம் இட்டது.

ஆனால் அண்மைக்காலங்களில், ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரீட்சை, பெற்றோர்களின் குடும்ப அந்தஸ்தை உயர்த்தும் ஒரு குறியீடாக மாறும் ஒவ்வாத, ஏற்றுக்கொள்ள முடியாத நிலைக்கு வந்துவிட்டது. அந்தோ பரிதாபம்! அந்தப் பிஞ்சுகளைக் கசக்கிப் பிழிந்து, அவர்களின் உடலியலும், உளவியலும் பாதிப்புறும் வகையில் பெற்றோர் கொடுக்கும் அழுத்தம் குறித்துப் பத்திரிகைகளின் பத்திகளிலும் கட்டுரைகளிலும் அக்குவேறு ஆணிவேறாக அலசப்பட்டு வருவதை வாசகர் அறிவர்.

எவ்வாறாயினும், போரினால் பாதிக்கப்பட்ட வன்னிப் பிரதேசத்தில் இம்முறை போருக்கு முந்திய காலப்பகுதியை விட ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரீட்சையில் மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் சிறப்பாகத் தேறியுள்ளனர். ஒப்பீட்டளவில் வடக்கு, கிழக்கின் ஏனைய கல்வி மாவட்டங்களுடன் போட்டி போடும் நிலையில், வன்னி மாவட்டங்களின் மாணவர்களின் பெறுபேறுகள் அமைந்துள்ளன எனின் மிகையன்று.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு, நெத்தலியாறு தமிழ் வித்தியாலத்தைச் சேர்ந்த மாணவன் பரமேஸ்வரன் சேதுராகவன் 194 புள்ளிகளுடன் தேசிய ரீதியில் இரண்டாவது இடத்தைப் பெற்றிருப்பது வன்னி மாவட்டங்களின் கல்வி வளர்ச்சிக்கு ஒரு தொடுகல் எனலாம்.

அதேவரிசையில், கிளிநொச்சி மாவட்டம் தர்மபுரம் பாடசாலை மாணவி பாலகிருஷ்ணன் சிவேகா 182 புள்ளிகள் பெற்று மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றிருப்பதும், மன்னார் மாவட்டத்தில் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலை மாணவன் அன்ரன் றினோசன் 188 புள்ளிகளுடன் மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றதும் சிலாகித்துக் குறிக்கப்பட வேண்டியவையே.

குறிப்பாக மனிதாபிமானத்தை மதிக்காமல், நாட்டின் சொந்த மக்களையே வேட்டையாடி அழித்த அசுரப் போரில், வாழ்வா சாவா என்ற கடைசிப்புள்ளிக்கு தமிழ் மக்களைக் கொண்டு வந்து விட்ட போரில், தமது உயிர்களைக் கையில் பிடித்துக்கொண்டு தப்பிப் பிழைத்த பெற்றோரின் பிஞ்சுகளாக, பல வாழ்க்கைக் கஷ்டங்களையும் உளத்தாக்கங்களையும் அனுபவித்த சிறுசுகள், இரண்டு வருடங்களின் பின்னர் போட்டிப் பரீட்சையில் - புலமைப்பரிசில் பரீட்சையில் - அதிக புள்ளிகள் பெற்ற மாணவர்கள் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களை விடப் பலப்பல மடங்கு திறமைசாலிகள் என்பதே சரியான மதிப்பீடும் கணிப்புமாகும். வல்லவன் பம்பரம் மணலிலும் ஆடும் என்பதற்கு வன்னி மாணவர்கள் உதாரணமானவரே.

இத்தனைக்கும், வன்னிப் பாடசாலைகளில் 80 சத வீதமானவை போர் அரக்கனால் தரைமட்டமாக்கப்பட்டதால் பௌதிக வளங்கள் முற்றாக நீறாக்கப்பட்டவை. வன்னி மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள் பலவற்றில், இன்னமும் மரநிழல்களில் பாய் விரித்தே வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அத்தகைய சூழலில் பாடம் நடத்த இயலுதா என்று ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களும், பெற்றோர்களும் பரிதாபப்படும், இரக்கப்படும் அளவுக்கு முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் கல்விப் போதனைகள் நடந்தேறுகின்றன.

ஆகையால், அந்த மாவட்டங்களில் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசிலில் அதிக புள்ளிகளைப் பெற்றவர்களை, ஏனைய தமிழ் மாவட்டங்களில் அவர்களை விடவும் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களிலும் பார்க்க, திறமைசாலிகள் என்பதே சரியான சமன்பாடு எனக் கருதுவது, மதிப்பிடுவது தவறன்று.

போரின் பின்னரான வன்னியில், கல்வித்துறை உட்பட சகல துறைகளும், அவற்றுக்கான வளங்களும் உடைந்து சிதறியும், சிதைந்தும் போயுள்ளன. பாடசாலைகள் பல தரைமட்டமாகி கோலங்கள் சிதைந்து போய்க்கிடக்கின்றன. அது போன்றே ஆசிரியர் பற்றாக்குறை உட்பட பல தேவைகள் முழுமையற்று முன்னரைவிட வரண்டு வற்றிப்போயுள்ளன. அவ்வாறிருந்தும் அந்த மாவட்ட மாணவர்கள் கல்வியில், பொதுப்பரீட்சையில் முன்னணியில் திகழ்கிறார்கள் என்றால்-

பல பெரும் வசதிகளைக் கொண்ட மாவட்டங்களின் நிலைக்கு கொண்டு வருவதற்கு போதிய எண்ணிக்கையான ஆசிரியர்கள் (தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்குவது) நியமனம் மற்றும் வளங்களை அதிகரித்து வலுவூட்ட வேண்டும் என்பது தெளிவாகிறது.

வன்னி மக்களின் குடியிருப்புப் பிரச்சினைகள், அவர்களுக்கு வருமானம் தரும் பிரதான தொழிலான விவசாயம் மற்றும் கடற்றொழில் ஏனைய சிறுதொழில்களைக் கட்டியெழுப்புவதில் இன்னும் 20 சதவீதம் தானும் எட்டப்படவில்லை என்பது குத்துமதிப்பீடு. அவற்றையும் கல்வித்துறை வசதிகளையும் சுமாரான அளவுக்கேனும் உயர்த்தும் பொருட்டு, குறிப்பிட்ட காலவரை ஒன்றை வகுத்து தனிச்சிறப்பணி (*Task Force*) ஒன்றை வகுத்து அரசும் அதிகாரிகளும் செயற்படவேண்டும்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசிலில் வன்னி மாவட்ட மாணவரின் சிறந்த பெறுபேறுகளை எடுகோளாகக் கொண்டேனும், இது குறித்து ஆழ்ந்து நோக்கி அரசு செயற்படக் கூடாதா? வன்னி மக்களும் இந்த நாட்டின் பிரசைகள், அவர்கள் வாழ்வும் வளம்பெற வேண்டும் என்று ஆழ்மனதில் கரு வைத்தால், அது பெரிய காரியமல்ல.

# வடக்கு மாகாண உள்ளூராட்சிச் சபைகளின் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் விரைவில்

யாழ்ப்பாணம், செப். 25

வடமாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளிலும் பங்கேற்புத் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக முறையான பங்கேற்புத் திட்டத்தின் ஊடாகத் திட்டங்கள் தயாரிக்கப்படவுள்ளன.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சி.அச்சுதன் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் நிறுவன அபிவிருத்திப் பிரிவு ஊடாக இந்தத் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக உள்ளூராட்சிப் பிரதேசங்களில் பங்கேற்புத் திட்டம் தயாரித்தலுக்கான அர்ப்பணிப்பினை உறுதி செய்தல் வேண்டும். அதன் பின்னர் உள்ளூராட்சி மன்றத் திட்டமிடல் பிரிவை மீள அமைத்து திட்டமிடல் குழுவை ஒழுங்கமைத்து ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் செயல்முறை வீரர் ஒருவரைத் தெரிவு செய்து வேலைத் திட்டங்கள் இலகுபடுத்தப்படும்.

அடுத்த கட்டமாக திட்டமிடல் குழுவுக்கான நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படும்.

மேற்படி விடயம் தொடர்பாக நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுப் பயிற்சிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

கிராம அலுவலர் பிரிவு, பிரதேச மட்டம் எனத் திரட்டப்படும் வளத் திரட்டினையும், அபிவிருத்தித் திட்டத்தினையும் இணைத்து வரைபு தயாரிக்கப்படும்.

இறுதியாக ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபைக்குமான பங்கேற்பு அபிவிருத்தித் திட்ட வளத்திரட்டு அச்சிடப்பட்டு வெளியிடப்படும். இதன்மூலம் 34 உள்ளூராட்சி சபைகளுக்கும் வளத்திரட்டுகள் புதிய வடிவத்தில் விரைவில் வெளிவரும்.

இதேவேளை -

கடந்த இரண்டு ஆண்டுக்கு முன்னர் உள்ளூராட்சிச் சபைத் திட்டமிடற் பிரிவினரால் பல கிராமங்களை ஒன்றிணைத்து கொத்தணி மட்டத்தில் 'நெல்சிப்' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சிச் சபைகளுக்கான பங்கேற்பு அபிவிருத்தித் திட்ட வளத்திரட்டினை ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றமும் தயாரித்து மக்களின் தெரிவை 1 முதல் 50 வரை ஒழுங்கு முறையாகத் தெரிவு செய்துள்ளன.

இந்தத் திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை அரசு ஆகியன நிதிப் பங்களிப்புச் செய்துள்ளன. இதுவரை 41 வேலைத்திட்டங்கள் முதற்கட்டத்தில் 34 உள்ளூராட்சிச் சபைகளிலும் முன்னகர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-302)

# ஜே.வி.பிக்குள் வலுக்கிறது பிளவு ஊடகப் பிரிவும் மூடப்பட்டது

கொழும்பு, செப்.25

ஜே.வி.பிக்குள் ஏற்பட்டுள்ள பிளவு நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகின்றது. இந்த நிலையில் ஜே.வி.பியின் பத்திரிகையான லங்கா பத்திரிகையும், அக்கட்சியின் ஊடகப்பிரிவும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜே.வி.பியின் உறுப்பினர்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள பிளவு விரிசல் அடைந்து வருகின்றது. இதனால் சிலர் அக்கட்சியிலிருந்து பிரிந்து சென்று புதிய கட்சி ஒன்றை அமைக்கும் நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர் என ஜே.வி.பி யின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

எனினும், அவ்வாறு கட்சியிலிருந்து பிரிந்து செல்பவர்கள் மீண்டும் கட்சிக்குள் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் விவகாரங்களுக்கு அதிகளவான முன்னுரிமை அளித்தல் மற்றும் கட்சியின் தலைமைத்துவம் என்பன தொடர்பில் அதிருப்தி அடைந்துள்ள ஜே.வி.பியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட கீழ்மட்ட உறுப்பினர்கள் சிலர் இவ்வாறு கட்சியிலிருந்து புறம்பாகச் செயற்படத் தீர்மானித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

அதேவேளை, ஜே.வி.பியின் தற்போதைய தலைவர் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள முடியாது என்று அறிவித்துள்ளதால் கட்சிக்குள் காணப்பட்ட பிரச்சினை பிளவாக உருவெடுத்துள்ளது.

இதேவேளை, ஜே.வி.பிக்குள் ஏற்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு இடையிலான முரண்பாடுகளுக்கு அரச தரப்பிலுள்ள சில உறுப்பினர்களும் காரணமாக இருக்கலாம் என அக்கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த கூறினார்.

அரசு, ஐக்கிய தேசியக்கட்சி, அமைச்சர் விமல்வீரவன்ஸ உள்ளிட்ட கட்சிகளின் முயற்சியாக ஜே.வி.பியைப் பிளவுபடுத்த நினைக்கும் என்றால் அது ஒருபோதும் நிறைவேறாது எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், கட்சியிலிருந்து எவரையும் விலக்கவோ எவரும் விலகவோ இல்லை என்று கூறிய அவர், இன்னும் சில தினங்களில் பிரச்சினைகள் அனைத்துக்கும் தீர்வு காணப்படும் எனவும் தெரிவித்தார். தற்போது கட்சி உறுப்பினர்கள் சுமுகமாகத் தமது கடமைகளைச் செய்து வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (த-சி)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 5000 கோடி ரூபா நட்டத்தில்

இவ்வருட இறுதிக்குள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சுமார் ஐயாயிரம் கோடி ரூபா வரையான நட்டத்தை அடையக் கூடுமென எதிர்வு கூறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வருடத்தில் இதுவரை 40 பில்லியன் (நாலாயிரம் கோடி) ரூபாவை நட்டமாக எதிர்கொண்டுள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் இவ்வருட இறுதிக்குள் ஐயாயிரம் கோடி ரூபா வரையான நட்டத்தை அடையும் நிலை இருப்பதாக அரசு மேற்கொண்டுள்ள கணக்காய்வுகளில் இருந்து தெரியவந்திருக்கிறது.

முகாமைத்துவத்தின் குறைபாடுகள், எரிபொருள் விலை ஏற்ற இறக்கங்கள் உட்பட்ட விடயங்கள் இந்த நட்டத்திற்குக் காரணமென்று அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நட்டத்தை அடுத்த வருடத்திலும் தொடரவிடக்கூடாதென்று அரச தலைமை, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்திற்குக் கடுமையான பணிப் புரையை விடுத்திருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (த-சி)

# பிப்பிலி மயானம் சிரமதானம்

மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்தினரால் பிப்பிலி மயானம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

மேற்படி கழகத்தின் வருடாந்த செயற்றிட்டத்தின் மூலம் பல மாதகாலமாகத் [illegible] செய்யப்படாத இந்த மயானம் வலி. தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் மற்றும் சுத்திகரிப்பு ஊழியர்களால் துப்புரவு செய்யப்பட்டது.

(எ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநெல்வேலி
# அபான்ஸ்
வழங்கும்

269, பலாலி வீதி, கந்தர்மடம்,
021 222 0247, 021 222 0248

## அதிரடி விலைக்கழிவு

★ மின்சாதனப் பொருள்கள் அனைத்தையும் வட்டி இன்றி மாதாந்த கொடுப்பனவு முறையில் பெற்றுக்கொள்ளலாம்.
★ பொருள்களை 6, 12, 15, 18 மாத தவணை முறையில் வட்டி இன்றிப் பெறலாம்.

**உடன் நாடுங்கள் .......**
**இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்.**

அபான்ஸ் காட்சியறையில்...
தொலைக் காட்சிப் பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள், குளிரூட்டிகள், AC, DVD, றேடியோ, கணினி லப்டொப் மற்றும் கணனி றைஸ்குக்கர் போன்ற மின்சாதனப் பொருள்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.





## பரிசில் நாள் நிகழ்வு

தென்மராட்சி, செப்.25

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பரிசில் நாள் நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளரும், மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் உதவிச் செயலாளருமான இ.இளங்கோவன் கலந்துகொள்வார்.

(எ-207)


## யாழ் நகரில் கல்வி, தொழில்வாய்ப்பு தொடர்பான இலவச கருத்தரங்கு.

அனுமதி இலவசம்

இக்கருத்தரங்கில்...
- UK, USA, Canada, NZ, Europe போன்ற நாடுகளில் உயர்கல்விக்கான வாய்ப்புக்கள்.
- Canada நாட்டில் வேலைவாய்ப்புக்கள்.
- உங்கள் எதிர்கால இலக்கு பற்றிய விடயங்கள்
- நீங்கள் தெரிவு செய்ய வேண்டிய துறைகள் பற்றிய விளக்கம்
- நீங்கள் ஓர் கல்வித்திட்டத்தினை சுயமாக ஆரம்பிக்க விரும்புகின்றீர்களா?
- நீங்களும் ஓர் ஆசிரியராக வேண்டுமா?

இன்னும் பல சுவாரசியமான அம்சங்களுடன் உள்நாட்டு, வெளிநாட்டு துறைசார் நிபுனர்கள் உங்களை நேரில் சந்திக்கவுள்ளனர்.

இடம்: Green Grass Hotel (No. 33, Aasirwatham Lane, Hospital Road, Jaffna)
காலம்: 01. 10. 2011 (சனிக்கிழமை)
நேரம்: காலை 9.30 முதல்.

மேலதிக விபரங்களுக்கு:
**0722 419 419, 0777406431, 0775083460**

ஏற்பாடு:
**GREENWICH COLLEGE (PVT) LTD.**
No. 34, Galle Road, Dehiwala.
T: 011 2 713 214,
e: info@greenwich.lk, w: www.greenwich.lk


சிவமயம்
ஓம் நமசிவாய

## நூற்றாண்டை நெருங்கும் நுவலரி திலகங்கள்

முதுபெரும் புலவர்



வை.க.சிற்றம்பலம்

தொண்ணூற்றெட்டு வயதை நிறைவு செய்த முதுபெரும் புலவர்
**சிவத்திரு வை.க.சிற்றம்பலம்**
அவர்களும் தொண்ணூற்று ஐந்து வயதை நிறைவு செய்த செந்தமிழ் ஞாயிறு சிவத்திரு கலாநிதி
**க.வைத்தீஸ்வரக்குருக்கள்**
அவர்களும் நூற்றாண்டு காலம் வாழ்ந்து சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றவும் நாடு நலம் பெறவும் வீடு வளம்பெறவும் இவ்விரு பெரியர்களின் நல்லாசி வேண்டி தில்லைக் கூத்தன் திருவடி வணங்கிப் பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி



க.வைத்தீஸ்வரக்குருக்கள்

**க.கு.க.சிவபாலன், களபூமி-காரைநகர்.**
அடியார்க்கு அமுதூட்டும் அண்ணலார்


அல்லலுறும் சக மனிதர்களின் வாழ்வை மேம்படுத்த சுயநலமின்றி உழைக்கும் மனிதர்களை கௌரவிக்கும் விருது...

# V AWARDS
(வீ விருதுகள்)

சர்வதேச தன்னியலாளர்கள் (தொண்டர்கள்) ஆண்டினை முன்னிட்டு IYV+10 தேசிய முன்னெடுப்புச் செயற்குழு நியூஸ் பெ.்.ஸ்ட்டுடன் இணைந்து, சமூகத்திற்காக அளப்பரிய பங்களிப்புகளை வழங்கியவர்கயையும் நாட்டிற்கும் சமூகத்திற்கும் உன்னதமான சேவைகளை வழங்கி மற்றவர்களுக்கு முன்மாதிரியாக திகழக்கூடியவர்களையும் அடையாளங்கண்டு கௌரவிக்கும் வகையில் இந்த விருதை அறிமுகப்படுத்தியுள்ளன. சமூகத்திற்கும் பொருளாதரத்திற்கும் அளப்பரிய சேவையாற்றியவர்கள் கௌரவிக்கப்படுவது இலங்கையை பொறுத்தவரையில் அரிதான விடயமாகவே காணப்படுகின்றது. அந்த இடைவெளியை நிரப்பும் வகையிலேயே இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**விண்ணப்பங்கள் இன்றே அனுப்புங்கள்.**

தன்னியலாளர் விருது செயலகம்,
ஐக்கிய நாடுகள் தன்னியலாளர் பிரிவு,
202-204 பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி 0716 556556, மின்னஞ்சல் - info@vawards.lk
விண்ணப்பத்தை படியிறக்கம் செய்ய - www.vawards.lk
www.newsfirst.lk | www.iyv10srilanka.com



விண்ணப்பப் படிவங்களை செலின்கோ இன்சூரன்ஸ் கிளைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

செலின்கோ இன்சூரன்ஸ் ON THE SPOT உலகிற்கே ஒன்று!

NEWS 1st

செலின்கோ இன்சூரன்ஸ்
**ON THE SPOT**
உலகிற்கே ஒன்று!

UNDP · SRI LANKA Youth · The Ceylon Chamber of Commerce · UN Volunteers · VSO · MOSS · SPARC · MBC RADIO


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாமாக முன்வந்து வரி செலுத்துவோரின் கடந்த கால நிலுவைகளுக்கு விலக்களிப்பு

## இறைவரித் திணைக்கள ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.25

தாமாக முன்வந்து வரிக் கோவையைத் திறந்து உரிய வரிக் கொடுப்பனவுகளைச் செலுத்துபவர்களின் கடந்த கால வரிக் கொடுப்பனவு நிலுவைகள் பற்றிக் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

இவ்வாறு அறிவித்துள்ளார் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ்ப்பாணப் பிராந்தியப் பிரதி ஆணையாளர் பா. சிவாஜி.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வரி மதிப்பாண்டுக்கு மூன்று லட்சம் ரூபாவை விஞ்சும் வரி விதிப்புக்குரிய வருமானத்தை ஈட்டுபவர்கள் தாமாக முன்வந்து வரிக் கோவையைத் திறக்க வேண்டும். அப்படி அவர்கள் வரிக் கோவையை திறந்து உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்வார்களாயின் அவர்களின் கடந்த காலக் கொடுப்பனவுகள் பற்றி எதுவும் கேட்கப்படமாட்டாது.

எமது அலுவலகத்தில் வரி சேகரிப்பு நடவடிக்கைகள் கடந்த இரண்டு ஆண்டுகளாக வழமைக்குத் திரும்பியுள்ளன. எனவே வருமான வரி, தேசத்தை கட்டி எழுப்புவதற்கான வரி, பெறுமதி சேர் வரி, பொருளாதார சேவைக் கட்டணம் ஆகியவற்றை மேற்கொள்ள முடியும்.

இந்த வரிகளை செலுத்துவதற்காகப் பதிவு செய்தவர்கள் அல்லது வரி செலுத்தும் தகைமை உடையவர்கள் உரிய வேளையில் வரிக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டும்.

அவ்வாறு மேற்கொள்வார்களாயின் தண்டப்பணம் செலுத்துவதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

வருமான வரியைப் பொறுத்தவரையில் சுமார் 1200 பேர் இதுவரை யாழ். அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர். மேலும் உள்ளார்ந்த வரி விதிப்புக்கு உட்படும் வருமானத்தில் உள்ளடங்குபவர்களை இனங்கண்டு வரிக்கோவை திறக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வரி மதிப்பாண்டு 2010/2011 இற்கு உரிய வரி விவரத் திரட்டுகள் தபாலில் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. வருமான வரிக் கோவை உள்ளவர்களுக்கே இவை அனுப்பி வைக்கப்படவுள்ளன.

அவர்கள் உரிய வரிக் கொடுப்பனவுகளைச் செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னதாகவும் வரி விவரத் திரட்டுகளை நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்பாகவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் - என்றார். (த-14)

## வீடமைப்பு அதிகார சபையின்

# வீட்டுத் திட்டப் பயனாளிகள் எண்ணிக்கையில் குறைப்பு

யாழ்ப்பாணம், செப்.25

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் பிரதேச செயலாளர், உதவி அரச அதிபர் பிரிவுகளில் வீட்டுத் திட்டத்துக்குத் தலா 10 பயனாளிகள் முன்னர் தெரிவு செய்யப்பட்ட போதிலும் தற்போது இந்தத் தொகை ஐந்தாகக் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஒரு பயனாளிக்கு ஒரு லட்சம் ரூபாவை மானியமாகவும் இரண்டு லட்சம் ரூபாவைக் கடனாகவும் வழங்கி இந்த வீட்டுத் திட்டத்துக்கெனப் பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து தலா 10 பேரைத் தெரிவு செய்திருந்தது.

கிராம அலுவலர்களினால் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட இந்தப் பயனாளிகளின் எண்ணிக்கையை ஐந்தாகக் குறைக்கும் படி தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலால் வீட்டுத் திட்டத்தில் யாரை நீக்குவது, யாரை இணைப்பது என்பதில் பலத்த சிக்கல் எழுந்துள்ளதாகத் தெரிய வருகிறது. (த- 68)

# கீரிமலையில் சிவபூமி மடம்

அளவெட்டி,செப்.25

கீரிமலைக் கடற்கரையில் புதிய மடம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகளில் சிவபூமி அறக் கட்டளை நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

இந்த மடம் அமைக்கப்பட்ட பின்னர் கீரிமலைக்கு வரும் பக்தர்களுக்கு முக்கிய விழாக்களின் போது அன்னதானம் வழங்கப்படவுள்ளது எனவும் சிவபூமி அறக்கட்டளை நிர்வாகம் தெரிவித்தது. (த-36)

# வலி.தென்மேற்கில் 4 பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகளுக்கு முன்னுரிமை

## பிரதேச சபையிடம் கோரிக்கை

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவு 28 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட பரந்த பிரதேசம். இந்தப் பிரதேசங்களில் நவாலி, கட்டுடை, காக்கைதீவு, பிரான்பற்று ஆகிய பிரதேசங்களில் உட்கட்டுமானம், வீதி, சனசமூக நிலையங்கள் என்பன அபிவிருத்தி இன்றி உள்ளன.

புதிதாகப் பதவியேற்றுள்ள உள்ளூராட்சிச் சபை மேற்படி பிரதேசங்களின் அபிவிருத்தியில் முன்னுரிமை காட்டத் தீர்மானங்களை முன்வைக்கவேண்டும்.

இவ்வாறு மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத் தலைவரும் சிரேஷ்ட மத்தியஸ்தருமான சி.பொ.வ.மா.க. முதலியார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபைக்கும் 'நெல்சிப்' அபிவிருத்திக்கு 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்களில் இருந்து இதுவரை 4 வீதிகள் மட்டுமே அபிவிருத்திக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. புதிய பிரதிநிதிகள் ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபைகளிலும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சபைகளின் தலைவர், செயலாளர்கள் மற்றும் சபையினர் இணைந்து 200 மில்லியனை துரிதமாகப் பயன்படுத்தும் நோக்கில் தீர்மானங்களை மேற்கொண்டு நிதியை உடன் சபைக்கு வழங்குமாறு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இதுவரை ஒவ்வொரு சபைகளிலும் 25 முதல் 32 வரையான மில்லியன் ரூபாக்களே செலவு செய்யப்பட்டுள்ளன.

எனவே மிகுதி 170 மில்லியன் ரூபா மீண்டும் திரும்பி விடாதபடி சபைகள் தீர்மானம் மேற்கொண்டு முழுநிதியையும் சபையின் வங்கிகளுக்கு வரச் செய்யத்தக்க வகையில் செயற்பட வேண்டும்- என்றார். (த- 302)

## மனிதநேயம் மலரட்டும்....



அல்லற்படும் மக்களுக்காக- வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் மக்கள் அண்மையில் மீளக்குடியமர்ந்த வசந்தபுரம் பகுதியில் இளவாலை வடமேற்கு ஜே/222 கிராமசேவையாளர் பிரிவில் கடற்படையினரின் இலவச மருத்துவ முகாம் அண்மையில் நடைபெற்றது. இதில் 200 இற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இந்த முகாமில் கலந்து கொண்ட ஒருவரைப் பரிசோதிக்கிறார் கடற்படை வைத்திய அதிகாரி ஒருவர். (த)

# இலாபகரமான நிலையை நோக்கி குடாநாட்டு கூட்டுறவுச் சங்கங்கள்

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், செப்.25

குடாநாட்டில் உள்ள பெரும்பாலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இலாபகரமான நிலையை நோக்கி முன்னேறி வருவதாக யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த ஒகஸ்ட் மாதத்துக்கான வியாபார நடவடிக்கைகளின் புள்ளி விவரப்படி 17 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அதி உச்ச இலாபத்தில் செயற்பட்டு வருகின்றன. அதே வேளை 7 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் நட்டத்தில் இயங்கி வருகின்றன.

இந்த 7 சங்கங்களுக்கும் ரொக்க வியாபார நடவடிக்கை மிகவும் மந்த கதியில் உள்ளது. இதனாலேயே இவை நட்டத்தில் செயற்படுகின்றன.

நட்டத்தில் இயங்கும் சங்கங்களை இலாபகரமான நிலை நோக்கி முன்னேற்றுவதற்குக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இந்தச் சங்கங்களின் ரொக்க வியாபார நடவடிக்கைகளை அதிகரிக்கவும் வியாபாரத்தில் தந்திரோபாயங்களைக் கைக்கொள்வது தொடர்பிலும் ஆராயப்பட்டு வருகின்றது.

முன்னைய காலத்தில் பெரும் நட்டத்தில் திண்டாடிய சங்கங்கள் கூடத் தற்போது இலாபகரமான நிலை நோக்கி முன்னேறிச் செயற்பட்டு வருகின்றன.

நட்டத்தில் இயங்கும் சங்கங்களும் விரைவில் இலாபகரமான நிலைக்கு முன்னேறும். அதற்கான நடவடிக்கைகளைக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் எடுக்கும் - என்றார். (த-26)

# மீசாலை வீரசிங்கம் ம.விக்கு புதிய மூன்று மாடிக் கட்டடம்

## அடிக்கல் நடும் நிகழ்வு நாளை

தென்மராட்சி, செப்.25

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்துக்கு மூன்று மாடிக் கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்படவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கு துரித மீட்சித் திட்டத்தின் கீழ் இந்தக் கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கென முதல் இரு மாடிக் கட்டடம் நிர்மாணிப்பதற்கு 8.7 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல் நட்டும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும்.

மகா வித்தியாலய அதிபர் வே. விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் ஆகியோர் கலந்து கொள்வார். (த- 207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பிலிருந்து தரமான விரிவுரையாளர் குழுவினை CIMAவிற்காக வருவிக்கிறது CAPSTONE நிறுவனம்

2005 A/L பரீட்சையில் கணித பாடப்பிரிவில் அகில இலங்கையில் முதலாம் இடத்தைப் பெற்ற சிவப்பிரகாசம் மயூரன் அவர்கள் பொறியியல் (Engineering) மற்றும் CIMA கற்கைநெறிகளை கற்றுமுடித்து CAPSTONE நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பணியாற்றுகிறார். கொழும்பில் பிரபல விரிவுரையாளரான இவர் வடக்கு கிழக்கு மாணவர்களின் முன்னேற்றத்தையே தனது கனவாக கொண்டு, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை ஆகிய மூன்று இடங்களிலும் CAPSTONE இனை நிறுவி CIMA உயர்கல்வியை மிகச்சிறந்த முறையில் வழங்குவதற்கு துணை புரிகிறார்.




CIMA EXCLUSIVE

CIMA Listed College

CAPSTONE வடக்கு கிழக்கிற்கு வழங்கிவரும் தரமான கல்விச் சேவையை அங்கீகரித்துள்ள CIMA இன் UK தலைமை அலுவலகம் CIMA Listed College எனும் தராதரத்திற்கு மேலதிகமாக Exclusive College என்கின்ற தரத்தினையும் 22 September 2011 அன்று நடைபெற்ற CIMA பட்டமளிப்பு விழாவில் வழங்கியது. வடக்கு கிழக்கில் இந்த அங்கீகாரம் பெற்ற ஒரேயொரு நிறுவனம் CAPSTONE மட்டுமே ஆகும்.



Bradley Emerson
Director
Asia & Middle East CIMA

"CIMA என்பது ஒரு சர்வதேச தரம் வளர்ந்த தொழில்சார் கற்கைநெறி. கொழும்பு விரிவுரையாளர்களைக் கொண்டு வடக்கு கிழக்கில் CAPSTONE நிறுவனம் CIMA கல்வியை தரமுடன் வழங்குவது சிறந்ததொரு சேவையாகும். CIMAவின் சார்பில் CAPSTONE இற்கு நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன். பெரும்பாலான செலவில், மிகுந்த சிரமத்தின் மத்தியில் ஆற்றல் மிக்க விரிவுரையாளர்களை CAPSTONE வருவிப்பதன் பலனை வடக்கு கிழக்கு மக்கள் பெற்று, சமுதாயம் முன்னேற வாழ்த்துகின்றேன்."



S. Mayoorran
CEO / Director
CAPSTONE

"வடக்கு கிழக்கு பெற்றோரின் கனவை நனவாக்குவதற்கு அவர்களது பிள்ளைகளுக்கு உலகத்தரம் வாய்ந்த CIMA கற்கை நெறியை சிறந்த விரிவுரையாளர்களைக் கொண்டு வழங்கி, ஒவ்வொரு இளைஞருக்கும் வெற்றிகரமான தொழிலை அமைத்துக் கொடுப்பதே எமது நோக்கம். இதனை இதுவரை செவ்வனே செய்வதை எமது மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் உறுதிப்படுத்துகின்றன. கடந்த பரீட்சையில் CAPSTONE மாணவர்கள் 100% சித்தியினை அடைந்தனர். இது இலங்கையிலேயே வேறொரு நிறுவனத்திலும் எட்டப்படாத ஒரு கனவு இலக்கு."

## CAPSTONEன் ஆற்றல் மிக்க இளம் விரிவுரையாளர்கள் குழு



**K. Sivagar**
- CIMA Exam Completed
- B.Sc. Undergrad. (Final Year)
- 2 yrs Corporate Experience in Banking & Auditing
- 2 yrs Lecturing Experience



**B. Niransan**
- B.Sc. (FM)Sp,(USJP), ACA(Finalist),MAAT
- 4 yrs corporate experience in Banking, Finance and Auditing
- 3 yrs experience in lecturing



**T. Kanatheepan**
- CIMA Exams completed
- LLB (Hons)
- Attorney at Law (Reading)
- 2 yrs lecturing experience



**F.C.P Mathusoothan**
- CIMA - Strategic Level
- B.Sc. Eng. Undergrad. (Final Year)
- 2 yrs Lecturing Experience



**S. Thushanthan**
- CIMA – TOPCIMA
- 4 yrs corporate experience in Finance
- 3 yrs lecturing experience



**W.S. Ajendra**
- B.Sc. (Hons) in C. Mgt
- CIMA - TOPCIMA

## New Foundation Batch Starting On 1st October, 2011

எத்தனையோ நிறுவனங்களில் மிகக்குறைந்த சில்லறைக் கட்டணங்களுக்கு CIMA கற்பிக்கப்படுவதாக விளம்பரப்படுத்தப்பட்டாலும், தரமான, உண்மையான, ஆங்கில மூலமான CIMA வகுப்புக்கள் CAPSTONE இல் மட்டுமே வடக்கு கிழக்கில் நடைபெறுகின்றன. பெற்றோர்களே! போலியான நிறுவனங்களை நம்பி உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை தொலைத்துவிடாதீர்கள்! ஓரிரு வகுப்புக்களுக்கான இலவச அனுமதியைப் பெற்று எமது விரிவுரைகளின் தரத்தினை உணர்ந்து கொள்ளுங்கள்.

**CAPSTONE**
No. 01, Brown Road, Jaffna
Tel : 021 222 0727, 021 720 0777
E-mail : cima.capstone@gmail.com

**Hotline: 0771 250 350**

**Branches :**

VAVUNIYA
193E, Station Raod, Vavuniya
Tel : 024 720 0800

TRINCOMALE
No 171, Power House Road, Trincomale
Tel : 026 720 0010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தள்ளாத வயதிலும் மக்கள் சேவையில் வைத்தீஸ்வரக்குருக்கள்

சிவத்தமிழ் வித்தகர், பண்டிதமணி, தத்துவக்கலாநிதி, செந்தமிழ்ஞாயிறு சிவத்திரு க.வைத்தீஸ்வரக்குருக்கள் அகவை 95 இல் காலடி வைக்கிறார். இவர் அறநெறி தவறாத அந்தணர் வழியில் க.கண பதீஸ்வரக்குருக்கள்- சிவ யோகசுந்தராம்பாள் தம்பதியினருக்கு 22.09.1916 இல் ஈழத்துச் சிதம்பரம், காரைநகரில் தோன் றியவர்.

அவரைப் பற்றி அதி. வண. கலாநிதி எஸ்.ஜெபநேசன் குறிப்பிடுகையில் ''குருக்கள் நாட்டின் தலை சிறந்த செல்வம். அவருடன் வாழ்கின்ற காரைநகர் மக்கள் பாக்கியசாலிகள். இந்தப் பொழுது அந்மூதறிஞர் கந்த ரோடையில் வாழ்ந்து வருவதால் அந்தப் பாக்கியம் இங்குள்ள மக்களுக்கும் கிடைத்துள்ளது. அவர் ஒரு பழுத்த பழம் மட்டுமல்ல பயன்தரும் மரமும் கூட'' என்றார்.

இப்படி ஒரு பாக்கியம் முன்னரும் 1931-39 காலப் பகுதியிலும் கந்த ரோடை மக்களுக்குக் கிடைத்தது குறிப் பிடத்தக்கது. அந்தப் பொழுதும் அவர் தமது சகோதரியார் வீட்டில்- 'சிற்பி' சி.சிவசரவணபவன் வீட்டில் வாழ்ந் தவர். அபொழுதுதான் தென்கோவைப் பண்டிதர் ச.கந்தையாபிள்ளையும் கந்த ரோடையில் இவர் வீட்டுக்கு முன்பாக வாழ்ந்து வந்தார்.

அவர் வித்தகம் கந்தையா- திரு வாசகம் கந்தையா என்றெல்லாம் அழைக்கப்பெற்ற சுன்னாகத்தின் பெரும் புலவர்களில் ஒருவர். அவர் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் மாணாக்கராக இருந்தவர். சுவாமி விபுலானந்தர், முத்த மிழ்ப் புலவர் மு.நல்லதம்பி, பண்டிதர் சி.கணபதிப்பிள்ளை என்போருக்குச் சிலகாலம் தமிழ் கற்பித்தவரும் கூட. 'பண்டை நல்வினையால் இவருடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது' எனக் கூறிக் கொள்ளும் குருக்கள் ஐயா தமக்குத் திருவாசகம் பற்றி 'வித்தகர்' விளக்கமளித்தமையையும் நன்றியுடன் நினைவு கூரத்தவறுவதில்லை.

''வித்தகர் ஒவ்வொரு நாளும் மாலையில் சுன்னாகத்துக்குப் போய்வரும் வழக்கமுடையவர். போகும் போதும் வரும் போதும் திருவாசகத்தைப் பற்றிய பேச்சுத்தான் நிகழும். சில சந்தர்ப் பங்களில், இவர் தம்மை மறந்த நிலையில் ஓர் இடத்தில் நின்று கொண்டு திருவாசகத்தைப் பற்றிச் சொல்லுவார். அந்த நேரத்தில் எங்களைக் காண்பவர்கள் சிலர், எங்களுக்குத் ''தலையில் பிழை'' என்று சொன்னதுமுண்டு!

தமிழ்ப் பித்தராகத் திகழ்கின்ற குருக்கள் ஐயா, ஆரம்பக்கல்வியை காரைநகர் வலந்தலை அ.மி. பாடசாலையிலும் மேற்கொண்டு காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை,காரைநகர் இந்துக்கல்லூரி, அளவெட்டி நாக பூஷணி வித்தியாசாலை, சுன்னாகம் பிராசீன் பாடசாலை ஆகியவைகளிலும் கல்வி பெற்றார். பரமேசுவராப் பண்டித ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ் பண்டித பரீட்சையிலும், பயிற்றப்பட்ட ஆசிரிய தராதரப் பரீட்சையிலும் சித்தி பெற்றவர்.

ஆன்றவிந்தடங்கிய சான்றோராகத் திகழும் குருக்கள் அத்தகைய சான்றோர்களான தென்கோவைப் பண்டிதர் ச.கந்தையாபிள்ளையிடமும் பண்டிதர் ச.பஞ்சாட்சரக் குருக்கள், வேத விசாரதர் சிதம்பர சாஸ்திரி கள், மகாவித்துவான் சி.கணேசையா போன்றவர்களிடமும் படிக்கின்ற பெருவாய்ப்பைப் பெற்றவர்.



1935 ஆம் ஆண்டு சுன்னாகம் பிராசீனப் பாடசாலையில் படிக்கும் காலை வித்துவான் சி.கணேசையா அவருக்கு ஆசிரியராக வாய்த்தார். பாடசாலைகள் அல்லாத நாள்களில் வறுத்தலை விளானிலுள்ள ஐயரவர்களின் வீட்டுக்கே சென்று திருவாசகத்தின் சில பகுதிகளைக் கற்றுத் தெளிவுபெற்றதை ஐயா அவர்கள் நன்றியுடன் சொல்லுகிறார்.

குருக்கள் அவர்கள் 1940 இல் கொழும்பு விவேகானந்தா வித்தியா சாலையில் தமது ஆசிரியப் பணியைத் தொடங்கி, வேறுசில பாடசாலைகளிலும் பணியாற்றி 1971 இல் ஓய்வு பெற்றவர். விவேகானந்தாவில் பணியாற்றிய காலத்தில்- அகில இலங்கை சைவ சமயப் பரீட்சைக் குழுவின் உறுப்பினராகி அந்தச் சபையின் சார்பில் இவர் ஆன்மிகப் பணி ஒன்றையும் மேற் கொண்டார்.

அப்போது ஞாயிற்றுக்கிழமை தோறும் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று அங்குள்ள தமிழ்க் கைதிகளுக் குச் சமயச் சொற்பொழிவாற்றி அவர்களின் தூயவாழ்வுக்குப் பேருதவி புரிந்தவர்.

இந்தக் காலத்தில் இவர் தினகரன் பத்திரிகையின் ஆசிரி யர் குழுவிலே உதவி ஆசிரியராக பகுதி நேரங்களில் பல வருடங்கள் பணியாற்றியுள்ளார். பரந்தன் பகுதியில் ஆசிரியப் பணி புரிந்த காலத்தில்- வீரகேசரியின் கரைச்சி நிருபராகவும் இருந்திருக்கிறார். இவைகளால் நவீன பத்திரிகைத் தொடர்பு- அனுப வங்களும் வாய்க்கப் பெற்றிருந்தார்.

மக்களின் துயரங்களை வெளிப்படுத்துவதில் ஆர்வம் காட்டிய க.வைத்தீஸ்வரக்குருக்கள் ஆசிரியத் தொழிலோடு பத்திரிகை ஊடகத்துறையிலும் நிறைந்த ஆர்வம் காட்டியவர். தமிழ் மக்களின் தொன்மைச் சிறப்புக்களையும் பாரம்பரிய மேன்மைகளையும் கட்டுரைகளாக உதயன் சஞ்சீவி பத்திரிகைகளில் எழுதியவர். தமது முதுமையையும் பொருட்படுத்தாது தள்ளாத வயதிலும் தமிழ் மக்களின் உரிமைகளை நிலை நாட்ட வேண்டிய தேவை கருதி நிறையவே எழுதினார். தீவக மக்களின் துன்ப துயரங்களை நேரிலே கண்டவர் என்ற வகையில் அவரது தகவல்கள் மக்களுக்கு நடந்த கொடுமைகளைத் தத்ரூபமான செய்திகளாக்கி வெளிப் படுத்த தமக்கு உதவியமை பற்றி, உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பல வேளைகளில் எனக்குக் கூறியுள் ளார்.

தமிழ்மொழி, சமயம் ஆகிய துறைகளிலும் காத்திரமான பயன்தரும் பல கட்டுரைகளை வடித்தவர்.

பத்திரிகைகள் செய்கின்ற பணிகளையும்- அவை செய்ய வேண்டிய பணிகளையும் அடிக்கடி அவர் சொல்லுவார்.

குருக்கள் அவர்கள் ஈழத்துச் சிதம்பர புராணச்சுருக்கம்,பாரத இதிகாசத்தில் வரும் பாத்திரங்களின் குணவியல்பு, பெரியபுராணம்- திருநகரப்படல உரை, காரைநகரில் சைவசமய வளர்ச்சி போன்ற பல நூல்களின் ஆசிரியராவார். அத்துடன் பல நூல்களின் பதிப்பாசிரியருமாவார். அவரின் பதிப்புப் பணி மகத்துவத்தைப் பற்றி நாம் சொல்லுவதை விட புலவர்மணி சோ.இளமுருகனார் ஐயாவுக்கு அப்போது தாமே கைப்பட எழுதிய திருமுகம் மூலம் காண்போம்.

''பேரன்பு சான்ற அந்தணப் பெருந்தகை, பண்டிதர் சிவத்திரு வைத்தீசுவரக்குருக்கள் ஐயாவின் திருவடிக் கமலங்களை தலைமிசைச் சூடிக்கொண்டு எழுதும் திருமுகம்.

'' ஈழத்துச் சிதம்பர புராணத்தை எழுதுவதற்கு நீங்கள் எடுத்த முயற்சியிலும், அதனை அழகுற அச்சிடுவதற்கு எடுத்த முயற்சி பல நூறு கோடி பெரிது. அதனைக் காட்டிலும் எம்மை விளம்பரம் செய்ய ஓராண்டுக் காலமாய் எடுத்த முயற்சி ஆயிரம் கோடி பெரிது. அதனைக் காட்டிலும் பாராட்டு விழா வெடுத்ததற்குப் பல திங்கள் எடுத்த முயற்சி பத்தாயிரம் கோடி பெரிது.

''இத்தனைக்கும் ஒன்றுக்கும் பற்றாத சிறியேம் என்ன கைமாறு செய்யப் போகின்றோமோ வென்று அஞ்சுகின்றோம்! பெரிய சாதனை! அறிவும் சாதுரியமும் ஆற்றலும் உடையவர்கள் இந்த உலகில் எல்லாம் செய்வர் என்பதையே தங்களிடம் இருந்து படித்துக் கொண்டோம்.''

இப்படியாக வசிட்டர் வாயால் பிரம்மஸ்ரீ விருது பெற்றவர் எங்கள் ஐயா அவர்கள்.

பதிப்புப் பணியில் சிகரமாக அண்மையில் வெளிவந்த 'திண்ணபுர அந்தாதி' நூலைக் குறிப்பிடலாம். கார்த்திகேயப் புலவரது ஆக்கங்களில் தலை சிறந்ததாகக் கருதப் பெறும் இந்த ஆக்கம் காரைநகர் 'ஈழத்துச் சிதம்பரம்' ஆகிய திணணபுரத்தில் கோயில் கொண்டருளிய அருள்மிகு சௌந்தராம்பிகை உடனுறையும் சுந்தரேசப் பெருமான் மீது பாடியதாகும்.

ஏற்கனவே இந்த நூலை முதலில் பதிப்பித்த பெருமை யும் இவரையே சாரும். இப்பொழுது இந்த நூலின் மூன்றாம் பதிப்பினை கனடா சைவசித்தாந்த மன்றத் தலைவர் ( அன்புநெறி ஆசிரியர்) தி.விசுவலிங்கம் மூலமாக வெளியிட வைத்திருக்கின்றார்.

அவரின் இந்தப் பணிக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களம் பெரும் தொகை கொடுத்து இந்த நூற் பிரதிகளை கொள்முதல் செய்ய முன்வந்திருக்கிறது.

இந்தத் தகவலை உடல் நிலை தளர்ந்த நிலையிலும் புத்துணர்ச்சி பெற்றவராக மிக்க புளகாங்கிதத்துடனும் நன்றியுடனும் ஐயா கூறக் கேட்ட நாமும் பெருமையடைகிறோம்.

இந்தப் புத்துணர்ச்சியுடனும் புளகாங் கிதத்துடனும் ஐயா அவர்கள் தமது மூன்று புதல்வர்களுடனும் நீடு வாழ்ந்து சிவப்பணியும் தமிழ்ப்பணியும் புரிய எல்லாம் வல்ல இறையருள் வேண்டுவோமாக...

# யாழ்.போதனா வைத்தியசாலை தூய வேளாங்கண்ணிக்கு இன்று பெருவிழா

யாழ்.போதனா வைத்தியசாலையில் உடல், உள நோய்களால் பாதிப்புற்று வேதனையுறுகின்ற நோயாளிகள் இறைவனுடைய இந்தத் தலத்திலே ஆறுதல் அடைவதாகவும் கத்தோலிக் கர்கள் இறைவழிபாட்டிலே பங் கெடுப் பதற்காகவும் 1973 ஆம் ஆண்டு வைத்தியசாலை வளாகத்தி னுள் புனித யூதா தேயு வைப் பாதுகாவலராகக் கொண்டு சிறு ஆலயம் அமைக்கப் பட்டது. 1975 ஆம் ஆண்டு இந்தச் சிற்றாலயம் தூய வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னையினுடைய பெயருக்கு மாற்றப்பட்டது. 1979 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி மறைந்த யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட் தியோகுப்பிள்ளை ஆண்டகையால் அமலமரித் தியாகிகளிடம் இந்தப்பணி ஒப்படைக்கப்பட்டது. அருட்திரு பிரான்சிஸ் டானியல் அ.ம.தி. அடிகளார் முதல் அமதி யாகப் பணியைத் தொடங்கி னார். இவரது காலத்தில் ஆலயம் விஸ்தரிக் கப்பட்டது. அருட் அன்புராசாவால் (அ.ம.தி) ஆலயம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு மெருகூட்டிக் கட்டப்பட்டது. வைத்தியசாலை வளாகத்திலுள்ள அன்னைக்குச் செப் ரெம்பர் மாதத்தின் இறுதி ஞாயிறன்று விழா எடுக்கப்படுகிறது.

எமது வாழ்க்கையில் பல துன்பங்களானாலும் வேதனைகளானாலும் அல்லலுறுகின்ற எமக்கு அன்னை ஆறுதல் அளிக் கின்றாள். அன்னையைத் தேடி ஓடி வருகின்றவர்கள் அன்னையிடம் ஆறுதல் பெற்றுச் செல்கின்றார்கள். நூற்றுக் கணக்கான பக்தர்கள் அன்னையிடம் இருந்து பெற்றுக்கொண்ட அனைத்து நன்மைகளுக்கும் நன்றி கூறி நிற்கின்றார்கள். இன்று இந்த வைத் தியசாலை வளாகத்தினுள் வீற்றிருக்கும் ஒப்பற்ற மாண்புமிக்க அறுதல் தந்து தேற்றுகின்ற அரசியாக மரியன்னை இருக்கின்றாள் என்றால் அன்னையின் ஒவ்வொரு அரவணைப்பும் எமக்கு ஒரு உந்து சக்தியையும் மன பலத்தையும் தரு கின் றது.

அன்னை எமது கண்களில் இருந்து ஆறாகப் பெருக்கெடுத்து ஓடும் கண்ணீரைத் துடைக்கின்றாள். வேதனைகளை, சோதனைகளை, சொல்லொணாத் துயரங் களை, வருத்தங்களைக் குறைக் கின்றாள்.

வைத்தியசாலையின் பாதுகாவலிக்கு விழா எடுக்கும் இன்றைய நாளிலே இறைவனுக்கு நன்றி கூறி

அருட்தந்தை.யோண் பற்றிக் அ.ம.தி
ஆன்ம குரு
யாழ்.போதனா வைத்தியசாலை



அன்னையின் திருவாக்குப் போல 'இயேசு சொல்வதை எல்லாம் செய்து' வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCY

Post : English Lecture (Full time)
Salary : Negotiable
Time : 10 am to 2 pm
Date : 27 of September 2011 (Tuesday)
Venue : British College of Higher Studies
No.15, Sirambiyadi Lane,
Off Stanly Road, Jaffna.
Tel : 021 222 4550

## அமெரிக்க வீஸா லொத்தர்

(இன்ரநெற்/ ஆங்கிலம் தெரியாதவர்களுக்கான சேவை) எம் மூலம் விண்ணப்பிக்க ரூ.15/- முத்திரை ஒன்று, பெயர், விலாசம், மணமான வரா இல்லையா விவரத்துடன் எழுதவும்.
**BBS Netting,**
**3/14, Pinwatta Road, Dehiwala.**

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

22

SEPT. 2011 TO FEBRUARY 2012

*தமிழ் மொழி மூலம்*

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology. M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2011

## பணிப்பெண் தேவை

கொழும்பில் வைத்தியரின் வீட்டில் சமயலுக்கும் பிள்ளை பராமரிப்புக்கும் பணிப்பெண் தேவை.
தொடர்பு: 0777730224

## வீடு வாடகைக்கு

நல்லூர்-செம்மணி வீதியில் வெய்யிலுகந்த பிள்ளையார் கோயிலுக்கு அருகில் நல்ல சுற்றாடலில் வாகனத் தரிப்பிட வசதி கொண்ட வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 0773466702
0776770383

## சிமெந்து

விற்பனைக்கு உண்டு.
யாழ். சிமெந்து வணிகம்
021 320 2020

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.

## பணிப்பெண் தேவை

கொழும்பு, வெள்ளவத்தையில் உள்ள, வெளிநாட்டைச் சேர்ந்த சிறிய தமிழ்க் குடும்பத்துக்கு வீட்டுப் பணிப் பெண் தேவை. வீட்டு வேலைகளையும், குழந்தையையும் பராமரிக்க வேண்டும். தங்குமிடம், உணவு என்பன வழங்கப்படும்.
சம்பளம் - 10,000/=
தொலைபேசி - 0776256505, 0112361984

## காணியுடன் வீடு வாடகைக்குத் தேவை

சகலவிதமான வசதிகளுடன் கூடிய நல்ல நிலையில் உள்ள வீடு வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ தேவை. யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட வீடு விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:
0773504340, 0775149900

## வீடு விற்பனைக்கு

நல்லூர் கோயிலுக்கு அண்மையில் வாகனத் தரிப்புடன் கூடிய அழகிய நவீன மாடி வீடு 5பரப்புடன் முழுமையாகவோ,பிரித்தோ விற்பனைக்கு உண்டு. தரகர் தவிர்ந்தோர்
தொடர்புகளுக்கு. 0726816886

## தளபாடம் விற்பனைக்கு

உயர்தர மரத்திலான மொறட்டுவவில் உருவாக்கிய வீட்டுத் தளபாடங்கள் மலிவான விற்பனைக்கு.
தொடர்புகளுக்கு. 0726816886

## அகம் மகிழும் நல்வாழ்த்துக்கள்



நவாலி தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த ஈஸ்வரன் - ரஜனி தம்பதியரின் புத்திரியும் மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவியுமாகிய

# சௌமியா

2011 புலமைப் பரிசில் பரீட்சையில் 178 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் இரண்டாம் இடத்தை பெற்றமைக்காகவும் தன் வாழ்வில் மேலும் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்று வாழவும் அகம் மகிழ்ந்து வாழ்த்தும்

கி.செல்வரத்தினம் - (முத்து) (மாமா - பிரான்ஸ்)
இராஜேஸ்வரி - (சோபா) (அத்தை - சாவகச்சேரி)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
## றோயல் குளுக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இலவசம்
அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.

## Jaffna College Institute of Technology(JCIT), Vaddukoddai

# Bachelor's of Information Technology

(External Degree School of Computing , University of Colombo)

கொழும்பு பல்கலைக் கழக வெளிவாரி பட்டப்படிப்பினால் நடத்தப்படும்
Bachelor's of Information Technology (BIT)
BIT
கற்கை நெறிக்கு எமது நிறுவனத்தில் 30.09.2011ற்கு முன் பதிவு செய்து கற்கை நெறியை தொடங்கவும்.



குறைந்த கட்டணத்தில் கற்கை நெறியை தேடுங்கள்
Facilities
*Easy Installment ,More Practical hours,*
*Modern Lab, Auditorium*
*Hostel, library & Sports, etc.*
More Information
Director,JCIT,Vaddukoddai. Tel.021-3213139

# JOB ANNOUNCEMENT

MEDECINS SANS FRONTIERES

***Fixed Term Contract at Mullaitivu Hospital***

**EMERGENCY UNIT (E.U.) /OPERATION THEATRE (O.T.) NURSES**

Medecins Sans Frontieres France (MSF-F) is an international humanitarian non-governmental Organization (NGO) acting in the health sector. MSF-France is working in close collaboration with the Ministry of Health, Providing medical care and support in Mullaitivu and Jaffna Districts

## MAIN RESPONSIBILITIES

In order to ensure a high quality of E. U. and surgery activities at Mullaitivu Hospital,
* The OT Nurse is responsible for ensuring quality work in the operation theatre.
* The EU Nurse is responsible for improving the quality of nursing activities where necessary in the EU Department.

## MAIN QUALIFICATIONS AND SKILLS

***Required:***
* Fluency in English (spoken, read and written) and Tamil (spoken, read), also Sinhala is a plus - Valid Nursing License and government registration
* Flexibility, willingness to learn, and work within a team
* Respect of MSF/MOH organization rules and principles

***Highly desirable***
* Previous experience working in the relevant field,
* Previous experience with MSF or with an international NGO, -Open-minded and tolerant

Interested person shall send the application with updated CV and motivation letter on or before October 5th, 2011 to Head office:
Administrator - 251/37, Kirula Road, Narahenpita, Colombo 5
Or by email: msff-colombo-medco@paris.msf.org
Only those selected for interviews will be contacted.

# ASIAN Mega COMPUTER SCHOLARSHIP


CSC
ISO 9001 : 2000
Certified Institution

18 வருட நம்பிக்கையும் சிறப்பு மிக்க கல்விச்சேவையும்

CSC - ASIAN கல்விநிலையம், தகவல் தொழில்நுட்ப கல்விக்காக நடாத்திய புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பதிவுகள் ஆரம்பமாகியுள்ளன. குறிப்பிட்ட அளவு அனுமதிகளே உள்ளதால் அருகிலுள்ள CSC - ASIAN பயிற்சி நிலையங்களில் விரைவாக உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

## A/L பரீட்சைகளின் பின் தொழில்சார் கற்கைநெறிகள்

புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்



- Advanced Java Programming
- Hardware & Networking
- Digital Video Production
- Tally Financial Training
- Office Application Management
- Master Diploma in Multimedia
- Web Development & Animation
- Honours Dip. in Computer application

## ASIAN COMPUTERS

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|
| 2G ஸ்ரான்லி வீதி | கொடிகாமம் வீதி | 230- 1ம் மாடி கண்டி வீதி |
| 021-2225697 | 021-2262399 | 021-2270267 |

கிளிநொச்சி மாவட்டத்தில் எமக்கு கிளைகள் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் 4 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கு ஆஸ்திரேலிய அரசு உதவிகளை வழங்கும்

## கிளிநொச்சியில் ஆஸ்திரேலியா தூதுவர் தெரிவித்தார்

கிளிநொச்சி, செப்.25

கடந்த காலங்களில் அதிகமன உழைச்சல்களுக்கும் பல்வேறு சங்கடங்களுக்கும் உள்ளாகிய நீங்கள் தற்போதும் மிகவும்கஷ்டமான நிலையில் வாழ்ந்து வருகின்றீர்கள் என்பதை நான் உணர்ந்து கொண்டுள்ளேன். மேலும் 4ஆயிரம் வீடுகளை ஆஸ்திரேலிய அரசு கட்டித் தரவுள்ளது.

இவ்வாறு ஆஸ்திரேலியாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் கதி குளுக்மன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி கல்லாறு கிராமத்தில் கடந்த 21 ஆம் திகதி அன்று ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் யு.என். கபிறாற் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட நூறு வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்ட ஒரு சமுகமாக நீங்கள் இங்கு வாழ்ந்து வருகின்றீர்கள். உங்களின் பாதிப்புக்களையும் இழப்புக்களையும் என்னால் அளவிடவே முடியாது பாதிக்கப்பட்ட உங்களுக்காக ஆஸ்திரேலிய அரசும் ஆஸ்திரேலிய மக்களும் இலங்கை அரசுடன் இணைந்து பணியாற்றுகின்ற அதேவேளை இங்குள்ள மக்களின் சேவைகளைச் சிறப்பானதாக மாற்றுவதற்கு நாங்கள் உறுதி பூண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

நீங்கள் மிகவும் பெறுமதி கொண்ட ஆற்றல் கொண்ட மக்களாவீர்கள். உங்களுடைய வீடுகளை நீங்களே கட்டி முடிக்க முன்வந்திருக்கின்றீர்கள். ஆஸ்திரேலிய அரசானது வழங்குகின்ற உதவியில் சிறு பங்கினை இங்கு வழங்க முன்வந்துள்ளதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இதேபோன்று சுமார் 4 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்குத் திட்டமிட்டிருக்கின்றோம் அத்துடன் யுத்தத்தால் சேதமடைந்த 25 பாடசாலைகளையும் கட்டித் தருவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் ஆஸ்திரேலியாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் மேலும் தெரிவித்துள்ளார். (க-6)

## நிகரில்லாத உதவிகள்...



நல்ல உள்ளங்கள்: வவுனியா கல்நாட்டியகுளம் பகுதியில் சிறுவர் பாடசாலைக் கட்டடம் அமைப்பதற்குத் தமது காணியை இலவசமாக வழங்கிய சமுகத் தொண்டர் எஸ்.பாலசுப்பிரமணியமும் கட்டடம் அமைப்பதற்கான நிதியை வழங்கிய ஆஸ்திரேலியா நாட்டினராகிய திரு.திருமதி ரோனி தம்பதியினரும் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றனர். (421)

# தொண்டர் ஆசிரியர் நிரந்தர நியமனம் சிறிதரன் எம்.பி. ஜனாதிபதிக்கு கடிதம்

கிளிநொச்சி, செப்.25

வன்னித் தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

வன்னித் தொண்டராசிரியர் நியமனம் குறித்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, மடு, வடமராட்சி கிழக்கு ஆகிய கல்வி வலயங்களில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமைபுரியும் 704 தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் குறித்த தங்களின் கரிசனைக்கு மேலாகச் சில விதந்துரைகளைத் தங்களது மேலான கவனத்துக்குத் தர விரும்புகிறேன்.

யுத்தத்துக்குப் பிந்திய இப்பிராந்தியத்தின் கல்வி அபிவிருத்தியில் பௌதிக வளங்கள் மேம்பட்டு வருகின்றமை குறித்துரைக்கக் கூடியதாக இருக்கின்றது. ஆனால், ஆசிரிய வளப்பற்றாக்குறை என்பது மொத்த ஆசிரிய தேவைகளோடு ஒப்பிடுகின்றபோதும், பாடரீதியான தேவைகளோடு மதிப்பிடுகின்றபோதும் பற்றாக்குறையாகவுள்ளமை வெளிப்படையானது. போருக்குப் பிந்திய கல்வி வளர்ச்சியில் அதன் அடைவு உயர்வானதாக இருக்க வேண்டும் என்ற அரசினதும் பெற்றோரினதும் எதிர்பார்ப்புக்கு ஆசிரிய ஆளணிப் பற்றாக்குறை தடையாக அமைந்திருப்பதைத் தங்களால் உணர முடியும்.

பிற மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் இந்தக் கல்வி வலயங்களில் நியமிக்கப்பட்டிருக்கின்ற போதும் தினந்தோறும் பல கிலோமீற்றர் கடந்த பயணம், வன்னிப் பிராந்தியத்தின் உட்புறக் கிராமங்களின் பள்ளிகளுக்குச் சென்றடைவதில் இருக்கக் கூடிய போக்குவரத்துக் குறித்த சவால்கள், ஆசிரியர் தங்குமிடங்கள் இன்மை என்பவற்றால் பலத்த சிரமங்களுக்கு மத்தியில் பூரணப்படுத்தப்பட்ட ஆசிரிய சேவை அவர்களால் வழங்க முடியாதிருப்பது துரதிஷ்டவசமானதென்று கருதுகின்றேன். இந்த இடத்தில் தான் சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக சொந்தக் கிராமங்களில் தாம் கற்ற பாடசாலைகளிலேயே தொண்டராசிரியர்களாகக் கடமைபுரியும் அவர்களின் நியமனம் குறித்துத் தங்களின் மேலான கவனத்தை ஈர்க்குமாறு தயவுடன் வேண்டுகிறேன்.

நானும் ஒரு தொண்டராசிரியனாக இருந்தவன் என்ற வகையில் அதன் உள, சமூக தாக்கங்களையும் நெருடல்களையும் உணர்ந்தவன் என்ற வகையில் இந்தக் கடிதத்தைத் தங்களுக்கு எழுதுகின்றேன். பல தொண்டராசிரியர்கள் 10 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி மத்திய தர வயதைக் கடந்த போதும் நிரந்தர நியமனம் இல்லாத காரணத்தால் திருமணம் செய்து வாழ்க்கையை முழுமைப்படுத்த முடியாமல் இருப்பது வாழ்வின் கடுமையான சந்தர்ப்பமாகும். இதனைத் தாங்களும் உணர்வீர்க்ளென நம்புகின்றேன்.

ஆகவே தாங்கள் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் சென்று இவர்களின் அவல நிலையைக் கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என மேலும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# காணி பதியும் திட்டம்

கிளிநொச்சி, செப்.25

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சி உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும் வசிக்கும் பொதுமக்கள் அனைவரும் தங்களது காணியின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காகச் செயற்படுத்தப்படும் 'மண்ணின் மகிமை' திட்டத்தின் விண்ணப்பப் படிவத்தைத் தங்கள் பிரிவு கிராம அலுவலரிடம் பெற்று அந்த விண் ணப்பத்தை இந்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிராம அலுவலரிடம் ஒப்படைக்கு மாறு கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுக் கொண்டுள்ளார். (க)

# கோட்ட மட்டப் போட்டிகள்

கிளிநொச்சி, செப்.25

கிளிநொச்சி கல்வி வலயத்தின் பளைக் கோட்ட மட்டத்திலான ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான வாய்ப்பாடு மனனப் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி அதே கல்லூரியிலும் 29 ஆம் திகதி சிறுவர் அரங்கப் போட்டி பளை மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

கடந்த 22 ஆம் திகதி திருக்குறள் மனனப் போட்டி இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்றது. இந்த மாத முற்பகுதியில் துரித கணிதச் செய்கைப் போட்டியும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-405)

# வணிகத்துறை ஆசிரியர் செயலமர்வு

கிளிநொச்சி, செப்.25

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் தரம் 10, 11 ஆகிய வகுப்புக்களில் வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் முயற்சியாண்மைக் கல்வி, மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான 'மதிப்பீட்டு நுட்பங்கள் தொடர்பான பயிற்சிச் செயலமர்வு' நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வு எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 தொடக்கம் 5.30 வரை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இயங்கி வரும் ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வுக்குக் குறித்த ஆசிரியர்களைத் தவறாது அனுப்பி வைக்குமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (க-405)

# கரைச்சி கரையோரப் பிரதேசத்தில் இறால் வளர்ப்புத் திட்டம் ஆரம்பம்

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சிப் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் கடற்றொழிலை நம்பியிருக்கும் ஏழைக் குடும்பங்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் இறால் வளர்ப்புத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆனையிறவு கடலேரியிலுள்ள களப்புக் கடல் பகுதியில் பல மில்லியன் ரூபா செலவில் இந்த இறால் வளர்ப்புத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும் இந்தத் திட்டத்துக்கான தரவுகள் இதனுடன் தொடர்புடைய அதிகாரிகளால் சேகரிக்கப்பட்டுள்ளன. மழை காலத்திலிருந்து இதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஏறபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாகக் கடலில் விடப்படவிருக்கும் 2 லட்சத்து 50 ஆயிரம் இறால் குஞ்சுகள் இருமாதங்களின் பின்னர் இருமடங்காக வளர்ச்சியடைந்த பின்னர் இறால் பிடிப்பதற்கு மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

இதேவேளை பிடிக்கப்படும் இறால்களைச் சந்தைப்படுத்துவதற்கும் பழுதடையாமல் பாதுகாப்பதற்கும் மீனவர்களுக்கு உதவிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன. (க)

# நான்கு மாணவர்கள் சித்தி

கிளிநொச்சி, செப்.25

கிளிநொச்சி தர்மபுரம் இல.1 அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இருந்து பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 4 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

பாலகிருஷ்ணன் சிவேகா - 182 புள்ளி - மாவட்ட நிலை 2, விஜயகுமார் கிருபாகரன் - 165 புள்ளி, லோகேஸ்வரன் சிந்துஜா -148 புள்ளி, தயாகரன் அனுபரன் - 147 புள்ளி. (க-405)

# முல்லைத்தீவுக்கு வருகை தந்த அமெரிக்கத் தூதுவர் பல்வேறு தரப்பினருடனும் முக்கிய கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வருகை தந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மாவட்டத்தின் தற்போதைய நிலைமை குறித்துப் பல்வேறு தரப்பினருடனும் கேட்டறிந்து கொண்டார்.

கடந்த புதன்கிழமை முல்லைத்தீவுக்கு வருகை தந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரான பற்றீஷியா புட்டனிஸ், அரச அதிபர், பொது மக்கள், மீனவர்கள் ஆகியோருடன் உரையாடி மாவட்டத்தின் தற்போதைய நிலை குறித்துக் கேட்டறிந்தார்.

முல்லைத்தீவு அரச செயலகத்தில் அரச அதிபர் அ.பத்திநாதனை அமெரிக்கத் தூதுவர் சந்தித்தபோது மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள், மீள்குடியமர்வு, கண்ணிவெடி அகற்றும் பணிகள் தொடர்பாக விரிவாகக் கேட்டறிந்தார்.

பின்னர் செல்வபுரம் கத்தோலிக்க தேவாலயத்தில் பொது மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது மக்கள் தாம் எதிர்கொள்ளும் சகல பிரச்சினைகள் தொடர்பாகவும் அமெரிக்கத் தூதுவருக்கு எடுத்துக் கூறினர்.

மேலும் மீன்பிடித் துறையும், உலக உணவு விவசாயமும் இணைந்து யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடத்திய மீன்பிடித் தொழில்ச் சட்டம் தொடர்பான கருத்தரங்கின் ஆரம்ப வைபவத்திலும் அமெரிக்கத் தூதுவர் கலந்து கொண்டார்.

அமெரிக்கத் தூதுவரின் முல்லைத்தீவுக்கான வருகை பாதிக்கப்பட்ட இந்தப் பகுதி மக்களுக்குப் பேருதவியாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (க)

# இவ்வருட இறுதிக்குள் மீள்குடியமர்வு

வவுனியா, செப்.25

வவுனியா நலன்புரிமுகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்கள் இந்தவருட இறுதிக்குள் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படவுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சர் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் கதிர்காமர் மற்றும் ஆனந்தகுமாரசுாமி முகாம்களில் உள்ள 7 ஆயிரத்து 427 பேரே இவ்வாறு அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படுவர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை தியாகராஜா



(ஓய்வுபெற்ற பொது முகாமையாளர்
காரைநகர் ப.நோ.கூ.ச.)

காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஐந்து சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தியாகராஜா 23.09.2011 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பையா மற்றும் மனோன்மணி (கனடா) தம்பதியரின் அன்பு மருமகனும் சுந்தராம்பாளின் அன்புக் கணவரும் சவுந்தராம்பிகை (ஆசிரியை - கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), சுந்தரேஸ்வரன் (லண்டன்), ஞானாம்பிகை (லண்டன்), சேந்தன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராமகிருஷ்ணன் (ஆசிரிய ஆலோசகர்,யாழ். கல்வி வலயம்), சாரதாதேவி (லண்டன்), லோகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் லதாங்கி, பிரணவன், திவ்வியன் (லண்டன்), திவ்வியா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (26.09.2011) திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் அவரின் யாழ். ஐந்து சந்தி இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

84/1 A, மானிப்பாய் வீதி,
வண்ணார்பண்ணை.
யாழ்ப்பாணம். (8543)

தகவல்:
குடும்பத்தினர்.

---

**அபரக்கிரியை, அந்தியேட்டிக் கிரியை போன்ற சமயக் கிரியைகள் செய்வதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய இடம்**

தர்ப்புருஷ தேசிக, சிவஸ்ரீ. க.சிவராசக் குருக்கள்
9/1, காளிகோயிலடி, குருமன்காடு,
வவுனியா.
024 222 1075, 024 4907603,
0776016649

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி. சௌந்திராம்பிகை ராமக்கிருஷ்ணன் அவர்களின் பாசமிகு தந்தை கணபதிப்பிள்ளை தியாகராசா இறைபதம் எய்தியுள்ளார்.

அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயம். பாடசாலைச் சமூகம்.

---

## காணி விற்பனைக்கு

உடுவில் சந்தியில் இரு மருங்கும் தெருக்கள் உள்ள, கிணற்றுடன் 2 ½ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 021 3007470.

---

## கார் விற்பனைக்கு

### வவுனியாவில்...

Toyota Premio NZT 260 F Year 2011/6 Only 1500 km done. Personally Imported by Professional. F/O wine red, beiqe interiot. Chaeper than market rate, quick sale.

**Contact: 0750977447**

---

## வீடு வாடகைக்கு

வீட்டுத்தளபாடங்கள் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. [அலுவலக பாவிப்புக்கு மாத்திரம்] க.மகேசன்.
286,நாவலர்வீதி(கைலாசபிள்ளையார் கோயிலடி),யாழ்ப்பாணம்.

---

## வீட்டுப் பணிப்பெண் தேவை

சம்பளம் நேரில்
பேசித் தீர்மானிக்கப்படும்
தொடர்பு: 0774128067

---

## கட்டடம் வாடகைக்கு

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள், வீதிக்கு அருகில் 3000 சதுர அடி கொண்ட கட்டடம் வாடகைக்கு உண்டு. இந்தக் கட்டடம் 8 அறைகள், விறாந்தை, கோல், சமையலறை, குளியலறைகளைக் கொண்டதுடன் முன்னும் பின்னும் வாகனத்தரிப்பிட வசதிகளையும் உள்ளடக்கியது. காரியாலய சுற்றுலா விடுதி, வங்கி, நிதிக்கம்பனி, NGO, எலெக்ரிக்கல் எலெக்ரோனிக் பொருள்கள் விற்பனை நிலையம் போன்றவற்றுக்கு பகுதியாகவோ/ முழுமையாகவோ வாடகைக்கு விடப்படும். வீடாக/ விருந்தினர் விடுதியாக பாவிப்பதற்குக் கொடுக்கப்படமாட்டாது. என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

**தொடர்பு: 0772484761**

---

**Easy English:** அனுபவமிக்க ஆசிரியரினால் கூட்டாகவோ, தனியாகவோ நவீன கற்பித்தல் உக்தியுடன் மிக இலகுவாக 3 மாதத்தில் ஆங்கிலம் எழுத, பேச வேண்டுமா? அழையுங்கள்.
0770357307 வட்டுக்கோட்டை.

---

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பிரதான வீதி, நீதி மன்றத்துக்கு அருகில் 1 1/2 ,பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0776770418

---

## கார் விற்பனைக்கு

2 Sri XXXX நல்ல நிலையில் உள்ள மொறிஸ் மைனர் கார் விற்பனைக்கு.
தொடர்பு:
0779238376

---

## வர்த்தகப் பெருமக்களே...

### வியாபாரத்தை பதிவுசெய்தல்
*Business Registration*

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவுசெய்து அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள்.
VTL மெனேஜ்மென்ட், கொழும்பு - 3.
0729994777, 0117902938

---

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் பொன்னுத்துரை
சரவணபவன் (ராசா)
(மண்டைதீவு - 06)
அன்னை மடியில்
1952.04.26





ஆண்டவன் அடியில்
2005.10.01
திதி: அபரபக்க திரயோதசி

நித்தம் தொழுகின்றோம் நின் நினைவில்
வாழுகின்றோம்
வருடம் ஆறு தான் வகையாக வந்ததப்பா!
வாடுகின்றோம் உன்னை எண்ணி வருந்துகின்றோம்
தினமும் நாம்
தேடி நாம் ஓடுகின்றோம் தேற்றிட நீ வருவாயென்று,
கண்களில் நீரும் இல்லை காத்திருந்தும் பயனும்
இல்லை
உன்னை நாம் காணும் வரை உயிரற்ற ஜடமாக
உணர்வின்றி வாழுகின்றோம் செல்வமே நாம்
இங்கு
உன் ஆத்மா சாந்தி பெற வேண்டுகின்றோம்
இறைவனை நாம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

59, பொற்பதி வீதி,
கொக்குவில்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

---

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



*அருட்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி*
*அவர்களால் வடிவமைக்கப்பட்ட*

## முழுமை நல வாழ்வுக்கு மனவளக்கலை யோகா

எளியமுறை காயகல் பயிற்சி, எளியமுறை உடற்பயிற்சி, எளியமுறை தியானப் பயிற்சி மேலும் பல பயிற்சிகள் இந்தப் பயிற்சிகளின் மூலம் கிடைக்கும் அனுகூலங்கள் பலவாகும்.

வழங்குபவர்: மனவளக்கலை பேராசிரியர் கே.கணேசன் அவர்கள்
(தமிழ்நாடு, இந்தியா)

இடம் : யாழ்.தவமையம் 14/4, ஆஸ்பத்திரி விதி,
சஞ்யுவானியார் கோயில் அருகில், யாழ்ப்பாணம்.
காலம் : 08.10.2011 தொடக்கம் 13.10.2011 வரை
காலை 9.30 மணி முதல் 12 மணிவரை

இடம் : இணுவில் பரராச சேகரப்பிள்ளையார் மணிமண்டபம்
காலம் : 08.10.2011 தொடக்கம் 13.10.2011 வரை
பிற்பகல் 4 மணி முதல் - 6 மணி வரை

*14 வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் பங்குபற்றலாம். 08.10.2011 சனிக்கிழமை இலவச அறிமுக உரை நடைபெறும். தொடர்ந்து 5 நாள்களும் பயிற்சிகள் நடைபெறும். பயிற்சிக்கு கட்டணம் உண்டு. முற்பதிவுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.*

தொடர்புகளுக்கு:
**மனவளக்கலை மன்ற அறக்கட்டளை**
8/3, கேசாவில் முன் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**தவமையம்:**
14/4, ஆஸ்பத்திரி வீதி, சஞ்யுவானியார் கோயில் அருகில், யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777368745, 0712208808, 0778010491, 021 222 0734

---

# வெளிக்கள உத்தியோகத்தர் - மைக்ரோ பினான்ஸ்
# யாழ்ப்பாணம்

பெறுபேறுகளை இலக்காகக் கொண்ட, புத்துணர்ச்சி மிக்கவரும், உன்னத கல்வித் தகைமைகளையுடையவரும், பரஸ்பர தொடர்பாடலில் தேர்ச்சி பெற்றவருமான ஒருவருக்கு சென்றல் பினான்ஸ் நிறுவனத்தின் யாழ்ப்பாணத்திலுள்ள மைக்ரோ பினான்ஸ் பிரிவில் வெளிக்கள உத்தியோகத்தர் என்ற பதவியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புள்ளது.

நீங்கள் 40 வருடங்களுக்குக் குறைந்த வயதை உடையவராக இருந்து மைக்ரோ / விவசாய நிதித்துறையில் 2 - 3 வருடகால அனுபவத்தைக் கொண்டு ஆகக்குறைந்தது க.பொ.த உயர்தர தகைமையை உடையவராக இருந்தால், தொழில் சம்பந்தமாக உன்னத முன்னேற்றத்துடன்கூடிய சென்றல் பினான்சில் கடமையாற்றுவதில் நீங்கள் பூரண மனநிறைவை அடைவீர்கள்.

கடன் சம்பந்தமான விடயங்கள், மதிப்பீடுகள் மற்றும் கடன் வசூலிக்கும் திறமை என்பனவற்றுடன் அடிப்படை கணனி அறிவும் அத்தியாவசியமான தேவைகளாகும். தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சரளமாக உரையாடுவதும், எழுதுவதும் கட்டாயமாகும். அத்துடன், செல்லுபடியான மோட்டார் வாகன அனுமதிப்பத்திரமும் அத்தியாவசியமாகும்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் தங்களுடைய சுயவிபரக் கோவையுடன், உறவினர் அல்லாத இரண்டு சான்று பகர்வோரின் பெயர் விபரங்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்களுடன் 7 நாட்களுக்குள் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பத்தை தபாலில் அல்லது hrd@cf.lk என்ற மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைக்க வேண்டும்.

பொது முகாமையாளர் (HR&D)
**சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சீ**
நகர அலுவலகம் 270, வொக்ஷோல் வீதி, கொழும்பு 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங்கோவின் சிலப்பதிகாரத்தில் பெண்கள் பற்றிய கண்ணோட்டம்




இலக்கியக் காட்சி - 103

*''காலத்திற்கேற்ப வகைகள்-அவ்வவ்*
*காலத்திற்கேற்ப ஒழுக்கமும் நூலும்*
*ஞான முழுமைக்கும் ஒன்றாய்-எந்த*
*நாளும் நிலைத்திடும் நூலொன்றுமில்லை''*

என்றார் காலத்தத்துவ மகாகவியான பாரதியார். இதற்கமைவாக காலத்தை ஒட்டி எழுந்த புரட்சி மிகு காவியமே சிலப்பதிகாரமாகும். வணிக வர்க்கம் சிறப்புற்று செல்வாக்குப் பெற்ற காலத்தில் இவர்களையே பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு தோன்றிய சீர்மிகு சீரஞ்சீவியான காப்பியமாகும்.

பெண்ணின் அணிகலனான சிலம்பினை கருப்பொருளாகக் கொண்டு காவியத்தைக் கலையம்சத்துடனும், வர்ணனையுடனும் ஒலிக்கச் செய்கின்றார். இது இளங்கோவடிகளின் உயர்ந்த சிந்தனையை சிகரமாக்கியுள்ளது எனலாம். சிலம்பணியும் சீர்மிக்க பெண்ணான கண்ணகியை முன்னிலைப்படுத்தி தனது நோக்கத்தினையும், காலத்தின் பின்னணியையும் துல்லியமாக இயம்புகிறார்.

வழக்குரைகாதையிலே கண்ணகி நெடுஞ்செழியனை நோக்கி ''தேரா மன்னா செப்புவதுடையேன்'' என்று விளித்து குற்றத்தினைச் சாடுகிறாள். இந்த இடத்தில் தன்னை அறிமுகம் செய்யும் போது ''இசை விளங்கு பெருங்குடி மாசத்து வணிகன் மகள், கோவலன் மனைவி கண்ணகி என்பது என் பெயர்'' என்று வீர ஆவேசத்துடன் உணர்வு வெளிப்பட துணிந்து பெருமையுடன் விளம்புகிறாள். கணவன் மீது மன்னன் சுமத்திய பழியை அறிவு பூர்வமாகவும், ஆக்க பூர்வமாகவும் சுட்டிக் காட்டி அந்த மன்னனையே அழிக்கின்ற புரட்சி நாயகியாகத் தோன்றுகிறாள்.

அந்த வகையில் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பெண்களின் நிலையை சிறப்புறப் பிரதிபலித்து நிற்பது போற்றுதற்குரிய விடயமாகும்.

இருபதுக்குமேற்பட்ட பெண்பாத்திரங்களைப் படைத்து இவர்களினூடாகத் தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கை முறையையும், பெண்கள் சமூகத்தில் பெற்றிருந்த முன்னேற்றத்தையும் அதேசமயம் சமூகத்தில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள், வாழ்க்கை முறைகள் போன்றவற்றையும் பிரதிபலித்துள்ளார். வணிகர் குலத்தின் பெண் பிரதிநிதியான கண்ணகிக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

இளங்கோவடிகள் தனது நூலின் மூலக் கருத்துக்களாக

*''அரசியல் பிழைத்தோர்க்கறங் கூற்றாவதூஉம்*
*உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்*
*ஊழ்வினைச் சிலம்பு காரணமாகச்*
*சிலப்பதிகார மென்னும் பெயரால் நாட்டுதும் யாமோர்*
*பாட்டுடைச் செய்யுள்''*

எனக் கூறியுள்ளார். இவற்றில் உரைசால் பத்தினியாகக் கண்ணகியைப் படைத்து உயர்ந்தவளாக உருவாக்கியுள்ளார். கற்பின் திறமே கண்ணகியின் உயர்வாற்றலுக்கு உறுதுணையாக நின்று உரைசால் பத்தினியாக்கியது எனலாம். கணவன் கோவலன் அவளைப் பிரிந்து பரத்தையர் படியை நாடும்போது அதைக் கண்ணகி கண்டிக்கவோ அல்லது தண்டிக்கவோ சிறிதும் எண்ணவில்லை. பொறுமையின் இலக்கணமாகக் கற்புடன் காத்திருக்கிறாள்.

அதேசமயம் சிலப்பதிகாரத்தின் மறுபக்கத்தை நோக்கும்போது கண்ணகியின் கற்புடைய வாழ்வுக்கு இடையூறாக மாதவியை எடுத்துக்காட்டுவதன் மூலம் பரத்தையர் குலப் பிரதிநிதியான பெண்கள் வகித்த சமூக அந்தஸ்தினை அறிய முடிகிறது. கணிகையர் குலத்தோன்றலாக வானவர் மரபில் வந்த மாதவி தனது ஆடற்றிறனை அரச சபையில் அரங்கேற்றும் தகுதி வாய்ந்தவள்.

இதுவே கோவலனைக் கண்ணகியிடம் இருந்து பிரிக்கிறது. இருந்தும் மாதவியின் நிலையையும் சிந்திக்காமல் கோவலன் மீண்டும் மாதவியைப் பிரிகிறான். ஆடல் மகளான மாதவியும் தன் குல மகளுக்குரிய கற்போடு கோவலனை மனதிலிருத்திய குற்றத்துக்காகத் துறவு பூண்கிறாள்.

இதன்மூலம் மாதவி பரத்தையர் சமூக மரபிலும் உயர்ந்தவளாக கருதப்படுகிறாள். குறிப்பாக நோக்கும் போது குடும்பப் பெண்டீர் கலைத்துறையை நாடாத தன்மையையும், கலைத்துறைப் பெண்டீர் குடும்ப இல்வாழ்வுக்குரிய தகுதியை இழந்துள்ளதையும் அறியமுடிகிறது. இதனூடாக இரு வேறுபட்ட பெண் சமூகத்தினை இளங்கோவடிகள் தன் கண்ணோட்டத்தில் முன்னிலைப்படுத்தியுள்ளதை அறியலாம். குடும்பங்களில் ஒற்றுமை உணர்வையும் இளங்கோவடிகள் ஆழமாகச் சித்திரிக்கிறார். மாதிரி, கவுந்தி முதலிய வணிகர் குலப் பெண்களின் ஆதரவுகளையும் சமத்துவ மனப்பான்மைகளையும் கொண்டவர்களாகப் படைத்துள்ளார்.

இளங்கோவின் சிலப்பதிகாரத்தில் இவற்றை மூலாதாரமாகக் கொண்டு அந்தக் கால சமூகப் பின்னணியை அறியக் கூடியதாகவுள்ளது. ''கற்புக் கடம் பூண்ட பொற்புடைத் தெய்வமான கண்ணகி தியாகச் சுடராகவே இறப்பின் பின் போற்றப்படுகிறாள்''. இதுவே பிற்காலத்தில் கம்பன் காவியம் படைக்கவும், சீவகசிந்தாமணி, பெரியபுராணம் போன்ற பேரிலக்கியங்கள் ஊற்றெடுத்து கரைபுரண்டோடவும் காரணமானது எனலாம். ✱

**எம். கலைவாணி,**
**யாழ். பல்கலைக்கழகம், கலைப்பீடம்.**

---

# தேவைகள்

சிறுகதை

**அரியாலையூர் செ.செல்வதாசன்**



தொண்ணூறுகள் இன்று போலவில்லை. மிகக் கடுமையான பொருளாதாரத் தடைச்சட்டம் இருந்த காலமது. இன்று போல தொலைபேசி, இணையவசதி இல்லாத காலம். வெளியிடத்துத் தொடர்புகளுக்கு எப்போதாவது வரும் கடிதக்காரனை நம்பியிருந்த காலம்.

கடிதக்காரனின் மணியோசை கேட்டதும் பரிமளத்துக்கு மனது துள்ளிக் குதித்தது. ஜேர்மனியில் இருந்து கணவனின் கடிதம் இன்று வரும் என்பது அவள் எதிர்பார்த்த ஒன்றுதான். அல்லாமலும் கிணற்றடி மதிலில் இருந்து காகம் கரைந்தால் கணவனிடமிருந்து கடிதம் வரும் என்ற சாத்திரம் கடந்த நான்கு வருடங்களாகப் பொய்யானதில்லை. இன்றும் அந்த இடத்திலிருந்து காகம் கரைந்து கொண்டு தானிருந்தது.

நாடு திரும்புவதாகக் கடிதம் போட்டுவிட்டு மேற்கு ஜேர்மனியின் ஸ்ரட்ஸ் ஒன்றையும் தப்பவிடவில்லை புஸ்பநாதன். ஸ்ரட்ஸில் உள்ள மார்க்கட்டில் காணும் ஒவ்வொன்றையும் அப்படியே சுருட்டி எடுத்து யாழ்ப்பாணத்துக்கு கொண்டு போக வேண்டும் போலிருக்கும் அவனுக்கு. எப்பொருள்களை வாங்குவது; எவற்றை விடுவது என்ற மனப் போராட்டம் ஒவ்வொரு சுப்பர் மாக்கற்றிலும் ஏறி இறங்கும் போதும் ஏற்படும். ''இன்டியன்ஷொப்பில்'' காணப்படும் விபூதி, சந்தனக் குச்சு முதல் ''குரொசா மாக்கற்'' இல் காணப்படும் நவீன இலத்திரனியல் பொருள்கள் வரை வாங்க ஆசைதான். அவனுடைய நண்பன் இராசலிங்கமும் அவன் போன்றதொரு குடும்பகாரன்.

அவனும் நாடு திரும்ப இருப்பது புஸ்பநாதனுக்குத் துணையாகப் போய்விட்டது. ஷொப்பிங்கை இருவரும் சேர்ந்தே செய்தனர்.

இன்னும் ஒரு மாதத்தில் கணவன் வரவிருக்கும் செய்தியைக் கடிதத்தில் கண்டதும் பரிமளத்துக்கு காலும் ஓடவில்லை; கையும் ஓடவில்லை.

ஒரு கடிதமும் தப்பாமல் ஒரே மகள் துஷ்யந்தியின் படிப்பு விடயம் முக்கிய இடம்பெறும். எவ்வளவு செலவழிந்தாலும் என்ன பாடுபட்டாயினும் அவளைப் படிப்பித்து உயர்நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற ஆதங்கம் கடிதத்தில் தொக்கிநிற்கும்.

கணவனின் முரட்டுக் குணம்- அழுங்குப்பிடி- அவளுக்கு நன்றாகத் தெரியும். அதனால் மகளின் படிப்பில் மிகுந்த கவனம், எந்த நேரமும் படிப்பு -படிப்பு-படிப்பு.

தற்போதெல்லாம் புஸ்பநாதனின் சிந்தனை தனது நாட்டையும் வீட்டையும் சுற்றியேதான். அவன் நாட்டை விட்டுப் புறப்பட்ட போது துஷ்யந்திக்கு வயது ஆறு. இப்போ அவளுக்கு பத்துவயது. தாயுடன் அவள் சேர்ந்து எடுத்த அண்மைக்காலத்துப் புகைப்படத்தை அவன் பார்த்த போது ..............அன்று அவன் நாட்டை விட்டுப் புறப்பட்டபோது முத்தமிட்டு, டாட்டா காட்டி வழியனுப்பிவைத்த துஷிக்குட்டிதானா இவள் என்ற ஆச்சரியம் எழும்.

அவன் அனுப்பிவைத்த ''டொட்ஜ் மார்க்'' ரூபாக்களாகி குழுகுழு, மொழு மொழு என்றிருந்தாள் துஷயந்தி. தான் இன்னும் பத்து நாள்களில் வீட்டை அடைவதாக இருந்தாலும் வழக்கப்படி, பழக்கப்படி இன்றும் ஒரு கடிதத்தை எழுதி போஸ்ற் பண்ணினான். அதிலும் துஷயந்தியின் படிப்புப்பற்றி நான்கு பக்கங்களுக்கு மேல்.

பரிமளம் மகள் துஷ்யந்தியையும் அழைத்துக் கொண்டு தனது கணவனின் சகோதரி பிரியா வீட்டில் ராமாயணம் தொலைக்காட்சித் தொடர்பார்க்கப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். அப்பொழுது பிரியாவின் மகள் நிஷா துள்ளிக் குதித்து ஓடி வந்து கொண்டிருந்தாள். நிஷா துஷ்யந்தியை விட ஒருவயது மூத்தவள். அவள் ஆண்டு ஆறு. இவள் ஆண்டு ஐந்து படித்துக் கொண்டிருந்தாள். நிஷா படிப்பில் படுசுட்டி.

ஓடிவந்தவள், பரிமளம் மாமியாருக்கு டொபிகளை அள்ளி வழங்கினாள்.

புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்டத்திலேயே தான் முதலாவதாக வந்த சேதியை மகிழ்வுடன் கூறினாள்.

அடுத்த வாரம் துஷ்யந்திக்கும் புலமைப்பரிசில் பரீட்சை; எப்படி எழுதுவாளோ... தற்செயலாக சித்தி அடையாவிட்டால்...? அந்த மனுஷனுடன் இருந்த பாடில்லை. பரீட்சைக்கு ஒருவாரமிருக்க படம் பார்க்கத் திரிவதா....?

அவளின் படிப்பிற்காகத் நான் படம் பார்ப்பதைத் தியாகம் செய்வதா...? இந்த வாரம் பொறுத்த கட்டம்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 25.09.2011 முதல் 01.10.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். பொழுது போக்கு, கேளிக்கை கொண்டாட்டங்களுக்காகக் கணிசமாகச் செலவிடலாம். ஊக்கம், உற்சாகமாகச் செயற்படுவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளையும் பெறலாம். திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி நடக்கும். இழுபறியாக அரசு காரியங்கள் விறுவிறுப்பாக முடியும். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளும் பலிதமாகும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் மூலம் சில காரியங்களை முடித்துக் கொள்ளலாம். கணவன், மனைவி உறவில் கசப்பு உருவாகலாம். வாழ்க்கைத் துணைவர் உடல்நலனில் பிரச்சினை ஏற்படலாம். திடீர் பயணங்களால், தேவையற்ற செலவுகள் உருவாகலாம். தேக ஆரோக்கியத்தில் அக்கறை அவசியம். ஆதாயமில்லாத அலைச்சல் உண்டு.

### இடபம்

மனதில் நல்ல சிந்தனைகள், எண்ணங்கள் குடிகொள்ளும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நீங்கள் எதிர்பாராத சிலர் உங்களைத் தேடி வரலாம். பணவரவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். மனைவி, குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். நீண்ட நாள்களாகப் பிற்போட்ட வெளியூர் பயணம் செல்லலாம். எந்த விடயத்திலும் தெளிவான முடிவு எடுக்க முடியாமல் அடிக்கடி குழப்பங்களுக்கு ஆள்படலாம். புதிய வகையில் எதிர்ப்புகள், போட்டிகளைச் சந்திக்கலாம். எவ்வளவுதான் சிக்கனமாக இருந்தாலும், ஏதாவது ஒரு வகையில் செலவுகளைச் சந்திக்கலாம். உடன் பிறப்புக்கள் உதவிகரமாக இருப்பர். அவர்களின் நலனுக்காக கணிசமான தொகையைச் செலவு செய்யலாம். தேக ஆரோக்கியம் திருப்தி தரும் வகையில் அமையாது. மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். கடனாகக்கொடுத்த பணம் திரும்ப வரும். நண்பர்கள் வட்டம் விரிவடையும். சிலருடன் சண்டை சச்சரவுகள் ஏற்படலாம்.

### மிதுனம்

ஆதாயமில்லாத அலைச்சல், திரிச்சல்களுக்கு ஆள்படலாம். எளிதாக முடிந்து விடும் என நினைத்த வேலை எல்லாம் பல மணி நேரத்துக் இழுத்தடிக்கலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தைச் செலவிடலாம். பக்தி நாட்டம் கூடும். மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். சிலருடன் கருத்து மோதல், பொறாமை தொடர்பான பிரச்சினை உருவாகலாம். எதிர்பார்த்த பணவரவுகள் கைக்குக் கிடைக்கலாம். தொழில் ரீதியான நெருக்கடிகள், வேலைப்பளு தொடரும். வேலையாள்களின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளாலும் எரிச்சல் அடையலாம். எதிர்பார்த்த பண உதவிகள் கிடைப்பதிலும் தாமதம் ஏற்படலாம். கடன் விவகாரங்களால் குடும்பத்தில் குழப்பங்கள் உருவாகலாம். சர்ச்சைக்குரிய பேச்சுக்களாலும் மனஸ்தாபம் உண்டாகலாம். சகோதரர்கள் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டு எரிச்சல் உண்டாகலாம். பயணங்கள் அதிகரிக்கும். ஆடம்பர விடயங்களுக்காக கணிசமான பணத்தைச் செலவு செய்வீர்கள்.

### கடகம்

ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். உறவினர் ஒருவர் கேட்ட உதவியை மறுக்காமல் செய்வீர்கள். சந்தோஷமான அனுபவம் உண்டு. மாலை வரை குடும்பத் தேவைகளை நிறைவேற்றவும், வெளியிடங்களுக்கு செல்லவும், மருந்துப் பொருள்கள் வாங்கவும் கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். சில விடயங்களில் எதிர்பாராத தடை, தாமதங்கள் ஏற்படும். தொழில் ரீதியான பின்னடைவுகள் அகன்று முன்னேற்றம் காணப்படும். எதிர்பார்த்த பணவரவுகள் கைக்குக் கிடைக்கலாம். பிள்ளைகள் வழியில் உருவான பிரச்சினைகள், கவலைகள் தீரும். வழக்கு விவகாரங்களில் சாதகமான திருப்பங்களைக் காணலாம். சில காரியங்களை அவசரப்பட்டு செய்துவிட்டு, பின்னர் வருத்தம் அடைவீர்கள். உடன் பிறப்புக்கள் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டு எரிச்சல் உண்டாக்கலாம். மன அமைதியை, கோப உணர்ச்சியை அதிகரிக்கும் நிகழ்ச்சிகள் அடிக்கடி நடக்கலாம். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள்.

### சிங்கம்

எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் கூடும். விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டு. நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. கடன் விவகாரங்களை நினைத்துக் கவலை அடைவீர்கள். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள், விருந்து, உபசரிப்புகள், எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேருதல், வெளிவட்டாரத் தொடர்பு விரிவடைதல் போன்ற வகையில் சந்தோஷம் உண்டு. மாமன், மைத்துனர்கள் வழியில் மனதுக்கு இனிய உதவி கிடைக்கலாம். குடும்பத்துக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். கொடுக்கல் வாங்கல்களில் சுமுகமான நிலைமை காணப்படும். ஊக்கம், உற்சாகம் கூடும். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். திட்டமிட்டதை விட சில காரியங்களுக்கு அதிகமாக செலவாகலாம். இனிய அனுபவம் பெறலாம். தர்ம, புண்ணிய காரியம் செய்வீர்கள். சுகமான அனுபவம் பெறலாம்.

### கன்னி

எதிர்பாராத சந்திப்பு நிகழும். தொழில் ரீதியாகவோ அல்லது வேறு வேலையாகவோ வெளியூர் பயணம் செல்லலாம். எந்த வேலையையும் பின்னர் எனத் தள்ளிவைக்காமல், சுறுசுறுப்பாகச் செய்து முடிப்பீர்கள். தம்பதியர் இடையே ஏற்பட்ட மனக்கசப்புகள் விலகி பாசம் அதிகரிக்கும். தொழில் ரீதியான பண வரவுகளைப் பெறலாம். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். உறவினர்கள், நண்பர்கள், மத்தியில் உங்களின் மதிப்பு, கௌரவம் மேம்படும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். விலை உயர்ந்த பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்களால் சந்தோஷம் அடைவீர்கள். சகோதரர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். அவருடன் கருத்து மோதல்கள் உருவாகலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். விருப்பமான உண [illegible] ப்பிடுவதில் நாட்டம் செல்லும்.

### துலாம்

எந்தக் காரியத்தையும் ஒன்றுக்குப் பல முறை யோசித்துச் செய்ய வேண்டும். விருந்தினர்கள் வருகையால் உங்களின் வீட்டுச் செலவுகள் அதிகரிப்பதோடு, வழக்கமான வேலைகளிலும் தடை ஏற்படலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். புதியவர்கள் அறிமுகம் கிடைக்கும். பணத்தைச் சேமிப்பது பெரும் பிரயாசையாக இருக்கும். தேக ஆரோக்கியத்திற்காகவும், மாமன், மைத்துனர்களின் தேவைகளை, கோரிக்கைகளை பூர்த்தி செய்யவும், தந்தை வழியிலும், தாயார் வழியிலும், பூர்வீக சொத்துக்கள் பராமரிப்பு வகையிலும் கணிசமான பணத்தைச் செலவிடலாம். நிலம், பூமி தொடர்பான வகையில் திருப்தியை விட அதிருப்தியே அதிகம். சகோதரர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதும் தள்ளிப் போகலாம்.

### விருச்சிகம்

அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டுத் செய்வீர்கள். நண்பர்கள் கேட்ட உதவிகளைச் செய்து, அவர்களின் மனதில் இடம்பிடிப்பீர்கள். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மனம் ஒரு நிலையில் இல்லாமல் தடுமாறும். கவனக்குறைவு, வீண் அலைக்கழிப்பு, காரியத்தடை, பயணத்தடை போன்றவற்றை எதிர்கொள்ளலாம். சபலங்களாலும் சங்கடங்களுக்கு ஆள்படலாம். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள், விருந்து, உபசரிப்புகள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். பெண் பிள்ளைகளின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள். அவர்களின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பழைய நண்பர்கள் மூலம் புதிய நண்பர்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கும். தேக நலனில் அக்கறை அவசியம். நிலம், பூமி, பொலிஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை தேவை. புதியவர்கள் சந்திப்பு நிகழும். கேளிக்கை, கொண்டாட்டங்களில் கலந்து கொள்வீர்கள் பக்தி நாட்டம் கூடும்.

### தனுசு

எதிர்பார்த்த பணவரவுகள் மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளையும் பெறலாம். குழப்பம் இல்லாமல் சில விடயங்களில் தெளிவான முடிவு எடுப்பீர்கள். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். ஊக்கம், உற்சாகமாக, செயற்படுவீர்கள். நண்பர்களுக்காகச் சிலரிடம் பரிந்து பேசுவீர்கள். கடனாகக் கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். சோர்வின்றி சுறுசுறுப்பாக ஏதாவது வேலைகளைச் செய்து கொண்டிருப்பீர்கள். பெரிய மனிதர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். முன்னேற்றம் உண்டு. எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரும். தொழில் ரீதியாக உங்களின் திறமை வெளிப்படும். புதிய ஒப்பந்தங்களை உருவாக்கப் போட்ட திட்டங்களிலும் வெற்றி காணலாம். கடன் விவகாரங்களாலும் தொல்லை நேரும். எதிலும் பொறுமை, நிதானமாகச் செயற்பட வேண்டும். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம்.

### மகரம்

சில விடயங்களில், தெளிவான முடிவு எடுக்க முடியாமல் தவிக்கலாம். மந்தம், மறதி, கவனக்குறைவு போன்றவற்றாலும் அவதிப்படலாம். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். தொழில், வியாபார ரீதியான பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. நண்பர்கள் வட்டம் விரிவடையும். வழக்கத்துக்கு மாறாகக் கூடுதல் நேரம் வேலை செய்வீர்கள். தேக பராம்ரிப்பு விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். கோபம், வேகத்துக்கு அடிக்கடி ஆள்பட்டு, மற்றவர்கள் மீது எரிந்து விழலாம். எந்த விடயத்திலும் ஆத்திரம், அவசரமாகச் செயற்பட நேரிடலாம். மனைவி வழியில் எதிர்பாராத வகையில் ஏற்படும் செலவுகள், சிரமங்களால் மனதில் வெறுப்பு, விரக்தி உண்டாகலாம். யாருக்கும் அவசரப்பட்டு வாக்குக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். பழைய வாகனங்களை மாற்றி, புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். மாமன், மைத்துனர்களை நம்பிச் செய்த காரியங்கள் கை நழுவிப் போகலாம்.

### கும்பம்

மற்றவர்களின் பேச்சைக் கேட்டு சில காரியங்களில் இறங்கிவிட்டு அவதிப்படுவீர்கள். கடன் மிகுதிகள் வசூலாகும். தாய் வழியில், உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். சோர்வு, சோம்பல், மந்தம் ஆள்கொள்ளும். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, நீண்ட நாள்களாகப் பார்க்காத நண்பர் ஒருவரைப் பார்க்கலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைத்த வேலையை நீங்களே செய்யலாம். பணிபுரிவோருக்கு செல்வாக்கு அதிகரிக்கும். நீண்ட நாள்களாகப் பார்க்காத சகோதரர்களைப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டும். சிலர் தொழிலுக்காக கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் மூலம் சில காரியங்களை முடித்துக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கலாம். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். தாயின் உடல் நலனில் கவனம் அவசியம். சர்ச்சைக்குரிய பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். பணவரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகளைச் செலுத்துவீர்கள்.

### மீனம்

உத்வேகம், தன்னம்பிக்கை அதிகரிக்கும். நீண்டநாள் ஆசை ஒன்று நிறைவேறும். பிரியமான உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும். உதிரி வரவுகளைப் பெறலாம். நீண்டதூரப் பயணங்கள் செல்லலாம். உறவினர்கள் சிலரின் வீடுகளுக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைக்கலாம். சிறிய வேலை ஒன்றுக்கு பல முறை அலைய நேரிடலாம். வழக்கத்துக் மாறாகக் கடும் வேலை நெருக்கடியைச் சந்திக்கலாம். வரவுகள் வரும் முன்னரே செலவுகள் காத்திருக்கும். கணவன், மனைவியர் ஒருவருக்கொருவர் குறை சொல்லி விமர்சிப்பதால், அதிருப்தி உண்டாகலாம். கூட்டுத் தொழிலிலும் சலசலப்புகள் ஏற்படும். வாழ்க்கைத் துணைவர் உடல் நலன் குறித்த கவலைகள் உண்டாகலாம். உறவினர்கள் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். எந்த விடயத்திலும் தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழப்பங்களுக்கு ஆள்படலாம். பிள்ளைகள் பற்றிய கவலைகளாலும் மன அமைதி [illegible]லாம். சகோதரர்கள், நண்பர்கள் வழியில் தொந்தரவுகள், அன்புத் தொல்லைகள் உண்டாகலாம். பணிபுரிவோருக்கு விரும்பத்தகாத மாற்றங்கள் உண்டாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானத்தில் சிறந்தவன் கர்ணன்



நிறைய நாள்களாகவே பாண்டவர்களுக்கு ஒரு சந்தேகம் இருந்தது. அது என்னவென்றால், நம்முடைய அண்ணன் தர்மரும் தானம் செய்வதில் சிறந்தவர். இருப்பினும் கர்ணனையே ஏன் எல்லோரும் தானம் செய்வதில் சிறந்தவன் என்று கூறுகின்றனர் என்பதுதான் அந்த சந்தேகம். இவர்கள் மனதில் உள்ள சந்தேகத்தை அறிந்த கிருஷ்ணன் ஒருநாள் பாண்டவர்களை அழைத்தார். தங்கமலை, வெள்ளி மலை என இரு மலைகளை உருவாக்கினார். பின் பாண்டவர்களை நோக்கி ''இங்கே பாருங்கள்! இந்த இரு மலைகளையும் பொழுது சாய்வதற்குள் தருமம் செய்து விட்டால் தானத்தில் சிறந்தவர் தர்மர் என்று நீங்கள் சொல்வதை ஒப்புக்கொள்கிறேன்'' என்று கூறினார்.

பீமனும்,அர்ஜூனனும் மற்றவர்களும் அந்த இரு மலைகளில் இருந்து தங்கத்தையும், வெள்ளியையும் பாளம் பாளமாக வெட்டி எடுத்துக் கொடுக்க தருமர் அதை உடனுக்குடன் நகர மக்களுக்குத் தானம் செய்தார். நகர மக்களில் பெரும் பகுதியினருக்கு அவ்வாறு தானம் செய்தும் தங்கமும் வெள்ளியும் குறைவதாக இல்லை. அதற்கு மாறாக அந்த இரு மலைகளும் வெட்ட வெட்ட வளர்ந்து கொண்டே இருந்தன.


மாலைப்பொழுது வந்ததும் இனித் தங்களால் முடியாது என்பதை உணர்ந்த பாண்டவர்கள், எங்களால் முடியாது கண்ணா! என்று தம் தோல்வியை ஒப்புக் கொண்டனர். உடனே கிருஷ்ணன் ஓர் ஆள்ள அனுப்பி கர்ணனை வரவழைத்தார்.

''கர்ணா! இதோபார்; இந்த இரண்டு மலைகளில் ஒரு மலை தங்கமலை. மற்றொன்று வெள்ளிமலை; இதை நீ பொழுது சாய்வதற்குள் தானம் செய்ய வேண்டும். பொழுது சாய இன்னும் ஒரு நாழிகைப் பொழுதே உள்ளது. உன்னால் முடியுமா? யோசித்துச் சொல்'' என்று கூறினார்.

உடனே கர்ணன் ''இதில் யோசிக்க என்ன இருக்கிறது; இப்போதே செய்து காட்டுகிறேன்'' என்று கூறி அங்கிருந்த இருவரை அழைத்து, ''இதோ பாருங்கள்! நீங்கள் இருவரும் ஆளுக்கொரு மலையாக இவற்றை எடுத்துக்கொள்ளுங்கள்'' என்று கூறித் தனது தர்மத்தை முடித்துவிட்டுக் கிளம்பினான்.

பாண்டவர்கள் அசந்து போயினர். அவர்களை ஓர் அர்த்தப் பார்வையுடன் பார்த்துச் சிரித்தார் கிருஷ்ணன். தர்மருக்குப் பரந்த மனம்தான். அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், அவரைக் காட்டிலும் தான தருமம் செய்வதில் பரந்த மனம் உடையவன் கர்ணனே என்பதைச் சொல்லாமல் பாண்டவர்களுக்கு உணர்த்திவிட்டார் கிருஷ்ணன்.

# இளநீர்



தென்னை மரத்து இளநீரு-நல்ல
தேன் போல இனிக்கும் சுவை நீரு
என்றும் எங்கும் கிடைத்திடுமே-தினம்
ஏற்றுக் குடித்தால் நலம் தருமே!

பானத்தில் இளநீர் அரிய வகை-எந்தக்
காலமும் நமக்கு நல்ல துணை
விலையோ ஒன்றும் அதிகமில்லை-இங்கு
இதுபோல் பானம் வேறு இல்லை.

இயற்கை தந்தது இளநீரு- நல்ல
இன்சுவை தந்திடும் இளநீரு
உடலின் வெப்பம் தணித்திடுமே- நம்
உள்ளம் தனிலே நிறைந்திடுமே!

கொத்துக் கொத்தாய் காய்த்திடுமே- நம்
அனைவரின் தாகம் தீர்த்திடுமே!
அனைவரும் நாளும் குடித்திடலாம்-வரும்
ஆனந்தம் தனிலே திளைத்திடலாம்!

## விடை தெரியுமா? 126

### உங்களுக்கும் பரிசில்கள்

1. உலகில் எஞ்சியுள்ள யானைகளின் சிற்றினங்கள் எத்தனை?
2. நித்திய வாழ்வு பெற்றவனை எவ்வாறு அழைப்பர்?
3. உயிரியலில் வான்கோழி எந்த இனத்தைச் சேர்ந்தது?
4. முசுட்டைக் கொடியின் தாவரவியற் பெயர் என்ன?
5. காரைக் கண்டுபிடித்தவர் யார்?

### விடைகள் 124

1. 18 வருடங்கள்
2. மகாத்மா காந்தி
3. தெற்கு சூடான்
4. மக்மிலன்
5. பின்லாந்து

### வெற்றி பெற்றோர் விவரம்

★ இ.நிரோஜா தரம்-9, உடுவில் மகளிர் கல்லூரி.
★ பே.சுபாஜினி தரம்- 4, மட்டுவில் கமலாசினி கனிஷ்ட மகா வித்தி.
★ ப.சஞ்சிப் தரம் - 10, அளவெட்டி அருணோதயக் கல்லூரி.
★ ப.யாழினி தரம் - 8 , யா/ புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி.
★ த.நிசாந்தினி தரம் - 12 ஏ, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.
★ வி.லோகினி தரம் - 9 ஏ, ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 01.10.2011 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா.125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

## ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்க் கலைச் சொற்கள்

Fax-தொலைநகல்
Dish-இறுவட்டு
Software-மென்பொருள்
Memory-நினைவகம்
Micros cope-நுண்நோக்கி
Oxygen-உயிரியம்
Microphone-ஒலிவாங்கி
Hints-குறிப்புகள்
Mulitimedia-பல் ஊடகம்
Telescope-தொலைநோக்கி





கி.கஜலக்ஷி, தரம் 8 ஏ
யா/ வண்ணை நாவலர் ம.வி.,

## தமிழகத்தில் வாழ்ந்த பதினெண் சித்தர்கள்



1.அகத்தியர்
2.திருமூலர்
3.சிவவாக்கியர்
4.பட்டினத்தார்
5.பத்திரகிரியார்
6.அகப்பேய்ச் சித்தர்
7.குதம்பைச் சித்தர்
8.கடுவெளிச் சித்தர்
9.அழுகணிச் சித்தர்
10.கொங்கணச் சித்தர்
11.பாம்பாட்டிச் சித்தர்
12.இடைக்காட்டுச் சித்தர்
13.கருவூரர்
14.மதுரை வாலசாமி
15.கணபதிதாசர்
16.உரோம ரிஷி
17.சட்டை முனி
18.இராம தேவர்

வி.லோகினி, தரம் 10ஏ,
யா/ ஆவரங்கால் நடராஜ
இராமலிங்க வித்தி.

# எல்லாள மன்னன்



எல்லாளன் அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு 44 ஆண்டுகள் இலங்கையை ஆட்சி செய்த தமிழ் மன்னன். இவனது ஆட்சிக்காலம் நீதியானதாகவும், சிறப்பானதாகவும் அமைந்ததாக மகாவம்சம் குறிப்படுகின்றது. இதன்படி எல்லாளன் தென்னிந்தியாவில் இருந்து படையெடுத்து வந்த சோழ நாட்டைச் சேர்ந்த ஒருவன்.

இவன் இந்து மதத்தைத் தழுவியவன் எனினும் தனது ஆட்சியில் பௌத்த மதத்துக்கும் ஆதரவு அளித்துள்ளான். எல்லாளன் பகைவர்களுக்கும் நண்பர்களுக்கும் சமநீதி வழங்கியதாக கூறும் மகாவம்சம், அவனது நீதிநெறி தவறாத ஆட்சியை மனுநீதிச் சோழனின் கதைகளோடு இணைத்து விவரித்துள்ளது.

எல்லாளனின் சயன அறையில் ஓர் ஆராய்ச்சி மணி கட்டப்பட்டிருந்தது. நீதி வேண்டுவோர் அந்த மணியை ஒலியெழுப்பினால் மன்னன் உடன் வந்து விசாரித்துத் துயர் தீர்ப்பானாம்.

ஒருநாள் ஒரு தேரில் திஸ்ஸவாவியை நோக்கி எல்லாளனின் மகன் பயணப்பட்டபோது, வழியில் பசுவுடன் படுத்திருந்த கன்றின் கழுத்தின் மேல் தேர்ச்சில் ஏறியதால், கன்று அவ்விடத்தில் இறந்துவிட்டது. தாய்ப்பசு ஆராய்ச்சி மணியை இழுத்து அடித்து எல்லாளனிடம் நீதி கேட்டது. எல்லாளன் தனது மகனின் தலையைத் தேர்க் காலிலிட்டு மரணமேற்படுத்தி நீதி வழங்கினான்.

இன்னொரு சமயம் பாம்பொன்றுக்கு இரையான குஞ்சையிழந்த தாய்ப்பறவை ஆராய்ச்சி மணியை அடித்தது. மன்னன் அந்தப் பாம்பைப் பிடித்து வரச்செய்து, அதன் வயிறு கீறப்பட்டுக் குஞ்சு வெளியில் எடுக்கப்பட்டு பாம்பும் மரத்தில் தொங்கவிடப்பட்டுத் தண்டிக்கப்பட்டது.

ஒரு வயோதிபப் பெண் வெயிலில் அரிசியைக் காயப்போட்டிருந்த போது, பருவம் தப்பிப் பொழிந்த மழையால் அரிசி முழுவதும் பழுதடைந்து போனது. அவள் எல்லாளனிடம் முறையிட்டபோது, அவன் வருணனிடம் வாரத்துக்கொருதடவை இரவில் மட்டும் மழை பொழிய வேண்டுதல் விடுத்ததாக மகாவம்சம் வருணிக்கிறது.

மகாவம்சம் கூறுகின்ற ஒரு கதையொன்று எல்லாளன் [illegible] மதத்தை [illegible] பாதுகாத்தான் என்பதை நிரூபிக்கின்றது. தன் தாய் மரணித்ததை அறிந்த எல்லாளன் தேரிலேறி சேத்தியகிரி நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது, தேரின் அச்சு தாதுகோபுரமொன்றில் பட்டு தாதுகோபுரத்துக்குச் சேதத்தை ஏற்படுத்தியது. மன்னன் தேரிலிருந்து கீழே குதித்து, தனது தலையை உடனடியாகச் சீவி விடுமாறு, அமைச்சர்களிடம் கூறினான். தெரியாமல் நிகழ்ந்தது; அதற்காகத் தூபத்தைத் திருத்தி விடுவோம் என்றனர் அமைச்சர்கள். பதினைந்து கற்களே சிதைவடைந்திருந்த போதும் அந்தத் தாது கோபுரத்தைப் புனரமைக்க எல்லாளன் அதிக பணத்தைச் செலவிட்டதுடன் தன் தாயின் இறுதிக் கிரியைக்குச் செல்லாமல் தாதுகோபுரம் புனரமைக்கப்படும் வரை அங்கேயே தங்கியிருந்தான். இவ்வாறு எல்லாள மன்னனின் நற்பண்புகளை விபரித்துக்கொண்டே போகலாம்

அ.லெக்ஸ்ராஜ்,
தரம் 6 ஏ, யூனியன் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிந்து கொள்வாய்....!

வெளிப்படையாக மூடி வைத்தேன்
என் சோகத்தை,
அஞ்சல் உறையில் அடித்து
அனுப்பி வைத்தா
உன் மௌனத்தை
கண்கள் மிகவும் கவலைப்படுகின்றன
எங்கே ஒளித்து வைத்திருக்கின்றாய்
என்னுடைய துக்கத்தை!

என் விழிகளோடு வந்து விழுந்தவன் நீ
அதனால் எழுந்திருக்க முடியாது
தவிப்பவள் நான்!

என் இதயத்துள் வந்து அமர்ந்தவன் நீ
ஆனால் அதை வெளிப்படுத்த
முடியாமல் தவிப்பவள் நான்!

என் கனவுகளில் வந்து
கலந்தவன் நீ
ஆனால் கண்ணுறங்காமல் தவிப்பவள்
நான்!

இடிந்து போய் நான்
உட்கார்ந்த இரவுகள்
கண்ணீர் வற்றிக்
கடலெடுத்து அழுத கணங்கள்
படித்த பாடங்கள் மறந்து
கவிதைகளாய் விடையளித்த பரீட்சைகள்
உனக்குப் பின்னால் ஓடிய மனசு
சூனியமாய்த் தெரியும் எதிர்கால
கனவுகள்

என் விழி அசைவில் மொழி
மரணித்துப் போகும்
மௌனங்களே பாஷையாகி
பார்வைகள் பேசும் உன்
அழகுக்கு என் உயிரன்றி
வேறேது விலை!

ச. சோபியா
முதலிக்கோயிலடி.



சி. அகச்சுடர்
பெரியபரந்தன்.

# யார் அறிவார்?

# எம் இனத்தின் துயரத்தை...?

சொல்ல முடியாத வார்த்தைகள்
வெல்ல முடியாத மௌனங்கள்
முட்கம்பி வேலிக்குள்
முகம் தெரியாத
முகவர்களாக - அன்று
நாம் அடைக்கப்பட்டோம்
மூன்று மாதம்
முகவரி தெரியாதிருந்தோம்
மூவிரண்டு மாதம்
உறவுகளைத் தேடினோம்

பெற்றவளைப் பிரிந்து
பெயர் வைத்த தந்தையை - பிரிந்து
உற்ற துணையாய் நின்ற
உடன் பிறப்புக்களைப் பிரிந்து
இன்னும் எத்தனை
உறவுகள் ஏதிலிகளாய்
நலன்புரி நிலையங்களில்
யார் அறிவார்?
எம்மினத்தின் துயரத்தை...?



# நா(ய்)யகன்

வளர்த்த நாய்தனை வடக்கு வந்து
பார்த்துப் போகிறார்கள் எஜமானர்கள் - அது
வாலாட்டுகிறது கட்டியணைக்குகிறார்கள்
தாலாட்டுகிறார்கள் அது தலை சாய்க்கிறது

இரவில் பேய்தனை ஓட்டுகிறார்கள் அது பாய்
காட்டுகிறது
இளைய காய்களை வெட்டுகிறார்கள் அது போய்க்
காட்டுகிறது

வோட்டு விழுந்த இடத்தில் அது நீட்டிப் படுக்கிறது
வேட்டு விழுந்த இடத்தை அது எட்டிக் கடக்கிறது

எஜமானர் இல்லா நேரம் தான் தலை என்கிறது
எஜமானர் வரும் நேரம் நிலை தலைகீழாகிறது
தலை, முகம் முழுவதும் அதற்கு நரையோடி விட்டது
தன்மானம், சுயஅறிவு அதை விட்டு கரையோடி விட்டது

வெள்ளை தேகம் இருந்தும் வெள்ளாந்திதான் அது
பிள்ளைப் பேறில்லா பெண் மந்திதான் அது
வெள்ளையாய் சொல்லப் போனால் வீட்டுக் காவல் தான்
வெடி ஒன்று விழுமேயானால் விட்டுத்தாவல் தான்!

ஊர்க்குருவி
லிங்கம்.

# ஆண் பார்க்கும் படலம்....!

வாங்கோ... வாங்கோ...
சொன்ன நேரத்தில்
தப்பாமல் வந்தீர்கள்
அதுவே ஒரு நல்ல சகுனம்
நல்ல காரியம்
பிற்போடக்கூடாது
அதுதான் பாருங்கோ
சமைக்கத் தெரியுமோ?
நன்றாகத் தெரியும்
துணி துவைக்க?
Washing machine உம்
தோற்றுப் போய்விடும்.
வீடு கூட்ட பாத்திரம் கழுவ?
எல்லாம் தெரியும்
T.V பார்ப்பது?
செய்திகள் மட்டும்
கூடாத சினேகம்?
எதுவுமே இல்லை
மாதச் சம்பளம்?
முப்பதினாயிரம்
சந்தோஷம் பாருங்கோ
நல்ல சந்தோஷம்
எங்கள் எல்லாருக்கும்
பிடிச்சுப் போச்சு
அப்பாவி முகம்தான்
ஆனால் மாப்பிளை மட்டும்
சொக்கத்தங்கம்
கொஞ்சம் இருங்கோ
சிந்து பைரவி, மண்வாசனை,
சின்ன மருமகள், ராதா கல்யாணம்,
ஜான்சி ராணி சீரியல் முடிந்ததும்
என் மகள் வருவாள்
இல்லை... இல்லை
உங்கள் மருமகள் வருவாள்
அவளையும் ஒருக்கால்
விருப்பம் கேட்டுச் சொல்லுறம்

- புதுக்கவி.



# தமிழ்கிரேக்கம்

புருட்டஸின்
கட்டாரிக்காகவே
காத்திருக்கிறேன்
இங்கே சீசர்களை
எவரும் வாழவிட்டதில்லை
பலமுறை நாம்
பல சீசர்களை
இழந்துவிட்டோம்
ஒரே கோப்பையில்
உண்ணும் போதே
கட்டாரிகள் செய்வதற்கு
காசு சேர்க்கிறார்கள்
நெஞ்சில் பாயாத
நொய்ந்த கட்டாரிகளுக்காக
நாம் வாழ்கிறோம்
பின்புறம் குத்துகின்ற
புனிதமான இனம் மனிதம்
உதவுகின்ற ஒவ்வொருவரும்
ஒரு கட்டாரிக்காக
காத்திருங்கள்

க. யோகேஸ்வரன்,
நெடுந்தீவு - 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுங்கப்பட்ட மண்ணும் பறிக்கப்படும் மண்ணும்

1950 ஆம் ஆண்டில் கல்லோயா குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்பு கந்தளாய் திட்டம் உருவாக்கப்பட்டுத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதி ஆக்கிரமிக்கப்பட்டது. இந்தத் திட்டங்களில் சில பிரிவுகள் இன விகிதாசார அடிப்படையில் தமிழ் மக்களுக்கும் வழங்கப்பட்டன அதன் மூலம் தமிழ் தலைமைகளின் எதிர்ப்புகள் முறியடிக்கப்பட்டன. ஆனால், காலப்போக்கில் இனமோதல்கள் மூலம் அந்தப் பகுதிகளிலிருந்து தமிழ் மக்கள் வெளியேற்றப்பட அவை முற்றுமுழுதாகச் சிங்கள மயப்படுத்தப்பட்டன.

இவை திட்டமிடப்பட்டு சட்டப்படி தமிழ் மக்களின் நிலம் அபகரிக்கப்பட்ட கதையாகும். ஆனால் இந்த நிலப்பறிப்புக்கு இன்னுமொரு வலுவான பக்கம் இருந்து வந்துள்ளமையை எமது முன்னைய தலைமைகள் கண்டு கொள்ளத் தவறின. ஆனால் இன்று எமது மண்ணின் பெரும் பகுதி பறிபோய் விட்டது.

### கஞ்சா தோட்டம் குடியிருப்பாகிய கதை

1953 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அனுராதபுரம் சிறையிலிருந்து தப்பியோடிய பயங்கரக் கொள்ளைக்காரனாகிய 'யக்கடேயா' தனது தலைமறைவு வாழ்க்கைக்கு மூதூர் - வெருகல் பிரதான வீதிக்கு மேற்காக அமைந்துள்ள தற்போது 'அலிஒலுவ' என அழைக்கப்படும் அரிப்புச் சந்தியை அண்மித்த காட்டுப் பகுதியைத் தெரிந்தெடுத்தான். மகாவலி ஆற்றங்கரையை அண்டிய இவ் வளமான பிரதேசத்தில் யாழ்ப்பாணம் கம்பர்மலையைச் சேர்ந்த விவசாயிகள் வருடா வருடம் சென்று வெங்காயம், மிளகாய்க்குரிய பருவகாலங்களில் விவசாயம் செய்து திரும்புவதுண்டு. தலைமறைவாக வாழ்ந்த 'யக்கடேயா' அங்கு பெருமளவில் கஞ்சா பயிர் செய்கையை ஆரம்பித்தான்.

மெல்ல மெல்ல அவனது நண்பர்களும் உறவினர்களும் அங்கு காடுகளை வெட்டிக் குடியேறி கஞ்சாச் செய்கையுடன் விவசாய முயற்சிகளையும் மேற்கொண்டனர். இதனால் அந்தப் பகுதி ஒரு பெரும் கஞ்சா உற்பத்தி மையமாகவே விளங்கியது.

அதையடுத்து அங்கு ஒரு பௌத்த விகாரை அமைக்கப்பட்டு அது ஒரு தொன்மை வாய்ந்த பௌத்த வழிபாட்டுத் தலமாக ஒரு காலத்தில் விளங்கியது எனவும் கூறப்பட்டது. அந்த விகாரையில் பிக்குவின் அனுசரணையுடன் பல சிங்களக் குடியிருப்புகள் 'சேருவில' என்ற பேரில் உருவாகின.

### சேருவிலவின் வரலாறு

இப்படியாக சேருவில, மஹிந்தபுர, சயயபுர, தெஹியோவத்தை, மாவிலாறு சிங்களப் பகுதி எனப் பல குடியேற்றங்கள் புற்றுநோய் போல் எங்கும் துரிதமாக உருவாகின. சட்டவிரோதமாக ஆரம்பிக்கப்பட்ட இந்தக் குடியேற்றங்கள் சிங்கள அரசியல்வாதிகளின் முயற்சி காரணமாக குடியேற்றத் திட்டங்களாக அங்கீகரிக்கப்பட்டுச் சகல அரச உதவிகளும் வழங்கப்பட்டன.

சேருவாவில என்ற புதிய அரச அதிபர் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது. அது மட்டுமன்றி தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் என இரட்டை அங்கத்தவர் தொகுதியாக இருந்த மூதூர் பிரிக்கப்பட்டு மூதூர், சேருவில என இரு தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டன. இன்று திருமலை மாவட்டத்தில் சேருவில ஒரு சிங்களத் தேர்தல் தொகுதியாக விளங்குகிறது.

தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி அமைந்த போது வவுனியா தொகுதி யாருக்கு என்ற பிரச்சினையில் வவுனியா மாவட்டத்தை வவுனியா, முல்லைத்தீவு என இரண்டாகப் பிரித்து பங்கு போடுவதற்காக மூதூரை இரண்டாகப் பிரிக்க தமிழ்த் தலைமைகள் ஆதரவு கொடுத்த வெட்கம் கெட்ட செயலையும் நாம் மறந்து விட முடியாது.

சந்திரசேகர ஆசாத்

எப்படியிருந்த போதிலும் திருகோணமலை மாவட்டத்தில் கல்லோயா, கந்தளாய், சேருவில போன்ற பெரும் பகுதிகள் சிங்கள ஆதிக்கத்தால் விழுங்கப்பட்டுவிட்டன என்பது உண்மையாகும்.

### முஸ்லிம்களின் நிலம் பறிப்பு

இவ்வாறே மட்டக்களப்பு மாவட்டத்தில் சீனித் தொழிற்சாலையில் பணிபுரியவும் கரும்பு உற்பத்தியில் ஈடுபடவும் எனப் பெருமளவு சிங்களவர் குடியேற்றப்பட்டனர். முஸ்லிம்களின் ஏராளமான விளை நிலங்கள் பறிக்கப்பட்டு அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். இன்று அங்கு தமிழர்களும் முஸ்லிம்களும் சிறுபான்மையினராக்கப்பட அம்பாறை என்ற ஒரு சிங்கள மாவட்டமே உருவாகிவிட்டது.

ஞாயிறு காரம்

'திருமாவெலிய' புனித பிரதேசத் திட்டம் போன்றவற்றால் மேலும் மேலும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கெதிரான நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

அதாவது மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பகுதியும் விழுங்கப் பட்டுவிட்டது. இது ஏற் கனவே எமது தாயகப் பகுதி விழுங்கப்பட்ட கதை மட்டுமன்றி எமது தாயகப் பகுதியின் நிலத் தொடர்ச்சி துண்டிக்கப்பட்ட கதையையும் சொல்லும் வரலாறாகும். போர் முடிந்த பின்பு இந்தக் கொடிய ஆக்கிரமிப்புக் கரங்கள் வடக்கு நோக்கி விரிய ஆரம்பித்துவிட்டன.

### வடக்கு நோக்கி விரியும் ஆக்கிரமிப்பு

ஏற்கனவே எமது மக்கள் நீண்டகாலமாகவே வாழ்ந்து வந்த பகுதிகள் அபகரிக்கப்பட்டும், எமது நீர்ப்பாசனக் குளங்களின் நீரேந்தும் பகுதிகளாக இருக்கும் காடுகள் அழிக்கப்பட்டும் இராணுவத்தினரின் குடும்பங்களுக்கான குடியிருப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இது எமது சனத்தொகை விகிதாசாரத்தில் சிங்களவர்களின் தொகையை அதிகரித்து எமது இன தனித்துவத்தைச் சீரழிக்கும் நீண்ட நிகழ்ச்சி நிரலில் ஒரு பகுதியாகும்.

எவ்வாறு கல்லோயா, கந்தளாய், சேருவில போன்ற குடியேற்றங்கள் மூலம் கிழக்கு மாகாணத்தின் தாயகத் தொடர்ச்சி துண்டிக்கப்பட்டதோ அவ்வாறு வெலிஓயா என்ற பெரும் திட்டத்தின் மூலம் வடக்குக் கும் கிழக்குக்குமான நிலத் தொடர்பைத் துண்டிக்க பெரிய முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

### முல்லையில் ஆபத்து

தமிழ் மக்களின் இதயபூமியான மணலாற்றில் தனிக்கல்லு, கென்ற் பாம், டொலர் பாம், ஜனகபுர ஆகிய பகுதிகளில் அங்கு வாழ்ந்த தமிழ் மக்கள் 1984 இல் மகாவலி அபிவிருத்திச் சட்டம் மூலம் வெளியேற்றப்பட்டு அங்கு சகல வசதிகளுடனும் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுவிட்டனர்.

இந்தப் பகுதிகளுடன் கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக் கேணி, புலிபாஞ்ச கல், அளம்பில், குமுழமுனை ஆகிய பகுதிகள் இணைக்கப்பட்டு ஒரு புதிய உதவி அரச அதிபர் பிரிவு 'வெலி ஓயா' என்ற பேரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதாவது அனுராதபுர மாவட்டத்தில் சில பகுதிகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல பகுதிகளும் இணைக்கப்பட்டு வெலிஓயா என்ற பிரதேச செயலர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

இது முல்லை மாவட்டத்தை அபகரிக்கும் சதி முயற்சிக்கும் வடக்கு, கிழக்குக் குமிடையேயான நிலத்தொடர்பைத்துண்டிக்கும் முயற்சிக்கும் ஒரு சட்டபூர்வ வலிமை வழங்கப்பட்ட பிரகடனமாகும். இந்த ஆக்கிரமிப்பின் இரண்டாவது கட்டம் இப்போது கொக்கிளாயில் ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 1960 இற்கு முன்பு குடியிருந்தவர்கள் எனக் கூறப்பட்டு 37 சிங்களக் குடும்பங்கள் கொக்கிளாய் முகத்து வாரம் பகுதியில் குடியேற்றப்பட்டுவிட்டன. அதையடுத்து மேலும் 45 குடும்பங்கள் சகல வசதிகளுடனும் குடியேற்றப்படுவதற்காக முல்லைத் தீவு மாவட்டத்தில் கொண்டு வந்து இறக்கப்பட்டுள்ளன.

அதாவது இவர்கள் கொக்கிளாயைச் சொந்த இடமாகக் கொண்டவர்கள் எனவும் அவர்கள் இடம்பெயர்ந்து தென்னிலங்கையில் வாழ்ந்தவர்கள் எனவும் கூறப்படுகிறது. போர் காரணமாக இடம்பெயர்ந்தவர்களுக்கு வெளிநாடுகள் வழங்கும் சகல உதவிகளும் முழுமையாக வழங்கப்பட்டுக் கொக்கிளாயில் குடியேற்றப்படுகின்றனர்.

1960 ஆம் ஆண்டை அடுத்த காலப் பகுதியில் நீர்கொழும்பைச் சேர்ந்த சம்மாட்டி ஒருவர் கொக்கிளாயில் கரைவலை மீன்பிடித் தொழிலுக்காக வந்திறங்கினார். அங்கு ஏற்கனவே கொக்கிளாயிலிருந்து முல்லைத்தீவுவரை முல்லைத் தீவு அளம்பில் பகுதிகளைச் சேர்ந்த சம்மாட்டிகளே கரைவலைத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

### மீன்பிடியில் ஆரம்பம்...

இது பரந்த கடற் படுகையாதலால் முல்லைத்தீவு மீனவர்களும் அவர்களை எதிர்க்கவில்லை. சில வருடங்களில் மேலும் இரு சம்மாட்டி கள் அங்கு வந்து தொழில் தொடங்கவே அந்த மூன்றுபாடுகளும் அவர்கள் பருவ காலத் தொழில் செய்யும் இடங்களாகின. ஆனால் பருவகாலம் தொடங்கும் போது அவர்கள் படகுகள், வலைகள், தொழிலாளர்கள் என அனைத்துத் தேவைகளுடனும் வருவதும் பருவகாலம் முடிய அனைவரும் திரும்பிச் செல்வதும் வழமையாக இடம்பெற்றன.

காலப்போக்கில் கரைவலைத் தொழிலில் கூலித் தொழிலாளிகளாக வருபவர்கள் முகத்துவாரம் பகுதியில் குடிசைகள் அமைத்துக் குடியிருக்க ஆரம்பித்தனர். பருவகாலம் முடிந்த பின்பு இவர்கள் கொக்கிளாய் ஏரியில் மீன்பிடித்துத் தொழில் செய்தனர். சில வருடங்களில் இவர்களுக்கு மீனவர் குடியிருப்புகள் என்ற பேரில் வீடுகள் அரசால் கட்டிக் கொடுக்கப்பட்டன.

இவ்வாறு 1982ஆம் ஆண்டில் 21 குடும்பங்கள் இங்கு நிரந்தமாகக் குடியிருந்தன. கொக்கிளாயில் வாழ்ந்த தமிழ் மக்களுக்கும் இவர்களுக்குமிடையே சுமுகமான உறவு நிலவி வந்தது.

எனினும் இவர்களில் சிலர் சிறிபுரவில் உள்ள சிங்களக் காடையர்களுன் சேர்ந்து கொக்கிளாய்த் தமிழ் மக்களின் மாடுகளைக் கடத்தி இறைச்சிக்காகக் கொழும்புக்கு ஏற்றும் களவுத் தொழிலில் இறங்கிய பின்பு இரு சாராருக்கும் இடையே மோதல்கள் ஏற்பட் டன. இப்படியான சந்தர்ப்பங்களில் கொக்கிளாய் இராணுவ முகாமைச் சேர்ந்த படையினர் தமிழ் இளைஞர் களை வேட்டையாட ஆரம்பித்தனர். இதனால் பல இளைஞர்கள் தலைமறைவாகக் காடுகளில் ஒளிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

### தமிழர் வெளியேற்றம்

1984 ஆம் ஆண்டில் மகாவலி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், தென்னைமரவாடி, கருநாட்டுக்கேணி, புலிபாய்ஞ்சகல், முந்திரிகைக் குளம், மருதோடை, ஊஞ்சல்கட்டி, ஒதியமலை, மண்கிண்டி, பெருங்குளம், தனிக்கல் போன்ற தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த கிராமங்களை விட்டு 24 மணி நேர அவகாசத்தில் வெளியேற்றப்பட்டனர். இந்த நாள்களிலேயே பெருங்கொடூரமான ஒதியமலைப் படுகொலைகள் இடம்பெற்றன.

இப்போது சில மாதங்களின் முன்பு தான் இந்தப் பகுதியின் தமிழ் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அக்கிராமங்களில் சில இருந்த சுவடே இல்லாமற் காணாமற் போய் விட்டன. பல சிங்களக் குடியேற்றங்களால் பெயர் மாற்றம் பெற்று வேறு உருவம் எடுத்து விட்டன. மீளக்குடி மர்ந்த மக்களோ போதிய வசதிகள் இன்மையால் மீண்டும் அந்தக் கிராமங்களை விட்டு வெளியேறும் நிலையில் உள்ளனர். தமிழ் மக்களின் இதயபூர்வ மான மணலாறு கூட 'வெலிஓயா' ஆகிவிட்டது.

இந்த நிலையில் தான் 1960 இற்கு முன் நிரந்தரமாகக் குடியிருந்தவர்கள் என்ற பேரில் சகல வசதிகளுடனும் கொக்கிளாய் முகத்துவாரம் பகுதியில் சிங்களவர்கள் குடியேற்றப்படுகின்றனர்.

### ஆக்கிரமிப்பு விரியும்

கொக்கிளாயின் ஏனைய பகுதிகள் கருநாட்டுக் கேணி, கொக்குத்தொடுவாய் ஆகிய பகுதிகளுக்கும் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை விரிவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ஒரு பெரும் ஆபத்து கொக்கிளாய் குடியேற்ற உருவத்தில் பல்முக நோக்குடன் எம்மை நோக்கி வருகிறது.

இங்குதான் நாங்களும் எங்கள் தமிழ் தலைமைகளும் என்ன செய்யப் போகிறோம் என்ற கேள்வி எழுகிறது. ஒரு நாடாளுமன்றப் பதவிக்காகவும் எமக்குள் எழுந்த சிக்கலை எமக்குள்ளே தீர்க்க வழியற்று வேறு வழிகளை நாடியதன் மூலமும் எமது முன்னைய தலைமைகள் சேருவில என்ற தொகுதி உருவாகவும் திருமலை மாவட்டத்தின் நிலத் தொடர்பை அறுக்கவும் வழி வெட்டிக் கொடுத்தோம்?

இப்போ வடக்கையும் கிழக்கையும் நிலத் தொடர்பால் துண்டிக்கவும் வடக்கை விழுங்கவும் கொக்கிளாயில் தொடங்கும் ஆக்கிரமிப்புக்கு எதிராக நாம் என்ன செய்யப் போகிறோம்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைந்து பயனுள்ள நடவடிக்கை எடுக்கத் தவறினால் காலத்தைத் தவறவிட்டுக் கடமை யைச் செய்ய மறுத்த குற்றம் இவர்களைச் சாரும். அதுமட்டுமன்றி இவர்களை ஒதுக்கி விட்டு மக்கள் நேரடியாக நடவடிக்கைகளில் இறங்கும் நிலையும் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், செப்.25

நல்லூர் சட்டநாதர் வீதிப் பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காலில் படுகாயமடைந்தார். லான்மாஸ் ரரும் மோட்டார் சைக்கிளும் மோதி யதில் இடம்பெற்ற இந்த விபத்தில் கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த உமாகாந்தன் அனுஷன் (வயது-28) என்பவரே படுகாயம் அடைந்தவராவர். இவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம)

**மணமகள்கள் (VIMB)**

பெற்றோர்களுடன் இங்கு வந்து நிற்கும் லண்டன் PR②, ஆஸ்திரேலியா PR②, அமெரிக்கா PR①, ஜேர்மனி PR③, மணமகன்களுக்கும் (இவர்களை நேரில் பார்க்கலாம்) உள்நாட்டில் பல்கலைக் கழகத்தில் மருத்துவ பீடத்தில் விரிவுரையாளராகவுள்ள ஒருவருக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பங்களில் இருந்து மணமகள்கள் தேவை. (1976 - 1990 க்குள் பிறந்தவர்கள்)

VIMB (வாணி சர்வதேச திருமண சேவை)
இல. 181, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
T.P: 0771307185, 0778501013, 0776184484
வவுனியா - 0773380265, மட்டக்களப்பு - 0772848495

**பகுதி வீடு வாடகைக்கு உண்டு**

வண். வடமேற்கு, ஆறுகால் மடத்தடிக்கு அண்மையில் 2 அல்லது 3 ஒழுக்கமான பெண்கள் வசிப்பதற்கு ஏற்ற பகுதி வீடு குறைந்த வாடகைக்கு உண்டு.

மே/ பா உதயன்,
வி. இ - 4177
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**டோனி பவுலிஸ் தையல் நிலையம்**

கொழும்பில் பிரபல்யம் வாய்ந்த தையல் நிலையமான APOTHECARIES TAILORING நிறுவனத்தின் கிளையான "டோனி பவுலிஸ்" தையல் நிலையம் தற்போது யாழிலும்

★ ரெடிமெற் சூட்டிங், சூட், சேட்ஸ், ரவுசஸ்
★ திருமண வைபவங்களுக்கு ஆண்களுக்கான ஆடை தினுசுகள்
★ பெண்களுக்கான-சாறி பிளவுஸ், சல்வார், ஸ்கேட்ஸ் மேலும் இன்று (25.09.2011) தொடக்கம் 09.10.2011 வரை ரவுசர் துணிதந்து முதல் ரவுசருக்கு இலவச தையல் கூலி என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**டோனி பவுலிஸ் தையல் நிலையம்**
No. 28, இராமநாதன் வீதி,
(யாழ்.பல்கலைக் கழகத்துக்கு அருகில்) யாழ்ப்பாணம்.
T.P: 0113144939
H/L: 0776729503
Colombo office: 0112445242

**கமத்தொழிலுக்கு ஏற்ற உற்ற நண்பன்!**

**எட்குரோ**
தண்ணீர் தெளிக்கும் இயந்திரம்



- 16 லீட்டர் தண்ணீரை நிரப்பலாம்.
- ஸ்டென்லஸ் ஸ்டீலால் செய்யப்பட்டது.
- ஒரு வருட கால உத்தரவாதம்.
- நாடு முழுதும் உள்ள முகவர்களிடம் அங்கீகரிக்கப்பட்ட விற்பனைக்கு பிந்திய சேவையினை டிபற்றுக்கொள்ளுங்கள்.

EDNA GROUP
எட்னா என்ஜினிரிங் (பிரை) லிமிட்டட்
257, கிராண்பாஸ் வீதி, கொழும்பு-14. தொலைபேசி: 2498310, 2498315
பெக்ஸ்: 2472628 E-mail: agro@edna.lk

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில்
170 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து
கைதடி மேற்கு மண்ணுக்குப் பெருமை
சேர்த்த எம்மண்ணின் வாரிசும் வவுனியாவில்
ஆரம்பக் கல்வியைப் பயின்றவரும் தற்போது
நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய
கல்லூரியின் மாணவனும் கைதடி மேற்கைச்
சேர்ந்த முன்னாள் கிராமசபை உறுப்பினரும்
சமூக சேவையாளருமான அமரர் பொன்.
செல்லையாவின் பேரனும்
திரு. திருமதி வின்சன் - சாந்தி தம்பதியரின்
கனிஷ்ட புத்திரனுமாகிய
செல்வன் வி.நெதன்குளோற் அவர்களை
மேலும் கல்வியில் சிறந்து விளங்க மனமார வாழ்த்துகின்றோம்.

கைதடி மேற்கு உறவுகள்.

Hotline: 077 309 9 308



கடந்த 8 ஆண்டு காலமாக A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப வாழ்வை வடிவமைத்து எதிர்காலத்தை உருவாக்குவதில் மாணவர் மனங்களை வென்றோம்..!
எனவே இம்முறையும் உங்கள் தெரிவு....

யாரும் இதுவரை வழங்காத சலுகை எம்மிடம் மட்டுமே.

**HND**
in Computing
in Business (General)
in Business Management
in Business HR
in Business IT
(18 Months)

எமது வழமையான கட்டணம் 201,600/=
But Now... 150,000/=

இச் சலுகை 30/09/2011 வரை மட்டுமே......

**பட்டப்படிப்பிற்கான கற்கைநெறி**

- BIT — Bachelor of Information Technology - UCSC
- bcs — Higher Education Qualifications
- BIT @ UOM — Bachelor of Information Technology - University of Moratuwa
- HND — HND in Computing and Business

**டிப்ளோமாக் கற்கைநெறி**

- DiTEC — Diploma in Information Technology
- DiSE — Diploma in Software Engineering
- DiBM — Diploma in Business Management
- DiWE — Diploma in Web Engineering

இலங்கை அரசாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட ISO தரச்சான்றிதழ் பெற்ற கணனி நிறுவனம்.

பயிற்சி நெறியில் இணையும் மாணவர்கள் இலங்கையிலுள்ள எமது 36 கிளை நிறுவனங்களில் விரும்பிய இடத்திற்கு எவ்வித செலவுமின்றி இடம்மாறி பயிற்சியை தொடரமுடியும்.

புதிய பிரிவுகள் ஆரம்பம் → 26-09-2011 , 28-09-2011 01-10-2011

ESOFT — The Leader in Professional ICT Education

வடமாகாணக்கிளைகள்.

No.166/3, Navalar Road, Jaffna TP:021 222 4142
No.151,Jaffna Road, Nelliyadi TP:021 226 4940
Periya Arasady,Chavakachcheri TP:021 227 0383
Point Pedro Road, Kodikamam TP:077 625 0789
No:1 Kanakapuram Road, Kilinochchi TP:021 228 5444
Main Street, Uduppiddy TP:021 320 1303
Kala Food City Upstair,Karainagar TP:077 309 9308
No:92,Convent Road, Mannar TP:023 222 3377
No:11,9th Lane Vairavapuliyankulam, Vavuniya. TP:024 222 6060

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதஸ்வர இசையின் நாதகான விருட்சம் இ.சுந்தரமூர்த்தி

சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம் 11

தமிழர்களின் வாழ்வியலில் காணப்படுகின்ற பண்பாட்டு நிகழ்வுகள், சடங்குக் கொண்டாட்டங்கள், ஆலய வழிபாடுகள் போன்றவற்றில் உயிர்நாதமாக விளங்குவது நாதஸ்வரம், தவில் போன்ற கருவிகளில் இருந்து எழுப்பப்படும் மங்கல இசையாகும்.

எமது செந்நெறி இசையின் வரலாற்றில் இந்தக் கருவியாளர்களின் சாதனைகளும் கண்டு பிடிப்புக் களும் இந்தக் கலையின் வளர்ச்சியை உயர் நிலைக்குக் கொண்டு சென்றுள்ளதெனலாம். மிகவும் விரிவான இராக ஆராபனையும் கணக்கு வழக்கு நுட்பங்களும் சிக்கலான சங்கதி முறைகளும் மங்கல இசையாளர்களால் வளர்த்தெடுக்கப்பட்டவை என்பதில் ஐயமில்லை.

அகில உலக நாதஸ்வரச் சக்கரவர்த்தி திருவாவடுதுறை ரி.என்.இராஜரத்தினம் பிள்ளையின் முயற்சியால் பாடாந்தரம் வழுவாமல் கீர்த்தனைகளை வாசிக்கும் முறையும் வளர்த்தெடுக்கப்பட்ட போது நாதஸ்வரக் கலையானது உலக இசைகளில் முதன்மையான ஒன்றாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தமிழகத்தின் தஞ்சாவூர் மாவட்டமானது இக்கலைத் துறையில் பலநூற்றுக் கணக்கான கலைஞர்களை உருவாக்கி இசையுலகுக்குத் தந்தது. இந்தக் கலைத்துறையில் ஈழத்தவர்கள் தமிழகக் கலைஞர்களையும் விஞ்சியவர்களாகச் சாதனை படைத்த வரலாறுகள் பல எம்மிடம் உள்ளன. இந்த வகையில் ஈழத்தின் மங்கல இசைக்கலைஞர் வரிசையில் கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக நாதஸ்வரக் கலைஞராகப் பணிபுரிந்து புகழ் கொண்ட ஒருவராக விளங்குபவர் ஞானஏந்தல் இராசு சுந்தரமூர்த்தி.

அமரர்களான இராசு - கௌரியம்மா தம்பதிகளின் மகனாக 17.09.1939 இல் இணுவில் எனும் கலைவளம் மிகுந்த சிற்றூரில் இவர் பிறந்தார். இணுவில் சைவ மஹாஜனா வித்தியாசாலையில் கல்வி கற்ற இவர் இயற்கையாகவே இசைஞானமுள்ளவராக் இருந்தமையால் விஸ்வலிங்கம் கோதண்டபாணியின் மங்கல இசைக்குழுவில் தாளக் கலைஞராகப் பல ஆண்டுகள் சென்று தனது சிறுவயதிலேயே கேள்வி ஞானத்தை வளர்த்துக் கொண்டார்.

அக்காலத்தில் கோண்டாவிலில் தங்கியிருந்த தமிழக நாதஸ்வரக் கலைஞரான திருநெல்லிக்காவல் நாராயணசாமியிடம் பல ஆண்டுகள் குருகுல முறைப்படி இக்கலையின் அடிப்படைகளைக் கற்று, அதன் பின் விஸ்வலிங்கம் உருத்திராபதியிடம் குருகுல முறைப்படி இராகம், கீர்த்தனை, கற்பனாஸ்வரம், போன்றவற்றைக் கற்று ஆலயங்களில் நாதஸ்வரத்தைச் சிறப்புற வாசிக்கும் கலைஞராகச் சிறுபராயத்திலேயே உயர்வு கண்டார்.

இதன் பின் அக்காலத்தில் நாதஸ்வர மேதையாக விளங்கிய மாவிட்டபுரம் இராசாவிடம் குருகுல முறைப்படி இக்கலையைக் கற்றதுடன் அவரது குழுவில் இணையாக வாசிக்கும் சந்தர்ப்பத்தையும் பெற்றுக்கொண்டார். இவ்வாறு பல இசையாளர்களிடம், நுண்கலைகளைக் கற்றுக்கொள்ள வேண்டிய வரன்முறை தவறாது நாதஸ்வரக் கலையைக் கற்றுக்கொண்டதால் ஒப்பற்ற மங்கல இசைக் கலைஞனாக இவர் வளர்ச்சி கண்டு 1959இல் தமிழகத்திலிருந்து வருகை தந்து ஈழத்தில் தங்கியிருந்து நாடுமுழுவதும் மங்கல இசை நிகழ்வுகளை வழங்கிய திருவாலூர் இராசரத்தினம்பிள்ளையுடன் இணைந்து வாசித்துத் தனது தனித்துவமான திறன்களை நிலைநாட்டினார். அத்துடன் அந்தக் கலைஞருடனும் தங்கியிருந்து ஏராளமான கீர்த்தனைகளையும் மல்லாரி, பல்லவி, கணக்கு வழக்கு முறைகள் போன்றவற்றைத் தெளிவாகக் கற்றுக்கொண்டார்.

இவ்வாறு நீண்டகாலக் கற்றலும் ஆற்றுகை அனுபவமும் பெற்ற இவர் திருவாலூர் இராசரத்தினத்தின் ஆலோசனையுடனும் ஆசீர்வாதத்துடனும் 1963இல் தனித்துவமான குழுவை அமைத்து தனது இசைத் தொண்டை நாடு முழுவதும் ஆற்றத் தொடங்கினார். ஆலயத் திருவிழாக்களிலும் பண்பாட்டு நிகழ்வுகளிலும் இல்லங்களில் நடைபெறும் சடங்குகளிலும் இசை விழாக்களிலும் மரபுவழி தவறாத மங்கல இசையை இன்றுவரை வழங்கி வரும் இவர் நேரக்கட்டுப்பாடு கொண்ட நேர்மையான கலைஞராகவும் தன்னைப் பண்படுத்திக் கொண்டார். விஸ்தாரமாக இராகம் வாசிப்பதிலும் உருப்படிகளை முறைப்படி வாசிப்பதிலும் கணக்கு வழக்குகளை நுட்பமாகக் கையாள்வதிலும் திறன்கொண்ட இவர் 1981 இல் தமிழகத்தின் சமயபுரம் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற பூச்சொரி விழாவில் நாதஸ்வர இசை வழங்கி ஈழத்துக் கலைஞர்களின் பெருமையை முரசறைந்தார்.

எமது செந்நெறி இசையின் நுட்பமான இராகங்களான சங்கராபரணம், கல்யாணி, பைரவி, தர்பார், பேகட, காம்போதி போன்றவற்றை வாசிப்பதில் அதிக ஈடுபாடு கொண்ட இவர் நிதானமும் பொறுமையும் அன்பும் ஆளுமையும் கொண்ட நல் மனிதராகவும் இசை உருப்படிகளை ஸ்வர, சாகித்திய, அங்க, அடையாளங்களுடன் எழுதிக்கொள்ளும் வல்லமை உடையவராகவும் இக்கலையை ஏனையோருக்கு மரபுவழி தவறாமல் கற்றுக் கொடுக்கும் ஆற்றல் கொண்ட ஆசானாகவும் காணப்படுகின்றார். தனது நீண்ட கால இசை அனுபவத்தால் ஏராளமான மாணவர்களை உருவாக்கியதுடன் தனது பிள்ளைகளையும் தன்வழியில் சிறந்த மங்கல இசைக்கலைஞர்களாக உருவாக்கியுள்ளார். வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களிலும் இசை வழங்கிய இவர் பலவிதமான விருதுகளையும் பட்டங்களையும் பெற்றுக் கொண்ட ஒருவராகவும் காணப்படுகின்றார்.



எமது கலை பண்பாடுகளோடு இரண்டறக் கலந்து பிரிக்க முடியாத ஒரு நிலைபெற்று புனிதமான கலையாக, தேனென இனிக்கும் இசையாக விளங்குவது நாதஸ்வர, தவில் இசை.

குருவுக்குரிய பணிவிடைகளை மனவிருப்புடன் செய்து குருவோடு வாழ்ந்து அவரின் பொற்பாதங்களைத் தினமும் வணங்கி இரவுபகல் பாராது கற்றலிலும் கடின பயிற்சியிலும் ஈடுபட்டவர்களே இத்துறையின் மன்னாதி மன்னர்களாகத் திகழ்ந்துள்ளனர்.


ஆனால் தற்காலத்தில் இக்கலையை ஒழுங்காகக் கற்று தமது இசையறிவை வளர்த்துக்கொள்ளாமல் இசைத்தொழில் புரிந்து வரும் பலர் கச்சேரிகளின் நேரத்தை நீடிப்பதற்கான பகுதிகளாக தென்னிந்தியத் திரைப்படப் பாடல்களைப் பயன்படுத்தி வருகின்றமை கவலைக்குரியதாகும். கடவுளின் அவதாரங்கள் போல் தோன்றி ஏராளமான இசை உருப்படிகளை இராகவளமும் லய நுட்பமும் மொழிச் சிறப்பும் ஒளி வீசும் வண்ணம் எமது இசை முன்னோடிகள் உருவாக்கித் தந்துள்ளனர். இவற்றைத் தெளிவுறக் கற்று மங்கல இசைக் கச்சேரிகளைப் புனிதமாகவும் சாத்திரமாகவும் இனிமையோடும் வழங்க அனைவரும் முன்வர வேண்டும் என்று தனது கருத்துக்களை இவர் கூறுகின்றார்.

**வசாவிளான் தவமைந்தன்**

# வாய்ப்புண்ணுக்கு குடசப்பாலைப் பட்டைக் குடிநீர்

**குங்குமப்பூ**

வேறுபெயர்: ஞானல்பூ, காஸ்மீரம்
தாவரவியற்பெயர்: Crocus sativus
(குரோக்கஸ் சற்றைவஸ்)
குடும்பம்: Iridaceae (இரிடேசியே)
சிங்களப் பெயர்: குங்குமப்பூ
சமஸ்கிருதப்பெயர்: குங்கும கேசர
ஆங்கிலப் பெயர்: Saffron



இது பூண்டு. இதன் பூக்களில் உள்ள மகரந்தத் தாள்களே குங்குமப் பூ எனப்படுகிறது. இது செம் மஞ்சள் நிறம். கர்ப்பிணிகள் குங்குமப் பூவைப் பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால் பிறக்கும் குழந்தை சிவப்பாக இருக்கும் என்பது பொய்யான நம்பிக்கையாகும். உண்மையாகக் கூறப்போனால் கர்ப்பத்தின் ஆரம்பகாலத்தில் குங்குமப் பூவைச் சாப்பிட்டு வந்தால் கருச் சிதைவு கூட ஏற்பட வாய்ப்புண்டு.

பிரசவ வலியைத் தூண்டும் நோக்குடனேயே தமிழ் மருத்துவத்தில் குங்குமப்பூ பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்காகக் குங்குமப் பூவை சோம்புக் குடி நீரில் பருகக் கொடுப்பது வழக்கம்.

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

குங்குமப்பூவை 1 பங்குக்கு 80 பங்கு நீர்விட்டு ஊறவைத்து வடிகட்டிக் காலை, மாலை 30-60 மி.லீ. அளவில் கொடுத்துவர தலைவலி, மூக்கால் நீர்பாய்தல், என்பன நீங்கும். பசியையும் தூண்டும்.

**குடசப்பாலை**

வேறுபெயர்: கசப்புவெட்பாலை, குளய்பாலை, குடசம், கீரிமல்லிகை
தாவரவியற்பெயர்: Hollarhena antidysenterica
(ஹொலரீனா அன்ரிடிசென்ரிக்கா)
குடும்பம்: Apocyanaceae
(அப்போசயனேசியே)
சிங்களப் பெயர்: கலிந்த
சமஸ்கிருதப்பெயர்: குடஜா
ஆங்கிலப் பெயர்: Easter tree

இதில் வெள்ளை, சிவப்பு, கருமை வகையுண்டு. ''பொன்பூங்குடசம்'' என்று சங்க நூல்களில் சிறப்பிக்கப்படும் குடசப்பாலையானது. இது சிறுமர வகுப்புக்குரியது, பட்டை கருநிறம்.

தனி இலைகள், நீண்ட முட்டை வடிவம், கரும்பச்சை நிறம். பங்குனி-ஆனி மாதங்களில் பூக்கும், பூங்கொத்தாக, பூக்கள் வெள்ளை நிறம். அதனால் வெட்பாலை எனப்படுகிறது. நறுமணமுள்ளவை. காய்கள் குழாய் வடிவமானவை.

பட்டையைக் குடிநீரில் இட்டு15-30 மி லீ. அளவில் தினமும் மூன்று வேளை கொடுத்துவரக் கழிச்சல், வயிற்றுழைவு, சீதபேதி, ரத்தபேதி என்பன தணிவடையும்.

வாய்ப் புண்ணுக்கு இதன் பட்டைக் குடிநீரால் வாய் கொப்புளித்துவர மாறும்.பட்டைச் சாற்றுக்குச் சமவளவு இஞ்சிச்சாறு, சீனிசேர்த்துப் பருகிவர வயிற்று நோ மாறும்.


பட்டைச் சாற்றுக்குச் சமவளவு தேங்காய் எண்ணெய் விட்டுக் காய்ச்சி சொறி, சிரங்கு,கரப்பனுக்குப் பூசிவர மாறும். இதன் பட்டையுடன் சமவளவு உலர்ந்த வில்வம் பழச்சதை, மாதுளம் பட்டை என்பவற்றையும் சேர்த்துப் பொடி செய்து 1-2 கிராம் அளவில் தேனுடன் சேர்த்துத் தினம் இரு வேளை சாப்பிட்டுவர கழிச்சல், ஆசனக் கடுப்பு, சீதக்கழிச்சல் என்பன மாறும்.



**Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),**
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 181



அனுப்புபவர் பெயர்:......................................................

விலாசம்:......................................................

......................................................

கையொப்பம்:......................................................

### இடமிருந்து வலம்

1. தேடிக் கொள்
4. தலைவன் மனம் கவர்ந்தவள்
6. சுந்தரம்
7.தாமரை
9. காலம் தாழ்த்து
11. திறமையைக் குறிக்கும் சொல்
12.காரணமாக அமைவது
13.மணக்கும் தன்மை
15.காமன்
17.உள்
18. பாதம்
19. முழுதுமான
20. ஓட்டை
21. வாணிபம்

### மேலிருந்து கீழ்

1. விவகாரம்
2. புலவன்
3. நாள்
4. மனைவியை இழந்தவன்
5. நோய்
8. வீரன்
10. ஒலிப்பது இது.
12. கூற்றுவன்
13. மகள்
14. ஒன்று நீளம், மற்றது இது
15. மோர் கடையப் பயன்படும் கருவி
16. பெரிய
17. எழுத்தின் முதல் இதுவே என்கிறார் வள்ளுவர்.
19. சபை.

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 179 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

### இடமிருந்து வலம்

(1) அபரிமிதம் (6) கல (7) குடி(8) சில (9) ரம்பை (11) மகரம் (12) யமன் (14) சுப (15) கன்னி (17) சனி (18) தர்க்கம் (20) மாதவன் (22) கல் (23)தில்லை (24) இல்லாள்.

### மேலிருந்து கீழ்

(1) அகரம் (2) பலம் (3) மிகு (4) தடிமன் (5) கலம்பகம் ( 8) சிரசு (10) பையன் (13) மனிதன் (15) கனிதல் (16) சிக்கல் (17) சமாதி (19) கல்லா

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 179 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — **கணேசநாதன் தீபிகா,** பெரிய பளை, பளை.

**2 ஆம் பரிசு** — **செல்வி சி.மைதிலி,** குச்சம் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

**3 ஆம் பரிசு** — **சு. கலைச்செல்வி,** முஸ்லிம் கல்லூரி வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு** — **சி.சிந்துஜா,** இல. 184, பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

**5 ஆம் பரிசு** — **சி.விமலாதேவி,** இல.14, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

**செ.திலகவதி,**
72, வதிரி, கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.

**பா.அன்ரன் றமேஷ்,**
மீசாலை கிழக்கு,
மீசாலை.

**நி.தங்கவடிவேலு,**
இல.02, நாலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 181**
*நியூ உதயன் பப்ளிகேஷன்*
*(பிறைவேற்)லிமிட்டெட்,*
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 05.10.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.181 இற்கான விடைகள் 09-10-2011 ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

# தேவைகள்

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிலும் இராமனைக் காண்பது எவ்வளவோ மனநிறைவு. இராமனாக நடிக்கும் ஹிந்தி நடிகர் சரியா எங்கட அவற்ற முகச் சாயல்தான். சரியா எண்டு சொல்லேலாட்டாலும், கிட்டத்தட்ட அவரை மாதிரியே தான். மற்றது எங்கட அவர் நிறம் கொஞ்சம் குறைவு ம்றறப்படி இராமனாக நடிப்பவர் எங்கட அவரையே மாதிரிதான். நினைவு வந்ததும் மகளை வீட்டிலிருந்து படிக்கும் படி கண்டிப்பான உத்தரவிட்டுவிட்டு நிஷாந்தியுடன் அவள் வீடு நோக்கிச் சென்றாள். இராமாயணம் பார்க்க. அவர் வரும் போது புது 'ரீவி' கொண்டுவருவார். வீட்டுக்கு வீடு பார்க்கப் போற சிரமம் இருக்காது. ஆனால் வீட்டில ரீ.வி. இருந்தால் துஷ்யந்தியின் படிப்பும் குழம்பிப் போகும் என்ற எண்ணமும் மனதில் எழுந்தது.

ஷொப்பிங் செய்து செய்தே அவனின் உடம்பு கொஞ்சம் குறைந்துவிட்டது. ஏனைய இடங்களில் ஐந்து ''டொட்ஜ் மார்க்கிற்கு'' வாங்கும் பொருள்களை ''லுண்டா மார்க்கற்றில் எழுபத்தைந்து எண்பது ''பெனிக்'' கிற்கு வாங்கலாம். ஆனால் இங்கு வாங்கும் பொருள்கள் உடைகள், ஓரிரு தடவை யாராலேயாயினும் பாவித்தவையாக இருக்கும். ''லுண்டா மாக்கற்றில்'' வாங்கிய பொருள்களே இரு பெரும் ''சூட்கேஸ்''களில் அடுக்கியாகிவிட்டது. சூட்கேஸை கைபிடிவாரில் பிடித்து இழுத்துப் பார்த்தான். சூட்கேஸ் சில்லுகள் உருண்டு கொடுக்க சூட்கேஸ் உடன் அசைந்து வந்தது. திருப்திப்பட்டான். உடன் வரும் நண்பனின் வற்புறுத்தலில் மேலும் சில பொருள்கள் வாங்க பாகிஸ்தானி ஒருவனால் நடத்தப்படும் ''இன்டியன் சாறி கவுஸினுள்'' நுழைந்தான் புஸ்பநாதன்.


தாயார் தன்னைப் படத்துக்கு அழைத்துச் செல்லாதது துஷ்யந்திக்கு ஒருமாதிரி ஏக்கமாக இருந்தது. இன்று மட்டுமல்ல இப்படிப் பல தடவைகள் அன்றொரு நாள் கோயிலுக்கு அழைத்துச் செல்ல நிஷாவுடன் அப்பப்பா வந்திருந்தார். துஷ்யந்தியின் படிப்புக் குழப்பிவிடும் என அவளைக் கோயிலுக்குச் செல்ல பரிமளம் அனுமதிக்கவில்லை. எந்த நேரமும் படிப்பு, ரியூசன். ரியூசன் முடிந்து வீடு திரும்பினால் மாமியார் வீட்டில் தாயார் படம்பார்த்துக் கொண்டிருப்பார். துஷ்யந்தி ''ஹோம்வேர்க்'' செய்ய வேண்டும் இல்லாவிட்டால் அம்மாவுக்குப் பொல்லாத கோபம் வரும். அதிலும் நிசாந்தி மச்சாள் புலமைப்பரிசில் பரீட்சை பாஸ்பண்ணியதன் பின் அம்மா ஆகக் கடும்பிடி...

அப்பாவின்ர கடிதத்தைத் தான் நூறுதரம் வாசிப்பா. முழுக்க வாசிக்க என்னை விடமாட்டா. மற்றப் பிள்ளையள் தகப்பன் மாரோட மோட்டார் சைக்கிள்ள ஸ்கூட்டரில... எவ்வளவு இடம் போய் வருகினம்... எனக்குத்தான் எந்த நேரமும் படிப்பு...படிப்பு, படிப்பு நினைக்க நினைக்க அவளுக்கு அழுகை வந்தது. தலைக்குள் ஏதோ குடைந்தது!!!.

அன்று ''பிளைற்'' சூட்கேசுக்குள் நிறைந்த பொருளுக்கே இடம் மட்டுமட்டாக சரியாக இருந்தது. ஆனாலும் இன்டியன் சாறி ஹவுஸ்ஸில் அவன் எடுத்த இரண்டு சாறிகளையும் அந்த சூட்கேஸினுள்ளே திணிக்க வேண்டியிருந்தது. அதனை வாங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் கூடப் போன நண்பன் அப்போது தான் மாக்கற்றுக்கு வந்த அந்த ''லேட்டஸ்ற்'' சாரியை வாங்கியிருந்தான். நண்பனின் மனைவி அந்த ''லேட்டஸ்ற்''சாறியிலொன்றை உடுத்தி ஊரில் உலாவரும் போது என் மனைவி அப்படி ஒரு சாரி உடுக்காவிட்டால் என் கௌரவம் என்னாவது..? எனச் சிந்தித்தான். அதனால் அந்த இரு ''சாறி'' களையும் கடைசி நேரதில் வாங்க வேண்டி ஏற்பட்டது. ஏற்கனவே நிறைந்த சூட்கேசினில் ஒன்றைத் திறந்தான்.அதனுள் இரு சாறிகளையும் வைத்து சூட்கேஸை பூட்டுவதற்காக மூடமுயன்றான். ''டக்'' என்ற ஓசை கேட்டது. அளவுக்கு மிஞ்சி பொருள்களைத் திணித்து முன்பக்கம் மூடமுயல, பின்பக்கம் பிணைச்சல் 'டப்' என்று விட்டுப் போயிற்று.

''எயர் போட்'' போக டாக்ஸியில் இருந்து இறங்கிய புஸ்பநாதனின் நண்பன் வெளியே பிதுங்கிய புதுச் சாறி மற்றும் பொருள்களை மீண்டும் உள்ளே தள்ளி சூட்கேஸை பின்பக்கமாக மூட முயன்ற புஸ்பநாதனைப் பார்த்து வாய்விட்டுச் சிரித்தான். படம் முடிந்து பரிமளம் வந்து பார்த்தபோது துஷ்யந்தி முகட்டைப் பார்த்து விழித்துக் கொண்டிருந்தாள். கைவிரல்களை எண்ணிக் கணக்குப் பார்த்தாள். தாயாரைக் கூட கவனிக்கவில்லை. அவளுடைய பார்வையில் ஒரு வெறுமை தெரிந்தது. அவளுடன் கூட வந்த நிஷாந்தியின் தாயார் அவளை உடனே யாரும் உள நலமருத்துவரிடம் அழைத்துச் செல்லுமாறு ஆலோசனை வழங்கினாள். ★

# தமிழர் பண்பாட்டில் வாழை



வாழைமரம் தமிழர் பண்பாட்டில் இரண்டறக் கலந்த ஒன்று. மங்கள நிகழ்வின் அடையாளமாக கொண்டாடப்படும் மரம். அதன் இலையில் உணவு பறிமாறுதல் நமக்கு பழக்கமான ஒன்று.

வாழையிலையில் சுடசுடச் சோறு பிசைந்து சாப்பிடுவது தனி ருசி. சித்த மருத்துவம் கூட இதற்கு மருத்துவ பலன் இருப்பதாக கூறுகிறது.

வாழைஇலை அயல் வீடுகளில் இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும்.

வாழை இலை பொலித்தீன் தாள்களைப் போல் இல்லை. அதில் உணவு போட்டு சாப்பிட்டால் ஆயுள் கூடும் என்ற கருத்தும் எமது மூதாதையர்களிடையே உண்டு. எமது மூதாதையர்கள் தமது காலத்தில் பெரும்பாலும் வாழை இலைகளை பயன்படுத்தி வந்துள்ளனர்.

அதுமட்டுமன்றி உணவகங்களிலும் கூட வாழை இலைகளின் பாவனை இருந்து வந்தது. ஆனால் இன்று அந்தப் பழக்கம் மலையேறிவிட்டது. எதுக்கெடுத்தாலும் பொலித்தீன் தாள்களைத்தான் பயன்படுத்து கிறார்கள். இது உமது உடல் நலத்துக்குத் தீங்கு விளைவிப்பது மட்டுமன்றி சூழலையும் மாசடைய வைக்கும் என்பதை அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும். இதனை ஒவ்வொருவரும் கருத்தில் கொண்டு செயற்படுவோமேயானால் ஆரோக்கியமான வாழ்வு எங்கள் பக்கமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 37

# மழை நீரை குடிதண்ணீராக்கிப் பயன்பெறுவோம் 6

மழை நீர் சேகரிப்பை பற்றி நீண்ட காலமாக பல திட்டங்கள், விழிப்புணர்வு அறிமுகத் திட்டங்கள் என்பன மேற்கெள்ளப்பட்டு வருகின்றன. ஆயினும் அவை உரிய வகையில் மக்களை சென்றடைவதில்லை. அதற்கு முக்கியமான காரணம் மக்களுக்கு தாங்கள் பருகும் நீரின் தன்மை குறித்து உரிய அறிவின்மையே ஆகும். அவர்கள் தாங்கள் பருகும் குடிநீரை ஒப்பீட்டளவிலேயே தீர்மானித்து வந்துள்ளார்கள். அதாவது தங்கள் வீட்டிலுள்ள கிணற்று நீர் உவர்த்தன்மை எனில் சிறிது தூரத்திலுள்ள பொதுக் கிணறு மூலமோ நீர் விநியோகம் மூலமோ கிடைக்கும் நீர் அதனை விட உவர்த்தன்மை குறைவாயின் அதனையே தெரிவு செய்தனர். அதற்கான கட்டாயமும் அவர்களுக்குக் காணப்பட்டது. இன்னும் காணப்படுகிறது. அத்துடன் யுத்தப்பரப்பில் இருந்த பிரதேசமாக இருந்தமையால் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கிடைக்கும் வளங்களை மட்டுமே கொண்டு சகல வேலைகளையும் பூர்த்தி செய்ய வேண்டிய நிர்ப்பந்தமும் இருந்தது.

ஆயினும் இன்றைய நிலையில் வெளி உலகுக்கு கிடைக்கும் சகல வசதிகளும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. அதி நவீன விஞ்ஞான தொழில் நுட்பங்கள் கொண்டு எம் நீர் வளம் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நீர்வளம் கண்காணிக்கப்படுகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடனும் வெளிநாட்டு வல்லுநர்களின் உதவியுடனும் 2006 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது எமது குடாநாடு எதிர்நோக்கியுள்ள குடிதண்ணீர் தொடர்பான அபாயத் தன்மையை மிகத் தெளிவாக எடுத்துரைத்துள்ளது. அதில் நீரின் தரம், அதனை பாதிக்கக் கூடிய காரணிகள் குடாநாட்டைப் பொறுத்தவரை அதிகமாகக் காணப்படுகின்றமையை தெளிவாக சுட்டிக் காட்டியுள்ளது. மிக முக்கியமாக எம் நில நீர்வளம் எமது வருங்கால சந்ததியின் நீர்த் தேவையை பூர்த்தி செய்யப் போதுமானதாக இருக்கப் போவதில்லை என்பதையும் தெளி வாக விளக்கியுள்ளது.

இந்த அங்கீகரிக்கப்பட்ட ஆய்வறிக்கையின் சிபாரிசுகளின் பிரகாரமாக அரசால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் ''இரணை மடு மூலமான யாழ்.-கிளிநொச்சி நீர் விநியோகத் திட்டம்'' நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இது எமது குடாநாட்டுக்கு தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு ஓர் வரப்பிரசாதமாகும். இது ஒன்றே எமக்கு ஏற்பட்டுள்ள பெரிய நீர்ப்பிரச்சினையை தீர்க்கவல்லது. அதேவேளை குடாநாட்டில் மேற் கொள்ளப்பட வேண்டிய சில நடவடிக்கைகளில் மழைநீர் சேகரிப்பையும் முன்னிலைப்படுத்தியே உள்ளது. தற்போதுள்ள நிலையில் எந்த ஒரு சிறு நீர் விநியோகத் திட்டமும் போதிய தரமான குடிதண்ணீரை மக் ளுக்கு வழங்க முறையற்றதாக பேணப்படுகின்றது. கிணற்றிலிருந்து கிடைக்கும் குடிதண்ணீரும் முன்னர் கூறியதுபோல் பெரியளவிலான தொற்றல்களை கொண்டதாகவே காணப்படுகின்றது.

எம் மக்களுக்கு தற்போது உடனடியாக இந்த பிரச்சினையை எதிர்கொள்ள கையில் உள்ள தீர்வு மழைநீர் சேகரிப்பே ஆகும். மழைக்காலம் ஆரம்பமாகவுள்ள இந்தக் காலப்பகுதி நீங்கள் உங்களை தயார்படுத்திக்கொள்ளவும் சிறந்த ஓர் சந்தர்ப்பம் ஆகும். பரீட்சார்த்தமாகவேனும் சிறிதளவிலேனும் இதனை மேற் கொண்டு பார்த்து இதன் உண்மை நிலைமையை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

எம் நாட்டின் மலைப்பகுதிக்கு சுற்றுலா செல்லும் சந்தர்ப்பம் தற்போது எம்மக்களுக்கு தாராளமாக கிடைத்துள்ளது. அங்கு செல்லும் எவரும் ஏதாவதொரு 'Tea estate'க்கு செல்லத் தவறுவதில்லை. அங்கு தேநீர் பருகி அதன் சுவை பிடித்து அந்த தேயிலையை வீட்டுக்கும் வாங்கி வந்து போட்டுப் பார்த்து அதன் தரம் குறைவாக இருப்பதைக் கண்டு நாம் ஏமாற்றப்பட்டு விட்டதாக அங்கலாய்த்துக் கொள்வதைக் காணக் கூடிய தாக இருக்கும். நீங்கள் அவர்களைக் குறை கூறுவதை விடுத்து இந்த மழை நீரில் தேநீர் போட்டுப் பருகிப் பாருங்கள். அதே சுவையை உங்களால் உணரக் கூடிய தாக இருக்கும். நான் உங்களை நல்ல தேநீர் பருகவாவது மழை நீரை சேகரியுங்கள் எனக் கூறுவது ஏதாவது ஓர் வகையிலேனும் நீங்கள் மழை நீரைச் சேகரித்து அதன் தரத்தை உணர வேண்டும் என்பதற்காகவே.

இனி நாம் சென்ற தொடரின் தொடர்ச்சியாக எம் நீர்த் தொட்டிகளில் சேகரிக்கப்பட்ட நீரினை எவ்வாறு பராமரிக்கலாம், அதனை எவ்வாறு தூய்மையாகப் பேணலாம் என்பதனைப் பார்ப்போம்.

முன்னைய தொடர்களில் கூறியது நாம் தூய்மையாக மழைநீரை சேகரிக்குமிடத்து அதில் சேதன அசேதன மாசுக்கள் மிகச் சொற்பமாகவே காணப்படப் போகின்றது. அதனால் இந்த மழை நீரை நீண்ட காலம் சேமிக்கும் போது பௌதிக இரசாயன மாற்றங்கள் மிக மிகக் குறைவாகவே காணப்படப் போகின்றது. அத்துடன் இந்தத் தொட்டிகள் நிழலான இடத்தில் பராமரிக்கப்படுமாயின் மேலும் பாதுகாப்பாக இருக்கும்.

ஆயினும் உங்களுக்கு குடிதண்ணீரினால் வயிற்றோட்டம் போன்ற நோய்கள் வருவதாக சந்தேகம் வரும் இடத்தும், முன்னைய மழைக்குப் பின் நீர்த் தொட்டியை முழுமையாக சுத்தம் செய்ய முடியாத சந் தர்ப்பம் ஏற்படும் இடத்தும், மிருக,பறவை எச்சங்கள் கலக்கும் சந்தர்ப்பம் ஏற்படும் இடத்தும் நாம் இந்தத் தொட்டி நீரை குளோரினேற்றம் செய்து சுத்தம் செய்து கொள்ளலாம்.

ஆயினும் மழை நீருக்கான குளோரின் தேவை (Demand) எம் கிணற்று நீரைவிட மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. மிகக் குறைவான அளவு குளோரினை (Bleaching Powder) இடுதலே போதுமானதாக இருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தில் ஓர் இரசாயனவியலாளனான சில விடயங்களை விளக்க வேண்டிய கடப்பாடு எனக்கு உள்ளது.

சாதாணமாக கிணற்றுக்குக் குளோரின் இடும்போது ஒரு தீப்பெட்டி அளவு எனும் பிரமாணத்தையே கொண்டுள்ளார்கள். எவரும் கிணற்றில் எவ்வளவு நீர் உள்ளது, அதன் தூய்மைத் தன்மை, இடும் குளோரின் தூளில் உள்ள குளோரினின் வீதம் என்ன, தங்கள் நீருக்குள்ள குளோரினின் தேவை என்ன (Demand) என்பதை அண்ணளவாக வேனும் கருதுவதில்லை. மேலதிகமாக குளோரினேற்றம் செய்யுமிடத்து தேவையற்ற குளோரின் நீரில் சுவை, மணத்தையும் மாற்றுவதோடு பற்றாக்குறையாக குளோரின் இடும்போது என்ன தேவைக்காக குளோரின் பயன்படுத்தி உள்ளோமோ அந்த தேவை நிவர்த்தி செய்யப்பட முடியாமலும் போய்விடும். ஆகவே அதனை எவ்வாறு முறையாக மேற்கொள்ளல் வேண்டும், எவ்வளவு இடப்படல் வேண்டும் என்று சற்று பார்ப்போம்.

## குளோரினேற்றம்

## குளோரினைப் (Calcium Hypochloride) பாவித்து கிணறுகளை சுத்தம் செய்வதற்கு குளோரின் அளவை கணக்கிடுதல்

**உபகரணங்கள்**

- 20 லீற்றர் கொள்ளளவுள்ள வாளி
- குளோரின் தூள்/குறுணிகள்

**முறை**

- கிணற்றில் உள்ள நீரின் அளவை பின்வரும் சூத்திரம் மூலம் கணக்கிடுதல்

$$V = \frac{\pi D^2 h}{4}$$

எங்கே

V=கிணற்றிலுள்ள நீரின் அளவு($m^3$)

D=கிணற்றின் விட்டம்(m)

h=நீரின் ஆழம் (m)

$\pi$=3.142




- கிணற்றிலிருந்து கலங்கமற்ற நீரை எடுத்து வாளியை நிரப்புக.
- 10 கிராம் குளோரினை (20 லீற்றர் நீருக்கு) சேர்த்து கரையும் வரை கலக்கவும்.
- கிணற்றிலுள்ள ஒவ்வொரு ($m^3$) நீருக்கும் 10 லீற்றர் (அரை வாளி) குளோரின் கலந்த நீரை ஊற்றி நன்கு கலக்கவும்.
- கிணற்றை துப்புரவு செய்யும் பொழுது கிணற்றின் உட்சுவரை, மிதியை சுத்தம் செய்ய 05 மடங்கு குளோரினை கலந்து பாவிக்கவும்.

அதிகளவு சேதனப்பொருள்கள் காணப்படுமாயின் குளோரினேற்றம் செய்தல் உகந்ததல்ல.

- தூய்மையற்ற கிணற்றுக்கு குளோரினேற்றம் செய்தல் உகந்ததல்ல.

சாதாரணமாக கிணற்றுக்கு 1 Mg/L (1PPm) எனும் செறிவில் குளோரின் தூள் இடுவதே போதுமானதாக இருக்கும். சாதாரணமாக கடைகளில் கிடைக்கும் குளோரின் தூள் 30% குளோரினை கொண்டது எனினும் கடைகளில் பராமரிக்கும் முறை, அதன் வயது போன்ற வற்றைக் கொண்டு அனேகமாக 20-25% அளவு செறிவிலேயே குளோரின் காணப்படுகின்றது.

மழை நீர்த் தொட்டிகளுக்கு குளோரின் இடும் போது 0.1-0.2 mg/l செறிவில் இடுதலே போதுமானதாக இருக்கும்.

அடுத்து வரும் வாரத்தில் மழை நீரின் தரம், அதனை மேலும் எவ்வாறு பாதுகாத்தல் , என்னும் பல விடயங்கள் பற்றிப் பார்ப்போம். இதுதொடர்பான சந்தேகங்களை அனுப்பிவைக்கலாம்.

சு.சரவணன்
இரசாயனவியலாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை.

## உயிர்ச்சத்து $B_2$ (இறைபோபிளேவின்- Riboflavin)

- இறைபோபிளேவின் எல்லாத் தாவரங்களிலும் நுண்ணங்கிகளிலும் தயாரிக்கப்படும்.
- எனினும் மனிதன் உட்பட உயர் விலங்குகளில் இந்த உயிர்ச்சத்து தயாரிக்கப்படுவதில்லை.
- எனவே இதனை உணவின் மூலம் உள்ளெடுத்தல் அவசியமாகும்.
- இறைபோபிளேவின் எமது உடலில் பிளேவின் மொனோ நியூக்கியோரைட்டு (Flavin Mono Nucleoride-FMN)பிளேவின் அடினைன் இரு நியூக்கிளி யோரைட்டு (Flavin adenine Dinucleotide-FAD)எனும் இரு வகை பெறுதிகளாக மாற்றப்படும்.
- இவை உடலில் நடைபெறும் மீளும் ஒட்சியேற்ற, தாழ்த்தல் தாக்கங்களில் துணை நொதியங்களாகப் பயன்படுகின்றன.
- இறைபோபிளேவின் உடல்வளர்ச்சிக்கு முக்கியமாகப் பயன்படும்.
- நீண்ட காலம் இது குறைவாக இருக்கும் போது உணவுச் சமிபாடு பாதிக்கப்படும்.
- அத்துடன் பலவீனமும் நரம்புத் தளர்ச்சியும் ஏற்பட்டுத் தேகம் மெலிவுற்று தொற்று நோய்களால் விரைவில் பாதிக்கப்படக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படும்.
- இந்த உயிர்ச்சத்துக் குறைபாட்டால் விழிவெண்படலத்தின் மயிர்த்துளைக் குழாய்களில் குருதி கன்றல், கண்களிலிருந்து கண்ணீர் வடிதல், சொறிவு, எரிவு என்பன உண்டாகும்.
- வெளிச்சத்தைப் பார்க்க முடியாமை (Photophobra), கண் எரிதல் (Vurning of eyes)சொண்டிலும் நாக்கிலும் புண்கள், வாயின் மூலைகளில் வெடிப்பு என்பனவும் அதிகமாக காணப்படும்.
- உடல் நிறைக்கு ஏற்றபடி ஒவ்வொருவரும் நாள்தோறும் உட்கொள்ள வேண்டிய இறைபோபிளேவினின் அளவு வேறுபடுகிறது.
- பொதுவாக இது வளர்ந்த மனிதருக்கு 1.5-1.8 mg ஆகவும், கருவுற்று இருக்கும் பொழுதும், குழந்தைக்குப் பாலூட்டும் காலத்திலும் 2-2.5mg ஆகவும் காணப்படுகிறது.
- இறைபோபிளேவின் விலங்குகளில் சுரப்பியுறுப்புகளில்(உ-ம் ஈரல்) மிகவும் கூடுதலாகக் காணப்படுகிறது.
- அடுத்தபடியாக இறைச்சி, மீன், பால், மோர், பாற்கட்டி, முட்டை ஆகியவற்றில் உண்டு.
- தாவர இனத்துள் பச்சை இலைவகைகள், அவரை வகைகள் சிறந்தனவாகும். அவற்றுள் பசளி, கோவா என்பன சிறந்தன.
- தானிய வகைகளைக் கூடுதலாகத் தீட்டும் போது இந்த உயிர்ச்சத்து அதிகளவில் இழக்கப்படும். எனவே அதிகளவில் தீட்டாத தானிய வகைகளை உபயோகிப்பதே சிறந்தது.

V.சௌமியா மருத்துவபீட மாணவி.

*உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... **நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்திய சாலை,யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுவன் - யுவதி




**விமர்சனம்**

அமெரிக்க மாப்பிள்ளையைத் திருமணம் செய்வதற்காக அமெரிக்காவுக்குப் பயணமாகக் காத்திருக்கும் ரீமாவுக்கும் தமிழ்நாட்டு உசிலம்பட்டிக் கலாசாரம் பிடிக்காமல் அமெரிக்காவுக்குச் சென்று நவீன வாழ்க்கையை வாழ ஆசைப்படும் பரத்துக்கும் இடையிலான காதல் கதைதான் யுவன் - யுவதி திரைப்படத்தின் கதையாகும். இந்தியாவே வேண்டாம், எப்படியாவது அமெரிக்கா சென்று செட்டிலாகி விடவேண்டும் என்ற கனவில் பரத் உலாவுவது பரத்தின் தந்தையான சம்பத்துக்குப் பிடிக்கவில்லை. தனது ஊரிலேயே மகனுக்கு பெண் பார்த்து கல்யாணம் செய்து வைத்து பரத்தை ஊரிலேயே தங்க வைத்துவிட வேண்டும் என்று தந்தையார் ஆசைப்படுகின்றார். இந்த எதிர்பார்ப்பில் படத்தின் காட்சிகள் நகர்கின்றன.

அமெரிக்கா செல்வதற்கு விசா பெறுவதற்காகச் செல்லும் போது ரீமாவைச் சந்திக்கிறார் பரத். முதல் சந்திப்பிலே இருவரும் மோதிக்கொள்கிறார்கள். ஒவ்வொரு முறை இருவரும் சந்திக்கும்போதும் முட்டி மோதிக் கொண்டாலும் பரத்- ரீமாவைக் காதலிக்கிறான்.காதல் தொடர்கிறது. ஒரு கட்டத்தில் ரீமாவின் பாஸ்போட் தொலைந்து போகிறது. அந்தப் பாஸ்போட்டைத் தேடிக் கண்டுபிடிக்க பரத் உதவி செய்கிறான். பாஸ்போட் கிடைத்த சந்தோஷத்தில் பரத்துடன் நட்புக் கொள்கிறார் ரீமா. பரத் ரீமாவைக் காதலிக்க, ரீமா பரத்தின் மீது நட்புக்கொள்ள காட்சிகள் இளமைப் பட்டாளத்தின் பரப்பினுள் உள்நுழைகின்றன. ஒரு கட்டத்தில் தனது காதலை ரீமாவிடம் சொல்லிவிட பரத் நினைக்கும்போது, தனது கல்யாணத்துக்காகத்தான் ரீமா அமெரிக்கா செல்கிறார் என்ற விவரம் தெரியவருகிறது. இந்தச் சூழ்நிலையில் படத்தின் அடுத்த கட்ட நகர்வுகள், ஒரு படபடப்பை பார்வையாளர்களின் மனதில் ஏற்படுத்தி விடுகின்றன. அழகான பெண்களுக்குத் திமிர் அதிகம் இருக்கும் என்று கேள்விப் பட்டேன் அது உண்மைங்களா? என்று ரீமாவிடம் முதலில் முறைத்து, நிறையப் பேசிற பெட்டைகள் பெடியலை அலையவிடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கின்றேன்; என்று சரணடைவது வரை காதல் காட்சிகளில் உருகி உருகி நடிக்கிறார் பரத். கடல் மீன்கள் தொடங்கி மகராசன் வரை கமலை நாயகனாகக் கொண்டு தொடர்ந்து வெற்றிப் படங்களைத் தந்த மூத்த இயக்குநர் ஜீ.என்.ரங்கராஜனின் மகன் ஜீ.என். ஆர். குமரவேலன் இயக்கியிருக்கும் இரண்டாவது படமாகும். பரத் நிஜமாகவே திறமையான டான்சர். இந்தப் படத்தில் பரத்துக்கு இணையாக ஆடும் ரீமா பல காட்சிகளில் தன்னை முதன்மைப்படுத்தி நிற்கிறார்.பல படங்களில் வில்லனாக நடித்த அதே சம்பத்தான் பரத்தின் அப்பா . அரிவாளைத் தேடும் அவரது கையும், முரட்டுப் பார்வையும் கிரா மத்து ஆசாமிகளுக்குரிய மிடுக்கினை இந்தப் படத்தில் சம்பத் காட்டினாலும் பார்வையாளர்களை நகைக்க வைக்கிறார், சிரிக்க வைக்கிறார். எந்தநேரமும் நாலு சுமோ வாகனத்துடன் பத்துக்கு மேற்பட்ட வெள்ளாடைகளை உடைய தடியன்களுடன் வலம் வருகிறார். தமிழ் சினிமாவுக்கு வசனகர்த்தாவாக அறிமுகமான எஸ். இராமகிருஸ்ணன் இந்தப் படத்துக்கு எழுதியிருக்கும் வசனங்களில் நவீன வாழ்க்கை முறை தெறிக்கிறது. குறிப்பாகக் கிராமத்தில் சம்பத் பேசும் காட்சிகள் கதையில் முக்கிய இடம் பிடிக்கின்றன. ரொமான்ஸ், சில்மிஷங்கள் இல்லாத காதல் படம். கண்கள் கலங்கி வார்த்தைகளை மென்று விழுங்குவது, உணர்ச்சி வசப்படும் காட்சிகளில் கண்ணீர் விடுவது எனக் காதல் தோல்வியடையும் சினிமா நாயகன் போல் இல்லாமல் படம் முழுவதுமாக பரத் ஸ்ரைலாக வந்து நிற்கிறார். கொமடியில் தனது பெயரை நிலைநிறுத்தி வரும் சந்தானம் இந்தப் படத்தில் பரத்துடன் வந்து கலக்குகிறார். படத்தின் இறுதிக் காட்சி வரை பரத்துடன் சேர்ந்து வந்து கலக்கும் சந்தானத்தின் காட்சிகள் பார்க்கக் கூடியதாக சுவார்சியமாக இருக்கின்றன. பரத் அமெரிக்கா சென்று ரீமாவினைச் சந்திக்கின்ற போது ரீமா மனசு மாறி பரத்தைக் காதலிக்கிறார். விஜய் ஆண்டனி இசையில் 'ஓ மை ஏஞ்சல்', 'மயக்க ஊசி' பாடல்கள் கேட்க வைக்கிறது. கோவி.ஜெகதீஸ்வரன் ஒளிப்பதிவில் சிஷெல்ஸ் தீவுக்குப் போய் வந்த உணர்வு இருக்கும். அதேபோல உசிலம்பட்டி எனப் படத்தில் காட்டப்படும் இடங்களும் கண்களில் ஒற்றிக் கொள்ளலாம் போல அத்தனை அழகு.''என்னது உசிலம் பட்டிக் காரன்னா கேவலமா? டேய் சச்சின் டெண்டுல்கரே கேரளா போனாலும் அவரை யாரும் கொச்சின் டெண்டுல்கரேன்னு கூப்பிட மாட்டாங்க, சச்சின் டெண்டுல்கரேன்னுதான் கூப்பிடுவாங்க'' என்ற சந்தானத்துக்கே உரிய கிண்டலில் தியேட்டர் சிரிப்பில் அதிர்கிறது. சிஷெல் தீவில் பரத்தைத் தேடி அலைந்து திரியும் சந்தானம் கறுப்பர்களிடம் சிக்கி அல்லோலப்படுவது கலகலப்பாக உள்ளது. இந்தப் படத்தின் காட்சிகளில் தீவுப்பகுதியில் நடமாடுவது, அமெரிக்கா செல்வது என வரும் காட்சிகள் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளன. கமெரா சுற்றி வரும் சிஷெல் தீவில் பல பகுதிகளைப் பார்க்கின்ற போது கண்டிப்பாக அந்தத் தீவுக்குச் சென்று வரவேண்டும் போல் இருக்கிறது. அவ்வளவு அழகாக ஒளிப்பதிவினை மேற்கொண்டிருப்பது சிறப்பானது. யுவன் - யுவதி படம் தீவில் நிலைநிறுத்தி இருப்பது போல் படத்தின் காட்சிகள் கட்சிதப்படுத்தப்பட்டு இருக்கின்றன.

- குமார்.

# மனிதம் உன்னதமானது

இலங்கையின் தலைநகரமான கொழும்பில் பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவற்றுள் புத்ததாச வேலை செய்த தொழிற்சாலை மிகவும் பிரபல்யமானது. இருபத்து நான்கு மணித்தியாலமும் உற்பத்தியில் ஈடுபடும் நிறுவனமாகும். அதன் உற்பத்திக்கு உபயோகிக்கும் மூலப்பொருளுக்குச் செலுத்தும் வரி நாட்டின் வருமானத்தில் கணிசமான பங்கை வகிக்கின்றது. புத்ததாச விசுவாசமான ஊழியர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அவரின் வாழ்வின் இலட்சியமாகப் பிரகாசித்தன.

அவர் தன் உயர் அதிகாரிகள், சக ஊழியர்கள் ஆகியோரின் மதிப்பிற்குப் பாத்திரமானவர். அவர் தொழிற்சங்க நடிவடிக்கைகளில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். முகாமைத்துவத்துடன் பிரச்சினைகளில் முரண்பட்டாலும் பண்பாகப்பேசும் தன்மை அவரை ஏனைய ஊழியர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டியது. அவர் கவர்ச்சிகரமான பேச்சாளரும் கூட. அவரின் குரலில் மாற்றம் ஏற்படத்தொடங்கி இறுதியில் பேசுவது மற்றவர்களுக்குத் தெளிவாகக் கேட்காத நிலை ஒன்று தோன்றியது.

நாட்டிலுள்ள எல்லா நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்களிடம் காட்டியும் அதற்குரிய வைத்திய நிவாரணம் கிட்டவில்லை. அந்தக் காலத்தில் நடமாடும் மருத்துவக் கப்பலான HOPE (கோப்) இலங்கைத் துறைமுகத்தில் தரித்து மருத்துவ உதவி வழங்க ஏற்பாடாகியிருந்தது. அந்தக்கப்பலில் உள்ள வைத்தியர்களிடம் சிகிச்சை பெறுமாறு சிபாரிசு செய்யப்பட்டது. இதற்கமைய 'கோப்' கப்பலில் இருந்த வைத்தியர்கள் புத்ததாசவைப் பரிசீலணை செய்து சத்திரசிகிச்சை செய்யவேண்டுமென ஆலோசனை வழங்கினர். சத்திர சிகிச்சைக்குத் தயாரானார் புத்ததாச. அவரது சத்திர சிகிச்சைக்கு இரத்தம் வேண்டும் என வேண்டப்பட்டது. இந்தச் செய்தி அவர் வேலை செய்த நிறுவனத்தைச் சென்றடைந்தது. உடனடியாகவே நிறுவனத்தின் ஒலிபெருக்கியில் ஊழியர்களுக்குச் செய்தி ஒலிபரப்பப்பட்டது. ''எமது ஊழியரான புத்ததாசவுக்குச் சத்திரசிகிச்சை செய்ய உள்ளதால் இரத்தம் தேவைப்படுகிறது. அத்துடன் அதனை இரண்டு மணித்தியாலத்துக்குள் வழங்க வேண்டும். இரத்தம் வழங்க விரும்புவோர் உடனடியாக நிறுவனத்தின் மருத்துவப்பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.'' இதுதான் ஒலிபரப்பப்பட்ட செய்தி.

செய்தி ஒலிபரப்பாகிய நேரம் ஊழியர்களின் வேலைமாறும் காலமாதலால் (SHIFT CHANGE PERIOD) பல ஊழியர்களின் செவிகளை அந் தச் செய்தி முறையாகச் சென்றடையவில்லை. உற்பத்திப் பிரிவைச் சேர்ந்த ஊழியரான திரு.சைமனும் கணக்காளர் பிரிவைச் சேர்ந்த திரு.சிவராமனும் இரத்தம் வழங்க முன்வந்தனர். உடனடியாகவே அவர்கள் கோப் கப்பலுக்கு அனுப்பப்பட்டனர்.

கப்பலில் இரத்தம் பெறுவற்கு முன்னர் ஆரம்ப விசாரணையும் பரீட்சைகளும் நடைபெற்றன. விசாரணை நடத்தியவர் ஆங்கிலம் மட்டுமே தெரிந்த ஆங்கிலப்பெண். சைமனுக்குச் சிங்களம் மட்டுமே தெரிந்திருந்தது. சிவராமனுக்கு தமிழ், ஆங்கிலம், கொச்சைச் சிங்களம் ஆகியவை தெரிந்த பாஷைகளாகும். சிவராமனின் விவரம் பரீட்சைகள் என்பன பிரச்சினை இல்லாமல் முடிந்தன. ஆனால் சைமனுக்கு மொழி பெயர்ப்பாளர் தேவையாக இருந்தது. சிவராமன் ஆங்கிலம், சிங்களம், சிங்களத்தில் மொழி பெயர்ப்பாளராகச் செயற்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆங்கிலத்தில கேட்கப்பட்ட கேள்விகளுக்குச் சிரமப்பட்டு சிங்களத்தில் மொழி பெயர்ப் புகளைச் செய்தார். கடைசியாகக் கேட்கப்பட்ட கேள்வி 'DO YOU HAVE COLD' .இதை திம்பிரிகசாய தியனவாத? எனச் சிவராமன் தனக்குத் தெரிந்த சிங்களத்தில் மொழி பெயர்த்தார். இதைக் கேட்டதும் சைமன் புன்னகை உதிர்த்துக்கொண்டே நா (இல்லை) எனப் பதிலளித்தார். காரணம் அது பிழையான மொழிபெயர்ப்பு. கிம்பிரிசாவ எனத் திருத்தினார். திம்பிரிகாசயஎன்பது கொழும்பில் உள்ள ஊரின் பெயர். ஆனால் சிம்பிரிசாவ என்பது தடிமன் என்பதைத் தெரிந்துகொண்ட சிவராமன் அவருக்கு நன்றி தெரிவித்தார். ஆரம்பப் பரீட்சைகள் முடிந்த பின் பரீட்சை நடத்திய அம்மையார் சிவராமனைப் பார்த்து உங்கள் இரத்தக் குறூப்பும் புத்ததாசவின் இரத்தக் குறூப்பும் அதிசயமான முறையில் ஒத்ததாக இருக்கின்றன என மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

நோய் குணமாகி புத்ததாச வேலைக்குச் சென்ற அன்று மதிய உணவுக்கான இடைவேளையில் பலர் புதததாசவை பேட்டி கண்டனர். அவர்களுள் ஒருவர் ''உமது உடம்பில் சுத்த சிங்கள இரத்தம் ஓடுகின்றது எனக் கூறமுடியுமா''.? எனப் பகிடியாகக் கேட்டார். அந்தக் கேள்வி புத்ததாசவின் உணர்வை உசுப்பி விட்டிருந்தது. அவர் அமைதியாக, நிதானமாகப் பதிலளித்தார். நான் ஒரு இலங்கைச், சிங்களவன். நாட்டின் தொழிலாளர் குடும்பத்தின் உறுப்பினர். மக்களை இன, மத, மொழி, சாதி அடிப்படையில் வேறுபடுத்தும் சிந்தனை எமது மனதில் உறைந்துள்ளது. இது எமது சிறுபராயம் தொடக்கம் எமது சமூகத்தால் அதன் நடவடிக்கையூடாக எமது மனதில் புகுத்தப்பட்டுள்ளது. இந்த உணர்வை எமது நாட்டிலுள்ள எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த ஆதிக்க சக்திகள் தங்கள் ஆதிக்கத்தைத் தக்க வைப்பதற்கு உபயோகிப்பதை மறுப்பதற்கில்லை. இதுவே மக்கள் மத்தியில் அவர்களின் சமயநீதியையும் சமூகநீதியையும் புறக்கணித்து ஐக்கியமின்மையை தோற்றுவித்திருப்பதும் மறுக்க முடியாத உண்மை தான். தோழர் சிவராமன் போன்ற பலர் புதிய கலாசாரத்தைத் தோற்றுவிக்க உணர்வு பூர்வமாகச் செயற்படுகின்றார்கள். அது வெற்றிபெறத் தொழிலாளர்களான நாம் எல்லோரும் ஐக்கியப்பட்டு உழைக்க வேண்டும். தொழிலாளர்களான நாம்தான் எமது நாட்டின் பெரும்பான்மையினர்.

1947ஆம் ஆண்டு எமது நாட்டிலுள்ள தொழிலாளர்கள் இன, மத , மொழி, சாதி வேறுபாடின்றி ஒருங்கிணைந்து போராட்டம் நடத்திய வரலாறு உண்டு. அந்தப்போராட்டத்தில் ஒரு தொழிலாளி உயிர்த் தியாகம் செய்ய நேர்ந்தது. அவர் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர். அவர்தான் எமது நாட்டின் வடபகுதியைச் சேர்ந்த தோழர் வே.கந்தசாமி. அவரின் ஆத்ம சாந்திக்காக அவர்விட்ட இடத்திலிருந்து அவர் ஏற்றுச் செயற்பட்ட கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லுதல் எதிர்காலத்தில் தொழிலாளர்களின் பொறுப்பாகும். இந்தச் சிந்தனைத்தெளிவு மட்டும்தான் நாம் ஒளிமயமான இலங்கையைக் கட்டியெழுப்ப உதவும். நாங்கள் இதை உள்வாங்கிச் செயற்படத் தவறுவோமேயானால் அன்னிய நாட்டவரின் சிறைக் கைதிகள்போல் வாழவேண்டிவரும்.

புத்ததாசவின் பதில் சக தொழிலாளர்களின் மனதைத் தொட்டதற்கான சான்றாகக் கேட்கப்பட்ட இந்தக் கேள்வியையும் கேள்வியைக் கேட்டவரையும் அன்று உயர்வாக விமர்சித்தனர். மனிதம் மகத்துவமானது. அதன் மீது அரசியல், ஆதிக்கம் சார்ந்து திணிக்கப்படும் உயர்வு தாழ்வுச் சிந்தனைகளும் ஒருவரை ஒருவர் அடக்கி ஆளும், வாழும் மனித நேயமற்ற நோக்கங்களுமே இன்று எம்மை இந்த இக்கட்டான சூழ் நிலைக்குள் மூழ்க்கச் செய்துள்ளன. ஒவ்வொருவர் மீதும் அன்பும் கருணையும் ஆதரவும் நிறைந்த உணர்வுகள் வளர்ச்சியுறும் போதுதான் மகிழ்ச்சியும் ஐக்கியமும் சீர்பெறும்,நிலைபெறும் இதனை ஆள்பவர்களும் அதன் அதிகாரத்தில் வாழ்பவர்களும் சிந்திக்கவேண்டும்.


மனிதம் உன்னதமானது.

சி.இராமச்சந்திரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் நாடுகளில் தமிழ்ப் பெண்களின் நிலை

தமிழ்ப் பெண்களில் பெரும்பாலானோர் சொந்த மண்ணைப் போன்றே புலம்பெயர் மண்ணிலும் சுதந்திரங்கள் பறிக்கப்பட்டவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.


-சோபியா

புலம்பெயர் மண்ணில் வாழ்ந்தாலும் ஒவ்வொரு தமிழ்ப்பெண்ணின் பாதையும் அவளைச் சுற்றியுள்ள உறவுகளாலேயே அமைத்துக் கொடுக்கப்படுகின்றது. அதாவது திருமணமானவள் எனில் அவளது கணவனாலும் திருமணமாகாதவள் எனில் அவளது பெற்றோர்கள், ஆண் சகோதரர்களாலுமே அவளது நடவடிக்கைகள் தீர்மானிக்கப்படுகின்றன.

ஒரு பெண்ணிடம் முன்னேற்றப் பாதையை நோக்கிய சிந்தனை இருக்கிறதா? இல்லையா? என்பதற்கு முன்னர் அவள் பெற்றோரோ அல்லது கணவனோ அவள் எண்ணத்துக்கு ஏற்ப இயங்க மறுத்துவிடுகின்றனர். திருமணமான பின் என்னதான் ஒரு பெண்ணிடம் திறமையும் முன்னேற்றப் பாதையை நோக்கிய நல்ல சிந்தனைகளும் இருந்தாலும்கூட கணவன் என்பவன் தடைக்கல்லாகவும் அவள் எண்ணங்களுக்கு முட்டுக்கட்டையாகவும் நின்று ''பெண்ணுக்குச் சமையலும் சாப்பாடும் பணிவிடையும் தான் முக்கியம்'' என்று கூறுவானாகில் அந்தப் பெண்ணின் எதிர்காலம் புலம்பெயர் மண்ணிலும் புதுமைகள் எதையும் காணாது சமையலறை நெருப்பில் கருகிப் போய்விடும்.

புலம்பெயர் நாடுகளில் வாழும் பெண்களில் சிலர் சமைப்பதும், சாப்பிடுவதும், தொலைக்காட்சி, சினிமா பார்ப்பதுமாக வெளியுலகம் தெரியாமல் பொது விடயங்களில் அக்கறையில்லாமல் எவரிலாவது தங்கி இதுதான் வாழ்க்கை என்ற அர்த்தத்தில் அமைதியாக அதேநேரம் அர்த்தமற்ற வாழ்க்கையை வாழ்கின்றார்கள்.

சில பெண்கள் இவ்வாறான வாழ்க்கையைத் துணிவுடன் ஏற்றுக்கொள்ள முடியாமல் மனப் புழுக்கத்தில் வெந்து மனதுக்குள் மௌனப் போர் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

சில பெண்கள் மனப் புழுக்கம் தாங்காது பொக்கியெழுந்து போராடித் தமக்குப் பிடித்தமான பாதையை நோக்கிப் பயணிக்கத் தொடங்குவார்கள். எனினும் கணவனுடன் போராடி இந்தப் பாதையைத் தேர்ந்தெடுப்பதால் குடும்பத்தில் ஆதரவற்ற தனிமை ஏற்பட்டு சின்னச் சின்னத் தவறுகளுக்கும் அவளையே குற்றங் கூறுதல் போன்ற பிரச்சினைகள் உருவாகும். இதனால் மன அழுத்தம் நிறைந்ததொரு அமைதியற்ற வாழ்க்கையை வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். இத்தகைய பெண்களின் எதிர்காலம் நிச்சயம் ஆரோக்கியமற்றதாகவே இருக்கும்.

அதேநேரம் சில கணவன்மார் நல்ல சிந்தனையுடன் வீட்டு வேலைகளையும் மனைவியுடன் பகிர்ந்து செய்து கொண்டு, பிள்ளைகளை வளர்ப்பதிலும் முழுமையான பங்களிப்பை வழங்குவர். அத்துடன் மனைவியை வெளி உலகத்திலும் சுயமாக நடமாட விடுகிறார்கள். இப்படியான கணவன்மார்களுக்கு மனைவியாக வாய்த்த பெண்கள் உண்மையிலேயே கொடுத்து வைத்தவர்களாகத்தான் இருப்பார்கள். இத்தகைய பெண்களின் எதிர்காலமும் பிரகாசமானதாகவும் ஆரோக்கியமானதாகவும் அமையும்.

# எதற்காக அம்மா...?



நேசித்த உறவுகள்
நிரந்தரமாய் இருக்கவில்லை
படித்த பாடங்கள்
பட்டமும் தந்திடவில்லை
கடவுளின் கருணையில்
கணமாற்றமும் ஏற்படவில்லை
புன்னகையின் பூக்களும்
புதிதாய் பூத்திடவில்லை
கண்ணீரின் கறைகள்
கன்னங்களை நீங்கிடவில்லை
இத்தனையும் என்வாழ்வில்
இழையோடி இருக்க
மற்றவர்களை மதிக்காது
மரணித்த மானுடத்துடன்
எதற்காக அம்மா
என்னை இணைத்துவிட்டாய்?
அழகைப் படித்திடும் அளவுக்கு
அகத்தை யாரும் படித்திடவில்லை
மனதுக்கு மதிப்பில்லாத
இவ்வையகத்தில் வாழ்ந்திட
எனக்குப் பிடித்திடவில்லையம்மா!
என் செய்வேன் நான்?

வி.ஸிந்தா,
வடகோப்பாய்.

# பெண்கள் எந்த விடயத்திலும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்


றிசானிக்கா சுந்தரேஸ்வரன்,
சுன்னாகம்.

பெண்கள் உலகின் கண்கள் என்று கூறுவார்கள். ஒரு மனிதனின் உடலில் கண்கள் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தனவோ அதேபோன்று இந்த உலகின் இயக்கத்துக்குப் பெண்களும் முக்கியத்துவம் வாய்ந்த வர்களாகத் திகழ்கின்றனர்.

தாயில்லாமல் எவரும் இந்தப் பூவுலகில் பிறப்பதில்லை. தாயன்பு கிடைத்தற்கரிய ஒரு பெரும் செல்வமாகும். தாயானவள் தன்னலமற்ற தனது அன்பைத் தனது குழந்தைகளுக்கு வழங்குகின்றாள். பத்து மாதங்களாக ஒரு குழந்தையைச் சுமப்பதிலிருந்து அது வளர்ந்து பெரியவர்களாக உருவாகும்வரை தன்னை வருத்தி அந்தக் குழந்தையின் வளர்ச்சிக்காகப் பாடுபடுகின்றாள். ஆனால் அதற்காக அந்தக் குழந்தையிடத்திலிருந்து அவள் எதையும் எதிர்பார்ப்பதில்லை.

இன்றைய நவீன காலத்தில் எவ்வளவோ மாறுதல்கள் தோன்றியுள்ளன. பெண்களும் கல்வியில் சிறந்து விளங்குவதோடு தொழில் வாய்ப்புக்களையும் பெறுகின்றனர். தற்போதைய கால கட்டத்தில் ஒரு குடும்பத்தில் உள்ள ஆண், பெண் இருவரும் சம்பாதித்தால் மட்டுமே குடும்பச் செலவுகளைச் சமாளிக்க முடியுமென்ற நிலை தோன்றியுள்ளது.மேலும் பெண்கள் எதிர்காலத்துக்கெனத் தமது வருமானத்தில் ஒருபங்கைக் கட்டாயம் சேமித்தல் வேண்டும். ஆரம்பகாலச் சேமிப்புக்கள் பிற்காலத்தில் ஏற்படக் கூடிய தேவைகளுக்குக் கைகொடுக்கும். இதனை ஒவ்வொரு பெண்ணும் மனதில் கொள்ள வேண்டும். அதுமட்டுமின்றி பெண்கள் மிகவும் அவதானமாக வாழ்க்கைப் படிகளில் தம் பாதங்களைப் பதிக்க வேண்டும். கொஞ்சம் தடுமாறினாலும் பாதிக்கப்படுவது அவள் மட்டும் தான். அதன்பிறகு அழுவ திலோ, தன்வாழ்வை முடித்துக் கொள்வதிலோ எந்தவித பயனும் இல்லை. அவ்வாறு வாழ்க்கையை முடித்துக் கொண்டாலும் அவளை யாரும் போற்றமாட்டார்கள்; அப்போதும் தூற்றத்தான் செய்வார்கள். ஆகவே பெண்கள் எந்த விடயத்திலும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். தமது வாழ்க்கைத் துணையாக நல்லதொரு ஆணைத் தெரிவு செய்தல் வேண்டும். புற அழகும், பகட்டும் வாழ்க்கைக்கு உதவாது. ஆகவே பொறுப்புள்ள, நற்குணம் வாய்ந்த ஒருவரைப் பெண்கள் தமது வாழ்க்கைத் துணையாகக் கொள்ள வேண்டும். அப்போது தான் வாழ்க்கை தென்றலாக மாறும். இதில் தவறு விட்டால் புயலும், பூகம்பமும்தான் வாழ்க்கை என்றாகிவிடும்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
''திலகம்'',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.



# கங்காவின் கடிதங்கள்

அன்புள்ள கண்மணிக்கு,

உனது வாழ்க்கையில் நடந்த அந்தத் துயரச் சம்பவத்தை ஏன் என்னிடம் வெளிப்படையாகக் கூறத் தயங்கிவிட்டாய்? வேறொருவர் மூலம் உனக்கு ஏற்பட்ட அந்தத் துயரத்தை அறிந்த போது எனது மனம் எவ்வளவு வேதனைப்பட்டிருக்கும் என்பதை அறிவாயா? நான் இவ்வளவு காலமும் உன்னுடன் எப்படிப் பழகினேன். நீ என்னைப் புரிந்துகொண்டது அவ்வளவுதானா? உனக்கொரு துன்பம் என்றால் அது எனக்கு ஏற்பட்டது போன்றதல்லவா?

உன்னுடைய பெற்றோர்கள் மூலம் ஏற்பட்ட அந்தத் துயர சம்பவத்தை நீ மறந்துவிடு. அவர்கள் சராசரிப் பெற்றோர்கள் மாதிரியே நம்பவைத்து ஏமாற்றப்பட்டுள்ளனர். வெளிநாட்டு மோகத்தில் நன்றாக விசாரித்து முடிவெடுக்காமல் திருமணம் என்ற அந்த ஆயிரங்காலத்துப் பயிரை பாதி நாளிலேயே இழக்க வைத்துவிட்டார்கள். அதற்காக அவர்கள் மீது நீ கோபப்படாதே. எந்தவொரு பெற்றோரும் தெரிந்துகொண்டே தமது பிள்ளையைப் படுகுழியில் தள்ள நினைக்கமாட்டார்கள். ஏதோ விதிவசத்தால் இப்படி நடந்துவிட்டது.

இதில் நீ செய்த தவறு எதுவுமில்லை. இனிமேல்தான் நீ இன்னும் அதிகமான நம்பிக்கையுடனும் தைரியத்துடனும் இருக்க வேண்டும். சமுதாயத்தைப் பற்றி எந்தக் கவலையும் அடையத் தேவையில்லை. ஒரு பெண்ணில் எப்பொழுது குறை வரும் ஊர் முழுவதும் பறைசாற்றலாம் என்று காத்திருக்கும் இந்தச் சமுதாயத்தின் இயல்பே இதுதான்.

உன்னைப்போன்று வெளிநாட்டு ஆண்களால் வாழ்க்கையைத் தொலைத்த எத்தனையோ பெண்கள் எமது சமுதாயத்தில் நம்பிக்கையுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதேவேளை தாங்கமுடியாத சோகத்தில் வாழ்க்கையை முடித்துக்கொண்டவர்களும் உள்ளனர். அவர்களைப் போன்று இந்தத் துன்பத்தை நினைத்து நீ எந்தத் தவறான பாதையையும் நாடக்கூடாது. உன்போன்ற பாதிக்கப்பட்ட பெண்களுக்கெல்லாம் முன்னுதாரணமாகச் செயற்பட்டு இலட்சியப் பெண்ணாக வாழ்வாய் என நம்புகிறேன்.

அன்புடன்....
கங்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்து



திரு. திருமதி பபாகரன் தம்பதியரின்
செல்வப் புதல்வி
**செல்வி ப.வைஷ்ணா**
(யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்)
2011 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 174 புள்ளிகளைப் பெற்று சித்தியெய்தியமைக்காக அவரை மனமாரவாழ்த்துவதுடன், அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தகுலரஞ்சினி ஆசிரியை அவர்களுக்கும். பாடசாலை அதிபர்ஆசிரியர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
அம்மம்மா, தாத்தா
(திரு. திருமதி விநாயகமூர்த்தி
முருகமலை வீதி, மானிப்பாய்)

## இலங்கை மின்சார சபை - யாழ். பிரதேச அலுவலகம்
### மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களிலுள்ள மின்கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதாலும் உயர் அழுத்த மின்விநியோக வலைப்பின்னலில் திருத்த வேலைகள் செய்யும் பொருட்டும் குறிப்பிட்ட தினங்களில் காலை 8.30 மணிமுதல் மாலை 5 மணிவரை மின்சார விநியோகம் தடைப் பட்டிருக்கும் என்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்துக்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதையும் கடுமையான மழை இருக்கும் சந்தர்ப்பங்களில் இந்த மின்தடை அமுல்படுத்தப்படமாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

| திகதி | இடங்கள் |
|---|---|
| 26.09.2011 (திங்கட்கிழமை) | சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி மற்றும் ஈவினைப் பிரதேசத்தின் ஒரு பகுதி. |
| 27.09.2011 (செவ்வாய்க்கிழமை) 29.09.2011 (வியாழக்கிழமை) | கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி, ஈவினைப் பிரதேசத்தின் ஒரு பகுதி. |
| 28.09.2011 (புதன்கிழமை) | சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், இணுவில், மருதனார்மடம், உடுவில் ஒரு பகுதி, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், காக்கைதீவு, கொட்டடி, கோம்பயன்மணல் பிரதேசம், யாழ்.பட்டணப்பகுதி. |
| 30.09.2011 (வெள்ளிக்கிழமை) | கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், இணுவில், மருதனார் மடம், உடுவில் ஒரு பகுதி, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், காக்கைதீவு, கொட்டடி, கோம்பயன்மணல் பிரதேசம், யாழ்.பட்டணப் பகுதி. |

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறோம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்குக் கைகொடுக்கும் இலங்கை மின்சாரசபை"

(சி/4243)

## வீடு வாடகைக்கு

யாழ்.பிரதான வீதிக்கு அருகிலுள்ள 10A, கதீற்றல் வீதியில் மேல்மாடி வீடு, பகுதியாகவோ அல்லது முழுவதுமாகவோ தொழில் நிறுவனங்களுக்கு அல்லது குடியிருப்பாளர்களுக்கு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு:0774921597

## V.V.S.K. அக்குபஞ்சர் சிகிச்சை

சகலவிதமான நாள்பட்ட வாதங்கள், பாரிச வாதங்கள் சலரோகம், ஆஸ்துமா போன்ற சகல விதமான புதிய அல்லது நாள்பட்டரோகங்களுக்கும் எம்மிடம் நிவாரணம் உண்டு.
தொடர்பு:
Dr.Rajendrah Prassath Shanker
(D.Ac, F.R.C.P, M.D, Ph.D. (Honor's)
T.P: 0770357307, வட்டுக்கோட்டை

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1981 இல் பிறந்த சதய நட்சத்திரம், 18 கிரக பாவம், தனியார் துறையில் கிளை மேற்பார்வையாளராக பணியாற்றும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
மே/பா. உதயன், விளம்பர இல.4174

## வீடு விற்பனைக்கு

பயன்தரு மரங்கள், சுற்றுமதில் ஆகியவற்றுடன் கூடிய 1½ பரப்புக் காணியில் அமைந்த புதிய கோண்டாவில் கிழக்கில் உடன் விற்பனைக்கு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 0779633993

## சிவபார்வதி ஜோதிட நிலையம்



பண்டித்- மஞ்சுநாத சுவாமி
தொ.பே.இல: 0778949044
வம்சாவளியாக காளி அம்மன் அருள் கொண்டு கைரேகை மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கப் போவது யாவையும் தெரிவிப்பதுடன் பரிகாரமும் செய்து கொடுப்பார்.
Skype Contect- PARAMASHIVAN 1
SANJAYA HOTEL 414, Hospital Road, Jaffna.
(HNB வங்கி அருகில், யாழ். பஸ் நிலையம் முன்பாக)
நேரம்: காலை 7 மணிமுதல் மாலை 7.30 மணி வரை கட்டணம் 101/=

## வேலையாள் தேவை

தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பெண் விற்பனையாளர் மற்றும் வரவேற்பாளர் தேவை. அனுபவமும் யாழ்.நகருக்கு அண்மையில் உள்ளவராகவும் இரவு 8 மணிவரை வேலை செய்யக் கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.
தொடர்பு: 0770296557 (8516)
நேர்முகத் தேர்வு: 26.09.2011-9 மணி

## கடை விற்பனைக்கு

இலக்கம் 303, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள இரு கடைகள் உடன் விற்பனைக்குண்டு. (8521)
தொடர்பு: 0777849251

## தவறிவிட்டது

வங்கிப் புத்தகங்களுடன், யூனியன் வங்கி சுன்னாகம் அடகுச் சீட்டின் சத்தியக் கடதாசி அடங்கிய சிறிய பை ஆரியகுளத்துக்கும் திருநெல்வேலி கலாசாலை வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் P.M.S பார்மசி பலாலி வீதி, கந்தர்மடம் எனும் முகவரி யில் ஒப்படைத்து உதவ்வும்.
தொடர்பு: அ.சயந்தன், 0778435102

## நெஞ்சம் நெகிழ எம் இதய அஞ்சலி



அருட்தந்தை
**அ.பிரான்சிஸ் கிலாஸ்** அ.ம.தி.
அமலமரித் தியாகியாகி அருட்பணி வாழ்வுக்குள் அறுபது ஆண்டுகள் ஒப்பற்ற பணியால் உயர்ந்த செம்மலே! ஆழ்ந்த நன்றியோடு வழியனுப்பி, தங்கள் ஆன்மா ஆண்டவனில் இளைப்பாற அனுதினமும் வேண்டிடுவோம்.

பங்குத்தந்தை, பங்குமக்கள்,
திருநெல்வேலி, கோப்பாய்.

## ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்
## SHRI DHAN LAXMI YANTRA

FREE GIFT கையிருப்பு உள்ளவரை

இல்லங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் விருத்திக்கு!



Swiss gold

Product inside
1. Two Shri Dhan Laxmi Kavach (24ct.gold plated foil pendant)
2. Siddha Maa Laxmi Idol
3. Meru Shri Yantra (Gold Plated)
4. Maa Laxmi Charan Paduka (Gold Plated)
5. Shri Laxmi Yantra (Gold Plated)



SRI LANKA flex அருள்
Tel: 0777 614 186

## பல்பொருள் விற்பனைக்கு

- Double Door Bottle Cooler, Defreezer, Nescafe Machine, LCD Television.
- 19" Panasonic, Sony T.V. 14".
- பெரிய உழுந்து அரைக்கும் இயந்திரம்.
- அலுமினியம் Glass Show Case.
- கல்வி நிலையத்துக்குரிய தளபாடங்கள்.
- இந்திய கதைப் புத்தகங்கள், உள்ளூர் பாடசாலைப் பயிற்சிப் புத்தகங்கள்.
- JMC Single Pick up Full Covered Maruthi Suzuki Omini 2 Vans.
- Mitsubishi Lancer Wagon Car.
- மா, நாவல் பலகை வகைகள்.

இடம்: கொக்குவில் மஞ்சவன வீதி, அருணகிரிநாதர் மண்டபம், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தொலைபேசி இலக்கம்: 0787809578, 0776951926, 0727930341
நேரம்: காலை 8.30 தொடக்கம் மாலை 5 மணி வரை.

## கண்ணீர் அஞ்சலி



சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் நிர்வாக உத்தியோகத்தராக பணிபுரியும்
பிரம்மஸ்ரீ பாலச்சந்திர சர்மா
அவர்களின் மாமன்
கார்த்திகேயஐயர் வைத்தியநாத சர்மா
இறைபதம் எய்தியுள்ளார். அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
சர்வதேச இந்து குருமார் ஒன்றியம்.

## காணி விற்பனைக்கு

சுன்சேரி கிழக்கு, 2ஆம் ஒழுங்கையில் (கவர் னர் அலுவலகத்துக்கு அருகில்) 1¼ பரப்புக் காணி நியாயவிலையில் விற்பனைக்குண்டு.
T.P: 0752126703

## HEC
### கல்வியங்காடு

A/L
Physics
By.Mohanraj B.Sc.
கற்பிக்கப்படும்.
T.P :0771797668

## மணமகள் தேவை

யாழ்-கிறிஸ்தவம், 1978, 5' 6'' ஆங்கில ஆசிரியருக்கு கத்தோலிக்கம் அல்லது வேறு சபைகளில் மணமகளைத் தேடுகின்றோம்.
T.P:0775965027 (8503)

## கார் விற்பனைக்கு

64-XXXX TOYOTA CARINA
டீசல் கார் விற்பனைக்குண்டு. (8504)
T.P:0774598308

## Cipla - *Citihealth*
# பணிநிலை வேண்டுகை
### விற்பனைப் பிரதிநிதி - Sales Representative

★ வயது 20-30 வருடங்கள்
★ கல்வித் தகைமைகள்: க.பொ.த [சா.த] கணிதபாடத்துடன்
★ தமிழில் எழுத, வாசிக்க, பேசக்கூடியவராகவும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் தொடர்பு [தகவல் பரிமாற்றம்] கொள்ளக்கூடியவராக வும் இருத்தல் விரும்பத்தக்கது.
★ அனுபவம்:
மருந்துப்பொருள்கள் விற்பனைத் துறையில் ஆகக் குறைந்தது 6 மாதங்கள் விற்பனை அனுபவம் அல்லது வேறு ஏதாவது விற்பனைத்துறையில் ஒரு வருட அனுபவம்.

நிறுவனம்: முன்னணி வகிக்கும் மருந்துப் பொருள்கள் நிறுவனம் மருந்துகள் மற்றும் கால்நடை உற்பத்திப் பொருள்களைக் கையாளுகின்றது இந்தியா சிப்லா லிமிடெட்டின் உள்ளூர் முகவராகச் செயற்படுகின்றது.

உங்களின் சுயவிவரத்தினை மின் அஞ்சல்/ தொலைநகல் அல்லது தபால் மூலமாகவோ 05.10.2011 இற்கு முன்பதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

பணிப்பாளர்,
சிற்றி ஹெல்த் இம்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்
இல.29/3, கிரிமண்டல மாவத்த, நாவல,
இராஜகிரிய.
மின்அஞ்சல்: citi@slt.lk, தொலைநகல்: 0114412055

The Director,
*Citihealth Imports (pvt) Ltd*
29/3, Kirimandala Mawatha
Nawala, Rajagiriya

காலன் கைபட்டு காவியமாகிவிட்ட 'இசைக்குயில்' வதிரகான வாரிதி
மூளாயூர் திருமதி **சாரதா பரஞ்சோதி** அவர்களின்
# நான்காம் ஆண்டு நினைவுக்காய்

அன்னையின் மடியில்: 03.11.1965
ஆண்டவன் அடியில்: 25.09.2007



ஆண்டுகள் நான்கின் முன்னால் ஆண்டவன் அழைப்பை ஏற்றாய்
பூண்டதோர் உறவோடிசையை வீட்டினுள் பூட்டி வைத்தாய்
நீண்டதோர் நினைவையன்று கனவதாய் ஆக்கி வைத்தே
தாண்டவம் ஆடும் தலைவன் தாளினை பற்றிக் கொண்டாய்
கூண்டிலே கிளியாய் நிற்கும் குழந்தைகள் குரலைக் கேட்கும்
தீண்டிய உறவைத்தேடும் கணவனார் கலங்கக் கண்டும்
மீண்டும் நீ வராமலங்கே மறைந்திடல் தகுமோ தாயே
வேண்டுவோம் தாயே 'சாரா' இன்னும்
இசை மழை பொழிய வாராய்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்
டச்சுவிதி, மூளாய், சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டியில் 'கார்கில்ஸ்' நிலையம்

வவுனியா, செப்.25

கார்கில்ஸ் வர்த்தக நிறுவனத்தின் யாழ். மாவட்டத்தின் முதலாவது சேகரிப்பு நிலையம் அளவெட்டி தெற்கில் அளவெட்டி பிரதான வீதிக்கு அருகில் திறக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தின் திறப்பு விழா கடந்த 22 ஆம் திகதி முற்பகல் 10.30 மணியளவில் அதன் வடபிராந்திய அபிவிருத்தித் திட்ட இணைப்பாளர் எஸ்.நேசகுமார் தலைமையில் நடைபெற்றது. யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் இலங்கை -அமெரிக்க இணைப்பாளர் இதனைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வலிகாமம் பிரதேச விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், கிராம சேவையாளர்கள், கமநல சேவை அதிகாரிகள், விளை பொருள் உற்பத்தியாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர். திறப்பு விழாவினைத் தொடர்ந்து பழங்கள் மற்றும் காய்கறிகள் என்பன தரமான விலையில் கொள்வனவு செய்யப்பட்டன.

இது தொடர்பாக இதன் முகாமையாளர் கருத்துக் கூறுகையில்,

இந்த நிறுவனம் இப்பகுதி விவ சாயிகள் தமது உற்பத்தி, விளைபொருள்களான பழவகைகள், காய்கறி வகைகள் போன்றவற்றை எமது சேகரிப்பு நிலையம் ஊடாக விற்பனை செய்யும் போது 10:1 வீதக் கழிவு இல்லை. நியாய விலை, நேரடிச் சந்தைப்படுத்தும் வாய்ப்பு மூலம் சந்தேகத்துக்கு இடமின்றி இலாபத்தினைப் பெற முடியும் - என்றார்.

(த-36)



வட்டுக்கோட்டைசங்கரத்தை உப தபாலகத்தில் கணக்கைப் பேணிவந்த காலஞ்சென்ற செல்வன் துரைசிங்கம் பிரநாத்தின் தந்தைக்கு இறப்பு உபகார நிதிக்குரிய காசோலையை தேசிய சேமிப்பு வங்கி அஞ்சல் வங்கிக் கிளையின் முகாமையாளர் திருமதி. து.அருளானந்தம் வழங்குகிறார். (த)

# பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்.செப்.25

இலங்கை திறந்த பல் கலைக்கழகத்தின் யாழ் பிராந்தியத்தினால் நடத்தப்பட்ட பட்டமேற் கற்கைநெறி மற்றும் கல்விமுது கலைமாணிக்கான பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இந்த இரு கற்கை நெறிகளுக்கான பெறுபேறுகளை www.ou.ac.lk என்னும் இணையத்தளத்தின் மூலம் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

# யூனியன் அஸ்சூரன்ஸ் கிளை சுன்னாகத்தில்



யூனியன் அஸ்சூரன்ஸ் நிறுவனம் கடந்த மாதம் 25ஆம் திகதி தனது மூன்றாவது வியாபார முன்னேற்ற அலுவலகத்தினை சுன்னாகத்தில் வைபவ ரீதியாகத் திறந்து வைத்துள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தலைமை காரியாலயத்தில் இருந்துவந்து கலந்து கொண்ட சிரேஷ்ட முகாமையாளர் ரஜீவ் டேவிட் நாடாவை வெட்டி வைபவ ரீதியாகச் சுன்னாகம் கிளையினைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வின் போது வலய முகாமையாளர் சி.என்.மதிவதனன் பிராந்திய முகாமையாளர் ந.சுகுணன் மற்றும் விற்பனை முகாமையாளர்கள் வியாபார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் நலன் விரும்பிகள் கலந்து சிறப்பித்தார்கள்.

வலிகாமம் பிரதேசத்தில் தனது வாடிக்கையாளருக்கு சிறந்த முறையில் சேவையினையும் பங்களிப்புகளையும் வழங்கும் நோக்கோடு இந்தக் கிளையானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.




இலங்கை வங்கி சுன்னாகம் மேற்றரக்கிளையினர் உயர் பாதுபாப்பு வலயத்தில் மீள்குடியேற்றப்பட்ட வித்தகபுரம் நவற்கிரிப் பகுதியைச் சேர்ந்த 42 பயனாளிகளின் வாழ்வாதாரத்துக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் சுயமுயற்சிக்கடன் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் கே.ஈ.டி. சுமணசிறி பயனாளி ஒருவருக்கு கடன் தொகையை வழங்குகிறார். அருகில் கிளைமுகாமையாளர் பொன்.பாலகுமார்.

# ஹற்றன் நஷனல் வங்கியின் மானிப்பாய்க் கிளை தரம் உயர்வு

யாழ்ப்பாணம், செப்.25

ஹற்றன் நஷனல் வங்கி மானிப்பாய் கிளை கடந்த 20 ஆம் திகதி தரமுயர்த்தப்பட்டது. வங்கியின் முதலாவது வருட பூர்த்தியைக் குறிக்கும் வைபவம் கடந்த 20 ஆம் திகதி ஹற்றன் நஷனல் வங்கி மானிப்பாய் கிளையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் ஹற்றன் நஷனல் வங்கியின் வடபிராந்திய பிரதி சிரேஷ்ட முகாமையாளர் ஆர்.ரவி பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். தென்னிந்திய திருச்சபையின் குருமுதல்வர் அருட்திரு. ஏ.ஜெயராஜன் மற்றும் சுதுமலை அம்மன் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ எஸ். மகேஸ்வரக்குருக்கள், மானிப்பாய் கிளையின் வாடிக்கையாளர்கள் இந்த வைபவத்தில் கலந்து சிறப்பித்தனர்.



மேலும் இந்த நிகழ்வை அடுத்து ஹற்றன் நஷனல் வங்கி மானிப்பாய் கிளை சார்பில் வங்கி ஊழியர்களால் யாழ். போதனா வைத்திய சாலையில் குருதி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. (த)

# புதிய ரகங்களில் குமாரிக்கா 'பேஸ் வோஷ்'

இயற்கை மூலிகை சேர்மானங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் குமாரிக்கா தயாரிப்புக்களின் மற்றொரு புதிய வெளியீடு குமாரிக்கா பேஸ் வோஷ். அண்மையில் இது சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மூன்று ரகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்தத் தயாரிப்புகள் பப்பாளி, தோடம்பழத் தோல்சாறு மற்றும் அவகாடோ எனும் வகைகளில் அமைந்துள்ளன.

இந்தத் தயாரிப்பு குறித்து ஹேமாஸ் நிறுவனத்தின் பிரத்தியேக பராமரிப்பு தயாரிப்புக்களுக்கான சந்தைப்படுத்தல் முகாமையாளர் டெரிக் அந்தனி கருத்து தெரிவிக்கையில்:

'சருமத்தை பொறுத்தவரை முகத்தோற்றம் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. ஒருவரின் முகத்தோற்றமானது அந்த நபரின் நடத்தையை பிரதிபலிக்கின்றது. முறையாக பராமரிக்கப்படும் முகத்தின் மூலம் பலரை கவர முடிவதுடன் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும் முடியும். ஆகவே உங்கள் முகப்பராமரிப்புக்கு முக்கியத்துவம் வழங்குவது பிரதானமானதாகும். முகச் சருமத்தைப் பொறுத்தமட்டில் எண்ணெய்த் தன்மையான, சாதாரண அல்லது வரட்சியான போன்ற மூன்று சரும நிலைகள் காணப்படுகின்றன.''

''உங்கள் சருமத்துக்கு உகந்த சேர்மாணங்களை கொண்ட முறையான பேஸ் வோஷ் தயாரிப்பை உபயோகிப்பது சிறந்ததாகும். சரியான தயாரிப்பை தெரிவு செய்வதன் மூலம் முகத்தில் காணப்படும் மாசுக்கள், தளும்புகள் போன்ற மறைவதுடன் உங்கள் முகத்துக்கு ஆரோக்கியமான பளபளப்பையும் பெற்றுக்கொள்ள முடியும்.

எமது புதிய குமாரிக்கா பேஸ் வோஷ் தயாரிப்புகள் பாவனையாளர்களுக்கு இலகுவாக எடுத்துச்செல்லக்கூடிய வகையில் அமைந்திருப்பதால் வேண்டிய வேளையில் அதனை உபயோகிக்க முடியும்''

''இந்தத் தயாரிப்பை நாம் சந்தையில் அறிமுகப்படுத்தும் முன்னர் பல வழிமுறைகளில் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தோம். அவற்றின் பிரதி பலன்கள் சாதகமானதாக அமைந்திருந்தது. அதைத் தொடர்ந்தே நாம் இந்த தயாரிப்புக்களைச் சந்தையில் அறிமுகப்படுத்த தீர்மானித்தோம். கடந்த இரண்டு மாதங்களாக எமது தயாரிப்புகள் சந்தையில் விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. வாடிக்கையாளர்களிடமிருந்து சிறந்த கேள்வி எமக்கு கிடைத்துள்ளது. ஆண், பெண் இருபாலாரும் இந்தத் தயாரிப்பைப் பயன்படுத்த முடியும்''.

''சாதாரண சருமத்தை கொண்டவர்களுக்காக பப்பாளி சேர்மானம் கொண்ட குமாரிக்கா பேஸ் வோஷ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது சருமத்துக்கு தேவையான ஈரப்பதன் அளவை பேணி பளபளப்பான சருமத்தை வழங்குகிறது''.

''எண்ணெய் தன்மையான சருமத்தைக் கொண்டவர்களுக்காக தோடம்பழ தோல் சாறு கொண்ட குமாரிக்கா பேஸ் வோஷ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது சருமத்தில் காணப்படும் மேலதிக ஈரப்பதனை அகற்றுகிறது''.

''உலர்ந்த வரட்சியான சருமத்தை கொண்டவர்களுக்காக அவகாடோ சேர்மாணம் கொண்ட குமாரிக்கா பேஸ் வோஷ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது சருமத்தின் வரட்சித் தன்மையைக் கட்டுப்படுத்தும் வகையில், தேவையான ஈரப்பதனை வழங்குகிறது''.

இந்த புதிய குமாரிக்கா பேஸ் வோஷ் தயாரிப்புக்கள் நாட்டிலுள்ள அனைத்து முன்னணி சுப்பர் மார்க்கற்கள், பார்மசிகள், குரோசரிகள் மற்றும் இதர சரும பராமரிப்பு விற்பனை நிலையங்களிலும் விற்பனைக்காகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன'' - என்றார்.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி அந்தோனியாப்பிள்ளை அன்னம்

16/1, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனியாப்பிள்ளை அன்னம் 17.09.2011 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து-இலட்சுமி தம்பதியரின் மருமகளும் சின்னத்துரையின் ( இலங்கை விமான சேவை முன்னாள் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் பிறேமன் (பிரான்ஸ்), ஸ்ரிபன் (பிரான்ஸ்), ஸ்ரலின் (பிரான்ஸ்) காலஞ்சென்ற சுகுணா (பிரான்ஸ்) மற்றும் கொண்சன்ரைன் (பிரான்ஸ்), பேனின் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் விக்ரர் (பிரான்ஸ்), சந்திரா (பிரான்ஸ்), தர்மினி (பிரான்ஸ்), கௌரி (பிரான்ஸ்), சுகந்தி (பிரான்ஸ்), சர்மிளா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் மிஷல் (பிரான்ஸ்), கனிஸ்ரன் (பிரான்ஸ்), ஒலிவியா (பிரான்ஸ்), கெவின் (பிரான்ஸ்), ஸ்ரெபானி (பிரான்ஸ்), ஷாம் (பிரான்ஸ்), சறோன் (பிரான்ஸ்), கமில்டன் (பிரான்ஸ்), சலிபன் (பிரான்ஸ்), நிக்ஷன் (பிரான்ஸ்), மறியா (பிரான்ஸ்), சிறோமி (பிரான்ஸ்), நிகோன் (பிரான்ஸ்), டெனிஸ்சன் (பிரான்ஸ்), வினுசா (பிரான்ஸ்), டனியன் (பிரான்ஸ்), வெர்ச்ஜினி (பிரான்ஸ்), டனிஸ்சிலஸ் (பிரான்ஸ்), உறுபன் (பிரான்ஸ்), யூலியா (பிரான்ஸ்), யேசன் (பிரான்ஸ்), மைக்கிலன் (பிரான்ஸ்), சூமைலி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் றொபியானோவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (25.09.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து பரிசுத்த மரியன்னை பேராலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

16/1, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமான மருந்துகளைப்பெற தேசிய ஔடத மருந்துக் கொள்கை

எம் வாழ் நாளின் ஏதோ ஒரு காலப் பகுதியில் நாம் தொற்றும் தொற்றறா நோய்களுக்கு உள்ளாகிறோம். இந்த வேளைகளில் எம்மில் பலர் அரச அல்லது தனியார் அலோபதி மருத்துவ மனைகளில் வெளிநோயாளர் பகுதிகளிலேயே சிகிச்சை பெறுகின்றோம்.

நோயாளிகளும் அவரவர்கள் விருப்பத்துக்கும் வசதிக்கும் ஏற்ப தாம் விரும்பிய மருத்துவ நிலையங்களில் சிகிச்சை பெறுகின்றனர்.

அரச மருத்துவ மனைகளிலும் தனியார் மருத்துவ மனைகளிலும் ஒரே வகையான நோய்களால் பீடிக்கப்பட்டவர்களில் அரச மருத்துவமனை நோயாளர்கள் அரச ஔடத கூட்டுத்தாபனம் விநியோகித்த Generic மருந்துகளின் பாவனையாலும் ஏனைய நிலையங்களின் நோயாளிகள் அவற்றை விட அதிக விலை உயர்ந்த Brand Name மருந்துகளின் பாவனையாலும் குணமடைகின்றனர் என Health Action International Asia Pacific ஒருங்கிணைப்பாளராகவும் ஆலோசகராகவும் பால்லாண்டுகளாகத் தொண்டாற்றிய அமரர் வைத்திய கலாநிதி க.பாலசுப்பரமணியம் பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டியுள்ளார்.

மருத்துவர்கள் பல்தேசிய வெளிநாட்டு அல்லது உள் நாட்டுக் கம்பனிகளினால் ஊக்குவிக்கப்படும் அதிகவிலை உயர்ந்த Brand Name மருந்துகளை தன்னந்தனியே தமது மருத்துவச் சிட்டையில் குறிப்பிடுதல் எமது சட்ட திட்டங்களுக்கு முற்றும் முழுதும் முரணானது. தண்டனைக்குரிய குற்றம். Brand Name ஐக் குறிப்படும் வேளைகளில் எல்லாம் கட்டாயமாக Generic க்கைச் சுட்டிக் காட்டுதல் மருத்துவர்களின் தலையான கடமையாகும்.பின்னர் குறிப்பிட்டுள்ள தரவு அரச மற்றும் தனியார் மருத்துவ மனைகள் தமது வெளிநோயாளர்களுக்கு வழங்கிய மருந்துகளுக்கான மொத்தச் செலவினம் பற்றிய விவரங்களைத் தாங்கி நிற்கின்றது.

இரு நிலையத்திலும் ஏற்றத் தாழ்வற்ற தரமான சேவையையே நோயாளிகள் பெற்றுள்ளனர் என்பதை அரசு உறுதிப் படுத்தியுள்ளது.

அரச மருத்துவர்கள் தனியார் மருத்துவமனையில் தாம் சிகிச்சைக்காக வழங்கிய Generic மருந்துகளைத் தவிர்த்து அவற்றை ஒத்த அதிக விலை உயர்ந்த Brand Name மருந்துகளை வழங்கியமை, வெவ்வேறு விலைகளிலான ஒத்த பலனை விளைவிக்கவல்ல மருந்துகளை வழங்கியமையை,

இரு நிலையங்களிலும் வெவ்வேறு விலையான மருந்துகளைச் சிபார்சு செய்தவர் ஒரே மருத்துவர் என்பதை

தனியார் மருத்துவமனை நோயாளிகள் அதிகவிலை மருந்துகளை பயன்படுத்தியமையால் 16 பில்லியன்களை வீணே செலவு செய்தமையை இத் தரவு மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

இந்நிலை எமது நாட்டில் மட்டுமல்ல National Medicinal Drug Policy அமுலில் இல்லா சகல நாடுகளிலுமே உருவாகியுள்ளது என்பதை சர்வதேச புகழ்பூத்த மருத்துவ உலகினருமே பல வேளைகளில் சர்வதேச மருத்துவ மாநாடுகளில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனாலேயே மேன்மைதகு

| வெளிநோயாளர்களுக்கு வழங்கிய மருந்துகள் | செலவினங்கள் மில்லியன்களில் (ரூபாவில்) | |
|---|---|---|
| | அரச | தனியார் |
| | 516 | 16882 |
| Source: Sri Lanka health account 2000 -2002 | Prepared for the Ministry of Health by the Institute of .... | Policy Studies of Sri Lanka |

ஜனாதிபதி தனது மஹிந்த சிந்தனையில் பேராசிரியர் Bibilea யின் கொள்கையின் அடிப்படையில் மேலெழுந்த National Medicinal Drug Policy யின் அமுலாக்கலை தனது 2005 ஜனாதிபதி தேர்தலில் முன் நிறுத்திய பட்டியலில் முதன்மைப்படுத்தியிருந்தார்.

எமது மத்திய சுகாதார அமைச்சர் உட்பட ஏனைய நாடுகளின் World Health Assembly ஒன்றின் அமர்வில் Medicines Should be available on the basis of need and not the ability எனத் தீர்மானித்துள்ளமை மகிழ்ச்சியைத் தருகின்றது எனினும் அவ்வாறான ஒரு நிலை எம்மண்ணில் உருவாகுவதற்கான வாய்ப்பின்மைக்கு மருந்துகளைச் சிபார்சு செய்பவர்கள் மருந்துகளுக்கான பணம் செலுத்தாமை மருந்துகளுக்குப் பணம் செலுத்துபவருக்கு மருந்துகளின் தேர்வில் அதிகாரமின்மை என்பன இரண்டு மிக முக்கியமான காரணங்களாக அமைகின்றன.

நியாய விலையில் தரமான மருந்துகளைப் பெற தேசிய ஔடத மருந்துக் கொள்கைகள் சட்ட வலுப் பெற்றாலே நோயாளிகள் தமக்குத் தேவையான மருந்துகளை அவர்களின் பண பலத்துக்கு ஏற்ப அல்லாமல் தேவைகளுக்கு ஏற்ற உரிய முறையில் உரிய வேளை பெறுவர் ஏற்ப பெறுவர் என்பதை நன்குணர்ந்த People's Movement for Rights of Patients இன் நிர்வாக உறுப்பினராகிய நாம் NMDP யை சட்ட வலுவுடைய தாக்குமாறு Supreme Court இல் வழக்கைத் தாக்கல் செய்ததின் பலனாக அரசு இரண்டு மாதங்களுக்குள் அதற்குரிய சட்ட நகலை வழங்குவோம் என்ற உறுதிமொழியை வழங்கியுள்ளது.

ஏனைய வளர்முக நாடுகளில் பல்தேசிய தனியார் மருந்துக் கம்பனிகளின் கழுகுப் பார்வை எவ்வாறு அந்நாடுகளின் மருந்துத் தேவைகளில் பதிந்துள்ளதோ அவ்வாறான கழுகுப் பார்வையே எம்மீதும் பதிந்துள்ளது. கம்பனிகளின் ஒரே நோக்கம் மிகக் குறுகிய காலத்தில் அதிக இலாபத்தைப் பெறுவதே.

இவற்றை நன்குணர்ந்து நாம் எமது வளங்களை எல்லாம் செவ்வனே பயன்படுத்தி எவ்வளவு விரைவாக எம் தேசத்தின் அதி முக்கியமான மருந்துகளை யாவது முதலிலே தயாரித்தல் வேண்டும். எம் பிரதேசத்தின் புகழ்பூத்த மருத்துவர்களில் பலர் தன் நலங்கருதி வேரறுத்து வேற்று நாடு செல்லாது சுக போகங்களைத் துறந்து மனித நேயத்துடன் போர்காலத்திலே சேவையாற்றியவர்கள். இவர்கள் அனைவருமே அன்று கைக்கு எட்டிய சிலவகை Generic மருந்துகளையே பயன்படுத்திக் குணமாக்கியதை நாம் நன்கறிவோம். இவர்களுடன் இன்று இணைந்த முத்திரை பொறித்தவர்களும் Generic மருந்துகளையே பயன்படுத்துகின்றனர்.

**கந்தர் விசுவலிங்கம் கந்தவேள்**
நோயாளர் உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் இணைச் செயலாளர்

மிகச் சில அரச மருத்துவர்களும் அநேக பிரத்தியேக சிகிச்சை நிலைய மருத்துவர்களும் அலோபதி துறை சாராத சித்த ஆயுர்வேத மருத்துவர்களும் Generic மருந்துகளையே பயன்படுத்திக் குணப்படுத்தக் கூடிய வாய்ப்புகள் உள்ளவேளைகளிலும் அவற்றைப் பயன்படுத்தாது அதிகவிலை உயர்ந்த Brand Name அலோபதி மருந்துகளையே பயன்படுத்தும் தீய பழக்கத்தை வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர்.

இத் தீய பழக்கம் இல்லாது ஒழிந்திட தேசிய மருந்து ஔடத மருந்துக் கொள்கையை உள்ளடக்கிய சட்டத்தை நிறைவேற்றும் வேளை அதனை அமுலாக்கலில் அதிக அக்கறையும் ஆர்வமும் காட்டல் வேண்டும். இவை இனிதே நிறைவேற ஒன்றிணைந்து செயற்படுவோமாக.

# ஊடகப் பயணத்தில் ஓர் அனுபவம்

என் வாழ்வில் மறக்கமுடியாத காலம் இந்த ஊடக கற்கைக் காலம். இது ஒரு பொற் காலம் என்றே கூறுவேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் முழுநேர நான்காம் அணி மாணவர்களாகிய நாம் உள்ளகப் பயிற்சிக்காக கொழும்பு செல்லவேண்டி இருந்தது. செல்லும் நாளுக்கு ஒரு வாரத்துக்கு முதலே ஆயத்தங்கள் செய்யத்தொடங்கிவிட்டோம்.



செல்லும் நாளும் வந்தது. அதாவது செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி. அன்று மாலை 4.30 மணியளவில் மாணவர்கள் அனைவரும் ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் கூடினோம்.எம்மை வழியனுப்பி வைப்பதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடப் பேராசிரியர் ஞானகுமாரன் வந்திருந்தார். அவரது வாழ்த்துரை மற்றும் கருத்துக்கள் மற்றும் ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் இயக்குநர் தே.தேவானந்தின் அறிவுரைகளும் எனக்கு அவசியம் தேவைப்பட்டன. அவர்களும் அவற்றைத் தர மறக்கவில்லை.

இரவு 7.30 மணியளவில் யாழிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்டோம். செப்ரெம்பர் 07 இல் கொழும்பில் கண்விழித்தோம். எமக்கென முன்கூட்டியே பதிவு செய்யப்பட்ட கொழும்பு தமிழ் சங்க விடுதியினுள் சென்று மீண்டும் ஆயத்தமாகினோம். காலை 8 மணிக்கு மீண்டும் பேருந்தினுள் ஏறினோம். அவ்வாறு எமக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஏனெனில் நாடாளுமன்றம் செல்ல வேண்டும்.

தூக்கம் ஒருபுறம் விடாமல் துரத்த நாடாளுமன்றத்தை பார்க்கும் ஆவல் எனக்குள்.

சிலமணி நேர பயணத்துக்குப் பின் நாடாளுமன்றம் அமைந்துள்ள பிரதேசத்தை அடைந்தோம். நாடாளுமன்ற வாயிலில் பல அறிவுரைகள் எமக்கு வழங்கப்பட்டன. நாடாளுமன்ற கூட்டம் நடைபெறும் இடத்தில் காலுக்கு மேல் கால் போடக் கூடாது, கதைக்கக் கூடாது போன்றவை அவற்றில் சில.

உள்நுழைந்தால் நான்கு இடங்களில் பொலிஸாரின் உடற்சோதனை. இந்த [illegible] உடற்சோதனை எங்குமிருக்காது. எல்லாவற்றையும் எதிர்கொண்டு கூட்டம் இடம்பெறும் கூடத்தை அடைந்தோம். முதன் முதலில் நாடாளுமன்றத்துக்குச் சென்ற எனக்கு வியப்பாக இருந்தது. நாடாளுமன்றம் தொடர்பான சகல விடயங்களையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

சர்ச்சைக்குரிய அரசியல்வாதி மேர்வின் சில்வாவின் சண்டையை நேரிற் பார்வையிட்டமை மறக்க முடியாத நிகழ்வு. இந்த வயதில் நாடாளுமன்றத்துக்கு சென்று அங்கு இடம் பெற்ற அமர்வில் கலந்து கொண்டது வாழ்வில் மறக்க முடியாத அனுபவம்.

மறுநாள் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்குச் [illegible] திஸாநாயக்கவைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவருடைய கருத்துக்கள் ஆழ்மனதைப் பாதிப்பதாக அமைந்தன. யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பாகச் சில தவறான அபிப்பிராயங்களை வைத்திருந்தார்.

அதன் பின் நானும் என்னுடன் இன்னும் நான்கு மாணவிகளும் தெற்காசியப் பெண்கள் ஊடக அமைப்பு மாநாட்டுக்கு சென்றோம். வாழ்நாளில் எக்கால கட்டத்திலும் மறக்கமுடியாத நிகழ்வு நான் அதில் உறுப்பினராக இணைந்து கொண்டமை. அங்கும் பல பெண் ஊடகவியலாளர்களின் நட்பு கிடைத்தது.

கொழும்பு இதழியல் கல்லூரி மாணவர்களுடன் இணைந்து போருக்குப் பின்னரும் முன்னருமான செய்தி சேகரிப்பின் தன்மை என்ற தலைப்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றியமை மற்றுமொரு சிறந்த அனுபவமாகும்.

சிங்கள, ஆங்கில ஊடக மாணவர்களின் சந்திப்புக் கிடைத்தமை எமது கல்விசார் நடவடிக்கைகளுக்கு பெரிதும் உதவுமென நம்புகின்றேன். எம்மைக் கண்டவுடன் எம்முடன் பேசி அறிமுகம் செய்து கொண்டனர்.

இடங்களுள் மனதைக் கவர்ந்தது கொழும்பு நூதன சாலை. அங்கிருந்த வரலாற்றுச் சான்றுகளான பண்டைய காலத்து நாணயங்கள், மன்னர்கள் அணிந்த ஆபரணங்கள், உடைகள், ஆயுதங்கள், பாவித்த வேறு பல பொருள்கள் அங்கு காட்சிப் படுத்தப்பட்டிருந்தன. நான் எடுத்த புகைப்படங்களுள் பெரும்பாலானவை இங்கு எடுத்தவையே.

களனிப் பல்கலைக் கழக மருத்துவபீடத்துக்கு செல்லும் வாய்ப்பும் அங்கு இடம்பெற்ற மருத்துவ பீட மாணவர்களால் நடத்தப்பட்ட கண்காட்சியை பார்க்கும் சந்தர்ப்பமும் கிடைத்தது.

மகாராஜா கூட்டுத்தாபனம் பற்றி பேசியுள்ளோம். பிறர் பேசக் கேட்டுள்ளோம். ஆனால் அக் கூட்டுத் தாபனத்தை பார்த்தது இதுவே முதற்தடவை. News First கலையகம், சக்தி ரி.வி., எம்.ரி.வி., ரூபவாஹினி கலையகங்களை நேரடியாக பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. Spell master எனும் எம்.ரி.வியின் நிகழ்ச்சியின் ஒளிப்பதிவை நேரடியாகக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது. தொலைக்காட்சி நிகழ்வை நேரடியாகக் காண முடிந்தமை மகிழ்சியாக இருந்தது.

**ஜோ.தட்சா MRTC**

தினகரன், வீரகேசரி போன்ற பத்திரிகை நிறுவனங்களுக்கு சென்றோம். பத்திரிகை அச்சிடல் விநியோகம் தொடர்பாக மேலதிக அறிவைப் பெறமுடிந்தது.

இத்தகைய ஊடகப் பயணத்தில் பல புதிய விடயங்களை அறிந்து கொள்ள முடிந்ததுடன் பல புதிய ஊடகவியலாளர்கள் ஊடகத்துறை நண்பர்களுடன் தொடர்பை மேற்கொள்ளும் சந்தர்ப்பமும் கிடைத்தது. ஊடக வாழ்க்கையில் சிறந்த மறக்க முடியாத அனுபவத்தை இப் பயணம் பெற்றுத் தந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதயன் நிறுவன் அனுசரணையுடன்

# பளு, வலு தூக்கும் போட்டிகள் நேற்றுப் பல்கலையில் ஆரம்பம்


யாழ்ப்பாணம், செப்.25

உதயன் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை மூன்றாவது வருடமாக யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் பளு, வலு தூக்கும் போட்டி நேற்றுக் காலை யாழ். பல்கலைக் கழகத்தில் ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தின் பளு தூக்கும் அணியின் முன்னாள் தலைவரும் கொடிகாமம் போக் கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபருமான கே. எழிலழகன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

நேற்றுக் காலை தொடக்கம் மாலை வரை போட்டிகள் இடம் பெற்றன.

இன்று காலை தொடக்கம் மாலை வரை போட்டிகள் தொடர்ந்து இடம்பெறும். 150 இற்கு மேற்பட்ட வீரர்கள் இந்தப் போட்டிகளில் கலந்து கொள்கின்றனர்.



இன்றுமாலை 4 மணிக்கு இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் இடம் பெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக உதயன் நிறுவனத்தின் பொது முகாமையாளர் கே. கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் பளுதூக்கும் அணியின் முன்னாள் தலைவரும் கொடிகாமம் போக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபருமான கே. எழிலழகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த- 23)

# இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், செப்.25

கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழகம் தென்மராட்சிக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்திவரும் 'செற்அப்' முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு வளர்மதி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதிச்சுற்றில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் சாவகச்சேரி சிறீமுருகன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

இன்று நடைபெற இருக்கும் இந்த நிகழ்வின் பிரமத விருந்தினராக ''சிங்கர்'' நிறுவன சாவகச் சேரிக்கிளை முகாமை யாளர் எஸ். அஜந்தனும், சிறப்பு விருந்தினர்களாக கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தி[ன்] ''இலண்டன் ஒன்றியத்தைச் சேர்ந்த சி.பூபாலச்சந்திரன், வ.இராஜேந்திரம் ஆகியோரும், கௌரவ விருந்தினராக தொழிலதிபர் செ.பஞ்சலிங்கமும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (த-288)

# அரச அலுவலர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், செப்.25

கிளிநொச்சி மாவட்ட செயலக நலன்புரிச் சங்கம் பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகத்தின் அலுவலர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியை நடத்தவுள்ளது.

இதனடிப்படையில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி நாளை மறுதினம் செவ்வாய் கிழமை காலை 9 மணிக்கு ஜெயந்திநகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள் ளது.

ஆண்களுக்கான மென்பந்தாட்ட சுற்றுப் போட்டி வியாழக் கிழமை பரந்தன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (த-23)

# பதுளையில் உதைபந்தாட்டம் தேவரையாளி இந்து பங்கேற்பு



யாழ்ப்பாணம், செப்.25

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 15 வயது பிரிவினருக்கான தேசிய மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்று சனிக் கிழமை பதுளையில் ஆரம்பமானது.

மேற்படி போட்டியில் யாழ். மாவட்டத்திலிருந்து தேவரையாளி இந்துக்கல்லூரி அணி பங்குபற்றுகின்றது.

கடந்தவாரம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை தேவரையாளி இந்துக் கல்லூரி அணி வெற்றி கொண்டமை குறிப்பிடத்தக்கது. (த-23)

# காலிறுதியில் சென்றலை வென்று அரையிறுதிக்கு கே.ஸி.ஸி.ஸி. தகுதி

யாழ்ப்பாணம், செப்.25

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தின் வெற்றி விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியாக விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெறும் 30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதி ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக 'ஏ' அணி வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

நேற்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற காலிறுதியாட்டத்தில் சென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்துக் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத் தாடிய சென்றல் விளையாட்டுக் கழக அணி 27.4 ஓவர்கள் நிறை வில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது.

கபில்தேவ் 38 ஓட்டங்களையும், பாலேந்திரா 35 ஓட்டங்களையும், யது 25 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி சார்பாக சாம்பவன் 6 ஓவர்கள் பந்துவீசி 19 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், ராகுலன் 3 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், பங்குயன் 4 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

169 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி 18.4 ஓவர் கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது.



ராகுலன் 58 ஓட்டங்களையும், பங்குயன் 51 ஓட்டங்களையும், உமாநாத் 34 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்றல் விளையாட்டுக்கழக அணி வீரர்களான விமலநாத் 5 ஓவர்கள் பந்து வீசி ஒரு விக்கெட்டையும், சுபதீஸ் 4 ஓவர்கள் பந்து வீசி 45 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய 'ஏ' அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. (ம-23)

# இன்றைய ஆட்டங்கள்

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்திய மென்பந்து கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் சி.தயாளபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரீன் பிரதம விருந்தினராகவும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எல்.சி. வீரசிங்கா, வட மாகாணக் கல்வித் திணைக்கள ஆரம்பக் கல்வி வளவாளர் பு.தயானந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் வலி.வடக்குப் பிரதேச சபை உறுப்பினர்களான சு. மணிராசா, இ.ஜெயபால சிங்கம் மற்றும் சட்டத்தரணி ந.தம்பிமுத்து ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (த-86)

* * *

மட்டுவில், செப்.25

மட்டுவில் வடக்கு கமக்கார அமைப்பின் அனுசரணையுடன் மட்டுவில் விவசாயிகளால் ஒருங்கிணைந்து நடத்தப்படும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை 1.30 மணிக்கு மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு அருகிலுள்ள 'சத்திரம் கிராய்' மைதானத்தில் இடம்பெறும்.

ஏ, பி, சி, டி என நான்கு பிரிவுகளாக இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு இராணுவ அதிகாரி ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (த- 131)

# தாச்சிப் போட்டிக்கு கழகங்கள் விண்ணப்பிக்கலாம்

கைதடி, செப்.25

கைதடிகுமரநகர் விளையாட்டுக் கழகம் தென்மராட்சிக் குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான தாச்சிப் போட்டி ஒன்றினை விரைவில் நடத்தவுள்ளதாக கழகத் தலைவர் எஸ்.செந்தூரன் தெரிவித்தார்.

மேற்படி போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் கழகங்கள் தங்கள் பதிவுகளைக் கழகத் தலைவருடனோ அல்லது கைதடிச் சந்தியிலுள்ள டயானா திரையலங்கரிப்பு நிலையத்திலோ மேற்கொள்ளலாம் எனவும் அவர் அறிவித்துள்ளார். (த-288)

# கராத்தே சுற்றுப்போட்டிக்கான பயிற்சிப் பட்டறை இன்று

யாழ்ப்பாணம் செப்.25

இலங்கைக் கராத்தே சம்மேளனம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடுப் பகுதியில் கராத்தே சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்கு கொள்ளவிருக்கும் கராத்தே வீரர்களுக்கான ஒருநாள் பயிற்சிப்பட்டறை இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை கிறீன் பீல்ட் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப்பட்டறையில் இலங் கைக் கராத்தே சம்மேளனத்தில் இருந்து வருகை தரும் சென்சேய் சிசிரகுமார பயிற்சிகளை வழங்கவுள்ளார். மேற்படி பயிற்சிப் பட்டறைக்கான ஒழுங்குகளை வட மாகாண கராத்தே சங்கம் மேற்கொண்டுள்ளது. (எ-23)

# விசேட தேவை உடையோருக்கான போட்டிகள்

யாழ்ப்பாணம் கல்வி வலய விசேட கல்விப் பிரிவு நடத்தும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டு விழா நாளை திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம் தலைமையில் கோப்பாய் மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளது.


இதில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளரும், கல்வி பண்பாட்டலுவல்கள் வியைாட்டுத்துறை அமைச்சின் செயலாளருமான இ.இளங்கோவன் கலந்துகொள்வார். (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ஆட்டம்

வாரியர்ஸ் எதிர் சவுத் ஆஸ்திரேலியா
மாலை 4 மணி-ஹைதராபாத்

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் எதிர் ஷோம செட்
இரவு 8 மணி-ஹைதராபாத்




# வீழ்ந்தது ஆஸியின் வேல்ஸ்

சம்பியன்ஸ் லீக் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்காவின் கேப் ஹோப்பிராஸ் அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் அணியை நேற்று வீழ்த்தியது. கேப் ஹோப்பிராஸ் அணியின் ஹேசல் கிப்ஸின் சிறப்பான அரைச் சதத்தின் உதவியுடன் இந்த அபார வெற்றியை நேற்று பதிவு செய்தது.

ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் அணிக்கும் தென்னாபிரிக்காவின் கேப் ஹோப்பிராஸ் அணிக்குமிடையிலான ஆட்டம் சென்னை சிதம்பரம் ஸ்ரேடியத்தில் நேற்று மாலை 4 மணிக்கு ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூ சவுத் வேல்ஸ் அணியின் தலைவர் சைமன் ஹட்டிச் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார். டேவிட் வோர்னர் - ஷென் வொட்ஸன் இருவரும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். ஓட்டக் குவிப்பில் இந்த ஜோடி அதிரடியாக ஈடுபடவில்லை. இருப்பினும் இருவரது ஆட்டமிழப்புக்கான பல வாய்ப்புக்களை ஹோப்பிராஸ் அணி தவறவிட்டது. லங்காவெல்த் வீசிய ஆட்டத்தின் 5 ஆவது ஓவரில் வோர்னர் அதிரடியாய் சிக்ஸர் அடித்தார். இருப்பினும் அடுத்த பந்திலேயே வோர்னர் ஆட்டமிழந்து வெளியேறினார். 13 பந்துகளில் ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி அடங்கலாக 20 ஓட்டங்களுடன் வோர்னரின் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

தொடர்ந்தும் சிறப்பாக ஆடிய வொட்ஸனுக்கு, டானியல் ஸிமித் சிறப்பான ஒத்துழைப்புக் கொடுத்தார். இவர்களது அதிரடி ஆட்டத்தின் உதவியுடன் அணி 10 ஓவர்கள் நிறைவில் 82 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்திருந்தது. வொட்ஸன் 29 பந்துகளில் 4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 34 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் றொபின் பீற்றர்ஸனின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். முன்னணி வீரர்களின் அதிரடி ஆட்டத்தினால் 10 ஓவர்களில் 82 ஓட்டங்களைக் குவித்திருந்தாலும் இறுதி 10 ஓவர்கள் கேப் ஹோப்பிராஸ் அணியின் பக்கம் சரிந்தது. சீரான இடைவெளியில் இலக்குகள் சரிய இறுதி பத்து ஓவர்களில் 53 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டதுடன் 6 இலக்குகளை இழந் தது.

பின்வரிசையில் ஸ்ரீவன் ஸிமித், ஹென்றி கியூஸ் இருவரும் மாத்திரம் இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் நியூ சவுத் வேல்ஸ் அணி 8 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் லங்காவெல்த், பிலண்டர் தலா இரண்டு இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு மிக இலகுவான இலக்கை கேப் ஹோப்பிராஸ் அணி விரட்டியது. அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ரிச்சாட் லெவி, ஹேசல் கிப்ஸ் களமிறங்கினர். ஆட்டத்தின் முதலாவது பந்தை நதன் ஹாரிஸ் வீச லெவி பவுண்டரிக்கு விளாசினார். ஆரம்பத்திலிருந்தே இருவரும் அதிரடியாக ஆடி ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டனர். 3 ஆவது ஓவரை மிர்சல் ஸ்ரெக் வீச லெவி அதிரடியாய் சிக்ஸர் தொடர்ந்து இரண்டு பவுண்டரிகள் அடித்து அணியின் ஓட்ட வேகத்தை அதிகரித்தார். பதிலுக்கு அடுத்த ஓவரிலேயே கிப்ஸ் தனது அதிரடியாட்டத்தை காட்டினார். குமின்ஸ் வீசிய ஓவரில் அதிரடியாய் சிக்ஸர் தொடர்ந்து இரண்டு பவுண்டரிகள் அடித்து லெவி சரிசமனான அதிரடியை நிரூபித்தார். இவர்களது அதிரடி முழக்கத்தின் மூலம் அணி 34 பந்துகளிலேயே 50 ஓட்டங்களைத் தொட்டது.

இருப்பினும் முதலாவது இலக்குக்காக 88 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் லெவி ஆட்டமிழந்தார். 27 பந்துகளில் 6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 43 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஹென்றிகியூஸின் பந்து வீச்சில் அவரது ஆட்டம் முடிவுக்கு வந்தது. தொடர்ந்து நுழைந்த ஒவைஸ் ஷா 3 ஓட்டங்களுடன் வெளியேறினார். மறுமுனையில் அதிரடியாக ஆடிய கிப்ஸ் 41 பந்துகளில் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். இறுதியில் கிப்ஸ் 47 பந்துகளில் இரண்டு சிக்ஸர்கள், 5 பவுண்டரிகளுடன் 55 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இருப்பினும் தொடர்ந்து நுழைந்த டுமினி - ஒன்ரொங் ஜோடி சிறப்பாக ஆடி 17.2 பந்து வீச்சுக்களிலேயே வெற்றி இலக்கை எட்டியது. டுமினி 14, ஒன்ரொங் 11 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத்தனர். ஆட்ட நாயகனாக கேப் ஹோப்பிராஸ் அணியின் கிப்ஸ தெரிவானார். (15)

## மலிங்க மாயாஜாலம்

# நடப்புச் சம்பியன் மண் கவ்வியது

மும்பை இந்தியன்ஸ் அணிக்கும், சென்னை சூப்ப கிங்ஸுக்கும் இடையிலான நேற்றைய ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி மலிங்கவின் அதிரடி ஆட்டத்தின் மூலம் 3 இலக்குகளால் வெற்றி பெற்றது. சென்னையின் கை ஒரு கட்டத்தில் ஓங்கியிருந்த போதும் இறுதியில் மலிங்கவின் அதிரடியில் அது தவிடுபொடியானது.

நடப்புச் சம்பியன் சென்னை சூப்ப கிங்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிக்குமிடையிலான ஆட்டம் சென்னை சிதம்பரம் ஸ்ரேடியத்தில் நேற்று இரவு 8 மணிக்கு ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை சூப்ப கிங்ஸ் அணியின் தலைவர் டோனி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

மைக்கல் ஹஸி - முரளி விஜய் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். மலிங்கவின் முதலாவது ஓவரிலேயே தடுமாற்றத்துடனேயே சென்னை தனது பயணத்தை ஆரம்பித்தது. அதிரடியாக ஆட வேண்டிய முதல் ஆறு ஓவர்களிலும் சென்னை அடக்கியே வாசித்தது. ஆட்டத்தின் 5 ஆவது ஓவரை மலிங்க வீசினார். 28 ஓட்டங்களை அணி பெற்றிருந்த நிலையில் அந்த ஓவரில் முதலாவது இலக்கு சரிக்கப்பட்டது. முரளி விஜயின் இலக்கு மலிங்கவின் நேர்தியான ஜோக்கர் பந்து வீச்சு மூலம் பிடுங்கி எறியப்பட்டது. 8 ஓட்டங்களுடன் விஜய் பவிலியன் பக்கம் திரும்பினார்.

சுரேஷ் ரெய்னா மலிங்கவின் அடுத்த பந்து வீச்சை எதிர்கொண்டார். வந்தவருக்கு முதலாவது பந்திலேயே அதிர்ச்சி கொடுத்தார் மலிங்க. ரெய்னாவின் துடுப்பு மலிங்கவின் வேகத்தில் இரண்டாகப் பிளந்தது. தொடர்ந்து இந்த ஜோடி மும்பையின் பந்து வீச்சை சமாளித்து முன்னேறியது. இருப்பினும் அதிரடியான ஓட்டக் குவிப்பில் ஈடுபட முடியாது திணறினர். 10 ஆவது ஓவரை பொலாட் வீச ரெய்னா துரதிஷ்டவசமான ஸ்ரொம்பிங் மூலம் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 9.4 பந்து வீச்சுக்களில் அணி 63 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ரெய்னாவின் இலக்கு சரிக்கப்பட்டது.

அணியின் ஓட்ட வேகம் பங்குச் சந்தை வர்த்தகத்தைப் போல் ஏறுவதும் தீடீர் சரிவுகளால் இறங்குவதுமாக இருந்தது. ஒரு முனையில் ஹஸி அணிக்கு நம்பிக்கையளிக்கும் விதமாய் ஆடினார். ரெய்னாவை தொடர்ந்து நுழைந்த சுப்பிரமணியம் பத்திரிநாத் மெதுவான ஓட்ட குவிப்பிலேயே ஈடுபட்டார். ஹஸி மாத்திரம் எதிரணியின் பந்து வீச்சை திணறடித்துக் கொண்டிருந்தார். சிறப்பாக ஆடிய ஹஸி 43 பந்துகளில் தனது அரைச்சதத்தை கடந்தார்.

அணி 111 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பத்திரிநாத்தின் இலக்கு நெச்சிமினால் சரிக்கப்பட்டது. அடுத்து களமிறங்கிய அணித்தலைவர் டோனி மற்றும் ஹஸி இணைந்து இறுதிக்கட்டத் தாக்குதல்களை அதிரடியாக மேற்கொண்டனர். இறுதி 4 ஓவர்களில் மாத்திரம் சென்னை 46 ஓட்டங்களைக் குவித்தது. மலிங்க, ஹர்பஜன் சகலரது பந்து வீச்சை இந்த ஜோடி போட்டுத் தாக்கியது.

அதிரடியாய் கலக்கிய ஹஸியின் ஆட்டம் 57 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகளுடன் 81 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முடிவுக்கு வந்தது. சென்னை இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் 4 இலக்குகள் இழப்பிற்கு 158 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. டோனி ஆட்டமிழக்காமல் 13 பந்துகளில் 22 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் நெச்சிம் 2 இலக்குகளை சரித்தார்.

பலமான இலக்குக்கு பதிலளிக்கத் தொடங்கிய மும்பை அணிக்கு ஜேக்கப்ஸ் - பிளிசாட் ஜோடி அபாரமான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது. பொலஞ்சர் வீசிய முதலாவது ஓவரிலேயே பிளிசாட் இரண்டு பவுண்டரிகள் அடித்து அதிரடியை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து இரண்டாவது ஓவரை வீசிய மோர்கலின் பந்து வீச்சில் ஜேக்கப்ஸ் இரண்டு பவுண்டரிகள் விளாச ஓட்ட விகிதம் எகிறியது. உடனடியாகவே டோனி மூன்றாவது ஓவரை வீச ரவிசந்திரன் அஸ்வினை அழைத்தார். அந்த ஓவரில் மும்பையின் அதிரடி அடங்கியது. மீண்டும் 4 ஆவது ஓவரை பொலஞ்சர் வீச ஜேக்கப்ஸ், பிளிசாட் போட்டுத் தாக்கினர். மீண்டும் 5 ஆவது ஓவரை வீச அழைக்கப்பட்ட அஸ்வின் மும்பையின் முதலாவது இலக்கை சரித்தார். அந்த ஓவரின் இறுதிப் பந்தில் அகலப் பந்தாக வீசிய போதும் ஜேக்கப்ஸ் ஸ்ரொம்பிங் செய்யப்பட்டு 18 ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டார். 39 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலேயே முதலாவது இலக்கு சரிக்கப்பட்டது.

இருப்பினும் மறுமுனையில் பிளிசாட் தனது அதிரடியைத் தொடர்ந்தார். அவரது அதிரடி ஆட்டத்துக்கு 7 ஆவது ஓவரில் ரெய்னா முற்றுப் புள்ளி வைத்தார். 21 பந்துகளில் ஒரு சிக்ஸர், 4 பவுண்டரிகளுடன் 28 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ரெய்னாவின் பந்து வீச்சில் நேரடியாக இலக்கு தகர்க்கப்பட்டு பிளிசாட் ஆட்டமிழந்தார். பிளிசாட் ஆட்டமிழக்கையில் அணி 6.3 பந்து வீச்சுக்களில் 50 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பிளிசாட்டின் ஆட்டமிழப்பினை தொடர்ந்த மும்பையின் சரிவுப் பயணம் ஆரம்பமானது. அடுத்து நுழைந்த மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர்களை ரெய்னா மற்றும் டுவைன் பிராவோ ஒற்றை ஓட்டங்களுடன் பவிலியன் திருப்பி அனுப்பினர். சுமன், ராயுடு தலா 5 ஓட்டங்களுடனும் சைமன்ஸ் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினர். 10 ஓவர்கள் நிறைவில் 67 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்தது. அதன் பின்னர் இணைந்த பொலாட் மற்றும் சதிஷ் சிறிது நேரம் நம்பிக்கையளித்ததுடன் அதிரடியாகவும் ஆடினர். அஸ்வின் வீசிய 12 ஆவது ஓவரில் சதிஷ் பவுண்டரி, சிக்ஸர் அடுத்தடுத்து விளாசினார். இருப்பினும் அந்த ஓவரின் 5 ஆவது பந்து வீச்சில் சதிஷ் எல்.பி.டபிள்யூ மூலம் 8 பந்துகளில் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து பொலாட் - ஹர்பஜன் இணைந்து துடுப்பெடுத்தாடினர். 88 பந்துகளில் 100 ஓட்டங்களை மும்பை எட்டியது. 15 ஆவது ஓவரில் பொலாட்டின் பிடியெடுக்கும் வாய்பினை ரெய்னா வீணாக்கினார். இறுதி 5 ஓவர்களில் 57 ஓட்டங்கள் வெற்றிக்கு தேவை இருப்பினும் கைவசம் 4 இலக்குகளே மும்பையிடம் இருந்தன. 16 ஆவது ஓவரை மோர்கல் வீச முதலாவது பந்தில் அதிரடியாய் பவுண்டரியை பொலாட் விளாசினார். இருப்பினும் அடுத்த பந்திலேயே ஆட்டமிழந்து வெளியேறினார். 19 பந்துகளில் 22 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பொலாட் ஆட்டமிழந்தார். மும்பை 106 ஓட்டங்களுக்கு தனது 7 ஆவது இலக்கையும் பறிகொடுத்தது.

தொடர்ந்து நுழைந்த மலிங்க சென்னையின் வெற்றி வாய்ப்பை பறிக்கும் விதமாய் அதிரடியாய் ஆடினார். ஆட்டத்தின் 16 ஆவது ஓவரின் இறுதியில் 17 ஆவது ஓவரிலும் மலிங்க அதிரடியாட்டத்தை வெளிப்படுத்தினார். பவுண்டரி அடுத்து இரண்டு சிக்ஸர் அடித்து மும்பையின் வெற்றி வாய்ப்பை தொடர்ந்தும் தக்க வைத்தார். இறுதி 3 ஓவர்களில் வெற்றிக்கு 31 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

பரபரப்பான கட்டத்தில் 19 ஆவது ஓவரை வீசிய மோர்கல் 14 ஓட்டங்களை வாரி வழங்கினார். அதில் மலிங்கவின் சிக்ஸர் மற்றும் இரண்டு அகலப் பந்துகள் அத்துடன் இறுதிப் பந்தில் டோனி பந்தை தவறவிட்டு தேவையற்ற ஓட்டத்தையும் வழங்கினார்.

இறுதி ஓவரில் 12 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் பொலஞ்சர் பந்து வீசினார். மலிங்கவின் அதிரடியில் சிக்கிய அந்த ஓவர் மும்பையின் வெற்றிக்கு வழி வகுத்தது. 19.5 பந்து வீச்சுக்களில் 7 இலக்குகளை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. எட்டாவது இலக்குகாக மலிங்க - ஹர்பஜன் ஜோடி 27 பந்துகளில் பிரிக்க முடியாத 53 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்தது. மலிங்க 18 பந்துகளில் தலா 3 சிக்ஸர்கள், பவுண்டரிகள் அடங்கலாக 37 ஓட்டங்களையும், ஹர்பஜன் 19 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் அஸ்வின், ரெய்னா, பிராவோ தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர். ஆட்டநாயகனாக மலிங்க தெரிவு செய்யப்பட்டார். (1[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி




எமது சக மாணவன்
க.துவாரகன்
அவர்களின் அன்புத் தந்தை
**சண். கந்தையா**
அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா தமிழ் மாணவர்கள்**


## New Batch Commencement

**Weekday batch : Friday (30th September) 9.30 am**
**Weekend batch : Saturday (1st October) 9.30 am**

Flexible time for Working Students
Don't Miss IT in your future



- HND in Software Development
- HND in ICT Systems Support
- International Diploma in Computing
- International Diploma in Business Management
- Diploma in PC Assembling & Networking
- Advanced Diploma in Computer Network
- Diploma in Web Designing
- Diploma in Computerized Accounting Package
- CCNA(Cisco Certified Network Associate )
- Certificate in Programming Languages(C,Java,C#,ASP.Net,VB.Net,PHP,Mysql....)
- 3D Auto CAD

**Hotline : 021 222 9901** **Mobile : 077 3464739**

IDM Nations Campus
**IDM Nations Campus**
**Jaffna Branch**
Managed by Aharam Solution (Pvt) Ltd.
Sri Lankan Brand *for* Higher Education
# 216 Navalar Road, Jaffna, Sri Lanka | T: 021 222 9901 | F: 021 222 9901 | info@jaffna.idmcc3.lk | www.jaffna.idmcc3.lk


# அந்தண மாணவருக்கு கணினிப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,செப் 25

சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தால் நடத்தப்படவுள்ள இலவச கணினி வகுப்புக்கு அந்தண மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தகுதியுடைய மாணவர்கள் இன்று முற்பகல் 10.30 மணிக்கு ஆனைப்பந்தி யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்துடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம்.

அத்துடன் 2011 ஆம் ஆண்டு தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அந்தண மாணவர்களும் அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு தொடர்பு கொண்டு தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்யலாம் அல்லது 0773129984, 0212225612 எண்ணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-313)

# சமுர்த்தி விநியோகம் இன்றுடன் முடிவடைகின்றது

தென்மராட்சி, செப். 25

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி பயனாளிகளுக்கான செப்ரெம்பர் மாத புள்ளிக்கான உணவுப் பொருள்கள் அந்தந்த ப.நோ.கூ.சங்க கிளைக் கடைகளில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

உணவுப் பொருள்கள் விநியோகம் இன்று ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவுறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதால், குறித்த தினத்துக்கு முன்னர் முத்திரைக்கான உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-207)

# மரண அறிவித்தல்கள்



## திருமதி கார்த்திகேசு சின்னத்தங்கம்

சுழிபுரம், கல்லைவேம்படியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சின்னத்தங்கம் 23.09.2011 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கந்தையா-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகேசு - வேதவனம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கார்த்திகேசு (பிரபல வர்த்தகர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னப்பா, மாரிமுத்து ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற அன்னமுத்து, செல்லமுத்து, ஆச்சிமுத்து, சிவக்கொழுந்து, கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், நவரத்தினம்( வெள்ளையா -கொழும்பு), விநாயகமூர்த்தி (சம்மந்தா - சுழிபுரம்), கிருஷ்ண மூர்த்தி (மணி - தெல்லிப்பழை), செல்வராணி (ராணி- சுழிபுரம்), புஷ்பராணி(சாமி- கனடா), கலாராணி (கலா - கனடா), செல்வரட்ணம் (செல்வன் - கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், சற்குணம் (கொழும்பு), புஷ்பமலர் ( மலர் -சுழிபுரம்), தனபாக்கியம் (தெல்லிப்பழை), மகாதேவன் (சுழிபுரம்), முத்துக்குமார சுவாமி (கனடா), காலஞ்சென்ற ஜெகயோகன் (கனடா), சங்கரி ( கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், முரளிதரன் ( பிரித்தானியா), அகல்யா ( பிரித்தானியா), விஜிதரன் ( பிரித்தானியா), பிரசாத் ( பிரித்தானியா), புருசோத்தமன் ( பிரான்ஸ்), செந்தூரன் ( பிரித்தானியா), சந்தான கிருஷ்ணன் (சந்தானம் -தெல்லிப்பழை), உஷாந்தினி ( ஆஸ்திரேலியா), விஷ்ணுதேவன் (நந்தன் - சுழிபுரம்), நாமகள் (நந்தினி- கொழும்பு), கஜலக்ஷ்மி (வினோதினி - சுழிபுரம்), சயந்தன் ( மது - கனடா), திவ்வியா (கனடா), அருண்(கனடா), அனுஜா (கனடா), பூரணி (கனடா), அபிராமி (கனடா), வைஷ்ணவி (கனடா), காலஞ்சென்ற கிரிதரன், அனுஷியா (பிரித்தானியா), ரேணுகா (சுழிபுரம்), கேஷினி (பிரித்தானியா), சுரேந்திரன் ( ஆஸ்திரேலியா), சிறீகாந்தன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அக்ஷயன் ( பிரித்தானியா), சைலஜன் (ஆஸ்திரேலியா), கிஷோர்காந் (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் 26.09.2011 திங்கட்கிழமை அவரின் இல்லத் தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*"ரட்ணவாசா",*
**கல்லைவேம்படி, சுழிபுரம்.**

*தகவல்:*
**குடும்பத்தினர்.**



## துரையப்பா அருளானந்தம்

வண்ணார்பண்ணை, கலட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வதிவிடமாகவும் ஜேர்மனி, காசல் நகரை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட துரையப்பா அருளானந்தம் 20.09.2011 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா (சபாவதி)-மங்களம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தவமலரின் பாசமிகு கணவரும் பாலமுகுந்தனின் பாசமிகு தந்தையும். கௌசியாவின் அன்பு மாமனும் ஜனனி, ஜனுசன் ஆகியோரின் அருமைப் பேரனும் காலம் சென்ற சரஸ்வதி பொன்னையாவின் அன்புச் சகோதரரும், இராசேந்திரம் அவர்களின் மைத்துனரும் பவானியின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.09.2011 செவ்வாய்க்கிழமை காலை 9-12 மணிவரை ஜேர்மனியில் இடம்பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கொழும்பு.

தகவல் :
பாலமுகுந்தன் (மகன்).

# மனோவின் நினைவுகள் – ஆண்டு ஒன்று

03 * 05 * 1974



25 * 09 * 2010

## அமரர் துரைசிங்கம் விஜயமனோகர் – BBA

**அபிவிருத்தி உதவியாளர், மாவட்ட திட்டமிடல் செயலகம், கிளிநொச்சி**

கச்சேரிக் கடமையில் கலங்கரை விளக்காய்
கலவரத்தின் போதும் சளைக்காத காவலனாய்
கிளைபரப்பி நிழல் தந்த கற்பக விருட்சம் ஒன்று
காலனவன் கண்பட்டு கனகாலம் ஆனதாய் காற்று சொல்ல
ஓராண்டு தான் என கலண்டர் சொன்னது
ஒன்றென்ன ஓராயிரம் ஆண்டானாலும்
மனோ உந்தன் மகத்தான மக்கள் பணி
மனம் விட்டு அகலாது என்றும்..........

**எமது திட்டமிடல் செயலகத்தின் அபிவிருத்தி உதவியாளனாய் பணிபுரிந்த மனோவின் அர்ப்பணிப்பான, துணிச்சலான, நேர்மையான உழைப்பினை நாங்கள் என்றும் நினைவு கூருகின்றோம்.**

*பணிப்பாளரும் பணியாளர்களும்,*
*மாவட்ட திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி*

# கண்ணீர் அஞ்சலிகள்



## சின்னப்பா சிவகுரு

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் தேவஸ்தானத்தின் தர்மகர்த்தாவாகிய சின்னப்பா சிவகுரு அவர்கள் எம்மை விட்டுப் பிரிந்தமை ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. அன்னாரின் ஆத்மா அம்பாளின் தாள்களில் உறைந்து நித்திய பேரின்பம் பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.



## அருளம்பலம் இந்து தாசன்

அகில இலங்கை, யாழ்.மாவட்டம் , தாவடி 18 ஆம் படி குருசாமியாகிய அருளம்பலம் இந்து தாசன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரம் அடைந்தேன். அன்னாரின் ஆன்மா இறைவனின் பாதங்களை அடைந்து நித்திய சுகம் பெற மனமுருகிப் பிரார்த்திக்கின்றேன்.

**பாஸ்கரன் 'சிற்பாலயம்' சு.பாஸ்கரன் ஆச்சாரி**
**479, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவாலி கிழக்கில் சிவில் பாதுகாப்பு குழு

நவாலி கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் சிவில் பாதுகாப்பு குழு அமைக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

20 பேர் அடங்கிய இந்தக் குழுவில் தினமும் மூன்று பேர் இரவு வேளையில் இரண்டு மணித்தியாலங்கள் அந்தப் பிரிவில் பொலிஸாருடன் இணைந்து ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-100)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி பரமானந்தம் வனிதா

கட்டுடை, மானிப்பாய்யைப் பிறப்பிடமாகவும், கல்லூரி வீதி, இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பரமானந்தம் வனிதா 23.09.2011 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - இர்ராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், பரமானந்தத்தின் அன்பு மனைவியும், சாருஜன், சாருஜா ஆகியோரின் தாயும் சத்தியசீலன், ஜெயசீலன், வதனா ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டிவளை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
இளவாலை.

தகவல்:
குடும்பத்தினர்.



### யோகநாதன் கோபாலநாதன் (நரேஸ்)

ஆறுகால்மடம், புதுவீதியைச் சேர்ந்த யோகநாதன் கோபாலநாதன் கடந்த (22.09.2011) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் கலாதேவி தம்பதியரின் மகனும் யுவனிதா, குணநாதன், தீபநாதன், சத்தியநாதன் ஆகியோரின் சகோதரரும் ஜெயரஞ்சினியின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைள் இன்று (25.09.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வண்ணை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புது வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



சைவ பரிபாலன சபையின்
நிர்வாக சபை உறுப்பினர்
அமரர் **சண். கந்தையா**
அவர்களின் மறைவுக்கு சைவ பரிபாலன சபையின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது. அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

66, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

சைவ பரிபாலன சபை.

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய 7ஆம் திருவிழா உபயகாரரும், ஆலய வளர்ச்சிக்கு பெருமளவு நிதியுதவி வழங்கியவரும் 2002ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தை தனது நிதியில் செய்தவருமாகிய

**கோணேஸ்** அவர்களின் அன்புத் தந்தை

**கந்தையா தர்மலிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஓடையம்பதி கற்பக விநாயகரை பிரார்த்திப்போம்.

பரிபாலனசபை,
ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம், உரும்பிராய்.

## மறப்பதற்குரியரோ
### சண். கந்தையா



சைவப் பணியும் அதன் ஊடாகப் பொதுப் பணியும் ஆற்றிய பெரியார் தொல்புரம்
**சண்முகம் கந்தையா**
அவர்களின் மறைவு சைவ உலகுக்கு ஒரு பேரிழப்பாகும்.
அமரரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

தர்ம கர்த்தா சபை,
தொல்புரம், சுழிபுரம் சிதம்பரம் அம்பலவாணேஸ்வர சுவாமிகள் மானா முதலி மடம்

## சுமந்திரன் எம்.பி.யின் கூற்றை மறுக்கிறார் யாழ். தளபதி

யாழ்ப்பாணம், செப். 25

நாவாந்துறையில் இராணுவம் நடந்து கொண்டது பிழைதான் என்று தான் ஒரு போதும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனிடம் தெரிவித்திருக்கவில்லை என்று யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

''நாவாந்துறை இராணுவ அட்டூழியத்தை யாழ். படைத் தளபதி ஏற்றுக் கொண்டார்'' என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்திருந்த செய்தி கடந்த 20ஆம் திகதி உதயனில் வெளியாகி இருந்தது.

ஆனால், ''இராணுவ நிலையைத் தாக்க முயன்றவர்களைக் கட்டுப்படுத்த பொலிஸாரே அழைக்கப்பட்டனர். அவர்களே கலகக்காரரைக் கைது செய்து நீதியின் முன்னால் நிறுத்தினர். அப்படி இருக்கையில் இராணுவத்தினர் தவறிழைத்தனர் என்று கட்டளைத் தளபதி ஒரு போதும் தெரிவிக்கவில்லை'' - என்று பலாலி படைத் தலைமையகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (உ)

## சித்தன்கேணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது - 60), இவரது மகனான இ. இராஜாராம் (வயது - 28) ஆகிய இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வள்ளியம்மைக்கு கையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

கொள்ளையர்கள், மொத்தம் 18 பவுண் தங்கச் சங்கிலி காப்பு ஆகியவற்றை அபகரித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஒ-10-4)


**வீடு வாடகைக்கு**

186, கஸ்தூரியார் வீதியில் மேல்மாடி கட்டடம் வாடகைக்குண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்புக்கு:0776156051,0774927036

**கஜன் பிளாஸ்ரிக் தொழிலகம்**

"வல்லிபுரான் அருள் எல்லோருக்கும் கிடைக்கட்டும்" (சகலவிதமான உடைந்த மோட்டார் வாகன பிளாஸ்ரிக் பொருள்கள் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் மீள் திருத்தித்தரப்படும்.
9/6, மலர்மகள் வீதி,
அரியாலை.
தொடர்புக்கு: 0771607752.

**வீடு விற்பனைக்கு**

தொல்புரம், பாணாவெட்டி வீதியில் நல்ல சூழலில் உள்ள 4 பரப்புக் காணியுடன் கூடிய வீடு, நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. பஸ் தரிப்புக்கு 500 யார் தொலைவில் உள்ளது. தொடர்புக்கு:0213007252

**தொலைந்துவிட்டது**

அல்வாய் சிறிலங்கா பாடசாலைக்கும் சக்கோட்டைக்கும் இடையில் இராசநாயகம் சுசிதரன் என்னும் பெயருடைய சாரதி அனுமதிப்பத்திரமும் தேசிய அடையாள அட்டையும் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள முகவரியில் தந்துதவவும்.
ம. விக்கினேஸ்வரமூர்த்தி,
மாறம்புலம்,
அல்வாய் வடக்கு, அல்வாய்.
தொ.பே. இல.: 0775022877,
சாரதி அனுமதிப்பத்திர இல. B789688,
தே.அ.அ. இல. 771250068 v

**German Swiss மொழிகள்**

German, Swiss மொழிகள் தமிழ் மொழிப்பெயர்புடன்
Embassyஇல் கேட்கப்படும் Examக்கு ஏற்றவாறு நடைபெறுகிறது.
CD, Book விளக்கத்துடன் நடைபெறுகிறது.
10, Palaly, Road, Jaffna. 0771604823.

**மீசாலையில் ஓகன், கிட்டார் வகுப்புகள்**

ஒகன், கிற்றார் வகுப்புகள்
ஆரம்பம் 28.09.2011.
புதன்கிழமை,வெள்ளிக்கிழமைகளில்
வகுப்புகள் நடைபெறும்.

**பாரதி இன்ஸ்ரிரியூட்**
(மீசாலை விக்னேஸ்வரா ஆரம்பப் பாடசாலை அருகில்)
மீசாலை.
மேலதிக தொடர்பு - 0778051173

இரண்டு வருட முழு உத்தரவாதத்துடன் இந்தியன் நீர் மோட்டர்களை சிறந்த விலையிலும் கட்டடப்பொருள்கள் (சீற், சிமெந்து, கம்பி வகைகள்), பெயின்ற் வகைகள் (25% விலைக் கழிவு) மின்சாரப் பொருள்கள், நீர்க்குழாய்கள் போன்றவற்றை மலிவு விலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.



**தக்ஷா ரேடிங்**
பருத்தித்துறை வீதி, கட்டடைப்பிராய். TP: 021 223 0202


## மரண அறிவித்தல்

### திருமதி மரியம்மா அந்தோனிப்பிள்ளை



பெரியவிளானைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியம்மா அந்தோனிப்பிள்ளை 22.09.2011 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லம்மா, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மரியா, பற்றிமாதாஸ், இருதயராஜ், லெற்றீசியா ஆகியோரின் அன்புத் தாயும், போல், மாலா, மகேந்திரன், டெமிற்றில்டா ஆகியோரின் அன்பு மாமியும், றஜனி, சுபாஜினி, கெனத் மெலானி, சதாஜினி, நிறஞ்சினி, புஸ்பாஜினி, குணாளினி, விஜயா, லக்ஷ்மி, துஷ்யந்தன், கரோலினா, நிரோஜினா, ஜெஸ்மினா, துஷாந்தினி, ஜெசிக்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அவோன், ஜெலோன், ஜொனத்தன், அனவன், அமலி, ஜவோன், அன்றியா, ஜொகான், ஜொஸி, யோசுவா, அஞ்சலோ ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார். அன்னாரின் நல்லடக்கம் 24.09.2011 சனிக்கிழமை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியவிளான்,
இளவாலை.

தகவல்:
மகன்-இருதயராஜா
(சின்னத்தம்பி).

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்புடையீர்!

கடந்த 23.08.2011
செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்
அமரர்

### ஸ்ரீ றங்கநாதன் ஸ்ரீ காந்தன்

அவர்களின் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.09.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


28, அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

## 31ஆவது பிறந்த தினமும் 4ஆவது ஆண்டு நெஞ்சை விட்டகலாத நினைவுகளும்

### அமரர் குலேந்திரமோகன் சுதாகர்

(ஜதுஷ் சுவைத் தென்றல் உரிமையாளர் - கண்ணன்)



மலர்வு:
25.09.1980

உதிர்வு:
23.09.2007

கண்ணா!
பாசத்தின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி
அரவணைத்த எம் அன்புக் கண்ணா!
நான்கு ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
நினைவுகள் எம் நெஞ்சங்களை
விட்டு என்று நீங்காது
கண்ணா! எங்களை விட்டுச் சென்றாலும்
உங்கள் உருவம் தான் மறைந்தாலும்
உங்கள் அழகான புன்சிரிப்பு முகம் மறையவில்லை.
கண்ணாக கண்ணன் இருக்கும் போது
இறைவன் என் கண்ணாவை பறித்து விட்டான்
அவனுக்குத் தெரியவில்லை எம் கண்களையும் சேர்த்து
பறித்துக் கொண்டான் என்று!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
தாய், மனைவி, பிள்ளைகள்: ராதா, ராதிகா, அனு
மற்றும் சகோதரர்கள்: சுதா, சுயாதா, சுரேஸ்

ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காயமுற்ற பெண் மரணம்

யாழ்ப்பாணம், செப்.25

மினிபஸ் மோதியதனால் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர் சிகிச்சை பயனளிக்காது 26 ஆவது நாளான நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ். அன்னலட்சுமி (வயது-56) என்பவரே மரணமானார். மினிபஸ் ஒன்று இவரை மோதி காயப்படுத்தியிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். தொடர்ந்து பொலிஸார் விசாரணையை நடத்தி வருகின்றனர்.

(ஒ-4-15)

**வேலையாள் தேவை**

ஹைட்ரோலிக் பிரஸ் (Hydraulic Press) வேலைகளுக்கு டை/மோல்ட் (Die/Mould) செய்யக்கூடிய அனுபவம் உள்ள ஒருவர் தேவை.
தொடர்பு: செல்வா ஹாட்வெயர்ஸ்
தொலைபேசி: 077 3573000

**Mr. Concrete**

(*ISO* 9001-2008) சர்வதேசத் தரச் சான்றிதழ் பெற்ற கொங்கிறீட் உற்பத்தி நிறுவனம்

சகல அளவுகளிலும் கொங்கிறீட் கற்கள், வேலித் தூண்கள், வீட்டுத் தூண்கள் பல வடிவங்களில் நிலப்பதிப்புக் கற்கள்

Factory: கொடிகாமம் வீதி, புலோலி.
Tel: 0217222339, 0212262777
குறிப்பு: எமது நிறுவனத்துக்கு வேறு எங்கும் கிளைகள் இல்லை.

**வீடு விற்பனைக்குண்டு**

இல. 381/2, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள 2 ½ பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
0779194115,0776249143.

**பணிநிலை வேண்டும்**

1. இலத்திரனியல் உபகரண விற்பனையாளர்.
2. இணைய உதவியாளர் (Net)

மேற்படி பதவிகளுக்கு உடனடியாக ஊழியர்கள் தேவைப்படுகின்றார்கள். சுயவிவரக் கோவையுடன் 30.09.2011 இற்கு முன்னர் நேரில் வரவும்.

பிரகாஷ் எலக்ரோனிக்ஸ், பஸ் நிலையம், பருத்தித்துறை.
தொ.பே: 021 2263652

ரூபா 50,000/- க்கு மேல் மாத வருமானம் பெற இன்றே முதலீடு செய்யுங்கள்

**ஐஸ் கிரீம் இயந்திரம்**

கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கென்டின், பேக்கரி, பார்மசி, சுப்பர் மார்க்கட், குரோசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.

- ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிரீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா / வெனிலா / சொக்கலேட்
- சுயமாகவே தயாரிக்கும் திறன்.
- இலவச பயிற்சி
- உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை

BRAND NEW
Price Rs.99,000/- upwards

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(MEMBER OF PLUSS INT.)
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.
தமிழில் தொடர்புகொள்ள (யோகேஸ்)
Hotlines: 077 391 8870, 077 1066902

**தேவை**

கணக்குப்பதிவாளர்-பெண் பிள்ளைகள் முன் அனுபவம், கணினி அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
26.09.2011 - 29.09.2011 வரை காலை 9-12 மணி வரை நேரில் சமுகம் தரவும்.

செல்வா எலக்ரிக்கல்,
இல. 21, பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி.
தொ.பே. இல.: 0755776792

**ESOFT**

உடனடி வேலைவாய்ப்பு

1.விரிவுரையாளர்கள் (Lecturers)
2.போதனாசிரியர்கள் (Instructors)
3.அலுவலக உதவியாளர்கள் (Office Peon)

வெற்றிடங்களுக்கான கிளைகள்

1.கிளிநொச்சி 3.கொடிகாமம்
2.காரைநகர் 4.வவுனியா

உங்கள் சுயவிபரக் கோவையை 27-09-2011 இற்கு முன்னதாக கிடைக்குமாறு கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Human Resources Manager.
Esoft Computer Studies (Pvt) Ltd.
Regional Head Office- North
No.166/3, Navalar Road
Jaffna.

**Take Away**

HP i5 Laptop

Intel Core i5 (2.40 GHz)
2 GB DDR3 RAM
500 GB HDD
14.2 Display
DVD RW
W LAN & BT
WebCam
Just Pay 14,999/=
0% Interest Free
International Warranty
Life Time Service Free
Limited Stock Conditions Apply
Laptop Zone
Authorized HP Dealer
No 75, K. K.S. Road Jaffna
T.P:-021 492 3105

**மாருதி செரமிக்**
New Maruthi Ceremic

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரை மாபிள்கள், சுவர் மாபிள்கள், குளியலறைச் சாதனங்கள், பெயின்ற் என்ட் எலக்ரிக்கல்ஸ் மற்றும் pvc பைப் வகைகள் விசேட விலைக் கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.

மாருதி செரமிக்
இல. 37 கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
T.P.: 021 3208350, 0775702253

**உள்நாட்டு வெளிநாட்டு துரித கடிதங்கள் பொதிகள் பரிமாற்ற சேவை**

Our Agents DHL aramex SriLankan Cargo ups

மஹாராஜா Food நிறுவனத்தினர் யாழ்.நகரில்...!

உங்கள் வெளிநாட்டில் உள்ள உறவுகளுக்கு பொருள்களையும் ஆவணங்களையும் குறைந்த செலவில் பாதுகாப்பாகவும் விரைவாகவும் உத்தரவாதத்துடனும் அனுப்பி உறவை வலுப்படுத்த நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்.

உங்கள் வெளிநாட்டு உள்நாட்டு உறவுகள் அனுப்பும் பொதிகளை எமது யாழ்.கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

G.T.V Enterprises (Pvt) Ltd.
ஜீ.ரி.வி என்ரபிறைஸ்சஸ் (பிறைவேற்) லிமிட்.
DHL முகவர்
11Kg இற்கு அதிகமான பொதிகளிற்கு விசேட கட்டண சலுகை

உள்நாட்டிற்கான பொதிகள், கடிதங்கள் நாட்டின் எப்பாகத்திலும் விநியோகிக்கப்படும்.

யாழ்ப்பாணம்:- #225, Kasthuriyar Road, Jaffna. T.P: 0212224338.
#272, K.K.S. Road, Jaffna. T.P:0212224825.
கொழும்பு: #18/3,Dr.E.A Cooray Mawatha, Wellawatte. T.P: 0112360926, 0112259849.

**தென்மராட்சி மக்களுக்கு ஒரு நற்செய்தி...!**

விற்றுத் தீர்த்தல்

தீபாவளியை முன்னிட்டு இன்று 25.09.2011 முதல் 26.10.2011 வரை மாபெரும் தள்ளுபடி விற்பனை.

2500/= வுக்குள் கொள்வனவு செய்பவர்களுக்கு ஒரு 1/2 குடையும்
5000/= வுக்குள் கொள்வனவு செய்பவர்களுக்கு ஒரு முழுக்குடையும்
அன்பளிப்பு வழங்கப்படும்.

நர்ச்சனா சில்க்
இல.102, A9 வீதி,
சாவகச்சேரி.

**உலக நாடுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை**

மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்பு பொருட்கள், புடைவைகள், CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL

- மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு)
- கடல் உணவுகள், மருந்து பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
- வெளி நாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

வடமாகாணத்தில் அங்கீகாரம் பெற்ற ஒரே முகவர் திருமுருகன்கொம்நெற்

கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.
650/= ரூபாவிலிருந்து
நிபந்தனைகளிற்குட்பட்டது
Hot line :-0212227835

Head office.
259, K.K.S.Road, Jaffna.
* No.18, main Road, Nelliyadi.
* No.05, Thirunagar, Main Road, Kilinochchi.
* No.46, Adiyapatham Veethy, Thirunelvely.
* TCN Express
2B, Nelsen place, Colombo 06.

**அட்சயா** (அரவிந் ஸ்ரூடியோவுக்கு அருகில்)

461, நாவலர் றோட், அத்தியடிச் சந்தி, யாழ்ப்பாணம்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

01. பேசியல் 02. மேக்கப் 03. கெயாஸ்டைல்
04. தலைமுடி அயன் பண்ணுதல்
05. தலைமுடி சுருட்டுதல் 06. ஐசிங்
07. பிளவர் மேக்கிங் 08. சாறி வேக்
09. பிளவுஸ் கட்டிங் 10. குக்கறி

மாபெரும் சலுகையுடன்

★ மகளிர் மேம்பாட்டு நோக்குடன் மேற்படி பயிற்சிகள் சலுகைக் கட்டணத்துடன் ஆரம்பிக்கப்படவுள்ளன. பயிற்சி பெற விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
★ உடல் எடை குறைக்கும் பால்மா, சீனி விற்பனைக்கு உண்டு.
★ ஒட்டிய கன்னங்களை அழகிய கன்னங்களாக மாற்றும் உடல் எடை கூட்டும் இயற்கை மூலிகை குளிசை விற்பனைக்கு உண்டு.
★ கடும் கறை, கறுப்பு, முகத்தில் உள்ள பருக்கள் நாள்பட்ட புள்ளிகள் மாற்றும் வைத்தியக் கிறீம் விற்பனைக்கு உண்டு.

**After A/L?** Government Schol.

CIMA-UK
Batch i : Sat 7.30-2PM
Batch ii : Sun 2-5.30PM
Batch iii : Mon- Fri 9 AM- 2 PM

Engineering-USA
Batch I : Sat & Sun 10 - 12PM
Batch ii : Sat & Sun 4 - 6PM
Batch iii : Mon- Fri 8 AM -10 AM

BIT University of Colombo-ucsc
Batch I : Sat & Sun 8 - 12PM
Batch ii : Sat & Sun 2 - 6PM
Batch iii : Mon- Fri 4.30-5.30 PM

Multimedia_USA
FIT O/L or A/L தகைமை இன்றி பல்கலைகழக அனுமதிக்கு

After A/L கற்கை நெறி ஒன்றைப் பயிலும் மாணவர்கள் பின்வரும் கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.
BCS-UK, IELTS / TOEFL,CISCO-CCNA, Oracle Java, ICDL,

MCS
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Parameswara Junction
www.mcsitcampus.org

Diploma Courses.. *MsOffice, AutoCAD, *Web Designing
Free 5 - Course fee* *Hardware *Accounting *DTP *English
5 கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.

உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Stayfree®

# Feminine Hygiene

**Feminine hygiene or women's personal hygiene is to keep her body, particularly her private areas clean and healthy. The importance of keeping such cleanliness should be known by all women so that concerns relating to, but not limited to, menstrual periods, vaginal discharge and yeast infections could be avoided. Personal hygiene problems that are unique to all women involve dealing with the above mentioned matters. Common issues related to feminine hygiene are mostly due to failure to wash underwear and changing of pads during menstruation and vaginal discharge. Focusing on hygiene during periods, Dr Sumitra clarifies common doubts relating to this subject.**



fpa SRI LANKA enriching relationships

Dr.Sumithra Thisera
Medical Director
Family Planning Association

### Firstly, what is the difference between a cloth pad and a sanitary napkin?

A cloth pad is a reusable piece of folded fabric kept to hold menstrual blood. A sanitary napkin is a disposable absorbent fabric pad used for the same purpose.

### Which is a better choice?

Disposable sanitary napkin simply because once used its thrown away. When using cloth pads and if it is not washed & sanitized properly before reusing, It could lead to many hygienic problems.

### Common complaints from women of all ages during menstruation are rashes and infections on the private areas. Why are these discomforts common during periods?

These discomforts are common during monthly periods for those who do not change their pads frequently enough. Also infections occur when one washes their private areas with disinfectant soaps to get rid of the odor during periods. This should be avoided as the area is quite sensitive, harsh chemicals present in such soaps causes infections and rashes. The private area should be washed only with water using a mild soap.

### How often should pads be changed during periods?

During day time pads should be changed at least every 6 hours. At night however heavy flow pads could be used and should be changed first thing next morning.

### What should be kept in mind when selecting sanitary pads?

Problems during periods are usually those related to rash/infections, odors and mostly leaks. So when choosing pads, one should go for pads made of good high absorbent material, a shape that best fits you and those that are lightly fragrant so it would lock the odor.

For any clarifications, please send your questions to **askdoctor@fpasrilanka.org** or **call on 2588488**




**18 Anti Leak channels**
To help direct fluid into the pad, Thus helping faster absorption

**Wings**
To hold the pad securely in place and help prevent side leakage

**Dry net cover**
To give you a long lasting dry feel

*Freedom to live*

Price: 110/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ உணவின் இரகசியங்கள்

சைவ உணவுகளை உட்கொள்வது உங்களது உடல் நலனுக்கு எந்தெந்த வகையிலெல்லாம் நல்லது என்பது குறித்து மருத்துவ மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்கள் விளக்கம் தருகின்றனர்.

நச்சுக்களை அகற்றுபவை: நார்ச்சத்து மிகுந்த சுரைக்காய், பூசணி, பசலைக்கீரை மற்றும் முட்டைகோஸ் ஆகியவை சைவ உணவ வகைகளில் மிக முக்கியமானவை. உடலில் சேரும் நச்சுகளை அகற்றும் திறன் மேற்கூறிய காய்கறிகளுக்கு உண்டு. அதே சமயம் முட்டை, மீன் மற்றும் இறைச்சி போன்றவற்றில் புரதச்சத்து இருக்கும் அளவுக்கு நார்ச்சத்து இருப்பதில்லை.

எலும்புகளை வலுவாக்குபவை: இறைச்சி உடலில் புரதத்தை அதிகமாக்கி, கொழுப்பை கூட்ட வழி வகுக்க கூடியது. மேலும் நமது சிறுநீரகத்துக்கு அதிக வேலைப் பளுவை ஏற்படுத்த செய்வதோடு, எலும்பிலுள்ள கல்சியத்தையும் உறிஞ்சி விடுகிறது. அதே சமயம் சைவ உணவில் இந்த பிரச்சினை இல்லை.

காபோஹைதரேட் பற்றாக்குறை: அசைவ உணவு அதிகம் உட்கொள்பவர்களுக்கு காபோஹைதரேட் பற்றாக்குறை ஏற்படும் வாய்ப்பும் அதிகம் உண்டு. இதனால் உடல் தனது இயக்கத்துக்கு தேவையான சக்தியை காபோபைதரேட்டிலிருந்து பெறுவதற்கு பதிலாக சேமித்து வைக்கப்பட்டுள்ள கொழுப்பிலிருந்து எடுத்துக்கொள்ளும் கீட்டோனியம் என்ற நிலை ஏற்படும்.

எளிதில் ஜீரணம்:

சைவ உணவுகள் மூலமாக கிடைக்கும் காபோஹைதரேட் படிப்படியாக ஜீரணமாக உடலுக்கு தேவையான குளுகோஸ் சத்தை சீராக அளிக்கும். அதே சமயம் கொழுப்பும், புரதமும் அதிகம் நிறைந்த இறைச்சி உணவு ஜீரணமாகவே அதிக நேரம் எடுத்துக்கொள்ளும். சில சமயங்களில் சிலருக்கு அது சிரமமாகக் கூட ஆகிவிடும்.

ஆரோக்கியமான மேனி: பீட்ரூட், தக்காளி, பூசணி பாகற்காய் போன்ற சைவ உணவுகள் ரத்தத்தை நன்கு சுத்திகரிப்பதோடு, தோலுக்கு மினு மினுப்பையும் கொடுக்கிறது. அத்துடன் கொய்யா, அப்பிள், பேரிக்காய் போன்ற பழங்களை உண்பதும் மேனிக்கு மினுமினுப்பைக் கூட்டும்.


CDB அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் முதலாவது புத்தம் புதிய ஜீப்பை வென்ற வெள்ளவத்தையின் திரு. S.K. கணேசன் அவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்!

CDB
சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட்




| | மாதாந்த வ.வீ. (வருடாந்தம்) | முதிர்ச்சியில் வ.வீ. | வ.தே.வீ. மாதாந்தம் | வ.தே.வீ. முதிர்ச்சியில் |
|---|---|---|---|---|
| 1 மாதம் | | 9.50% | | 9.92% |
| 3 மாதங்கள் | 10.00% | 10.50% | 10.47% | 10.92% |
| 6 மாதங்கள் | 10.50% | 11.00% | 11.02% | 11.30% |
| 12 மாதங்கள் | 11.00% | 11.50% | 11.57% | 11.50% |
| 18 மாதங்கள் | 11.25% | 12.50% | 11.85% | 12.20% |
| 24 மாதங்கள் | 11.50% | 12.75% | 12.13% | 12.03% |
| 36 மாதங்கள் | 11.50% | 13.00% | 12.13% | 11.60% |
| 48 மாதங்கள் | 11.50% | 13.00% | 12.13% | 11.04% |
| 60 மாதங்கள் | 11.50% | 13.00% | 12.13% | 10.53% |

ரூ. 500,000/- க்கு மேற்பட்ட வைப்புகளுக்கு

உங்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதுடன் அதிக இலாபத்தை பெற்றுத்தரும் CDB நிலையான வைப்புக் கணக்கில் நீங்களும் அதிகமாக சேமித்து புத்தம் புதிய ஜீப் ஒன்றை வென்றிடுங்கள்.

- நிலையான வைப்புக் கணக்கொன்றில் ஆகக்குறைந்தது ரூ.10,000 பேணப்பட வேண்டும்.
- அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரூ.10,000 க்கும் வெற்றி வாய்ப்புக்கள் கிட்டும்.

கிளைகள்- அனுராதபுரம், பத்தரமுல்ல, பதுளை, சிலாபம், எம்பிலிப்பிட்டி, கம்பஹா, ஜா-எல, கடுவெலை, களுத்தறை, கண்டி, களனி, கேகாலை, வெள்ளவத்தை, குருனாகலை, மஹரகம, மஹர, மதுகம, மாத்தறை, மொரட்டுவை, நீர்கொழும்பு, இரத்தினபுரி, வத்தளை, நிட்டம்புவை, வென்னப்புவை, திஸ்ஸமகாராம, காலி, தம்புள்ளை, கதுருவெலை, கொட்டாஞ்சேனை, யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு.

இலங்கை மத்திய வங்கி நாணயச்சபையின் 1988ம் ஆண்டு 78ம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. RAM Rating (Lanka) Limited BBB-/P3

இன்றே பேசுங்கள்: 0117 388 388
சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பிஎல்சி
இல.18, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
பதிவிலக்கம்: PB232PQ
www.cdb.lk
தாபிக்கப்பட்டது: 1995 செப்டம்பர் 7



Contact:
Alana : 0777 786 440
Daria : 0777 363 607

Best Price...
Scenic Ocean View...
in Dehiwala.

இவ் வசதிகள் யாவும் மிக அருகில்

- வைத்தியசாலைகள்
- கோயில்கள்
- சுப்பர் மார்கட்கள்
- அதிவேக வீதி
- வங்கிகள்
- முன்னணி பாடசாலைகள்



Your own Luxury Apartment in Dehiwala.

NO. 20, 2nd Lane, Dehiwala.
Hotline : 0777 763 148

City Tower
Your Dream Home...

Windsor TOWER
Creating spaces for better life

Civi Mec Construction (Pvt) Ltd.
(BOI Approved Company)
E-mail: info@civimec.com Web: www.civimec.com
Office: 156, 1/1, W.A. Silva Mawatha, Wellawatte, Sri Lanka.
Tel: 2367878 Fax: 2367818.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்று, இரண்டு, மூன்று அல்ல, அபாவில் அடங்கியிருப்பது 9 மூலிகைகள்

ஒன்பதாம் இலக்கம் இலக்க வரிசையில் இறுதியாக இருந்த போதும், உங்களுக்கு கருமை நிறக் கூந்தலை வழங்கி இளமையைப் பெற்றுத் தருவதில் முதலிடத்தில் இருக்கிறது. ஆம், அபா ஹெர்பல் ப்ளெக் ஹெனா தயாரிக்கப்பட்டிருப்பது ஒன்பது மூலிகைகளினால் ஆகும்.

முன்னைய காலத்தில் அழகுக்கலை செயற்பாடுகளின் போது உபயோகிக்கப்பட்ட மருத்துவ குணமுள்ள ஒன்பது இயற்கை மூலிகைகளைக் கொண்டே அபா ஹெர்பல் ப்ளெக் ஹெனா தயாரிக்கப்பட்டுள்ளது. மிகச் சிறந்த மருத்துவ குணமுள்ள ஒன்பது மூலிகைகள் மூலம் தயாரிக்கப்பட்டுள்ள அபா, கூந்தலின் இயற்கைத் தன்மையைப் பாதுகாத்து, கூந்தலுக்கு கருமை நிறத்தையும் இயற்கைப் பளபளப்பையும் பெற்றுத் தரும் ஒரு ஹெர்பல் ப்ளெக் ஹெனா வகையாகும்.

அபா தயாரிக்கப்பட்டிருப்பது,
1. வல்லாறை
2. சீயக்காய்
3. கற்றாளை
4. வெந்தயம்
5. கரிசலாங்கண்ணி
6. நெல்லி
7. வேப்பிலை
8. செவ்வரத்தை பூ
9. ஜடமன்ஸி
போன்ற ஆயுர்வேத மூலகைகளின் கலவையினால் ஆகும்.


அபா ஒரு இயற்கைத் தயாரிப்பாகும். இப்போது நாம் குறித்த மூலிகைகளில் அடங்கியுள்ள குண நலன்களைப் பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| வல்லாறை | - | கூந்தலின் வளர்ச்சிக்கு உதவுகிறது. |
| சீயக்காய் | - | கூந்தலை சுத்தப்படுத்துவதுடன் பளபளப்பான தோற்றத்தைப் பெற்றுத் தருகிறது. |
| கற்றாளை | - | கூந்தல் வறட்சியடைவதைக் கட்டுப்படுத்தி, கூந்தலுக்கு மென்மையைப் பெற்றுத் தருகிறது. |
| வெந்தயம் | - | கூந்தலின் இயற்கைத் தன்மையைப் பாதுகாப்பதுடன் கூந்தலுக்கு போஷணையை வழங்குகிறது. |
| கரிசலாங்கண்ணி | - | கூந்தலுக்கு மேலும் பொலிவைப் பெற்றுத் தருகிறது. |
| நெல்லி | - | கூந்தலின் கருமை நிறத்தை அதிகரித்து, ஆரோக்கியமான தோற்றத்தைப் பெற்றுத் தருகிறது. |
| வேப்பிலை | - | தலையில் ஏற்படக் கூடிய பொடுகு போன்றவற்றுக்கு எதிராக தொழிற்படுகின்றது. |
| சீயக்காய் | - | கூந்தலை சுத்தமாக்குவதுடன், சிறந்த ஒரு தோற்றத்தைப் பெற்றுத் தருகிறது. |
| செவ்வரத்தை பூ | - | கூந்தலுக்கு பளபளப்பு மற்றும் மென்மையான தோற்றத்தைத் தருகிறது. |
| ஜடமன்ஸி | - | கூந்தல் நரைப்பதைத் தாமதப்படுத்துகின்றது. |

முன்னைய காலம் முதல் கூந்தல் அழகைப் பராமரிப்பதற்காக உபயோகிக்கப்பட்ட இயற்கை மூலிகைள் ஒன்பதைக் கொண்ட கலவையினால் தயாரிக்கப்பட்டுள்ள அபா ஹெர்பல் ப்ளெக் ஹெனா மிகச் சிறந்த ஒரு தயாரிப்பாகும்.



பிரபல அழகுக்கலை நிபுணர்
பிரேமசிறி ஹேவாவஸம்



இன்று பெண்களின் வாழ்க்கை முறை வெகுவாக மாறிவிட்டது. அநேகமான பெண்கள் தொழில் புரிகின்றனர். ஆண்களுக்கு நிகராக சமூக விடயங்களிலும் ஈடுபடுகின்றனர். குடும்பத்திலும் பெண்களின் பங்கு அளப்பரியது. இதன் காரணமாக பெண்கள் அநேகமான உடல், உள ரீதியான பிரச்சினைகளை சந்திக்கின்றனர். அவற்றுள் இள வயதிலேயே கூந்தல் நரைத்தல் முக்கியமானதாகும். சரியான நேரத்தில் உணவு உட்கொள்ளாமை, போதுமான போஷணை இல்லாமை, ஓய்வின்மை, தூக்கமின்மை, அதிக யோசனை, மன அழுத்தம் என்பவற்றோடு தூசி, சூடு போன்ற காரணிகளும் கூந்தல் இள வயதில் நரைப்பதற்கு ஏதுவாகின்றன. கருமை நிறக் கூந்தல் இளமைத் தோற்றத்திற்கு மிக முக்கியமானது. எனவே இந்த நிலைமை பெண்களது தன்னம்பிக்கையைக் குறைப்பதோடு அவர்களுக்கு மன அழுத்தத்தையும் ஏற்படுத்துகின்றது. இவையனைத்துக்கும் சிறந்த ஒரு இயற்கைத் தீர்வு- அபா ஹெர்பல் ப்ளெக் ஹெனா, கொட்ரிஜ் நிறுவனத்திடமிருந்து.

கொட்ரிஜ் நிறுவனம் நுகர்வோரின் நலனில் என்றும் அக்கறை கொண்டுள்ளது. "கொட்ரிஜ்" நீண்ட காலமாக நுகர்வோரின் நன்மதிப்பையும், நம்பிக்கையையும் பெற்றுள்ள ஒரு வர்த்தக நாமமாகும். கொட்ரிஜ் நிறுவனத் தயாரிப்பான அபா ஹெர்பல் ப்ளெக் ஹெனா இலங்கை அரசின் சுகாதாரத்துறையின் அங்கீகாரத்தைப் பெற்றது. நவீன தொழினுட்பங்கள் கொண்டு செய்யப்பட்ட ஆய்வுகூட பரிசோதனைகள் மூலம் தரத்தன்மை உறுதி செய்யப்பட்டு, உங்கள் கரம் சேரும் அபா ஹெர்பல் ப்ளெக் ஹெனா அனைத்து வகையிலும் நம்பத் தகுந்தது. இந்த தயாரிப்பின் மீது நம்பிக்கைக் கொள்வதற்கு இவற்றை விடவும் வேறு காரணங்கள் தேவையில்லை என்றே நான் நினைக்கிறேன்.

அழகுக்கலை துறையில் பல வருட அனுபவத்தைக் கொண்டுள்ள நான், எனது வாடிக்கையாளர்களுக்கு கூந்தலுக்கான வர்ணத்தைத் தெரிவு செய்யும் போது, எப்போதும் அபா ஹெர்பல் ப்ளெக் ஹெனாவினை மட்டுமே பரிந்துரை செய்கிறேன். ஏனெனில், அது இயற்கையான உற்பத்தி என்பதை நான் அறிந்துள்ளமையினாலேயே ஆகும்.




ரூ. 75/-

இலங்கை அரசின் சுகாதாரத்துறையின் அங்கீகாரம் பெற்றது (CR 015024)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விழிப்பாயிருங்கள் !

**பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனங்கள்**
**(31.08.2011 இல் உள்ளவாறு அகரவரிசைப்படி)**

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அமானா பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
4. இந்தியன் பாங்க்
5. இலங்கை வங்கி
6. எம்சிபி பாங்க் லிமிடெட்
7. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
8. கபீப் பாங்க் லிமிடெட்
9. கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
10. சம்பத் பாங்க் பிஎல்சி
11. சிற்றி பாங்க் என்ஏ
12. செலான் பாங்க் பிஎல்சி
13. டீஎவ்சீசீ வர்தன பாங்க் லிமிடெட்
14. டொயிச் பாங்க் ஏஜி
15. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
16. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
17. கொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
18. பப்ளிக் பாங்க் பேர்காட்
19. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
20. மக்கள் வங்கி
21. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
22. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
23. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்

## உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சன்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

## பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் லிமிடெட்
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்ரட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இன்டஸ்றியல் பினான்ஸ் லிமிடெட் (*)
6. எதிரிசிங்க ரஸ்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
7. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
8. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
9. ஏசியா கொமர்ஸ் லிமிடெட்
10. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் லிமிடெட்
11. ஏசியா அசெற் பினான்ஸ் லிமிடெட்
12. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
13. கிராமின் மைக்ரோ கிறடிற் கம்பனி லிமிடெட்
14. கொமர்சல் கிறடிட் பிஎல்சி
15. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
16. சிலோவ் பினான்ஸ் லிமிடெட்
17. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
18. சிற்றிசன்ஸ் டிவலொப்மன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
19. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
20. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
21. செங்கடகல பினான்ஸ் கம்பனி பிஎல்சி
22. சொவ்ற்லொயிக் பினான்ஸ் பிஎல்சி
23. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
24. த பினான்ஸ் அன்ட் கரண்டி கம்பனி லிமிடெட் (*)
25. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. த மல்டி பினான்ஸ் கம்பனி லிமிடெட்
27. த ஸ்ரான்டட் கிறடிற் லங்கா லிமிடெட் (*)
28. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
29. பார்ட்லீட் பினான்ஸ் லிமிடெட்
30. பிம்புத் லங்கா இன்வெஸ்மன்ட் லிமிடெட்
31. பீப்பிள்ஸ் லீசிங் பினான்ஸ் பிஎல்சி
32. பீப்பிள்ஸ் மேச்சன்ட் பினான்ஸ் லிமிட்டெட்
33. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
34. மர்ச்சன்ட் கிறடிற் ஒப் சிறிலங்கா லிமிடெட்
35. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
36. லங்கா ஓறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
37. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
38. ஸ்வர்ணமகால் பினான்சஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்

(*) இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவர்களால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன.

## நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

- மேற் கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.
- ஒழுங்குபடுத்தப்படாத மற்றும்/ அல்லது மேற்பார்வை செய்யப்படாத நிறுவனங்களில் வைப்புக்களை மேற்கொள்வதன்மூலம் அவற்றிற்கு இரையாகாமல் உங்களுடைய கடின உழைப்பால் பெற்ற பணத்தை பாதுகாக்கும்படி பொதுமக்கள் வலிமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**இலங்கை மத்திய வங்கி**

தொ.பேசி: 2477100, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: bankseo@cbsl.lk
தொ.பேசி.: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk

# மஞ்சள்



மஞ்சளை உணவில் சேர்ப்பதால் பசியை உண்டாக்கும்.
மஞ்சளை உணவில் சேர்ப்பது வெறும் நிறத்துக்காக மட்டுமல்ல, மணத்துக்காகவும் உணவிலுள்ள தேவையற்ற கிருமிகளையும் நீக்கும் என்பதால் தான்.
மஞ்சளை சுட்டு முகர மூக்கில் நீர் வடியும் ஜலதோஷம் நிற்கும்.
அடிப்பட்டதனால் ஏற்பட்ட இரத்தக் கட்டு உள்காயங்களை நீக்க மஞ்சளை பற்று போடுவார்கள்.
வெறும் மஞ்சள் பொடியை புண்கள் மீது தூவ புண்கள் ஆறும்.
மஞ்சளுடன் வேப்பிலையை அரைத்துப் பூச அம்மையால் ஏற்பட்ட கொப்புளங்கள் ஆறும்,









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் மருத்துவம்




பூக்களின் மணத்தை நுகராதவர்கள் எவரும் இருக்க முடியாது. வாசனையோடு நோயையும் குணப்படுத்தும் சிறப்பு இந்த பூக்களுக்கு உண்டு. சடங்கு சம்பிரதாயங்களில் பூக்களே முதலிடம் வகிக்கின்றன.

பூக்களின் மருத்துவக் குணங்கள் அளப்பெரியவை. இந்த மலர்களின் மருத்துவத் தன்மைகளை வைத்து நோய்தீர்க்கும் மலர் மருத்துவம் என்ற மருத்துவ முறை இருந்து வருகிறது.

இந்த வகையில் நந்தியா வட்டப் பூவின் மருத்துவக் குணங்களைப் பற்றி அறிந்து கொள்வோம்.

இதன் பூ, வேர், பால் அனைத்தும் மருத்துவக் குணம் கொண்டவை.

இதனை நந்திபத்திரி, நத்தியாவர்த்தம், பட்டிடை, வலம்புரி, சுயோதனன் மாலை என பல பெயர்களில் அழைக்கின்றனர்.

நந்தியாவட்டப்பூ சித்த மருத்துவத்திலும், ஆயுள்வேத மருத்துவத்திலும் அதிகம் பயன் படுகிறது.

### கண் நோய்கள் நீங்க

உடலின் முக்கிய உறுப்புகளில் கண்கள் முதலிடம் வகிக்கின்றன.

நந்தியாவட்டப் பூவை சாறு எடுத்து அதனை கண்களில் சிறு துளி விட்டு வந்தால் கண் பார்வைக் கோளாறு, கண் படலம், கரும்பாவை முதலியன மாறும்.

நந்தியாவட்டப் பூவை நிழலில் உலர்த்தி பொடி செய்து பாலுடன் கலந்து அருந்தி வந்தால் கண் பார்வைக் கோளாறுகள் நீங்கும். கண் நரம்புகள் பலப்படும்.



### காச நோயின் பாதிப்பு குறைய

மனிதனை அழிக்கும் கொடிய நோய்களில் காச நோயும் ஒன்று. காச நோயால் வருடத்துக்குப் பல லட்சம் மக்கள் பலியாகின்றனர். இந்த நோயின் பாதிப்புகளிலிருந்து விடுபட நந்தியாவட்டப் பூ உதவுகிறது.

நந்தியாவட்டப் பூவை நிழலில் உலர்த்தி பொடி செய்து தேன் கலந்து தினமும் காலை மாலை என இருவேளையும் உண்டு வந்தால் காச நோயால் ஏற்பட்ட களைப்பு, இருமல் நீங்கும். தேகம் வலுப்பெறும். மேலும் உடலுக்கு வனப்பையும் கொடுக்கும்.

### தலைவலி நீங்க

தலை வலிக்காமல் தலையில் குத்துவது போல் சிலருக்கு தோன்றும். பித்த அதிகரிப்ப மற்றும் தலையில் நீர் கோர்த்துக் கொள்ளுதல் போன்றவையே இதற்குக் காரணம்.

இவர்கள் நந்தியாவட்டப் பூவை அரைத்து நெற்றியில் பற்றுப் போட்டு வந்தால் மண்டைக் குத்து நீங்கும்.

### கண் எரிச்சல் நீங்க

நந்தியாவட்டப் பூவின் சாறுடன் நல்லெண்ணெய் கலந்து கண்களில் விட்டால் கண் எரிச்சல் நீங்குவதுடன் உடல் சூடு தணியும்.

### வெட்டுக்காயம் ஆற

நந்தியாவட்டப் பூவை அரைத்து வெட்டுக் காயத்தின் மீது பற்று போட்டால் காயம் சீழ் பிடிக்காமல் விரைவில் ஆறும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CENFIN GN 12

போல் பெயறிங் - டிறெற் இன்ஜெக்சன் மாதிரிகள்

சென்பின்
கைடிரக்டர்கள்




ஆகக் கூடிய
விற்பனை விலை
ரூ. 205,900/-

- சிறந்த இலகு தவணைக் கொடுப்பனவு முறை
- விற்பனையின் பின் 4 முறைகள் இலவசமான சேவை
- தேவையான அளவு உதிரிப்பாகங்கள்

1 வருட உத்தரவாதம்

இலவசம்
ரக்டர்களோடு பொருந்தக்கூடிய நீர்ப்பம்பிகள்

வியாபாரிகளின் விருப்பம் இதுவே

மேலும் ஒவ்வொரு சென்பின் GN12 இரு சக்கர டிரக்டருடனும் இலவசம்
இரு மட்வீல்கள்
ஆயுதக் கோவை

CREATIVE SERVICES

சென்ரல் பினான்ஸ் பிஎல்ஸி
தொழில்நுட்ப பிரிவு : 313, கொஹொல்வில, களனி.
தொலைபேசி : 011-2914815 / 011-4815672
மற்றும் நாடெங்கிலுமுள்ள கிளைகள் - மட்டக்களப்பு - 065-2227823, மன்னார் - 023-4920727, யாழ்ப்பாணம் - 021-2221608, பொத்துவில் - 063-2248080, வவுனியா - 024-2225813
Inquires: 0777 594475

வாங்குவதற்கு சிறந்த இடம் - சென்ரல் பினான்ஸ்




பியூட்டின்
Beautine

சருமம், தலைமுடி மற்றும் நகங்களிற்கு

"சௌந்தர்யம் உள்ளிருந்து"

World's 1st Solubilised Keratin

(Functional Keratin)
- தோலின் சுருங்கி விரியும் இயல்பையும், வலிமையையும் அதிகரிக்கும்.
- தோல் கலங்களின் பிரிதலையும் புதிய கலங்கள் உருவாதலையும் அதிகரிக்கும்.
- தோலின் திடகாத்திரத் தன்மையை அதிகரிக்கும்.
- தலைமுடியின் மேலணியினுள் உட் சென்று மேல் கவசம் போல் தொழிற்படும்.

Active Nutrient Information

(CoQ10)
- கலங்களின் புத்தாக்கத்தை தூண்டும்.
- தோல் மீளமைப்பில் பங்கேற்பதுடன் தோலில் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைக்கும்.
- தோல் கலங்களினுள் ஊடுருவும்.

(Biotin)
- தோல், தலைமுடி, நகங்கள் ஆகியவற்றன் ஆரோக்கியத் தன்மையை அதிகரிக்கும்.
- தலைமுடிக்கு ஊட்டச்சத்தை வழங்குவதுடன் மயிர்கலங்களுல் ஊடுருவி தலைமுடி உதிர்தலை தடுக்கும்.

(Collagen Hydrolyzed)
- தோலின் ஈரலிப்பு தன்மையை அதிகரிக்கும்.
- தோலின் வழவழப்பு தன்மை மேம்படும்.
- தோலின் சுருங்கி விரியும் இயல்பை அதிகரிக்கும்.
- தோல் சுருக்கத்தை படிப்படியாக குறைக்கும்.

பியூட்டின் என்பது விஞ்ஞான முறையில் நீண்ட கால ஆராய்ச்சிக்குப் பின் சர்வதேச ரீதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட மூலப்பொருட்களைக் கொண்டு உத்தரவாதம் மிக்க பெறுபேறுகளை தரக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இது தனித்துவமான போசனைக்கூறுகளை கொண்டு சருமம், தலைமுடி மற்றும் நகங்களிற்கு போசனையையும் பாதுகாப்பையும் உள்ளிருந்து வழங்குவதுடன் அவற்றை ஆரோக்கியமாக பராமரிக்கின்றது. இவ்வாறாக பியூட்டின் சருமத்தில் பயன்படுத்தப்படும் கிறீம்களை போலல்லாது ஆழமாக தொழிற்பட்டு சிறந்த பெறுபேறுகளை வழங்குகின்றது.

For More Information : beautine@astron.lk
011 5238163

Astron Estd. 1956
Manufactured & Marketed by:
ASTRON LIMITED, 688, Galle Road, Ratmalana. Tel : 011 2636741 / 011 5566741
Fax : 011 2636173 E-mail : astron@astron.lk Web : www.astron.lk

www.ideabase.us

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக மூலிகை வல்லாரை

பிரம்மி என்று அழைக்கப்படும் வல்லாரைத் தாவரம் தரையில் படர்ந்து பரவும். படரும் தண்டிலுள்ள கணுக்களிலிருந்து வேர்கள் புறப்படுகின்றன. ஈரமான இடங்களிலும் நீர்ப்பாசனம் மிகுந்த வயல் வெளிகளிலும் காணப்படுகின்றன. இலைகள் வட்ட வடிவமாக தவளையின் பாதம் போன்ற அமைப்பில் காணப்படும் கீரை வகையைச் சேர்ந்தது.

இதில் இலை பெரிதாக உள்ள இனம், இலை சிறிதாகவும் வேர் மிகுதியாக உள்ள இனம் என இருவகை உண்டு. வேர் மிகுந்து இலை சிறியதாக உள்ள இனம் மருத்துவ குணம் அதிகம் பெற்றிருக்கிறது.

மலேசியர்களும், சீனர்களும் வல்லாரையை விரும்பி உணவுடன் உட்கொள்கிறார்கள். இதிலுள்ள ஆவியாகும் எண்ணெய் தோல் பகுதியில் செயல்பட்டு நன்கு வேலை செய்கிறது. உடலைத் தேற்றும் பலம் தரும். தோல் வியாதியில் இருந்தும் விடுதலை கிடைக்கும். வீட்டுச் சமையலில் இக் கீரையை வாரம் இருமுறை பயமின்றி உபயோகிக்கலாம்.

வல்லாரைக்கு சரஸ்வதி, பண்டீரி, யோகவல்லி, நயனவல்லி, குணசாலி, குளத்து குளத்தி, அசுர சாந்தினி போன்ற வேறு பெயர்களும் உள்ளன.



வல்லாரையில் அதன் இலைதான் மருத்துவ பயன் மிகுதியாக கொண்டவை. நினைவாற்றலும் அறிவுக் கூர்மையும் மேம்படும் பொருட்டு வல்லாரை தொடர்பான மருந்துகளைக் கொடுத்து வந்த தாய் பண்டைய சித்தர் நூல்கள் குறிப்படுகின்றன. மன நோய்க்கு மா மருந்து.

**இதய நோய்கள் நீங்க**

வல்லாரை இலைகள் மூன்று, அக்ரோட் பருப்பு ஒன்று, பாதாம் பருப்பு ஒன்று, ஏலக்காய் ஒன்று, மிளகு மூன்று, கற்கண்டு பத்து கிராம் ஆகியவற்றை அம்மியில் விழுதாய் அரைத்து, அதைப் பாலில் கலந்து காலையும் மாலையும் தொடர்ந்து 21 நாள்கள் சாப்பிட்டு வர இதய நோய்கள் மாயமாய் மறையும்.

**படை, அரிப்பு, சிரங்கு குஷ்டம் மறைய**

கால் கிலோ புழுங்கல் அரிசியை ஊற வைத்து வடித்து, அத்துடன் ஒரு கைப்படி அளவு வல்லாரை இலைகளையும், ஐந்து மிளகையும் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். தேவையான அளவில் சின்ன வெங்காயம் நறுக்கிச் சேர்த்து, அந்த மாவில் ரொட்டி போல் சுட்டு சாப்பிட்டு வர, படை, நமைச்சல், தோல் நோய்கள், குஷ்டம் போன்றவை விலகும்.

**நினைவாற்றல், ஞாபகசக்தி பெற**

வல்லாரை இலையைக் காயவைத்து அரை கிலோ அளவில் எடுத்துக் கொள்ளவும். இத்துடன் 50 கிராம் சீரகம், ஐந்து கிராம் மஞ்சள் சேர்த்துத் தூள் செய்து சலித்து வைத்துக் கொள்ளவும். இதில் காலை, மாலை உணவுக்கு முன்பாக இரண்டு கிராம் அளவில் சாப்பிட்டு, சூடான பசும்பால் அருந்தி வர, அறிவு மேம்படும். நினைவாற்றல் பெருகும். மூளை பலம் உண்டாகும்.

அரை லீற்றர் வல்லாரை இலைச் சாற்றில் கால் கிலோ வாய்விளங்கத்தை ஊறவைத்து, அதை வெயிலில் உலர்த்தவும். இதனைத் தூள் செய்து வைத்துக் கொண்டு, காலையும் மாலையும் ஒரு கிராம் அளவில் சாப்பிட்டு வர, வலிப்பு குணமாகும். மேலும் வயிற்றுப் பூச்சிகள், கிருமிக் கோளாறுகள் மறையும்.

**காமாலை குணமாக**

அதிகாலையில் வல்லாரை இலைச் சாறு 60 மில்லி லீற்றர் அளவில் குடித்து வர, காமாலை குணமாகும்.

கபம், இருமல் விலக வல்லாரை இலைச்சாற்றில் அரிசியை ஊறவைத்து உலர்த்தித் தூள்செய்து வைத்துக் கொள்ளவும். இதில் நான்கு சிட்டிகை அளவு தேனில் குழைத்து தினமும் இரு வேளை சாப்பிட்டு வர, நாள்பட்ட கபநோய்கள், இரைப்பு, இருமல் ஆகியவை குணமாகும்.

**உடல் வலிமை உண்டாக**

நிழலில் உலர்த்தித் தூள் செய்த வல்லாரைத் தூள் 100 கிராம், அமுக்கரா கிழங்குத்தூள் 100 கிராம் இவை இரண்டையும் ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்ளவும். இதனை இரண்டு கிராம் அளவில் காலை மாலை தேனுடன் கலந்து தொடர்ந்து 48 நாள்கள் சாப்பிட்டு வர, உடல் வலிமை, ஆரோக்கியம் உண்டாகும். இளைத்த உடல் பருக்கும்.

வல்லாரையை இடித்தெடுத்துப் பிழிந்த சாறு அரை லீற்றர் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அரை லீற்றர் இரண்டையும் கலந்து அடுப்பில் வைத்து எரிக்க, அடிமண்டி மெழுகு போல் விரலால் உருட்டும் போது திரளும் பதத்தில் வரும். அப்போது இறக்கி வடிகட்டி தினந்தோறும் தலையில் தடவியும், தேய்த்துக் குளித்தும் வர, மூளைத்தெளிவு, குளிர்ச்சி தந்து நரையைத் தடுக்கும்.

வல்லாரை இலையை பால் கலந்து அரைத்து, விழுதை நெல்லிக்காய் அளவு உண்டு வர நரை, திரை அகலும். இளமைத் தோற்றம் திரும்பும். எந்தவிதமான காய்ச்சலாக இருந்தாலும் வல்லாரை இலையால் செய்யப்பட்ட மாத்திரை குணமாக்கும். இந்த இலையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் யானைக்கால் நோய் நீங்கும் என்று கூறுவார்கள்.

RE

உங்கள் முச்சக்கரவண்டி பஜாஜ் ஆக இருக்கவேண்டியது



ஏன்?

செலவு - மிகக்குறைவு!
எரிபொருள் சேமிப்பு - மிகக் கூடியது!
சத்தம் - மிகக்குறைவு!
சேமிப்பு - மிகக் கூடியது!
தொழிற்பாடு - மிகவும் சிறந்தது!
பாவனைக்காலம் - மிகக் கூடியது!
மீள் விற்பனைப் பெறுமதி - மிகக் கூடியது!
உதிரிப்பாகங்களின் விலை - மிகக்குறைவு!
விற்பனை வலையம் - மிகப்பெரியது!
சேவை முகவர் வலையம் - சிறந்த தொழிற்பாடுடையது!
பூரண நம்பிக்கை - மிகக் கூடியது!
முற்கொடுப்பனவு - மிகக்குறைவு!

முச்சக்கரவண்டியொன்றை கொள்வனவு செய்யும் போது நீங்கள் எதிர்பார்க்கும் எல்லா நடவடிக்கைகளும் அதியுயர் மட்டத்தில் உள்ளது பஜாஜ் முச்சக்கரவண்டி மட்டுமே என்பது இப்பொழுது உங்களுக்கே புரிந்திருக்கும்.

tradlanka

விலை ரூ. 333,000/-
மேற்குறித்த விலை VAT உள்ளடக்கப்படாததோடு,
முன்னறிவிப்பு எதுவுமின்றி மாறுபடலாம்.

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம் PB270
சென். மார்டின்ஸ் டிரேட் சென்டர், பிரதான வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே: 021-7700600-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெயிலிருந்து உங்கள் சருமத்தை பாதுகாக்க

* சூரியனில் இருக்கும் யூ.வி. கதிர்கள் முகத்தில் படுவதால் தான் தோல் பாதிக்கப்பட்டு கருமை நிறமாகிறது. இதைத் தடுக்க கடல்பாசி, சந்தன எண்ணெய், பன்னீர் மூன்றையும் சில துளிகள் கலந்து தடவினால் தோல் அழகு பெறும். சாதிக்காயும், சந்தன பவுடரும் கூடக் கலந்து போடலாம்.
* பாலுடன் எலுமிச்சை சாறு கலந்து, அதனுடன் சிறிதளவு சர்க்கரையை சேர்த்து, முகத்தில் பூசவும். அரைமணி நேரம் கழித்து, வெந்நீரில் கழுவினால் முகம் பளபளக்கும்.
* கசகசாவை ஊற வைத்து அரைத்து முகத்தில் தடவவும். காய்ந்ததும் கழுவினால் முகத்தில் சுருக்கம் விழாமல் பாதுகாக்கலாம்.
* பப்பாளிச் சாற்றை முகத்தில் தடவினால், வியர்க்குரு, கொப்பளங்கள் மறைந்து முகம் பளபளக்கும்.
* கொத்துமல்லி இலையை அரைத்து பூசினால் முகம் வசீகரமாக மாறும்.
* எல்லா வித பழங்களும் முகத்துக்கு நல்லது. அவற்றை மசித்து முகத்தில் பூசினால் முகம் உடனுக்குடன் சுத்தமடைந்து பளபளப்பாய் காட்சி தரும்.
* தக்காளி சாறு தடவி வந்தால் சருமத்தை மிருதுவாக்கி ஒளிரச் செய்யும்.
* கசகசாவை மூன்று அல்லது நான்கு கரண்டி எடுத்து அரைத்து வடித்த கஞ்சி அல்லது தயிரில் போட்டுக் கலக்கி உடம்பில் தேய்த்துக் குளித்துவர, சரும அரிப்பு, உடல் வெப்பம் போன்ற தொல்லைகள் தீரும்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமிட் கட்டமைப்புக்களைப் போன்ற தடை செய்யப்பட்ட திட்டங்கள்

# உங்களை அழிவடையச் செய்யும்

## பிரமிட் கட்டமைப்பைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றுதல் சட்ட விரோதமானதாகும்

### "தடைசெய்யப்பட்ட திட்டம்" என்பது யாது ?

- தடைசெய்யப்பட்ட திட்டம் என்பது அதில் பங்குபற்றுபவர்கள் பணத்தினை அல்லது பணப் பெறுமதியினைச் செலுத்துவதற்கு அல்லது பங்களிப்புச் செய்வதற்கு வேண்டிக்கொள்ளப் படுவதுடன் அதில் பெறப்படும் நன்மைகள், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 83C பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி
  1. திட்டத்தில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுதல், அல்லது
  2. பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரித்துச் செல்லுதல் என்பவற்றில் பெருமளவில் தங்கியிருக்கும் ஓர் கட்டமைப்பாகும்.
- இதன் அடிப்படையில் திட்டத்தில் புதிய பங்குபற்றுபவர்கள் இணைந்து கொள்வதற்கு முற்பணமாக ஓர் கட்டணத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக பங்குபற்றுபவர்களின் மூலமாகவும் அதேநேரம் தற்போதுள்ள பங்குபற்றுபவர்களினால் கொண்டு வரப்படும் புதிய பங்குபற்றுபவர்கள் மூலமாகவும் தான் இலாபங்கள் (பணம் அல்லது ஏனைய சலுகைகள்) கிடைக்கும் என பங்குபற்றுபவர்களுக்கு பின்னர் உறுதியளிக்கப்படுகின்றது. எனினும், இத்திட்டங்களானது பெருமளவில் பொருட்கள் அல்லது சேவைகளினை விற்பனை செய்யும் திட்டங்களாக போலியான முறையில் காணப்படுகின்றன.



**பிரமிட் தன்மையைக் கொண்ட திட்டங்கள் வங்கி தொழில் சட்டத்தின் 83C பிரிவின் கீழ் சட்ட விரோதமானதாகும். மேலும், சில கொடுப்பனவுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் பணத்தைத் தூயதாக்கல் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படலாம்.**

**இப்படியான திட்டங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆரம்பித்தல், வழங்குதல், ஏற்பாடு செய்தல், விளம்பரப்படுத்தல், கொண்டு நடத்துதல், நிதியிடுதல், நிர்வகித்தல் அல்லது நெறிப்படுத்துதல் என்பனவும் சட்ட விரோத செயல்களாகும்.**

### தடைசெய்யப்பட்ட திட்டங்களை வேறுபடுத்திக் காண்பதற்கான அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. **திட்டத்தின் இயல்பு** - இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு திட்டத்தின் ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை பொருட்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் பணத்தினை முதலீடு செய்வதற்கு வேண்டுகிறார்கள் என்பதுடன் பின்னர் அப்பொருட்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் இத்திட்டத்திற்கு மேலதிக பங்குபற்றுபவர்களைக் கொண்டு வருமாறும் வேண்டப்படுகின்றனர்.
2. **வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தைப்படுத்தல் இயலுமை** - சந்தையில் இப்பொருட்கள் அல்லது சேவைகளுக்கு பலமான கேள்வி இல்லாதிருப்பதுடன் ஊக்குவிப்பாளர்களினூடாக மட்டுமே இவை கிடைக்கக் கூடியதாகவும் இருக்கின்றன.
3. **உயர் நுழைவுக் கட்டணம்** - இத்திட்டத்தில் சேர்வதற்கான நுழைவுக் கட்டணம் பெரும்பாலும் உயர்வாகவே இருக்கின்றது. இது ஊக்குவிப்பாளர்களினால் வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலையினூடான கட்டணமாக விதிக்கப்படலாம்.
4. **இரண்டாந்தரச் சந்தையும் விற்பனைக்குப் பிந்திய சேவையும்** - இப்பொருட்களுக்கு இரண்டாந்தரச் சந்தை இல்லாதிருப்பதுடன், விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விற்பனைக்குப் பிந்திய சேவைகளுக்கான உத்தரவாதம் ஊக்குவிப்பாளர்களினால் ஒரு போதும் வழங்கப்படுவதில்லை.
5. **நிதி வருமானங்கள்** - பங்குபற்றுபவர்களால் விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான தரகு அவர்களுக்கு வழமையாக வழங்கப்படுவதில்லை. ஆனால் அதிகூடிய வருமானங்களைப் பெற்றுக் கொள்வதானால் புதிய பங்குபற்றுபவர்களை சேர்த்துக் கொள்ளுதல் வேண்டுமென்று அறிவுரை வழங்கப்படுகின்றது. ஒரு பங்குபற்றுபவரின் நிதி வருமானங்கள் அவரினால் கொண்டு வரப்படும் புதிய ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கையிலேயே தங்கியிருக்கின்றது.
6. **மீண்டும் வாங்கும் கொள்கை** - வாங்கிய பொருட்கள் மீள் விற்பனைக்குரிய தன்மையினைக் கொண்டிருப்பினும் ஊக்குவிப்பாளர்கள் இத்திட்டத்திலிருந்து விலகிய பங்குபற்றுபவர்களின் எஞ்சியிருக்கும் இருப்புக்களை மீண்டும் வாங்கும் கொள்கை ஒன்றைக் கொண்டிருப்பதில்லை.
7. **பொருட்களின் விற்பனையில் கவனம் செலுத்துதல்** - இறுதி நுகர்வோருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை சில்லறையாக விற்பனை செய்யும் நோக்கம் இத்திட்டத்தில் சிறிதளவாகவே காணப்படுகின்றது.
8. **திட்டத்தைப் பற்றிய தகவல்கள்** - பொதுவாக ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர்கள் திட்டத்தின் கம்பனி பற்றிய வதிவிடம், வீதி, விலாசம், அல்லது தொலைபேசி இலக்கம் என்பவற்றை வெளிப்படுத்துவதில்லை.
9. **நம்பமுடியாத வருமானங்கள் பற்றிய தவறான உறுதிகள்** - ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர் நம்பமுடியாத வருமானங்கள் (உ-ம் "சட்டரீதியாக மாதாந்தம் ரூ.100,000 இனைப் பெறுதல்") அல்லது "வளமானதும் சந்தோசமானதுமான வாழ்க்கை", "இலகுவாக புதிய ஆட்களை சேர்த்துக் கொள்ளமுடியும்" போன்ற நன்மைகளைப் பெறமுடியும் என உறுதிகளை அளிக்கின்றனர்.
10. **இணையுமாறு நிர்பந்தித்து ஊக்குவித்தல்** - வழமையாக ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை கம்பனி அல்லது பொருட்கள்/ சேவைகள் பற்றிய போதியளவு விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்காமல் ஒப்பந்தங்களுக்குள் நுழைவதற்கு நிர்ப்பந்திக்கிறார்கள்.
11. **பயிற்சிகளும் விற்பனை உதவிகளும்** - ஊக்குவிப்பாளர் விற்பனை மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பான பொருத்தமான முன்னெடுத்துச் செல்லும் பயிற்சிச் சந்தர்ப்பங்களை அவனுடைய/ அவளுடைய புதிய பங்குபற்றுபவர்களிற்கு வழங்குவதில்லை.
12. **திட்டத்தின் எதிர்காலம்** - திட்டத்தின் அடிமட்டத்திலிருக்கும் புதிய பங்குபற்றுபவர்கள் புதிய ஆட்சேர்ப்புக்களைச் செய்யமுடியாத நிலை எழும்போது அவர்கள் தமது முதலீட்டை இழக்க வேண்டி நேரிடும் என்பதுடன் அத்திட்டம் முறிவடையும் நிலையையும் அடையும்.
13. **செயற்பாட்டுப் பிரதேசங்கள்** - செயற்பாட்டுப் பிரதேசங்கள், பிரிவு அல்லது செயற்களம் தொடர்பான நியாயமான ஓர் திட்டத்தை கொண்டில்லாதிருப்பதுடன், ஊக்குவிப்பாளர்கள் பொதுவாக எந்தவொரு நியாயமான அல்லது பகுத்தறிவான வரையறைகள் இல்லாமல் அதிகரித்த ஆட்சேர்ப்புக்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.

### குற்றவாளிகளுக்கு சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் தண்டனை மிகவும் கடினமானதாகும்.

மேற்குறிப்பிட்ட செயல்கள் மூலம் ஏதாவது ஒரு நபர் இப்படியான தடைசெய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றிய குற்றவாளியாகக் கண்டு பிடிக்கப்பட்டால் அவர் பின்வருவனவற்றிற்கு உட்படுவார்.

- மூன்று வருடங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை அல்லது
- ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத அபராதம் அல்லது
- சிறைத் தண்டனை மற்றும் அபராதம்

மற்றைய ஒரு நபருக்கு இழப்பு அல்லது தீமையை உண்டுபண்ணும் விதத்தில் குற்றங்களானது சுய விருப்பத்தினுடன் அல்லது தெரிந்து கொண்டு புரியப்பட்டிருந்தால் அதற்கான தண்டனை

- மூன்று வருடங்களுக்கு குறையாத மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத கடூழியச் சிறைத் தண்டனை மற்றும்
- இரண்டு மில்லியன் ரூபா அபராதம் அல்லது திட்டத்தில் பற்குபற்றுபவர்களிடம் இருந்து பெறப்பட்ட இலங்கை நாணயத்தின் முழுத் தொகையின் இருமடங்கு என்பவற்றில் ஆகக் கூடிய தொகையைக் கொண்ட அபராதம்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு
தொலைபேசி: 2477100, 2477105, 2477120, 2477129
தொலைநகல்: 2477712 மின்னஞ்சல்: banksup@cbsl.lk

CENTRAL BANK OF SRI LANKA
60 growth & stability
1950 - 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

STUDY & WORK IN CZECH REPUBLIC

(Schengen Country)
B.A in business management - INTAKE 2011

மேற்குறிப்பிடப்பட்ட கற்கை நெறியை "செக் குடியரசில்" தொடர November மாதத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்வரும் தகைமைகள் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

- G.C.E O/L (குறைந்தது 3 சித்திகள் அல்லது அதற்கு மேல்)
- வயது எல்லை 18-30 வரை
- IELTS தேவையில்லை.
- விண்ணப்பித்து 2 வாரங்களில் ADMISSION பெற்றுத்தரப்படும்.

நிபந்தனைகளுக்குட்பட்டது*

மேலதிக விபரங்களுக்கு
INTERNATIONAL BUSINESS ACADEMY (PVT)LTD.
#30/5, Hampden Lane, Wellawatte, Colombo - 06.
Mobile: 077 489 3032 / 077 4362300 (9.am-5.pm Only) Tel: 0112 367 100
Fax: 0112 367 099 E-mail: info@ibalanka.com Web: www.ibalanka.com
FLEX Graphic

# பசியைத் தூண்டும் பாகற்காய்



இது சூடு உண்டாக்கும். இதில் கொம்பு பாகற்காய், மிதி பாகற்காய் என இரண்டு வகைகள் உண்டு. இது உணவுப் பையிலுள்ள பூச்சியைக் கொல்லும். பசியைத் தூண்டும், பித்தத்தைத் தணிக்கும். பெண்களுக்கு தாய்ப்பால் சுரக்க உதவும். இதனுடன் புளி சேர்த்துக் கொண்டால் நல் லது. இதை அவ்வப்போது உணவில் சேர்த்துக் கொண்டால், சுரம், இருமல், இரைப்பு, மூலம், வயிற்றுப் புழு என்பன நீங்கும். நீரழிவு வியாதி உள்ளவர்கள் இதை உட்கொள்வது நல்லது.

பாகற்காயின் கசப்பு விஷம் இல்லை. நம் உடல் தனக்கு வேண்டிய அளவு இதன் சத்தை எடுத்துக் கொண்டு மிகுதியைக் கழிவுப் பொருளாக வெளியே தள்ளி விடும். இது எளிதில் ஜீரணமாகாது என்றாலும் கபம், பித் தம், குஷ்டம், மந்தம், காமாலை ஆகிய கொடிய நோய்களை எளிதில் போக்கும்.

ரன் one
ரன் வன்
ரூ.45,000/=
24 K

உங்கள் தங்க நகைகளுக்கு
அதிகூடிய கடன்
மற்றும்
தங்க நகைகளை இலவசமாக
மீட்டுக்கொள்வதற்குப் பொன்னான வாய்ப்பு!

மாதாந்தம் ரூ.10,000 வரை வெல்லுங்கள்
3 மாதங்களுக்கு ஒரு தடவை ரூ.100,000 வரை வெல்லுங்கள்

நிபந்தனைகளுக்கு உட்படும்

யூனியன் வங்கி

தலைமை அலுவலகம்: 15ஏ, அல்பிரட் பிளேஸ், கொழும்பு 03. Tel: (011) 2374100 www.unionb.com


நிலையான
வைப்புகளுக்கு
மிகக் கூடுதலான
வட்டி வீதங்கள்

01 ஆண்டு
9.5%+
*AER 9.5%

ரூ.1 மில்லியனுக்கு மேற்பட்ட வைப்புகளுக்கு விசேட வட்டி வீதங்கள்

யூனியன் வங்கி

தலைமை அலுவலகம்: 15ஏ, அல்பிரட் பிளேஸ், கொழும்பு 03. Tel: (011) 2374100 www.unionb.com



அழகானதோர் வாழ்க்கை உங்களுக்கும் உள்ளது அது எமக்குப் புரிகிறது....

மற்றைய வாகனங்களுக்குக் கிடைக்கும் புல் ஒப்ஷன் சேவையினைப் போன்றே, மோட்டார் சைக்கிள் செலுத்தும் உங்கள் வாழ்க்கைக்கும் வேறெந்த காப்புறுதிகளிலும் கிடைக்காத அரிய வாய்ப்புகள் ஏராளம். உங்களுடனும் உங்கள் குடும்பத்தினருடனும் வழித்துணையாக வர ஜனசக்தியிலுள்ள நாம் தயாராகவுள்ளோம்.

JANASHAKTHI FULL OPTION
வாழ்க்கைப் பயணத்தின் வழித்துணை

- மோட்டார் சைக்கிள் செலுத்துகையில் அகால மரணம் ஏற்பட்டால் ரூ.100,000/-
- ரூ. 50,000/- வரை வைத்தியசாலைக் கட்டணம்
- தலை கவச பாதுகாப்புக் காப்புறுதி - இலவசம்
- திடீர் விபத்து நேரிட்டால் ரூ. 100,000/- (காப்புறுதியாளருக்கு)
- 24 மணிநேர வாடிக்கையாளர் சேவை
- விபத்து நடந்த இடத்திலேயே அங்கீகாரம்
- நாடளாவிய கராஜ் வலையமைப்பு
- மேலும் பல சலுகைகள் ஏராளம்

அழையுங்கள் 0112 303 300

JANASHAKTHI INSURANCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்தன் சேமிப்பு பரிசு மழை

## எல்லா சேமிப்பு கணக்குகளுக்கும் பரிசுகள்

எப்போதும் சிறந்ததையே வழங்கும் DFCC வர்தன வங்கி இப்போது நீங்கள் சேமிக்கும் பணத்திற்கு பெறுமதிமிக்க பரிசில்களை வழங்குகின்றது. நீங்கள் செய்யவேண்டியது மெகா போனஸ் சேமிப்பு கணக்குகளையோ அல்லது வர்தன யூனியர் சிறுவர் சேமிப்பு கணக்குகளையோ ஆரம்பிப்பது மட்டுமே. நீங்கள் ஏற்கனவே மெகா போனஸ் சேமிப்பு கணக்கு அல்லது வர்தன யூனியர் சிறுவர் சேமிப்பு கணக்கு வைத்திருப்பவராயின் சேமிக்க வேண்டிய தொகையை வைப்பு செய்வதன் மூலம் உங்கள் சேமிப்பு மீதியை அதிகரித்து பரிசை பெற முடியும்.

### Mega போனஸ் சேமிப்பு கணக்கு வைத்திருப்பவர்களுக்கு...



மெகா பாக்
ரூ. 5,000
வைப்புகளுக்கு

லஞ்ச் பாக்
ரூ. 10,000
வைப்புகளுக்கு

பெரிய குடை
ரூ. 25,000
வைப்புகளுக்கு

ரவலிங் பாக்
ரூ. 50,000
வைப்புகளுக்கு

மின் கேத்தல்
ரூ. 100,000
வைப்புகளுக்கு

### வர்தன Junior சிறுவர் சேமிப்பு கணக்கு வைத்திருப்பவர்களுக்கு...



யூனியர் உண்டியல்
ரூ. 1,000 வைப்புகளுக்கு

யூனியர் குடைகள்
ரூ. 5,000 வைப்புகளுக்கு

ஸ்டிக்கி போல் அல்லது தொப்பிகள்
ரூ. 10,000 வைப்புகளுக்கு

யூனியர் பாடசாலை பாக்
ரூ. 20,000 வைப்புகளுக்கு

யூனியர் சைக்கிள் அல்லது பரிசு வவுச்சர்
ரூ. 100,000 வைப்புகளுக்கு



எலக்ரோன் பிரைன் பொக்ஸ் அல்லது ஒக்ஸ்போட் டிக்சனெரி
ரூ. 150,000 வைப்புகளுக்கு

மெலோடிக்கா அல்லது பரிசு வவுச்சர்
ரூ. 50,000 வைப்புகளுக்கு

யூனியர் கை கடிகாரம் அல்லது அழகிய சுவர் கடிகாரம்
ரூ. 30,000 வைப்புகளுக்கு



**விரையுங்கள் இன்றே அருகில் உள்ள வர்தன வங்கி கிளைக்கு**

கையிருப்பு உள்ளவரை மட்டுமே. நிபந்தனைகளுக்கு உட்பட்டது

மேலதிக விபரங்களை பெற அழையுங்கள்:
**011 2663888**

Fitch Rating: DFCC Vardhana Bank AA- (lka)

Mega போனஸ் சேமிப்புக் கணக்கு

DFCC வர்தன வங்கி

வர்தன் Junior

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் இளமைக்கு ஒரேஞ்

என்றும் இளமையுடன் வாழ எவருக்குத்தான் ஆசை இருக்காது. தற்போது 20 வயது இளைஞன் கூட நாற்பது வயது அடைந்தவன் போல் காட்சி அளிக்கின்றனர். தலைமுடி நரைக்கிறது. தோலில் சுருக்கம் ஏற்படுகிறது. கண்கள் குழிவிழுந்து காணப்படுகின்றன. நல்ல திடகாத்திரமான இளைஞர்களை இன்று காணமுடியவில்லை. இதற்குக் காரணம் இராசயனம் கலந்த உணவுகள், அரைவேக்காட்டு உணவுகள், பதப்படுத்தப்பட்ட உணவுகள், குளிரூட்டப்பட்ட உணவுகள், சத்தற்ற உணவுகள், உடலுக்குத்தேவையான உடற்பயிற்சி இல்லாமை போன்றவையே.

உடற்பயிற்சி செய்வதுடன் உடலுக்குத் தேவையான சத்துக்களை நேரடியாகக் கொடுக்கும் பழங்களையும், பழச்சாறுகளையும் சாப்பட்டு வந்தால் உடலை என்றும் இளமையாக வைத்திருக்கலாம். எங்கும் எப்போதும் கிடைக்கும் ஒரேஞ் பழச்சாறின் மருத்துவக் குணங்களையும், அதன் சத்துக்களையும் அறிந்துகொள்வோம். சில உணவுகள் சாப்பிட்டதும் அவை உடலில் சில மாற்றங்களை உண்டுபண்ணி பித்த நீரை அதிகம் சுரக்கச் செய்கின்றன. இதனால் உடலில் உள்ள செல்களின் செயல்பாடுகள் முடக்கப்படுகின்றன.

இந்த பித்த நீர் இரத்தத்தில் கலந்து இரத்தத்தில் உள்ள இரும்புச் சத்துக்களை அழித்துவிடுகிறது. இதனால் இரத்தம் அசுத்தமடைகிறது. பித்த நீர் தலைக்கேறி கண் பார்வை நரம்புகளை பாதிப்படையச் செய்கிறது. மேலும் ஞாபக மறதி ஏற்படுகிறது. சருமம் பாதித்து சுருங்கச் செய்கிறது. தலைமுடி நரைக்கச் செய்கிறது.

இதுபோல் இனிப்பு மற்றும் கொழுப்பு உணவுகளை 300 கலோரி அளவு சாப்பிட்ட பிறகு ஒரு மணி நேரம் கழித்து இரத்தத்தை பரிசோதித்துப் பார்த்தால் பபித்த நீர் அதிகம் சுரந்து இரத்தத்தில் கலந்திருப்பதை கண்டறியலாம்.இந்த பித்த நீர் அதிகம் சுரப்பதைத் தடுக்கவும், உடலுக்குத் தேவையான அனைத்து சத்துக் களையும் தரும் பழச் சாறுகளில் ஒரேஞ்சும் ஒன்று.

ஒரேஞ் பழச்சாறு சாப்பிட்டவர்களின் இரத்தத்தில் பித்த நீரில் அளவு குறைவாக இருக்கிறது.

ஒரேஞ் சாறில் உள்ள விட்டமின் சி, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடலை புத்துணர்வுடன் இருக்கச் செய்கிறது. இதனால் உடலில் அணுக்கள் நன்கு செயல்பட ஆரம்பிக்கும்.

Mahindra Powerol
powered efficiently
Mahindra ஜெனரேட்டர்கள்
நம்பகரமான சக்தி




Mahindra Powerol DG ஜெனரேட்டர்கள் உங்களுக்கான வினைத்திறன் மிக்க மின்சக்தியை வழங்குவதற்கு பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது பல ஆண்டுகள் சிக்கலில்லாமல் செயலாற்றுவதோடு ஹேலீஸ் நிறுவனத்தால் உத்தரவாதமிக்க விற்பனைக்கு பிந்திய சேவையினையும் வழங்குகின்றது.

உயர்ந்த எரிபொருள் சிக்கனம், மிகக்குறைந்த பராமரிப்புச்செலவு, உயர் நம்பகத்தன்மை, பணத்திற்கேற்ற பெறுமதி


Power Engineering Solutions (Pvt) Ltd
#180/3 Deans Road
Colombo 10.
Tel: 2674573 Fax: 2699242
E-mail:sales@pes.hayleys.com
HOTLINE : 2674573

GANGA®
COATED STEEL ROOFING & WALL SOLUTIONS
www.gangaroof.com



வர்ணமயமான நாட்டிற்கு
பல்வர்ண கங்கா
உங்கள் இல்லத்தை மேலும் பரவலான வர்ணங்களினால் மெருகூட்டுங்கள், இவை எக் காலநிலைக்கும் சூழலிற்கும் பொருத்தமானது
ரூ.165.00 தொடக்கம்
Product of: TRADESMANN

சென்ட்ரல் பினான்சின்
மாபெரும்
வாகன சந்தை



செப்டெம்பர் 23, 24 மற்றும் 25ம் திகதிகளில்
யாழ்ப்பாணம்
நகர சபை மைதானத்தில்
(சுப்பிரமணியம் சிறுவர் பூங்கா எதிரில்)
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
அனுமதி இலவசம்

மக்ஸிமோ ட்ரக் முதல் கொடுப்பனவு ரூ. 99,000/-* காப்புறுதி இலவசம்
டாடா நனோ முதல் கொடுப்பனவு ரூ. 99,000/-*
டிமோ பட்டா முதல் கொடுப்பனவு ரூ. 99,000/-* காப்புறுதி இலவசம்
மைக்றோ பண்டா முதல் கொடுப்பனவு ரூ. 150,000/-*
திரீ வீல் குத்தகை

* ஜப்பான், இந்தியா மற்றும் சீன உற்பத்திகளான பதிவு செய்யப்பட்டதும் பதிவு செய்யப்படாததுமான மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டி, கார்கள், வேன்கள், ட்ரக், ட்ரக்டர்கள், லொறி உட்பட அனைத்துவிதமான வாகனங்களுக்கு லீசிங் வசதி செய்து கொள்ளவும் வாகனங்களை விலைக்குப் பெற்றுக்கொள்ளவும் வாருங்கள்.
* இந்த நாட்டிற்கு வாகனங்களை இறக்குமதி செய்து விநியோகிக்கின்ற அனைத்து முக்கிய விற்பனை பிரதிநிதித்துவ நிறுவனங்களின் பங்களிப்பு.
* குறைந்த பட்ச மாதாந்த தவணையில் கொடுப்பனவு வசதி.
* துரித ஒருநாள் சேவையின் மூலமாக அன்றைய தினத்திலேயே வாகனத்தை எடுத்துச் செல்லக்கூடிய சந்தர்ப்பம்.
* முச்சக்கரவண்டி, மக்ஸிமோ ட்ரக், டாடா நனோ, மைக்றோ பண்டா, மற்றும் டிமோ பட்டாவுக்கு விசேட குத்தகை வசதி.

சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
இல. 364, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி 021 222 1608 / 021 222 1942
சுஜீவ் 0779 266382

பஜாஜ்
அசல் உதிரிப்பாகங்களை
SMS மூலம்
உடனே கண்டறியுங்கள்!



பஜாஜ் அசல் உதிரிப்பாகங்களை இலகுவாக கண்டறிவதற்காக, நவீன தொழில்நுட்பத்தில், வாடிக்கையாளர்களாகிய உங்களுக்காக புதியதொரு ஸ்டிக்கர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
நீங்கள் கொள்வனவு செய்யும் உதிரிப்பாகங்களை அசல் உதிரிப்பாகங்கள் என உறுதிபடுத்திக்கொள்ள, இந்த ஸ்டிக்கரில் சுரண்டும் பகுதியிலுள்ள இலக்கத்தை 0777 665577 இற்கு SMS செய்யுங்கள்.
ரூ. 5/- இலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கை மருத்துவம்

### நெஞ்சுச் சளி

தேங்காய் எண்ணெயில் கற்பூரம் சேர்த்து நன்கு சுடவைத்து ஆர வைத்து நெஞ்சில் தடவ சளி குணமாகும்.

### தலைவலி

ஐந்தாறு துளசி இலைகளும் ஒரு சிறு துண்டு சுக்கு, 2 லவங்கம், சேர்த்து நன்கு அரைத்து நெற்றியில் பற்றாகப் போட்டால் தலைவலி குணமாகும்.

### தொண்டை கரகரப்பு

சுக்கு, பால் மிளகு, திப்பலி, ஏலரிசி ஆகியவற்றை வறுத்து பொடி செய்து தேனில் கலந்து சாப்பட தொண்டை கரகரப்பு குணமாகும்.

### தொடர் விக்கல்

நெல்லிக்காய் இடித்து சாறு பழிந்து, தேன் சேர்த்து சாப்பட்டால் தொடர் விக்கல் தீரும்.

### வாய் நாற்றம்

சட்டியில் படிகாரம் போட்டு காய்ச்சி ஆறவைத்து அதனை ஒரு நாளைக்கு மூன்று வேளை வாய் கொப்பளித்து வந்தால் வாய் நாற்றம் போகும்.

### உதட்டு வெடிப்பு

கரும்பு சக்கையை எடுத்து எரித்து சாம்பலாக்கி, அதனுடன் வெண்ணெய் கலந்து உதட்டில் தடவி வர உதட்டு வெடிப்பு குணமாகும்.

### அஜீரணம்

ஒரு டம்ளர் தண்ணீரில் கருவேப்பலை, இஞ்சி, சீரகம், மூன்றையும் கொதிக்க வைத்து ஆறவைத்து வடிகட்டி குடிக்க அஜீரணம் சரியாகும்.

### குடல்புண்

மஞ்சளை தணலில் இட்டு சாம்பல் ஆகும் வரை எரிக்க வேண்டும். மஞ்சள் கரி சாம்பலை தேன் கலந்து சாப்பிட குடல் புண் ஆறும்.

### வாயுத் தொல்லை

வேப்பம் பூவை உலர்த்தி தூளாக வெந்நீரில் உட்கொள்வதினால் வாயு தொல்லை நீங்கும். ஆறாத வயிற்றுப்புண் நீங்கும்.

# செல்போனை பயன்படுத்தும் முறைகள்

தற்போது எந்த நேரமும் செல்போனும் கையுமாக (காதுமாக?) இருப்பவர்களை அதிகம் காண முடிகிறது.

செல்போன்களை அதிகம் பயன்படுத்தினால் கழுத்தில் வலி ஏற்படும் என்று எச்சரிக்கிறார்கள் மருத்துவர்கள்.

இந்தப் பாதிப்பு, செல்போனை அதிகம் பயன்படுத்துவோருக்கு, குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு அதிகம் ஏற்படு கிறது என்கிறார்கள் அவர்கள்.

குனிந்து செல்போனையே பார்த்துக் கொண்டிருப்பதால் அந்தத் தோற்றத் துக்கு ஏற்ப முதுகு எலும்புகளும், தசைகளும் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டி யிருக்கிறது.

கழுத்து வளைவு, ஆதரவுத் தசைகள், மெல்லிய இணைப்புகளில் ஏற்படும் மாற்றம், கடைசியில் தசைகளில் வீக்கத்தை யும், வலியையும் ஏற்படுத்துகிறது என் கிறார்கள் மருத்துவர்கள்.

இன்றைய நவீன யுகத்தில் செல்போன் போன்ற உபகரணங்களைப் பயன்படுத்து வது தவிர்க்க முடியாது என்றபோதும், அவற்றால் உடல்நலத்துக்கு ஏற்படும் பாதிப்பை குறைத்துக்கொள்ள முயற்சிக்க லாம் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

அதாவது கையில் உள்ள உபகரணத்தை நாம் பார்க்கும் விதத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். தலையைக் குனிந்து செல் போனைக் கேட்கவோ, குறுந் தகவல் களைத் தட்டி அனுப்பவோ செய்யாமல் முகத்துக்கு நேராகப் பிடித்தபடி அவற்றைச் செய்ய வேண்டும். அதிக நேரம் தலை குனிந்திருப்பதைத் தவிர்க்க வேண்டும்.

அப்படியே இருந்தாலும் இடையிடையே கழுத்தை நிமிர்த்தி ரிலாக்ஸ் செய்து கொள்ள வேண்டும் என்கிறார்கள்.

சில மாற்றங்கள் மூலம் நீங்கள் உங்களின் ஆரோக்கியம், முதுகு கழுத்து எலும்பு மற் றும் தசைகளின் ஆயுள்காலத்தைக் காத்துக் கொள்ளலாம் என்று மருத்துவ ஆய்வாளர் கள் கூறுகிறார்கள். பொதுவாக செல்போன் பித்தர்கள் தங்களை மறந்து அதில் மூழ்கிவிடுகிறார்கள். அவர்கள் இனி கொஞ்சம் ஜாக்கிரதையாக இருந்தால் நல்லது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருமருந்து துளசி



துளசியை அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. பலரது வீடுகளின் துளசி மாடம் அமைந்துள்ளதை இன்றுகூட நாம் காணலாம்.

துளசி இடியைத் தாங்கும் சக்தி கொண்டது என அறிவியல் அறிஞர்கள் அண்மையில் கண்டறிந்துள்ளனர். இதனால் தானோ என்னவோ வீடுகளில் துளசி வளர்த்திருப்பார்கள் என தோன்றுகிறது.

துளசியின் மணம் உடலுக்கு உற்சாகத்தைக் கொடுக்கக் கூடியது.

இதற்கு அரி, இராம துளசி, கிருஷ்ண துளசி, திருத்துளாய், துளவு, குல்லை, வனம், விருத்தம், துழாய், மாலலங்கர் என பல பெயர்கள் உண்டு. இதில் நற்றுளசி, செந்துளசி, நாய்த்துளசி, நிலத்துளசி, கல்துளசி, முள்துளசி, கருந்துளசி என பல வகைகள் உள்ளன.

துளசியை பொதுவாக தெய்வீக மூலிகை என்றே அழைப்பார்கள். கற்ப மூலிகைகளில் இதற்கு தனிச்சிறப்பு உண்டு. இந்து மதத்தினர், இலட்சுமி தேவியின் அம்சமாகவே எண்ணி இதனை வழிபடுகின்றனர்.

### பயன்கள்

இருதயம், இரத்த நாளங்கள், கல்லீரல், நுரையீரல் ஆகியவற்றை பலப்படுத்தும் தன்மையும் இரத்த ஓட்டத்தை சீராக்கும் தன்மையும், ரத்தத்தில் சர்க்கரையின் அளவை சீர்படுத்தும் தன்மையையும் கொண்டது.

துளசி உடல் சூட்டை சீரான நிலையில் பாதுகாக்கிறது.

நோய் எதிர்ப்புத் தன்மையை அதிகரிக்கிறது.

மன அழுத்தத்தைப் போக்கும்தன்மை கொண்டது.

உடலுக்கு பலத்தைக் கொடுக்கிறது.

இருமல் மற்றும் சுவாச நோய்களுக்கு அரு மருந்தாக பயன்படுகிறது.

கொழுப்பைக் குறைக்கும் தன்மை கொண்டது.

ஜுரத்தைக் குறைக்கும் குணம் கொண்டது.

வயிற்றுப் புண், வாய்ப் புண்களை குணப் படுத்தும்.

துளசியை கற்ப முறைப்படி தினமும் சாப்பிட்டு வந்தால் நோயில்லா பெருவாழ்வு வாழலாம்.

குழந்தைகளுக்கான மார்புச்சளி நீங்க துளசி இலையை சாறு எடுத்து அதனுடன் கற்பூரவல்லி சாறு கலந்து சூடாக்கி தினமும் காலையில் வெறும் வயிற்றில் குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால், குழந்தைகளுக்கு உண்டாகும் மார்புச் சளி, மூச்சு விட முடியாமை, சளியால் மூச்சுத் திணறல் போன்றவை நீங்கும்.

துளசிச் சாறுடன் எலுமிச்சை சாறு சம அளவு சேர்த்து அதனுடன் தேன் கலந்து தொடர்ந்து 48 நாள்கள் சாப்பட்டு வந்தால் நரம்புத் தளர்வு நீங்கி உடல் புத்துணர்வடையும்.

### இரத்த அழுத்தம் குறைய

இரத்த அழுத்தம் உள்ளவர்கள் துளசி இலை, முற்றிய முருங்கை இலை சம அளவு எடுத்து இடித்து 50 மில்லி லீற்றர் அளவு சாறில் 2 சிட்டிகை சீரகப்பொடி சேர்த்து காலை, மாலை என இருவேளை உட்கொள்ள வேண்டும். இவ்வாறு தொடர்ந்து ஒரு மண்டலம் அருந்தி வந்தால் இரத்த அழுத்தம் குறையும். இது சாப்பிடும் காலங்களில், உப்பு, காரம், புளியைக் குறைப்பது அவசியம்.

### உடல் எடை குறைய

துளசி இலைச்சாறுடன் எலுமிச்சம் பழம் சேர்த்து சிறிது சூடாக்கி அதனுடன் தேன் கலந்து, உணவுக்குப் பின் உட்கொண்டால் உடல் எடை குறையும்.

குப்பைமேனி இலையையும், துளசி இலையையும் சம அளவு எடுத்து நிழலில் உலர்த்தி, தூள் செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்த சூரணத்தை தினமும் இருவேளை, வேளைக்கு இரண்டு சிட்டிகை என் எடுத்து நெய்யில் குழைத்து தொடர்ந்து உட்கொண்டால் மூலச் சூட்டால் ஏற்படும் கருப்பு நிறம் மாறும்.

அம்மான் பச்சரிசியுடன், துளசி இலை சம அளவு எடுத்து நன்கு அரைத்து பரு உள்ள இடத்தில் தடவி வந்தால் முகப்பரு மறையும்.

துளசி இலை -9 எண்ணிக்கை, கடுக்காய் தோல் - 5 கிராம், கீழாநெல்லி - 10 கிராம், ஓமம் -5 கிராம், மிளகு - 3 எடுத்து மை போல் அரைத்து மோரில் கலந்து தினமும் மூன்று வேளை கொடுத்து வந்தால், சாம்பல், மண் தின்னும் குழந்தைகள் எளிதில் அவற்றை ஒதுக்கும்.

### தொண்டைக்கம்மல், வலி நீங்க

தினமும் துளசியிலையை காலையில் வெறும் வயிற்றில் பச்சையாக மென்று சாறு இறக்கினால், சளி, தொண்டைக்கட்டு நீங்கும். உடலில் உள்ள நச்சுத்தன்மையும் நீக்கும்.

### சிறுநீரகக் கல் நீங்க

துளசி இலையை ஒரு செப்புப் பாத்திரத்தில் நீர்விட்டு இரவு முழுவதும் ஊறவைக்க வேண்டும். மறுநாள் காலையில் வெறும் வயிற்றில் அந்த நீரை எடுத்து இலையோடு சேர்த்து அருந்தி வந்தால் சிறுநீரகக் கல் படிப்படியாக கரையும். இவ்வாறு ஒரு மண்டலம் அருந்துவது நல்லது. இதனால் இரத்தத்தில் உள்ள தேவையற்ற வேதிப் பொருள்கள், விஷ நீர்கள் சிறுநீர் வழியாக வெளியேறி ரத்தத்தை சுத்தமாக்கும்.

### வாய்ப்புண், வாய் நாற்றம் நீங்க

வயிற்றில் புண்கள் இருந்தால் வாயிலும் புண்கள் உண்டாகும். இதனால் வாய் நாற்றம் வீசும். வாய்ப்புண் ஆற துளசி இலையை பறித்து நீர்விட்டு அலசி, வாயில் வைத்து மென்று மெல்ல மெல்ல சாறினை உள்ளிறக்கினால், வாய்ப்புண் வயிற்றுப்புண் ஆறும். வாய் நாற்றமும் நீங்கும்.

### பல் நோய்கள் தீர

துளசி இலை, புதினா இரண்டையும் சம அளவு எடுத்து நிழலில் உலர்த்தி பொடி செய்து அதனுடன் கிராம்புப் பொடி சேர்த்து தினமும் பல் துலக்கி வந்தால், பற்களின் சொத்தை, பல் ஈறு வீக்கம் மேலும் பற்கள் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களும் தீரும்.

### தலைவலி தீர

ஒரு கைப்பிடி துளசி இலை மூன்று மிளகு, ஒரு துண்டு இஞ்சி எடுத்து நன்கு அரைத்து நெற்றியில் பற்று போட்டால் தலைவலி நீங்கும்.

### கண்நோய்கள் தீர

துளசி இலை ஊறிய நீரை ஒரு மண்டலம் அருந்தி வந்தால் முக்குற்றங்களில் ஒன்றான பித்த அதிகரிப்பு குறையும். இதனால் கண் நரம்புகளின் சூடு குறைந்து நரம்புகள் பலப்படும். கண் சம்பந்தப்பட்ட நோய்கள் அணுகாது.

### சரும நோய்கள் நீங்க

தேமல், படை உள்ள இடங்களில் துளசியும் உப்பும் சேர்த்து அரைத்து பூசி வந்தால் சரும நோய்கள் நீங்கும். துளசி இலைக்கு உள்ளத்தைத் தூய்மையாக்கும் குணமும் உண்டு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org